OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 APR



ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

ரூ. 300 இனும்

இந்த மகாகாளி இயந்திரத் தகட்டை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கைவசம் வைத்திருந்தால், நீங்கள் நினைத்தவை கைகூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ, அது உங்களைத் தேடி வரும். இந்தத் தகட்டைக் கைவசம் வைத்துக்கொண்டு தியானம்பண்ணும்போது, இந்த மகாகாளிதோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1—4—0. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3—2—0. உடனே பலன் தெரியக்கூடிய யந்திரத் தகடு ஒன்று ரூ. 3—15—0. தபாற்செலவு தனி. சக்தி இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனும்.

THE BENGAL MESMERISM HOUSE (C. K.)

HOSHIARPUR.

சங்கர் IC பிராண்ட்

சூலம் மார்க்

போர்ட்லண்ட் ஸிமெண்ட்

20

மூட்டைகள் வரை

பர்மிட் இல்லாமல்

கீழ் கொடுக்கப்பட்டுள்ள தஞ்சாவூர் ஜில்லா ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். ஏ. கோவிந்தாஸ் நாயுடு,
கண்ட்ராக்டர், கீழவீதி, தஞ்சாவூர்.

எஸ். பி. எஸ். பழனியாண்டி,
c/o கொளும்புஸ்டோர்ஸ், கீழவாசல், தஞ்சாவூர்

L. C. T S. P. L. லக்ஷ்மணன் செட்டியார்,
பாங்கர், சக்ரபாணி தெற்குவீதி, கும்பகோணம்.

ஸ்வாமிநாதா ட்ரேட்ஸ்,
32, நாகேஸ்வரன் சன்னதித்தெரு,
கும்பகோணம்.

ஆர். திருநாவுக்கரசு,
187, பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

டி. என். துரைசுவாமி,
26, இரட்டைத்தெரு, சீர்காழி.

வி. ஸ்வாமி ஐயங்கார்,
"ஸ்ரீராகவம்", மாயவரம்.

டி. எஸ். தக்ஷிணாமூர்த்தி & திருநாவுக்கரசு,
விஜயபுரம் P. O. திருவாரூர்.

வி. எஸ். வெங்கட்ராமன்,
18, லிங்கசெட்டித்தெருவு, மதராஸ்.
(நாகப்பட்டிணம் தாலுக்காவிற்கு)

ஏ. சாரங்கபாணி,
தெற்குத் தெருவு, முடிகொண்டான் P. O.

AR. RM. ராமநாதன் செட்டியார்,
சில்லத்தூர் ஜமீன்தார், கானாடுகாத்தான்.

ஆர். திருநாவுக்கரசு,
8A, சன்னதித்தெருவு, அய்யம்பேட்டை.

எஸ். கே. பிரதர்ஸ்,
மர வியாபாரம், மாயவரம்.
(மன்னார்குடி தாலூகாவிற்கு)

ஜி. விசுவநாதன்,
மூலங்குடி, கமலாபுரம் P. O.

தமிழ்நாட்டின் மற்றும் எல்லா ஜில்லாக்களின் முக்கிய நகரங்களிலும்
இந்தியா ஸிமெண்ட்ஸ் ஸ்டாக்கிஸ்டுகளுள்ளனர்.

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிட்

தொழிற்சாலை: தாழையூத்து, திருநெல்வேலி ஜில்லா.
ரிஜிஸ்டர் ஆபீஸ்: 11/12, ஸெகெண்ட்லைன் பீச், மதராஸ்-1

19931

மாதவிடாய் :

சகோதரிகளே ! எமது "சும்பகி–ரேசனி" என்ற மருந்தை உபயோகித்தால், மாத வெளியீட்டை ஒழுங்குபடுத்துவதுடன் எவ்வளவு நாட்பட்ட தொந்தரவாக இருப்பினும் நிவர்த்திசெய்யும். தீங்கற்றது. 100-க்கு 100 பலன் நிச்சயம்.

விலை ரூ. 5/- தபாற்செலவு ரூ. 0-14-0.

கர்ப்பத்தடை :

"தம்பதி—சகா" நீங்கள் விரும்புகிறபடி கர்ப்பத்தடைக்கு உதவுகிறது. தீமை கிடையாது. 30 வருடங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்படுகிறது. பலர் நன்மை அடைந்திருக்கின்றனர்.

பூரண கர்ப்பத் தடைக்கு ரூ. 4–4–0
6 மாத காலத் தடைக்கு ரூ. 2–0–0
(தபாற் செலவு ரூ. 0-14-0)

வீரியம், யௌவனம் :

உடல், மனம் இரண்டிற்கும் "மதன விலாஸ் ரஸாயனம்" சிறந்த டானிக். மயக்கம், சோர்வு, நரம்புத் தளர்ச்சி, மறதி, அஜீரணம் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து. சோர்வடைந்த மாணவர்கள், மூளை வேலையில் ஈடுபடும் கவிஞர்கள், மணவாழ்க்கை தொடங்கிய காதலர்கள் இவர்களுக்கு இந்த டானிக் ஓர் வரப் பிரஸாதம்.

விலை ரூ. 2–8–0

விரைவாதம் :

குடல் இறக்கம், யானைக்கால், நீர் வாதம், வீக்கம் வலியுடன் கூடியதாயினும், எத்தனை நாட்பட்டதாயினும் ஒரு வாரத்தில் நிச்சயம் குணமளிக்கும் எமது ஆயுர்வேத முறைப்படி தயார் செய்த "ஸம்ஸந்தி". ஓர் முறை உபயோகித்துப் பாருங்கள் !

விலை ரூ. 4-8-0 தபாற்செலவு ரூ. 0-14-0

KAVIRAJ M. KAVYATIRTHA (C.M.)
70, Cornwallis Street, CALCUTTA-6.

உங்களுடைய
எல்லா
அச்சு வேலைகளையும்

காவேரி கலர் பிரஸ்

(பெஸன்ட் ரோடு)

கும்பகோணம்

கவனிக்கும்

காவேரி

விரோதி மலர் 9	"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார்	பங்குனி இதழ் 8

பாகிஸ்தானின் யுத்த அழைப்பு?

பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தான் தூங்கவில்லை. பஞ்சாப், ஸிந்து இம் மாகாணங்களில் உள்ள சிறுபான்மைக் கோஷ்டியினர்களை-முஸ்லிம் அல்லாதவர்களை-வெளியேறச் செய்தனர்; தாமாகவே வெளியேறும்படி செய்தனர்; தங்கள் சொத்து, சுதந்திரங்களை விட்டு ஓடும்படி செய்தனர்; மானபங்கம் செய்தும் வாள் கொண்டு வெட்டியும் உயிருக்குப் பயந்து ஓடச் செய்தனர். எனவே மேற்குப் பாகிஸ்தானத்தில் அநேகமாகச் சிறுபான்மைக் கோஷ்டியினர் அற்றுவிட்டனர், பிறகு அஸ்ஸாமில் பாகிஸ்தான் மக்களைப் புகுத்தும் பிரயாசையில் ஈடுபட்டு வெற்றி கண்டுவிட்டார்கள் என்றே சொல்லவேண்டும். காஷ்மீர் பிரதேசத்திலும் இதைத்தானே செய்தார்கள். காஷ்மீரம் பாகிஸ்தானத்தின் பாதுகாப்பிற்கு அத்யாவசியம் என்ற கட்சிக் கேற்ப அதைச் செய்தார்கள். அஸ்ஸாமும் பாகிஸ்தானத்திற்கு அத்யாவசியம் என்ற பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. அங்கே முஸல்மான்கள் அதிகம் இருக்கிறார்கள் என்று காட்டவே அம் மாகாணத்தில் பாகிஸ்தானிகளைப் புகுத்தி வருகிறார்கள்.

இப்பொழுது கிழக்கு வங்காளத்திலும் சிறுபான்மையினரின் வெளியேற்றம் நடந்துவருகிறது. நூற்றுக்கணக்கான ஹிந்துக்களைத் துன்புறுத்திக் கொன்று அவர்கள் வீடுகளில் புகுந்து கொள்ளையடிக்கிறார்கள். சிறுபான்மையினரின் மனதில் பெருத்த கிலி யுண்டுபண்ணி அவர்களைத் தாமாகவே நாட்டைவிட்டு ஓடச் செய்கிறார்கள். பஞ்சாபில் செய்த வேலைதான் இன்று கிழக்கு வங்காளத்திலும் நடக்கிறது.

இத்தகைய சம்பவங்களுக்கு எதிரொலி நம் நாட்டிலும் இருப்பது சகஜம்தான். எனவே கிழக்கு வங்காளத்திலிருந்து வெளியேறின லக்ஷக்கணக்கான ஹிந்துக்களின் பரிதவிப்பை நேரில் கண்ட கல்கத்தா மக்களிடையே மனக் கொந்தளிப்பும் ஆத்திரமும் மூள்வது இயல்பு. எனவே இங்குள்ள சிறுபான்மையினருக்கு ஹானி விளைவிக்கக் கிளம்பினர். உடனே இந்தியா கவர்மெண்டார் நிலைமையை முற்றவிடாது தடுத்து, கலகத்தை அடக்கிப் பாதுகாத்து வருகின்றனர்.

பாகிஸ்தான் சர்க்கார் ஓர் திட்டம் வகுத்து அதன்படி நடத்தி வருகிறார்கள். ஜன மாற்றத்திற்கு இந்தியா கவர்மெண்டார் என்றுமே ஒத்துக்கொள்வதில்லை. ஆனால் இறுதியில் நடப்பதென்னவோ அதுதான். ஒரே ஒரு வித்யாசம். ஜன மாற்றம் வேண்டும் என்று கூறும் பாகிஸ்தான் தங்கள் தேசத்திலுள்ள முஸ்லிம் அல்லாதவர்களை வெற்றிகரமாக அகற்றி விடுகிறது. நாம் நமது கொள்கையின் காரணமாக நமது முஸ்லிம் சகோதரர்களை அனுப்ப முடியாமல் பாகிஸ்தானத்திலிருந்து திரும்பி வரும் ஹிந்து அகதிகள் அனைவருக்கும் இடவசதி அளித்துச் சமாளிக்க வேண்டி வருகிறது.

இதோடு மட்டுமல்ல. பாகிஸ்தான் வெற்றிகரமாகத் துப்பறியும் கோஷ்டி

களை இந்நாட்டில் உலவவிட்டுக் காரியம் செய்து வருகிறது. ஹைதராபாத்தின் மாஜி பிரதமர் லைக்ஆலி தம் குடும்பத்துடன் நாட்டைவிட்டு வெளியேறியது இக் கோஷ்டியின் வேலையே ஆகும் என்று கூறப்படுகிறது.

இன்னும் பிரசார முன்னணியிலும் பாகிஸ்தானம் மிகச் சாதுர்யமாக விஷமப் பிரசாரம் செய்து வருகிறது. கொப்பல்ஸ் ஹிட்லருக்குச் செய்த பிரசாரம் பாகிஸ்தானம் செய்யும் பிரசாரத்துக்கு உறைபோடக் காணாது என்று தோன்றுகிறது. மேற்கு வங்காளம், அஸ்ஸாம் இங்கிருந்து ஒரு லக்ஷத்துப் பதினாறுயிரம் முஸல்மான்கள் ஹிந்துக்களின் கொடுமை தாங்காது கிழக்கு வங்காளத்தில் சரண் புகுந்துள்ளனர் என்று கிழக்கு வங்காளப் பிரதமர் நூருல் அமின் கூறியிருக்கிறார்.

நமது பண்டித நேரு ஓர் கூட்டுக் கமிஷன் இரு வங்காளங்களிலும் சுற்றுப் பிரயாணம்செய்து நிலையைக் கண்டறிந்து வரலாம் என்றும், பாகிஸ்தான், இந்தியா இந்த இரு தேசப்பிரதம மந்திரிகளும் சேர்ந்து சென்று இங்கெல்லாம் உள்ள நிலையைப் பரிசீலனை செய்யலாம் என்றும் சொன்னதற்கு, பாகிஸ்தான் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டது. இதிலிருந்து பாகிஸ்தான் என்ன உத்தேசித்திருக்கிறது என்பது தெளிவாகிறதல்லவா?

இந்திய முஸ்லிம்கள் ஹிந்துக்களின் மதவெறியின் காரணமாக மடிந்தால் அதை வைத்துக்கொண்டு காஷ்மீரில் பிரசாரம் செய்து அங்குள்ள முஸ்லீம்களைப் பாகிஸ்தானுடன் சேரும்படி செய்யலாம். வெளி உலகப் பிரசாரத்திலும் இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். சிக்கிரத்தில் நிகழ இருக்கும் காஷ்மீர் யுத்தத்திற்கு ஒரு மாற்றாக வங்காளப் பிரச்னையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதை எல்லாம் உத்தேசித்துத்தான் இன்று கிழக்கு வங்காளத்தில் ஹிந்துக்கள் மீது கிலி யுத்தம் தொடங்கியிருக்கிறது பாகிஸ்தான்.

பண்டித நேரு இதை நன்கு உணர்ந்துதான் கல்கத்தாவில் பேசியிருக்கிறார். இந்தியாவின் முதல் பிரச்னை வங்காளமும், காஷ்மீரும்தான் என்று கூறியிருக்கிறார். நாம் பாகிஸ்தான் எதிர்பார்ப்பதைப்போல் முஸ்லிம்களைத் துன்புறுத்தி எதையும் செய்யலாகாது என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார். சிறுபான்மையினரைக் காக்க நமது போலீஸ், ராணுவப், படைகளும் தயாராக வைக்கப் பட்டிருக்கின்றன.

வேண்டுமென்றே பாகிஸ்தான் இந்தியாவைப் போருக்கு அழைக்கிறது. காஷ்மீரில் இந்தியப் படைகளைப் பாகிஸ்தான் அசைக்க முடியாது என்று கண்டுகொண்டது. அங்குள்ள படைகளில் சிலவற்றையாவது வேறு எங்காவது திருப்ப வேண்டும் என்ற எண்ணம் கொண்டு கிழக்கு வங்காளப் பிரச்னையை ஏற்படுத்தியுள்ளது, அஸ்ஸாமிலும் விஷமம் செய்து வருகிறது. ஆனால் இந்தியா கவர்மெண்டார் இதில் ஏமாற மாட்டார்கள் என்று நம்புகிறோம்,

“நாம் கூறியிருக்கும் சமாதான முறைகள் ஒப்புக்கொள்ளப்படாவிட்டால் நாம் வேறு வழிகளைக் கையாள வேண்டி வரும்” என்று தெளிவாகக் கூறியிருக்கிறார் பண்டித நேரு. பாகிஸ்தானத்துக்கும் இந்தியாவுக்கும் யுத்தம் மூளும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அப்படி நேருமானால் நாம் கவர்மெண்டாருடன் பூரணமாக ஒத்துழைத்துக் காரியங்கள் செய்யவேண்டும். அதற்கு முன்னர் கிழக்கு வங்காளத்தில் எஞ்சியுள்ள ஹிந்துக்களை முதலில் நாம் இங்கு மீட்டுக்கொள்ள வேண்டும், இதைச் சாதிக்கும் முன் “வேறு வழிகளை” கையாளுவது அபாயம். எந்த வழி நடந்தாலும் இந்திய மக்கள், சிறுபான்மைக் கோஷ்டியார் உள்பட இந்தியா கவர்மெண்டாருக்குப் பக்கபலமாக நிற்பார்கள் என்பது திண்ணம்.

உதயம்

ராமன்

அந்தி மயங்கும் நேரம். உலாவி விட்டு வீடு திரும்ப வந்துகொண்டிருந்தேன். ரோடு ஓரமாயுள்ள அந்தக் குடிசைப் பக்கம் வரும்போது என்னை அறியாமல் திடுக்கிட்டு, "பாவம்! ஐயோ!" என்று பல தடவைகள் சொன்னேன், புலம்பினேன். கண்ணீர் உகுத்தேன். என் மனம் படபடத்தது. கண்களிலிருந்து உதிர்ந்த ஒவ்வொரு நீர் முத்தும், பல எண்ண முத்துக்களைச் சேர்த்து, தேக்கிக்கொண்டு பெருகி வழிந்தது.

என் மன வேகத்தில் :-'தனக்குப் பிடித்தமான இடங்களில் தங்கி, உறங்கி நாடோடியாக வாழ்ந்து, காலம் கழிப்பதைக் காட்டிலும், நிலையாக வாழப் பிரியமோ என்னவோ? இல்லாவிட்டால் நாகரிகமான மனிதனும், முன்பு ஒரு காலத்தில் இருந்த நிலையை நினைப்பூட்டவுமிருக்கலாம். எது எப்படியானால் என்ன? நாகரிக மனிதன் இன்று சுகமாய் நகரத்தில் வான வெளியில் ஓங்கி நிற்கும், மச்சு வீடுகளும், ஓட்டு வீடுகளும் கட்டிக்கொண்டு நிலையான சமுதாய வாழ்க்கை வாழத் தொடங்கிவிட்டான்.

'இங்கே பக்கத்தில் ஓர் புறம் நகரத்துச் சாக்கடை முணுமுணுத்துக் கொண்டு ஓடுகிறது; மற்றோர்புறம் முனிசிபாலிடியின் குப்பை மேடு. சமுதாயம் விரும்பாத இந்தத் திடலிலும் கூட ஒரு குட்டிச் சமுதாயம் வளர்கிறதே! பாவம்! இப்படி, இயற்கையின் சகோதர சகோதரிகளாய் வயிற்றுப் பிழைப்புக்காக இவர்களும் வாழத் தொடங்கிவிட்டார்களே. எதற்கும், நமக்கும், அவர்களுக்கும் இப்பொழுது ஒரு நெருங்கிய தொடர்பு இருக்கிறதல்லவா? நமக்கென்னவோ அவர்களில்லாவிட்டால் கஷ்டம்தான். அவர்களுக்கு நம்மைப்பற்றிய நினைவே கிடையாது போலத் தோன்றுகிறது. இந்த மடம் இல்லாவிட்டால் சந்தைமடம் இருக்கிறது என்று நாடோடியாய்த்தானே இருக்கிறார்கள். ஆமாம், வாழ்க்கையும் நிலையற்றதுதான்!' இப்படிப் பலவாறு புலம்பிக்கொண்டே மெள்ள நகர்ந்தேன்.

என்னவோ இந்தப் பக்கம் வரும்போதெல்லாம் எனக்கும். முதலில் ஒரு விவரிக்கமுடியாத வெறுப்பும், அலட்சியமும் உண்டாகும். 'நாஸ்டி லொகாலிடி' என்று கூசாமல் என் வாய் முணுமுணுக்கும்.

அங்குள்ள சிறுவர்கள் 'ஐயா! ஒரு காலணா' என்பதும், மற்றும் இக் குடிசைகளுக்கு வழக்கமான வசை நாடகங்களும், தண்ணீர்க் குழாய்ச் சண்டைகளும், தாய்மார்கள் குட்டடுப்பில் கஞ்சி காய்ச்சுவதும், ஆப்பக்கார ஆயாவைச் சுற்றிநிற்கும் கும்பலும், மிட்டாய்க்கார அண்ணனைக் கவிந்து நிற்கும் பிள்ளைகளும் இவைகளை அடிக்கடி பார்த்து, நானும் அவர்களின் வாழ்க்கையைப் பற்றி ஒருவாறு பழகிவிட்டேன்.

சில சமயங்களில் என்னை அறியாமல் 'பாவம்! எளியவர்கள், இயற்கையுடன் நிராயுதபாணியாய்ப் போர் செய்கிறார்கள். குளிர், வெயில், காற்று, மழை, நோய், நொடிகள் முறைச்சுரம், இவைகளையெல்லாம் சர்வசாதாரணமாய் இவர்கள் பாவிக்கிறார்களே? இவர்களும் நம்மைப்போல் உணர்ச்சியுள்ளவர்கள்தான். படிப்பு இல்லை, பண்பாடு இல்லை, இயற்கை அறிவு இருந்தும், அது பயனற்று, காட்டு மலர்போல வளர்ந்து வாடுகின்றதே? யந்திரம் போன்ற இவர்களின் வாழ்க்கை காட்டாறுமாதிரி மேடுபள்ளங்களில் இடறிக்கொண்டு செல்கின்றதே. இப்படி பலவாறு அனுதாபப்படுவேன்.

அங்குள்ள ஒவ்வொரு குடிசையும் பார்ப்பதற்கு ஒரு சிறிய கோவில்மாதிரிதான் இருக்கும். காடுகளிலிருந்து சேகரித்த குச்சிகளாலும், மிலாறுகளாலும் நான்கு புறமும் சுவர்கள் பின்னப்பட்டிருக்கும். சமுதாயம் வேண்டாம், உதவாது என்று விலக்கிய ஓட்டைத் தகரங்களாலும் கந்தைகளாலும் இலைகளாலும் கூரை வேய்ந்திருக்கும்.

ரோடு ஓரமாயுள்ள ஒரு சிறிய குடிசை; மற்றக் குடிசைகளைப்போல் ஐந்து, ஆறு சதுர அடிக்குள் எழும்பியது. அதில்தான் கொஞ்ச நாள் முன்பு காளி பிறந்தான்! எங்கும் ஒரே குதூகலம். பார்க்கச் சந்தோஷமாயிருந்தது.

இன்று, பாவம்! காளி குடிசைக்குத் துணை. குடிசை காளிக்குத் துணை! காளி ஓர் அனாதை. நினைக்க நினைக்க என் மனம் வெதும்புகிறது. இந்த அறியாத இளம் பிராயத்தில், தாயையும் தகப்பனையும் இழந்து விட்டான். முறைச் சுரம் இப்படியா செய்யவேண்டும்? பாவம்! ஐயோ! என்று பல தடவைகள் சொன்னேன். கண்ணீர் உகுத்தேன்!

* * *

சில மாதங்களுக்குப் பிறகு அந்தக் குடிசையைக் கரையான் ஜீரணம் செய்யத்

தொடங்கிவிட்டது. விவரம் தெரியாத காளியும் அங்கேதான் வளர்கிறான். அக்கம் பக்கத்துக் குடிசைக்காரர்கள் கஞ்சி ஊற்றி வளர்க்கிறார்கள். வயது வளர வளர, காளியும் பேமானிக்கூட்டத்தில் ஒரு நபரானான்.

ஆனால், சோம்பேறியாய் அவன் வெகு நாட்கள் சுற்றவில்லை.

ஒரு நாள் ரயில்வே ஸ்டேஷனில் ஒரு கூலி என் சாமான்களை எடுத்துவைத்தான். ஏதோ பேசிக் கொண்டிருக்கும்போது அவன் காளி

என்று தெரிந்தது. காளி 256–ஆம் நம்பர் கூலி. இதைக் கேட்ட நான் சந்தோஷமடைந்தேன். எனக்குப் பெருமிதம் தாங்கவில்லை. "அகதிக்குத் தெய்வம் துணை என்பார்களே. உன்னைத் தெய்வம்தான் காப்பாற்றி இப்படி நல்ல வேலையில் வைத்திருக்கிறது" என்று பலதடவைகள் சொன்னேன். பிறகு, "காளி, நீ எங்கே குடி இருக்கிறாய்?" என்று கேட்டேன், அவனைக் குடிசைக்குத் திருப்ப வேண்டுமென்ற எண்ணத்துடன்.

"இங்கேதான் வேலை செய்யறது. கிளப்புக் கடையிலே ஏதாவது சாப்பிட்டுவிட்டு ப்ளாட்பாரத்திலேயே ஒரு மூலையிலே படுத்து உறங்கி எழுந்திருக்கிறேன்" என்றான். இதற்குள் ரயில் வந்து விட்டது. நாங்கள் பிரிந்து விட்டோம்.

கலகலவென்றிருந்த காளியின் குடிசையைக் கரையான் தின்பதைப் பார்க்கப்பார்க்க எனக்கு வருத்தமாயிருக்கும். 'இதற்கு எப்பொழுது நல்ல காலம் வருமோ?' என்று எனக்குள் அந்தப்பக்கம் வரும்போதெல்லாம் நினைப்பேன்.

ஒருநாள் சாயங்காலம், திடீரென்று அந்தக் குடிசை என் ஆச்சரியத்தைக் கிளப்பி என் கவனத்தை இழுத்தது. அங்கு மதனும், ரதியும் போல், காளியும் கண்ணம்மாவும் வாசலில் தடுக்குகளில் உட்கார்ந்துகொண்டு காட்சியளித்தார்கள். ஒரேநாளில் பழையபடி பழுது பார்க்கப்பட்டு, குடிசை அழகு பெற்றது.

கண்ணம்மா பக்கத்துக் குடிசைக்காரக் கறுப்பனின் ஒரே மகள். நல்ல அழகி. பாவம்! அவளும் தாயில்லாத குழந்தைதான். இளமையின் இன்பம் இன்று முதல் குடிசையில் பெருகி வளர ஆரம்பித்தது. அத்துடன் காளியின் குடும்பமும் பெருகிற்று. வருமானம் போதவில்லை. தேடி அலைந்து கடைசியாக மில்லில் வேலைக்கு அமர்ந்தான். ஊதியம் போதிய அளவு நிரம்பக் கிடைத்தது. குடும்பமும் நன்றாய் நடக்கிறது. மணிப்பிரகாரம் ரயில்வண்டி மாதிரி வேலைக்குப் போய் வந்துகொண்டிருக்கிறான்.

அன்று சாயங்காலம் நாலரை மணி இருக்கும். "கண்ணி, வேலை விட்டதும் வந்துடறேன். உறக்கம் வந்தால் தூங்கு. பக்கத்து வீட்டு மாமியைத் துணைக்கு வேணும்னு கூப்பிட்டுக்க. பனிரண்டு மணி வண்டி கூவக்குள்ளேயே வந்துடறேன்" என்று சொல்லிவிட்டு, கந்தல் சொக்காயை மாட்டிக்கொண்டு காளி, மில்லுக்குப் போய்விட்டான்.

வழக்கம்போல் இருட்டுமுன்பு கண்ணம்மாள் குழந்தைகளுக்குச் சோறுபோட்டாள். தனக்கும் புருஷனுக்கும் கொஞ்சம் சோறு தனியாக எடுத்துவைத்தாள். இருட்டிவிட்டது. நிலா கிளம்புகிறது. வாசலில் சாக்குகளையும் கந்தல் துணிகளையும் பரப்பி, குழந்தைகளை உறங்கவிட்டாள். குழந்தைகள் தூங்கிவிட்டார்கள்.

குடிசைக்கு வாசல் உண்டு; கதவு கிடையாது. உள்ளடங்கியே வாசல் பக்கம் குடிசைக்குள் உட்கார்ந்தாள். குடிசையில் தீபம் கூடக் கொஞ்ச நேரத்துக்குத்தான் எரிந்தது. மற்றக் குடிசைகளில் எல்லோரும் உறங்கப் போகிறார்கள்.

கண்ணம்மாவுக்கு இந்தக் காட்சி புதியதல்ல. இன்று என்னவோ இதைப் பார்த்தவள், 'அவரு கூலிவேலை பார்க்கிறப்போ இந்நேரத்துக்கு நாங்களும் உறங்கப் போயிடுவோம். இப்ப காலா காலத்திலே அவருக்குச் சோறுகூட கிடையாது. பாவம்! சுடுசோறு எட்டு நாளைக்கு ஒரு தடவை தானே சாப்பிடறாரு. வேலையும் நேரம் கெட்ட நேரத்திலெல்லாம் இருக்குது. ஒரு ஆபத்து சம்பத்துக்குக்கூட அவரைக் காணமுடியுதில்லையே. லீவு எடுத்துட்டா சம்பளம் கிடைக்காது. கூலி வேலையானால், நினைத்தப்போ போகலாம். மேலுக்குச் சுகமில்லாட்டி வீட்டிலேயே படுத்து உறங்கலாம். நான்தான் இப்படி எத்தனைநாள் ராத்திரி சரியாகத் தூங்காமல் காலம்தள்ள முடியும்? இந்தக் குளிர் நாளிலே. பாவம்! அவரு வேலை என்ன வேலையோ? இப்படி கஷ்டப்பட்டு முப்பது நாள் வேலை செய்தா சம்பளம் கிடைக்குது". எனப் பலவாறு உடம்பை நெளித்துக்கொண்டும், கால்களை நீட்டி மடக்கிக்கொண்டும் முணுமுணுத்துக்கொண்டே இருந்தாள்,

அவளுக்கு உறக்கம் வரவில்லை. காளியும் வரவில்லை. எங்கும் ஒரே அமைதி. நிலாப் பளிச்சென்று காய்கிறது.

'மேலே நிலாவைப் பார்த்தால் நடுச் சாமத்துக்கு மேலே இருக்கும் போலிருக்குதே' என்று நினைத்தவள் திகில் அடைந்தாள்.

கையைப் பிசைந்துகொண்டு தனக்குள் 'மில்லுலே ஏதாவது காயம் பட்டுடிச்சோ என்னமோ? எங்கே போய் நான் தேடப் போறேன்? யாரைப் போய் கேட்கிறது? நான் ஒத்தையிலே யென்ன செய்வேன்?" பலவாறு புலம்புகிறாள். குளிர்ந்த காற்று முகத்தில் சில்லென்று வீசுகிறது. உறக்கம் வேறு கண்ணைச் சுற்றுகிறது. யோசித்துக்கொண்டே இருந்தவள் கண்ணயர்ந்துவிட்டாள்.

"ஏதோ கால் சத்தம். அவருதான் வருகிறாரோ" மனதில் எழும்பிய கேள்வி. திடீ

ரென்று விழித்துப் பார்த்தாள். சொப்பனம் கண்டவன் விழித்துப் பார்ப்பதுபோல் சுற்று முற்றும் பார்த்தாள் ஒருவருமில்லை!

கதவில்லாத குடிசையில் அவள் மனக் கதவுமட்டும் திறந்திருந்தது. கணவனைப் பற்றிய நினைவு ஏதோ ஒரு ஓசையை எழுப்பிற்று! தூக்கமும், கலக்கமும் கண்ணம்மாவைக் குழப்பின! பன்னிரண்டு மணிக்குள் வரவேண்டிய காளி இன்னும் வரவில்லை. கண்ணம்மாவோ கலங்குகிறாள். சொல்ல முடியாத நிலை. அவள் ஏதோ பாரத்தைச் சுமந்துகொண்டிருப்பதுபோல் உணர்ச்சி.

அவள் பாசம் 'யாரையாவதுபோய் உசுப்பி, போய் அவரைப் பார்த்துவரச் சொல்லட்டுமா?' என்று தூண்டுகிறது. கூடவே வந்த நாணம்,—பெண்களின் இயற்கையான வெட்கம்-வேண்டாம், இன்னும் கொஞ்சநேரம் பொறுப்போம், யாரையாவது கூப்பிட்டால், அவங்க சாதிக்குணம் என்னையே நாளைக்கு ஏதாவது கேலிசெய்ய ஆரம்பிச்சுவிடுவாங்க. இவங்ககிட்ட எல்லாம் மாட்டிக்க கூடாது. அம்மாயியைக் கூப்பிட்டால் வந்துடும். அதுவும் உறங்கிடுச்சு. தூங்கறப்போ எழுப்பினால் ஏதோ பதற்றமாய் எழுந்திரிச்சா? வேணாம். நல்லாயிருக்காது. அவங்க இப்படி அரைநாழிகைகூட அனாவசியமாய்த் தங்கமாட்டாங்க. வந்துடுவாங்க, எனப் பல மாதிரி யோசித்து, தனக்குத் தானே பேசிக்கொள்கிறாள். பாசமும், வெட்கமும் அவளைக் குழப்புகின்றன.

மனம் குழம்பக்குழம்ப, அவள் உடல்நிலை சொல்லமுடியவில்லை. குடிசைகளின் அமைதியில் பக்கத்துச் சாக்கடையின் சத்தம் 'கல கல' என்று காற்றில் மிதந்துவருகிறது. நடு நடுவே நரிகளும், நாய்களும் ஓலமிடுகின்றன. சாக்கடையின் சத்தம் கிராமத்துக் கோவில் மரத்தில் கட்டியிருக்கும் மணியின் ஓசை மாதிரி கண்ணம்மா காதில் விழுந்தது. நாய்களின் ஓலம் அவளைக் கலக்கியது. அவள் தெரிந்த சாமியையெல்லாம் கும்பிட்டு என்னவோ வேண்டிக் கொண்டாள். நாழிகை ஆக, ஆக அவள் மன வேதனையைத் தாங்க முடியவில்லை. நெஞ்சும் மார்பும் திக், திக் என்று அடித்துக் கொள்கிறது.

காலைநேரம் நெருங்க நெருங்க சந்திரனும் அவன் பனிப் போர்வையை வீசிவிட்டான். சந்திரனின் வெண்கிரணங்களின் அமுதத்தை இரவு வெகுநேரம் வரை பருகிய ஆனந்தமோ என்னவோ, வாயுதேவன் இன்பக் கூத்தாடுவதுபோல் உடம்பை நெளித்தான். அவன் நெளித்த நெளிப்பில் இந்தப் பனித் திரையும் பிளவுபட்டு, சில்லென்று சிதறிற்று. இந்தச் சிலிர் சிலிர்ப்பு கண்ணம்மாவின் முகத்தில் படவும் அவளும் உடம்பை ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்தாள்.

உடனே ஒரு அதிர்ச்சி. அவள் வயிற்றில் வலி கிளம்பியது. நிமிஷத்தில் நிலைகொள்ளவில்லை. உடம்பைத் தாங்கமுடியாமல் அசைக்கிறாள், வயிற்றை ஒரு கையால் தடவுகிறாள். அவள் பயம் அதிகரித்தது. வலி சகிக்க முடியாமல் பெருகிற்று. மெள்ள, மெள்ள உட்கார்ந்தபடியே நகர்ந்து குடிசைக்குள் போனாள். தீபத்தைப் பொருத்தினாள். ஒரு கந்தல் புடவையைக் கீழேவிரித்தாள். படுத்துவிட்டாள்.

பசியின் களைப்பு. வயிற்றிலும் வலி. பாவம்! என்ன செய்வாள்! அப்படியே சுணங்கிக் கிடந்தாள்.

வெளியே குழந்தைகள் அயர்ந்து தூங்குகிறார்கள். கோழி கூப்பிடும் நேரமாகி விட்டது. இவ்வளவு ஜீவராசிகளையும் மயங்க வைத்த சந்திரனும், பனித் திரையினூடே மயங்கியவன்போலக் காட்சி யளிக்கிறான். படுத்த கண்ணம்மாவும், கண்ணயர்ந்து மயங்கிக் கிடக்கிறாள்.

காளி இன்னும் வரவில்லை. அவள் வேதனையில் அறியாமல் ஏதோ புலம்பும் சத்தம், அந்த அமைதியில் நன்றாய்க் கேட்கிறது!

வேலை விட இன்னும் ஒரு மணி நேரமிருக்கிறது. காளிக்கு என்ன தோன்றியதோ என்னவோ? திடீரென்று மேஸ்திரியிடம் சொன்னான். அனுமதி கிடைத்தது. வெளியே கிளம்பிவிட்டான்.

வெளியே சில்லென்ற குளிர் காற்று. காளிக்கு வெட வெடவென்று நடுக்குகிறது. ஏதோ யோசித்துக் கொண்டே வருகிறான். நல்ல நடுநிசி. உலகம் அமைதியை நாடி உறங்குகிறது.

பாதி வழிக்குமேல் வந்துவிட்டான். அவன் நடை திடீரென்று நின்றுவிட்டது. அவனுக்கு விளங்கவில்லை. அவன் மனம் ஏதோ சோக சித்திரத்தை உருவமாக்கிக் கொண்டிருந்தது. இல்லை. அவன் உற்றுக் கவனித்தான். காற்றில் மிதந்துவரும் சொல் ''அம்மா! அம்ம, அம்மா! ஆ, ஹூம், அம்மா! அம்மா! ''குரலில் வேதனை தொனிக்கிறதே. பாவம்! யாரோ? என்னவோ?'' காளியின் மனம் இளகிவிட்டது. அவன் கண்களில் நீர், இதற்குள் சப்தம் இடைவிடாமல் அவன் காதில் அலைமேல் அலை மோதுவதுபோல ஒலிக்கிறது!

பரபரப்புடன் ஈசுவரதாஸ் காலனிக்குள் சத்தம் வந்த திக்கை நோக்கி நடந்தான்.

அந்த வீட்டு வாசலில் ஒரே கூட்டம். திண்ணையில் ஏறி எட்டிப் பார்த்தான். விஷயம்—தலைப் பிரசவம், பெண் கஷ்டப்பட்டுத் துடிக்கிருள். தாயும், தகப்பனும் அலறுகிருர்கள், அவர்களுக்கு ஒரே பெண். என்ன செய்வார்கள்? பாவம்—புரிந்துகொண்ட காளி திரும்பிப் பார்த்தான். படிக்கட்டுப் பக்கத்தில் ஒரு சைக்கிள்.

என்ன நினைத்தானோ என்னவோ? கொடிக்குள் சைக்கிளை எடுத்துக்கொண்டு பறந்துவிட்டான்.

சைக்கிள் வேகத்தில் காளியின் மனம் 'எங்க குடிசையாக இருந்தால் இந்நேரம் எத்தனைபேர் சத்தத்தைக் கேட்டு உதவிக்கு வந்திருப்பாங்க. இப்படியா பார்த்துக்கிட்டிருப்பாங்க? எங்க அம்மாயி ஒரு ஆள் போதுமே நூறு பேருக்குப் பேறுகாலம் பார்க்க. இவ்வளவு பேரிலே ஒருத்தராச்சியும் போய் ஒரு டாக்டரையாவது, இல்லாட்டி ஒரு மருத்துவம்மாவையாவது கூட்டியாரக்கூடாதா? ஒத்தப் பிள்ளையைப் பெற்ற ஆவியும் அப்பனும்தான் என்ன செய்வாங்க? பாவம்!' எனப் பலவாறு நினைத்துக்கொண்டே ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தான். டாக்டர் அறைக்குப் போனான். கதவைத் தட்டினான். பதில் இல்லை. 'நல்லா குறட்டை விட்டு தூங்குறார்போலிருக்கு. இல்லாவிட்டால் வெளியே போய்விட்டாரோ?' என்று முணுமுணுத்துக்கொண்டே பக்கத்து ஹாலில் நுழைந்தான். அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. "யாரப்பா? என்ன வேணும்? நில்." ஒரு நர்ஸின் குரல் அவனை நிறுத்திவிட்டது.

காளி விழித்துப் பார்த்தான். நர்ஸ் அவனை நோக்கி வருகிறாள். அவன் உடம்பு நடுங்குகிறது. உதடுகள் துடிக்கின்றன. நாக்குழற ஏதோ சொல்கிறான். கண்ணீர் கள கள வென்று சப்தம் செய்யாமல் பெருகி வழிந்தது. உணர்ச்சியை அவனால் அடக்க முடியவில்லை.

அவன் படபடப்பு நர்ஸை என்ன செய்ததோ? 'ஒரு வண்டி' என்று சொல்ல வாய் திறந்தாள். அதற்குள் காளி 'தன் சைக்கிளில்'......என்றான். 'சரி. போதும்' என்று அடுத்த கணம் நர்ஸ் கிளம்பிவிட்டாள்.

சுமைதாங்கியில் பாரத்தைச் சிறிதுநேரம் வைத்துவிட்டுக் களைப்பாறும் வழிப்போக்கன் மாதிரி காளி சற்று நிம்மதி அடைந்தான்.

இரவு சாப்பிடாததாலும், உறங்காததாலும் காளியால் நடக்கமுடியவில்லை. கால்கள் பின்னுகின்றன. தள்ளாடிக்கொண்டு பையப் பையக் கிளம்பி வருகிறான். ஆடி ஓடிய உலகமும் நன்றாய்க் களைத்து உறங்குகிறது. காளியின் படபடப்புத்தணிந்து மெதுவாய்க் கடிகாரம் மாதிரி இதயம் அடித்துக்கொள்கிறது. இத்துடன் போட்டி போட்டுக்கொண்டு இவன் பைய நடக்கும்போது கால் ஓசை எழும்பிற்று.

எங்கும் ஒரே அமைதி. காளியின் மனதில் நர்ஸைப்பற்றிய புகழ்ச்சி உதயமாயிற்று, அதற்குள் அந்தப் பெண்ணின் நினைவு வரவே அவன் வாய் "பாவம்! அந்தப்பிள்ளை எப்படி இருக்கிறாளோ? உதவிக்கு உடனே கிளம்பிய நர்ஸம்மாவை நினைத்தேனே? அத்துடன், இந்நேரம் அந்தப் பெண் ஒரு தாயாக மாறியிருப்பாள் என்று முதலிலேயே ஏன் நினைக்கக்கூடாது? குழந்தை பிறந்தது என்ற ஆனந்தத்தில், தாயின் வலியும் மறைந்து அவள் இன்பக்களிப்படைவதில்லையா? தாயடையும் ஆனந்தத்தைக் கேட்டு ஒவ்வொருவரும் ஆனந்தமடைகிறோமல்லவா? நான் இந்த அம்மாவுக்கு என் நன்றியை முதலில் கூற நினைத்தேன். தாயின் மகிழ்ச்சி என்னவோ?" என்று பலபடியாகச் சொல்லிக்கொண்டே வந்தது.

ஈசுவரதாஸ் காலனியும் வந்துவிட்டது. நிசப்தம் காளியைப் பழயபடி திகிலடைய வைத்தது. நடையை ரொம்ப, ரொம்ப மெதுவாகப் போட்டான். "என்ன ஆயிடுச்சோ என்னமோ?" என்று சொல்லிக்கொண்டே மெள்ள நடக்கிறான்.

கதவு திறக்கும் சத்தம். காளி நின்றுவிட்டான். இருண்ட அவன் மனம் திக் திக் என்று அடித்துக் கொள்கிறது.

"பிள்ளை பிறந்திருக்கிறது! தாயும், மகனும் சௌக்யம்!"—நர்ஸின் குரல்.

காளியின் கூட்டில் உயிர் வந்தது! அவன் மனம் குதூகலமாய்த் துள்ளிக் குதித்தது. தன் குல தெய்வத்தைக் கும்பிட்டான். நர்ஸை வாழ்த்துகிறான். ஆனால் மேலே நடை எழும்பவில்லை.

"உங்களுக்குக் கோடி புண்யமுண்டு. யதேச்சையாகத் தெய்வம்தான் உங்களை இங்கே கொண்டுவந்து விட்டது. ரமா, பட்டபாடு எங்கள் கூட்டில் உயிரில்லாமல் தவித்தோம். சமயத்தில் வந்து காப்பாற்றி, எங்கள் வயிற்றில் பால் வார்த்தீர்களே" என்று பெற்றோர்கள் நர்ஸைப் புகழ்கிறார்கள்.

குழந்தையின் 'குவா குவா' என்ற குரல் ஆனந்தமாய் அமைதியினூடே ஒலிக்கிறது. காளி செய்த உபகாரம் யாருக்கும் அங்கே தெரியாதல்லவா?

நர்ஸ் மேலும் தொடர்ந்தாற்போல், "பாவம்! உங்கள் வேலைக்காரன் முகத்தைப் பார்த்தேன். அவன் பதற்றம் என்னை என்னவோ செய்தது. உடனே அவன் சைக்கிளில் கிளம்பி விட்டேன், பாவம்! அவன் இந்தக் குளிரில் நடந்து வந்துகொண்டிருப்பான்." என்று முடிப்பதற்குள் "வேலைக்காரனா?" என்று சொல்லிக்கொண்டு எல்லோரும் திகைப்படைந்தார்கள்.

இதைக் கேட்ட காளியும் திகிலடைந்தான். அவன் உடம்பு சிலிர்த்தது. சரேலென்று அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

உடம்பு சிலிர்க்கும்போது அரைக்கண நேரம், இமையை மூடித் திறந்தான். இதற்குள் அவன் மனைவி கண்ணம்மா அவன் கண்முன் மின்னி மறைந்தாள்.

'விர்' என்று கண்ணம்மாவைப் பார்க்க, குடிசையை நோக்கி நடக்க ஆரம்பித்தான், அவன் உதடுகள் குளிர் தாங்காமல் நடுங்க, பற்கள் தந்தி அடிக்க ஆரம்பித்தன. தளர்ந்த நடை விரைவாக எழுந்தது. ஏதோ மனதில் ஒரு துடி துடிப்பு.

''பாவம்! கண்ணம்மா என்ன செய்கிருளோ? சோறு சாப்பிட்டாளோ என்னமோ? தனியே விட்டு விட்டு வந்து விட்டேனே? அம்மாயியையாவது துணைக்கு கூப்பிட்டுக்கிட்டாளோ என்னமோ? தாய்தகப்பனில்லாத ஒத்தப் பிள்ளை. ரொம்ப பயந்த பிள்ளை. பாவம்! நிறைமாதக்காரியாச்சே?'' என்று பலவாறு புலம்பிக்கொண்டே வெறி பிடித்தவன் போல் வருகிருன்.

அவன் மனவேகம்தான் ஜாஸ்தியாக இருக்கிறது. களைப்பினுல் நடை தளர்ந்துவிட்டது. அவன் துடிப்பின் வேகம் மட்டும் கால்களில் காணப்படுகிறது. ஆனுல் பாவம்! அவனென்னவோ, மெள்ள, மெள்ள, விரசாகத்தான் வருகிருன்.

அருணேதய சமயம். குடிசையில் பறங்கிப் பூக்கள் பூத்திருக்கின்றன. கண்ணம்மாவின் புலம்பலைக் கேட்டு, அம்மாயி எழுந்துவந்தாள். கிழவி வந்தது கண்ணம்மாவுக்குத் தெரியாது. வலி தாங்காமல் கண்களை மூடிக்கொண்டிருக்கிருள்.

வீடு கிட்ட வரவர இருள் கொஞ்சம் கொஞ்சமாய் நீங்குகிறது. அருணேதய காலம் என்று குருவிகள் பாடுகின்றன. காளியின் மனதில் ஒரு விவரிக்கமுடியாத நிலை. ஒரு பரபரப்பு. வீட்டுப் பக்கம் வந்துவிட்டான். கிழக்கு வெளுத்துக்கொண்டு வருகிறது. குடிசைப் பக்கம் நல்ல அமைதி. குழந்தைகள் தூங்குகிருர்கள். காலை மந்த மாருதம் வீசுகிறது.

'பொழுது விடிஞ்சுபோச்சு, பாவம்! ராத்திரி தூங்காம விழிச்சுக்கொண்டிருந்திருப்பாள். அதுதான் இன்னும் கண்ணி உறங்குருள் போலிருக்கு? சூரியன்கூட கிளம்பப் போவுது. அவளை எழுப்பி ராத்திரி நடந்ததைச் சொன்னுல் சந்தோசப்படுவாள்'' என்று தீர்மானித்துக்கொண்டு பரபரப்பாய் வந்தவன் குடிசைக்குள்ளே எட்டிப் பார்த்தான்.

அப்பொழுதுதான், ''என்னு ராஜா பிறந்து விட்டான்!'' என்று கிழவி சொல்லிக்கொண்டே குழந்தையை எடுக்கிருள்.

குழந்தையின் "குவா, குவா!" என்ற குரல். கண்ணம்மா விழித்தாள். குழந்தையை அம்மாயி நீட்டுகிருள். தாய் தடவிக்கொடுத்து உச்சி முகர்கிருள். முத்தமிடுகிருள்! அவள் அடைந்த ஆனந்தத்தை முகம் பிரகாசித்துக் காண்பிக்கிறது.

அம்மாயி குழந்தையை எடுப்பதைப் பார்த்து ஆனந்தப் பூரிப்பில் காளி ஏதோ வெட்கமடைந்தவன்போல் திரும்பினுன். குழந்தையின் 'குவா!' குரலைக் கேட்டுக்கொண்டே எதிரில் சூரியன் ஜகஜ்ஜோதியாய் மலர்ந்த செந்தாமரை மாதிரி உதயமாகிருன்!

இண்டோ கமர்ஷியல் பாங்கு லிமிடெட்

மதராஸ்

அதிகாரம் பெற்ற மூலதனம் :	ரூ. 25,00,000
வழங்கி வாக்களிப்பட்ட மூலதனம் :	ரூ. 21,25,000
செலுத்தப்பட்ட மூலதனம் :	ரூ. 18,75,000
ரிஸர்வ் நிதிகள் :	ரூ. 10,75,000

சென்னை நகரத்தில் ஆபீஸ்கள் :

நேதாஜி சுபாஷ் சந்தரபோஸ் ரோடு

திருவல்லிக்கேணி, பெரியமெட், மயிலாப்பூர், தியாகராயநகர்

சகலவிதமான பாங்கு அலுவல்களும் நடத்தப்படும்

ராஜராஜனின் கனவு

கௌரி

சோழ மண்டல பூபதி ராஜ ராஜசோழனின் கண்களில் தீப் பொறி பறந்து கொண்டிருந்தது. ஆழ்ந்த பெருமூச்சுடன் மாளிகையில் உலாவிக்கொண்டிருந்தான். அரசிக்குக்கூட அவனை அணுக, தைரியம் வரவில்லை. அவள் முகத்திலும் கவலை குடி கொண்டிருந்தது. பகல் நேரமாகியும் அரசனுக்கு எதிலும் மனம் சென்றதாகத் தெரியவில்லை. அரசியும் எவ்வளவோ பொறுத்துப் பார்த்துவிட்டு,

"வெகு நேரமாகி விட்டது அரசே, வேளையில் சாப்பிடாமல் அலட்டிக் கொள்வதால் என்ன பயன்?" என்றாள் பணிவுடன்.

"என் முயற்சி கைகூடும் வரையில் உண்ணாவிரதம் கைக்கொள்ளப் போகிறேன்"

"இதில் என்ன பயன் பிரபோ?"

"பிறகு உனக்கே தெரியும்"

சிரித்துவிட்டாள் அரசி. அரசன் முகத்தில் ரத்தம் குழம்பியது.

"என் கவலை உனக்குச் சிரிப்பாக இருக்கிறது அல்லவா? விளையாடும் நேரம் இதல்ல தெரியுமா?"

"விளையாட வில்லை மன்னரே. கவலைப் படுவதால் மட்டும் காரியம் கைகூடி விடாது. அதற்குக் காரணத்தையும் ஆராய்ந்து கண்டு பிடிக்க வேண்டாமா என்கிறேன்,"

"ராஜ ராஜனால் நினைத்தது நடத்த முடியவில்லை என்பது நினைக்கவே அவமானமாக இல்லையா மனோன்மணி? அமைச்சர் வீரகேசரியால் முடியாததும் அவருக்குத் தோன்றாததும் ஒன்று உண்டென்று நினைக்கிறாயா நீ? என்ன காரணம்தான் இருக்கப் போகிறது அப்படி? என் புத்திக்கு எட்டவில்லை."

"ஏதாகிலும் குற்றம் இருக்கத்தான் வேண்டும் அரசே!"

"நிஜமாகத்தான் சொல்லுகிறாயா மனோன்மணி?"

"இந்த விஷயத்தில் எனக்கு என்ன விளையாட்டு அரசே? செய்ய வேண்டியவை எல்லாம் ஒழுங்காக நடந்ததா என்று விசாரித்தீர்களா அமைச்சரை?"

"அதில் சிறிதும் சந்தேகமில்லை"

"மக்கள் எல்லோரும் வந்தார்களா தொண்டு புரிய?"

"ஒருவரும் பாக்கி இல்லை. ஒன்று விடாது எல்லாம் செய்து பார்த்தாகி விட்டது. இனி பிருகதீச்வரன் தான் கண்ணைத் திறந்து பார்க்க வேண்டும்".

சிறிது நேரம் மௌனம் நிலவியது. கவலையினால் அரசன் வேகமாய் நடந்து கொண்டிருந்தான், அரசியும் ஏதோ யோஜனையில் ஆழ்ந்திருந்துவிட்டு,

"அரசே!"

"என்ன மனோன்மணி!"

"இரவு கனவொன்று கண்டேன். அதில் ஏதேனும் உண்மை இருக்குமா என்று ஒரு சந்தேகம்"

"அப்படி என்ன அதிசயக் கனவு?"

ராஜராஜன் மஞ்சத்தில் சாய்ந்து கொண்டான். பக்கத்தில் வத்து அமர்ந்தாள் மனோன்மணி.

"அதிசயமான கனவு அரசே! அதில் உண்மை இருக்க வேண்டுமென்றுதான் எனக்குப் படுகிறது" என்று அரசன் முகத்தில் படிந்திருந்த வியர்வைத் துளியைக் கையால் துடைத்தாள். அரசனுக்கு இருந்த கவலையில் தேவியை மார்போடு அணைத்துக் கொண்டுவிட்டன அவன் கைகள்.

"தேவி! என் கவலை தீர்ந்துவிடுமா?"

"அரசே என் மனமும் குழம்பிக் குழம்பி வெகுநேரம் தூக்கம் பிடிக்கவில்லை. பொழுது புலரும் சமயம்—என்ன அதிசயமான கனவு! வெகு தூரத்தில் ஒரு கிராமம். அங்கே ஒரு தொண்டு கிழவி. அவள் ராஜராஜனை என்னிடம் அனுப்பு! கவலை வேண்டாம்! என்றாள். என்னவென்று கேட்க வாய் எடுத்தேன். உள்ளம் துடித்தது. உடல் வியர்த்தது. கண்ணைத் திறந்தேன். எல்லாம் கனவு! இதில் ஒரு உண்மை இருக்கலாகாதா அரசே?" ராஜராஜனின் உள்ளம் பொங்கியது. தேகத்தில் ஒரு தனித் தெம்பு ஓடிப் பாய்ந்தது. தேவியை இறுகக்கட்டி அணைத்

துப் புரட்டி விட்டான். மஞ்சத்தை விட்டுத் துள்ளிக் குதித்தான். குழந்தை போன்ற அவன் உள்ளத்தில் ஆசையும் ஆவலும் நிரம்பி வழிந்தது. அமைச்சர் வீரகேசரியின் வரவை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண் டிருந்தான்.

ராஜராஜ சோழ மன்னன் பிருகதீச்வரன் கோயில் கோபுரம் எழுப்ப ஆரம்பித்து வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. இந்தியாவின் பல பாகங்களினின்றும் கலைஞர் வந்து வேலையில் ஈடுபட்டிருந்தனர். பிருக தீச்வரன் ஆலயத்தின் கோபுரம் இணை இல் லாததாக அமைய வேண்டுமென்ற ஆசை அரசனுக்கு. நீதிச் செங்கோல் செலுத்திய வீர ராஜ ராஜனுக்கு முடியாத காரியம் ஒன்று உண்டா? அவன் விருப்பத்தை நிறை வேற்றக் கலைக் களஞ்சியமே அங்குத் தோன் றியது. குழந்தை குட்டி, ஆண் பெண் அடங்க எல்லோரும் திருக்கோயில் எழுப்பும் பணியில் ஈடுபட்டு உற்சாகத்துடன் உழைத்து வந்தனர். கோபுரத்தின் உச்சி

யில் ஒரே கற்பாறை ஒன்றை ஏற்ற எண்ணினான்.

இதென்ன அதிசயம்? சாத்தியமான வேலையா? என்று தயங்கினார் வீரகேசரி, பிருகதீச்வரன் கிருபை இருந்தால் போதும். எதையும் செய்யலாம். எனக்கு நம்பிக்கை உண்டு, நடக்கட்டும் என்றான் ராஜராஜன் தீர்மானமாக. வீரகேசரி அஞ்சினார். அரசன் தளரவில்லை. ஊரே கூடியது, நாடே கூடியது. பெரிய பாறை ஒன்று பொறுக்கி எடுக்கப்பட்டது. ஒப்பில்லாக் கோபுரம் எழுந்தது. அரசன் ஆசை வளர்ந்தது. மக்கள் உழைப்பும் ஆதரவும் வளர்ந்தன. பாறை கோபுரத்தைப் பார்க்க ஏற ஆரம்பித்தது. சோழ மண்டலமே கிடுகிடுத்தது. அதிசயமான பேச்சுக்கள் நடந்தன. கோடி மக்கள் கூடிப் பார்த்தனர். ராஜராஜனின் தீர்மானம் வேர் ஊன்றியது. காட்கள் ஓடின. மாதங்கள் ஓடின. மக்கள் வியர்வை சொட்ட உழைத்தனர். அரசன் வெயில் மழை பாராது வீதியில் நின்றான். நாளுக்கு நாள் உயர ஏறி வரவேண்டிய பாறைமட்டும் நடுவில் வந்து அசையாமல் நின்றது. வீரகேசரி உயிரை விட்டார். பலிகள் குவிந்தன. மக்கள் சோர்ந்தனர். ராஜராஜன் உருகினான். வேண்டினான். பிருகதீச்வரனிடம் சென்று மன்றாடினான். பயனில்லை. பாறை மேலே ஏறவில்லை. வீரகேசரி உட்கார்ந்து விட்டார். நின்ற பாறைபோல் தோய்ந்த ராஜராஜனின் உள்ளம் அச்சம் கொள்ள ஆரம்பித்தது. பல அறிஞரை வரவழைத்தான். பல சாந்திகள் செய்தான். தான தருமங்கள் செய்தான். பாறைமட்டும் இடம் விட்டு அசையவில்லை. மையத்தில் நிற்கும் பாறையை இறக்குவானா மன்னன்? ராஜராஜனால் ஒன்று முடியவில்லை என்றால் பிறகு உயிர்வாழ்வானா அவன்? அவன் நீதி போய்விட்டதோ? அனலில் விழுந்த புழுப் போல் துடித்துக்கொண்டிருந்தான். அன்று கடைசி முறையாகப் பார்த்து விடுவதாகப் பிரயத்தனங்கள் செய்திருந்தான் வீரகேசரி. இது பலிக்கா விட்டால் அரசன் ஆசையை விட்டுவிட வேண்டியதுதான் என்று சொல்லி விட்டான். ராஜராஜனுக்கு மட்டும் ஏனோ தைரியமும் ஆசையும் அடியோடு ஒழிந்துவிடவில்லை. வெகு ஆவலுடன் அமைச்சரின் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். அவனும் அரசனுக்காகப் பறந்துதான் வந்து கொண்டிருந்தான்.

"ஏன் முகவாட்டம் கேசரரே?"

"இவ்வளவு கஷ்டப்பட்டும் பயனில்லையே என்பதுதான்."

"ராஜ ராஜனும் நீரும் சேர்ந்து ஒன்றை முடியாது என்று விட்டுவிட முடியுமா அமைச்சரே?"

புதுமை உணர்ச்சிக்கும் சரும ஆரோக்கியத்திற்கும் மலபார் லிம்டா சோப்புத்தான் சிறந்தது.

சுத்தமான வேப்பெண்ணெய் சேர்க்கப்பட்டது.

FAS-4-61.

VEGETABLE SOAP WORKS, CALICUT.
PROPRIETORS: SAIT N.P. & Co. LTD.
CALICUT-BOMBAY-2-MADRAS-1.



இறுதி ஓவியம்

ரா. கோபாலகிருஷ்ணன்

ஓர் அழகிய அரண்மனை. அந்த அரண்மனையைச்சுற்றிப் பத்து, பன்னிரண்டு குட்டி அரண்மனைகள். அவைகளுக்கு அப்பால் நூற்றுக்கணக்கான குடிசைகள். அரண்மனையில் களியாட்டம். குடிசையில் கும்மிருட்டு. அங்கே போகம். இங்கே சோகம். இப்படி அமைந்த அந்த ஊரின் பெயர் நெல்லையூர்!

காலைநேரம். கதிரவன் தன் பொன்னொளியை அரண்மனை, குடிசை என்று பாராமல் நெல்லையூர் எங்கும் வீசிக்கொண்டு வெளிக் கிளம்புகிறான்.

அரண்மனைப் பள்ளி அறைகளில் கவலையற்ற குறட்டை யோசை கேட்கிறது. செல்வர்களும், செல்விகளும் பள்ளியை விட்டு எழுந்தபாடில்லை.

கூழைக் குடித்துவிட்டு, கலப்பையைத் தூக்குகிறது சக்தியற்ற ஓர் ஜீவன். ஒவ்வொரு குடிசையிலும் இதே காட்சி. பகல் முழுவதும் இவர்கள் வயலில் உழுது சாகவேண்டும். கதிரவனுக்கு ஓய்வு கிடைத்தபிறகுதான் இவர்களுக்கும் ஓய்வு.

அரண்மனையில் மது உண்ட மகனொருவன் ஒருமங்கையைக்கட்டி அணைக்கிறான். இது அங்கு நிகழும் அரங்குகளில் ஒன்று.

* * *

இந்த நெல்லையூர் அரண்மனையில் மதுவைஅருந்திமயங்கிக்கிடக்கும்மன்னர்களுக்கு—இல்லை, மனிதர்களுக்கு இடையில் அவன் தோன்றினான். அவன் ஒரு ஓவியன். ஆம், எண்ணற்ற வர்ணகுழம்புகளுடன் விளையாடும் ஓவியப் பித்தன். அந்தக் கலையினால் தன்னையும் மறந்து வெளி உலகையும் மறந்தான். அவன் உடல் அரண்மனைக்குள் கட்டுண்டு கிடந்தாலும், அவன் கற்பனை ஓவியம் மண்ணகத்திலிருந்து விண்ணகம் வரையில் படர்ந்தது.

மாலை நேரம். தூரிகையைக் கையில் ஏந்தியவண்ணம் சாளரத்தின் வழியாக அந்தி வானத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தான். கதிரவன் மறைந்து வெகுநேரம் ஆகிவிட்டது. நீலம் பூத்த மலைத்தொடருக்கும் மேலே தெரியும் வானம் மொட்டவிழ்ந்த ரோஜாமலரை ஒத்திருந்தது; அந்த நிறத்தைத் தழுவி அதனுடன் சங்கமமாய்க்கொண்டு இருந்தது. அதற்கு மேலே உள்ள நாவற் பழத்தின் நிறம்! அந்தக்காட்சி ஓவியன் கண்களுக்கு ஓர் வர்ண விருந்தாக இருந்தது. மகுடியின் இசையில் மயங்கி நிற்கும் கருநாகத்தைப்போல், நிமிஷத்துக்கு நிமிஷம் மாறி மாறித் திகழும் வர்ண இசையில் அவன் மனம் சொக்கி நின்றது. அந்த மாயாஜால இசையைப் பாடிக்கொண்டே அந்திப் பெண் எங்கோ சென்று மறைந்துகொண்டு இருந்தாள்.

ஓர் இளநங்கை மது நிறைந்த ஓர் வெள்ளிக் குடத்தைக் கையில் ஏந்திக்கொண்டு அவன்பின் மெதுவாக வந்து நின்றாள். அவனுக்கு மது ஊட்டி, தன் வலையில் சிக்கவைப்பதற்கு அவள் வந்தாள். அவன் தான் கண்ட அந்த அற்புத விளையாட்டை ஓவியத்தில் தீட்டுவதில் ஈடுபட்டு இருந்தான். அவள் அவனுக்கு ஆசை காட்டினாள். அவன் அவளைப் பார்த்தான். எந்தப்பொருளையும் உயிர் அற்ற ஓவியமாகப் பார்க்கும் அந்த ஓவியனின் கண்கள் அவள் ஆசை வலையில் சிக்கவில்லை. அவள் கண்கள் கோபத்தால் தீப்பொறி சிந்தின. மதுவை அவன் தீட்டும் ஓவியத்தில் வீசினாள். அந்த ஓவியம் அந்திப் பொழுதைப் போலவே கரைந்து மறைந்தது. அவன் சுய உணர்ச்சி பெற்றுத் திரும்பிப் பார்த்தான். அவள் அப்பொழுது அங்கு இல்லை. அவள் ஒரு மின்வெட்டுப் போல் அங்கிருந்து மறைந்து விட்டாள். பெருமூச்சு விடுவதைத் தவிர அவனால் வேறு ஒன்றும் செய்ய இயலவில்லை.

நாட்கள் சென்றன. அவன் எத்தனை ஓவியங்கள் புனைந்திருப்பான்! ஆனால் இன்னும் ஆசை விட்டதா? அவனைப் பித்தனாகச் செய்துவிட்ட அந்தக் கலையின் மர்மம் என்னவாய் இருக்கும்?

* * *

பின்னொர் அந்தி வேளை. அதே சாளரத்தின் வழியாக அவன் பார்வை சென்று கொண்டு இருந்தது. அவன் அன்று கண்ட அந்த வர்ணச்செருக்கை இன்று காணவில்லை. இருண்டுமண்டிய மேகத் திவலைகள் மலை வாயில் சென்று விழுந்துகொண்டு இருந்தன. அவைகளைக் கிழித்துக்கொண்டு மலைக்கு அந்தப்புரத்தில் இருந்து ஜோதிப் பிழம்பு ஒன்று விண்ணை நோக்கிப் பாய்ந்தது.

அவன் அதைப் பார்த்தான். பார்த்துக் கொண்டே இருந்தான். அந்தக் காட்சி அவன்முன் இருந்த மாயப்பிரபஞ்சத்தின் ஒரு சித்திரமாகத் திரண்டு உருவாகியது. ஒரு பெண் அந்த மேகங்களுக்கு இடையில் ஒரு வீணையை மீட்டிக்கொண்டே மேலே சென்றுகொண்டு இருக்கிறாள். அந்த இசையையே இலக்காக வைத்து அவளை அடைவதற்காக ஒருவன் அவள் பின்னே தொடர்ந்து செல்லுகிறான். அவன் கண்கள் மாயத் திரையால் கட்டப்பட்டிருக்கின்றன. அந்தப்படத்தை அவன் மானசிகமாகச் சித்திரித்துக்கொண்டு இருந்தான். இனிமேல் அதை வர்ணக் குழம்பில் காட்டவேண்டும். இல்லாவிடில் அவன் தலை வெடித்தேவிடும். நாட்கணக்கில் அதை வரைந்துகொண்டே இருந்தான். ஒவ்வொரு வர்ணத்தின் மூலமாக அவனுடைய உணர்ச்சி வேகம் தூரிகை முனையில் துடித்துக்கொண்டு இருந்தது.

அவன் ஏன் இப்படித் தன்னையே மறந்து தன்னுடைய ஆவியை எல்லாம் அந்தப் படத்திற்கு அர்ப்பணம் செய்ய வேண்டும்? அது, "அந்தப் பிரமன் இந்த உலகை ஏன் சிருஷ்டிக்க வேண்டும்?" என்று கேட்பது போலத்தானே?

அவன் அதைத் தீட்டிக்கொண்டு இருந்தான். அப்பொழுது அவன் பின் ஒரு கோர உருவம் பல்லைக் காட்டிக் கட, கட வென்று சிரித்துக்கொண்டு இருந்தது. மதுவும் மங்கையும் என்ற லக்ஷிய வாழ்வில் மூளையை மழுங்க அடித்துக்கொண்டு இருக்கும் மனித மிருகங்களில் அது ஒன்று. கலை உணர்ச்சிக்கு அதனிடம் இடம் ஏது? மதுவில் தோய்ந்த அதனுடைய மீசை கீழ்நோக்கித் தொங்கிக் கொண்டு இருந்தது. அதன் சிவந்த கண்கள் தெறித்துவிடும் கண்ணாடிக் குண்டுகளைப் போல் உருண்டுகொண்டு இருந்தன. அந்தக் கண்களின் ஓட்டம் அந்த வர்ணப்படத்தில் தாக்கி நின்றது. மறுகணம் அந்த உருவம் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து படத்து அருகே சென்று அதைச் சின்னபின்னமாய்க் கிழித்தெறிந்தது. வெறிபிடித்தவன்போல் தன் தலை மயிரைப் பிய்த்துக் கொண்டான் அந்த ஓவியன். "என் படம்! என் படம்! ஐயோ என் படம்!" என்று அவன் கதறிய குரல் அரண்மனைக்குள் சிலம்பியது.

* * *

காலையில் சூரியன் தன் தங்க ரேகைகளைப் பூமியில் பரப்புகிறான். அந்த ஒளியில் ஏழைக் குடிசைகள் எல்லாம் தங்கக் குடிசைகளாக மின்னுகின்றன. அவைகளுக்கிடையில் புதியதோர் குடிசை. அந்த ஓவியன் அமைத்த குடிசை, மிடுக்கும் துடுக்குமாய்ப் பொலிகிறது!

ஆம், அவன்தான் இருப்பிடத்தை மாற்றி அமைத்துக்கொண்டான்.

இசை எழுப்பும் வீணை ஒன்று குப்பையில் கிடந்ததுபோல, அவன் இதுவரையில் பாழும் மனித வர்க்கத்துக்கு இடையில் மங்கிக் கிடந்தான். அவன் ஓவியக் கலையை ரஸிப்பதற்கு அங்கு ரசிகன் ஏது? அவன் புதிய வாழ்க்கையின் சாயை அவனுடைய வர்ணக் கலப்பிலும் விழுந்தது. அவன் படத்தில் நெற்கதிர், கலப்பை, எருது, உழவன் இவைகளுக்கு எல்லாம் இப்பொழுது இடம் கிடைத்தது. எளிய வாழ்க்கையைச் சித்திரிப்பதில் அவன் கை முனைந்தது.

உச்சி வேளை, உழவன் நெற்றிவியர்வை நிலத்தில் விழ உழுதுகொண்டு இருக்கிறான். இந்தக் காட்சி அவன் வர்ணக்கலப்பிற்கு என்ன அழகாக அமைந்தது! மாலை வேளை, மாடுகளை ஓட்டிக்கொண்டு வீடு

செல்லும் சோர்ந்த உருவங்கள் அவன் கைகளால் என்ன அற்புதமாய்ச் சித்திரிக்கப்பட்டன! அவன் சதா சித்திரம் வரைந்துகொண்டே இருந்தான், ஓய்வே இல்லை. அவன் தன் வாழ்க்கை முழுவதையும் ஒரே வர்ண மயமாக ஆக்கி விடுவது என்று எண்ணி இருந்தான் போலும்! ஒரு கண்ணாடி ரச குண்டு தன்னுள் பிரதி பலிக்கும் எந்தப் பொருளையும் ஒரே அழகுடன் சோபிக்கச் செய்வது போல, அவன் புறக் காட்சியின் ஒவ்வொரு அம்சத்தின் தோற்றத்தையும் ரமிக்கச் செய்தன அவனுடைய ஏழு வர்ணங்கள். நிறத்திமிர் கொண்ட மலரில் தேனைக் குடித்து மயங்கிக்கிடக்கும் வண்டைப் போல, சிந்தனைக்கு எட்டாத வர்ண அமைப்புப் பெற்ற கற்பனை உலகம் என்னும் பூவிலே அவன் மயங்கிக் கிடந்தான்.

அவன் தன்னுடைய படங்களைத் தன் குடிசையைச் சுற்றித் தொங்கவிட்டான், அந்தக் குடிசைக்குச் சித்திர கூடம் என்று பெயர் இட்டான். ஆனால் அங்கே தொங்கிய படங்களை யாராவது ஏறிட்டு பார்த்தார்களா? அவர்கள் ஏன் பார்க்கவேண்டும்? பசிக்கொடுமையை ஒழிப்பதையே லக்ஷியமாகக்கொண்ட அடிமை யந்திரங்கள் அல்லவா அவர்கள்? அவர்களுடைய உணர்ச்சி ஓட்டம் கலப்பை முனை, நெற்கதிர், நீர் சுமந்துவரும் கருமேகம் இவைகளுக்கு இடையில் தடை பட்டு நின்றது. காட்டுப் பூ, ஒன்று சூரியனிடம் இருந்து வரும் மற்ற வர்ணங்களை எல்லாம் தள்ளிவிட்டுத் தனக்கு வேண்டிய ஒரு நிறத்தில் மட்டும் மிளிர்வதுபோல, அவர்களுடைய உணர்வாகிய சக்தி அவர்களுக்குச் சொந்தமான ஒரு செயலில் மட்டும் அதாவது நிலத்தைப் பயிர்செய்வதில் மட்டும் பரிணமித்தது.

* * *

ஒரு நள்ளிரவு, நிர்மலமான நீலவானில் வைரத் தாரகைகள் மின்னுகின்றன. சில்லென்ற காற்று மூங்கில் மரங்களில் மோதி, புல்லாங்குழல் சுருதி போடுகிறது. மௌனம் என்ற பெண் பாடும் பாட்டைப்போல் இருக்கிறது அந்தச் சுருதி.

அவன் ஆழ்ந்த யோசனையில் குடிசை வாயிலில் உட்கார்ந்துகொண்டு இருந்தான். இப்பொழுது அவன் மனம் வெறும் கனவு கண்டுகொண்டு இருக்கவில்லை. தான், தான் இருக்கும் உலகம், வான வெளியில் சுழன்று ஓடும் கோடானு கோடி அண்டங்கள், அவைகளை இயக்கும் மகாசக்தியின் லீலை—இவைகளைப் பற்றி அவன் மனம் ஆராய்ந்துகொண்டு இருந்தது. அந்த ஆராய்ச்சி, கடைசியில் அவன்விட்ட நீண்ட மூச்சில் பயன் அற்று அவிந்தது. பிறகு அவன் பார்வை அவனுடைய குடிசைக்குள் சென்றது. அங்கு அவன் ஓயாது வரைந்துவைத்த நூற்றுக் கணக்கான படங்கள் அவன் கண்களுக்கு அப்பொழுது அந்த மற்றவைகளாகத் தெரிந்தன. பிறகு அவன் தன் பார்வையைக் குடிசைக்கு வெளியே செலுத்தினான். எலும்புக் கூட்டையொத்த ஒரு கிழவன், தன் குடிசையை நோக்கிச் சென்று கொண்டு இருக்கிறான். அவன் முன் எலும்புக்கூடுநாய் ஒன்று, வாலைக் குழைத்துக் கொண்டே அவனைக் கூட்டிச் செல்லுகிறது. அந்த உருவங்கள் அவன் கண்களுக்கு இப்பொழுது ஒரு படமாகமட்டும் நின்று விடவில்லை. அதோ! அந்த இருட்டில் முழுகிக்கிடக்கும் குடிசை வாசிகளின் உயிருள்ள வறுமைப் பிரதிநிதிகளாகவும் அவனுக்குத் தோற்றம் அளித்தன. அவன் கண்கள் இரக்கத்தால் சிறிது கலங்கின. இதுவரை வாழ்க்கையில் வறண்டு கிடந்த அவன் இருதயத்தில் அன்பு என்ற ஊற்று ஜனித்தது. அவன் நேத்திரங்களில் கருணை சுரந்து பெருகியது.

அந்தக் குடிசைகளின் உயிர்களை வறுமையினின்று விடுதலை செய்யும் சக்தி தன்னிடம் இருப்பதாக அவன் மனம் ஒருகணம் நினைத்தது. அவர்களை ஆட்டி வைக்கும் கயிறுகளின் விசை, அதோ அந்த அரண்மனைகளை நசுக்கிவிடுவது போல அவன் அவைகள் இருக்கும் திக்கை நோக்கினான். அங்கே கவிந்து கிடந்த இருட்டில் அவைகள் அவன் கண்களுக்குத் தெரியவில்லை. ஆனால் வெகு தூரத்தில் உள்ள வானைத்தொடும் மலையில் படர்ந்த தீக்கோடுகள் மட்டும் அவனுக்குத் தெரிந்தன. அந்த மலையின் இருதயமே வெடித்து ரத்தம் கக்குவதுபோல இருந்தன, அந்த அக்னிக் கோடுகள். ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே எழுந்து குடிசைக்குள்ளே சென்றான். அந்த

மூச்சின் வேகத்தில்தானே என்னவோ வானத்தில் ஜ்வலிக்கும் நட்சத்திரங்களில் ஒன்று தூள்தூளாகிப் பறந்தது!

* * *

காலையில் தூக்கம் கலைந்து அவன் விழித்தான். தன்னைச் சுற்றி உயிர் அற்றுக்கிடந்த அந்தப் படங்கள் எல்லாவற்றையும் ஒரே கட்டாக எடுத்துக் குடிசை வாயில் முன்கொண்டு போய் வைத்தான். பிறகு நெருப்புப் பந்தம் ஒன்றைக் கொளுத்தி அந்தப் படக் குவியலைச்சுற்றிப் பற்றவைத்தான், கண்ணையும் மனத்தையும் கவர்ந்த அந்த வர்ணப் படங்கள், சுருண்டு அவிந்து புகை மயமாய் ஆகாயத்தில் சென்றன. அந்தப் புகைக்கிடையில் அவன் வரைந்த படங்கள்எல்லாம் ஒன்றன்பின் ஒன்றுய்த் தோன்றித் தோன்றி மடிந்தன. அந்தத் தகன கிரியைகளை முடித்துவிட்டுக் கீழ் வானத்தை நோக்கினுன். அப்பொழுது அவன் ஜீவ தாதுக்களையே துள்ளச்செய்த அவன் கலைத்தொழிலுக்கே முற்றுப் புள்ளிபோட்ட உயிரோவியம் ஒன்று அவன் உள்ளத்தில் உதித்தது! — ஆ! அதை ஒரு படமாக வரைந்தால்! அதைத்தான் அவனும் நினைத்தான். வர்ணங்களைக் குழைத்துக்கொண்டு, துடித்து எழுந்த தூரிகைக்கோலைக் கையில் பிடித்தான். அவன் கண்ட கனவை நனவாக்க ஒரு கடைசி ஓவியம் தீட்ட ஆரம்பித்தான்.

மாசக் கணக்கிலே அதை வரைந்தான். தன் உயிர்த் துடிப்பை எல்லாம் அதில் கொட்டிவைத்தான். படம் ஒருவாறுக முடிந்தது. அதைப் பார்த்து அவன் உள்ளம் பெருமிதம் அடைந்தது.

* * *

மேற்கே சூரியன் கோவைப் பழம் போலச் சிவந்து மறைந்து கொண்டு இருக்கிருன். அவன் குடிசைக்கு முன்பாக ஏன் இப்படி பெருத்த கூட்டம்? அவன் தீட்டிய அந்த வர்ண ஓவியம்தான், அதற்குக் காரணம். அந்தப் பிரமாண்டமான ஓவியத்தை அவன் குடிசைக்குமேலே தூக்கிக் கட்டியிருக்கிறது, அதைப் பார்ப்பதற்குத்தான். அந்தக் குடிசை வாசிகள் பரபரப்போடு அங்கே குழுமி இருக்கிருர்கள். அவர்களுக்கு என்றும் இல்லாத ரசிகத்தன்மை இப்பொழுது வந்துவிட்டதா? அவர்களை அப்படி தன் வசப்படுத்திய அந்தப் படத்திலே அவன் மந்திர சக்தியைத்தான் புகுத்திவிட்டானு? அவன் அதில் என்ன தீட்டியிருந்தான்?

அதில் அந்தக்குடியானவர்களை என்றும் இல்லாத வீர்யத்துடன் முறுக்கேறிய தசை நரம்புகளுடனும், விம்மிய தோள்களுடனும் தீட்டி இருந்தான். அதுமட்டும் அல்ல, அவர்கள் தங்கள் அடிமைத் தளைகளை உடைத்தெறிந்து, விடுதலை பெறுவதற்கு இயற்றும் ஒரு செயலை அதில் வரைந்து இருந்தான்.

மின்சார அலைகள் அந்தப்படத்தில் இருந்து கிளம்பி அவர்கள் நினைவை மோதித் தாக்கின. மறுகணம் சக்தியே திரண்டு வந்ததுபோல ஒருவன் அந்தக் கூட்டத்தில் இருந்து கிளம்பி, படத்தருகே சென்ருன். ஏறுபோலத் தன் சகாக்களை ஒரு முறை திரும்பிப் பார்த்துவிட்டு, அவன் அந்தப் படத்தைக் கழற்றித் தன் தலைமேல் உயர்த்திப் பிடித்தான். அங்கே கூடி இருந்த அத்தனை பேரும் ஒரே பேர் இரைச்சலுடன் ஒரு முகமாய்க் கிளம்பி விட்டார்கள் அரண்மனையை நோக்கி.

அந்தக் கலைத்தியாகி அவர்கள் போவதைப் பார்த்துக்கொண்டே இருக்கிருன். ஒரு மந்திரவாதியைப்போல அவன் தன் புருவங்களை உயர்த்திக் கொந்தளித்துச் செல்லும் அந்தக் கூட்டத்தைப் பார்க்கிருன். வெகுதூரம் அவர்கள் சென்று விட்டார்கள். ஆனல் பல்லக்குப்போல் ஆடி ஆடிச் செல்லும் ஓர் உருவம் மட்டும் அதோ அடிவானத்திற்கு எதிராகக் கறுத்துப் "பளிச்சென்று" தெரிகிறது. ஆம்! அதுதான் "அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலை நாட்டும்" என்ற தத்துவத்தை விளக்கிச் சென்ற அந்த ஓவியனின் இறுதி ஓவியம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக
சென்னை-600 008

பறவை

கே. வி. கே.

இருளைக் கிழித்துக்கொண்டு ஓடிக்கொண்டிருந்த ரயிலின் ஜன்னலில், மடக்கிய கரங்களின்மேல் முகவாய்க்கட்டையை அழுத்தியவாறே வெளியே பார்த்துக்கொண்டிருந்தான். பார்வைக்கு எட்டிய தூரம்வரை அந்தகாரம்தான் கப்பிக்கொண்டு கண்களை அழுத்தியது. வண்டிச் சக்கரங்களின் தாள ஆவர்த்தனத்தையும், இடையிடையே 'உஸ்' என்ற இன்ஜினின் பெருமூச்சையும் கடந்து ஓயாமல் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்த நாதம் சுவர்க் கோழிகளின் ரீங்காரம்தான். இந்தச் சுவர்க் கோழிகளுக்குச் சுவர் இருக்க வேண்டும் என்ற நியதியே இல்லையா? முப்பது நாற்பது மைல் வேகத்தில் பறந்து செல்லும் வண்டியின் கூடவே பலமணி நேரம் இந் நாதமும் தொடர்ந்து வருகிறதென்றால் அவ்வளவு தூரத்திற்கும் இச் சுவர்க்கோழிகள் பரந்தா கிடக்கின்றன!

ஆமாம்! ஏன் இருக்கக்கூடாது! மனிதன் பரந்து கிடக்கவில்லையா? அவன் எண்ணமும் பறக்கவில்லையா!

பறந்து பறந்துதானே மனம் சொரூபம் அற்று மறைந்தேவிடுகிறது சுவர்க் கோழிகளைப் போல! அவைகளைப்போலவே ஓயாமல் நச்சரித்தும் கொல்லவில்லையா!

அந்த நாளில் அப்பா சொல்லுவார்:

“டேய்! மனதைப் பறக்கவிடாதேடா! கிட்டாததற்கெல்லாம் ஏங்குறதைவிட, குறியும் குணமுமாய் மெட்ரிகுலேஷனைத் தேறிவிட்டு, குமஸ்தா வேலைக்குப் போ......! அதுதான் நிரந்தரம்......!”

அப்பாவுக்கு என்ன தெரியும்! பொதுவாக எல்லா அப்பாக்களுக்கும்தான் என்ன தெரிகிறது? குறியையும் குணத்தையும் தவிர அவர்களுக்கு ஒருபடி மேலே ஏதாவது தெரியுமா! காலேஜ் வாழ்க்கை எப்படி இருக்கும் என்று அவர்களால் கற்பனைகூடச் செய்ய முடியவில்லை! ஹாஸ்டலில் ஆனந்தமாகக் காலம் கடத்தும் அமரவாழ்வு அவர்களுக்கு எங்கே புரிகிறது! இவைகளைத்தானே அவன் வேண்டினான் அப்போது......!

“குமாஸ்தா! இருபத்துநாலுரூபாய் சம்பளம்தானா உங்களுக்குப் பெரிதாகத் தெரிகிறது......!”

“ராஜு! ஏண்டா மனசை அலையவிடறே! குடும்பம் இருக்கற நிலைமையிலே ஒன்னை காலேஜிக்கு எப்படிடா அனுப்பறது......! காந்தா வேறே கல்யாணத்துக்கு நிக்கறாளே......!”

இது அம்மாவின் பரிதாபம்.

காந்தா! காந்தா! எதற்கெடுத்தாலும் எந்த வேளையும் அவளுக்குக் காந்தாதான். கடைசிவரைக்கும் அவள் பெயரைப் புலம்பிக்கொண்டுதானே இறந்தாள்.

வறுமையும், பொறுப்பும் அவனுக்கு அப்போது எங்கே தெரிந்தன. இறக்கை கட்டிக்கொண்டு வானளாவத்தான் அவன் மனம் பறந்து வட்டமிட்டது! பட்டண வாழ்வு, பதவி, பணம் இவைகள்தானே வாழ்வின் லட்சியங்கள்!

ஆனால் பட்டணத்திற்கு வந்தபிறகும் அவன் லட்சியம் ஏனோ நிறைவேறிவிட்டதாகத் தோன்றவில்லையே! ஒருவேளை நிறைவேறிவிட்டதுதானா அது! அப்படியானால் இதற்குத்தான் மனம் பறந்ததா......! இப்போது நின்றுவிட்டதா......! அதுவும் தெரியவில்லை! இன்னும் பறந்துகொண்டுதானே இருக்கிறது......! எங்கே பறக்கிறது......? எதற்காகப் பறக்கிறது......?

அச் சமயத்தில்தான் அம்மாவிடமிருந்து கடிதம் வந்தது. காந்தா அதை எழுதி இருந்தாள் அம்மா சொற்படி. எல்லாவற்றையும் எழுதிவிட்டுக் கடைசியில்,

“அண்ணா! நீ போய் இரண்டு வருஷம் ஆறதே! எப்போ வரப்போறே! அப்பா படுத்தபடுக்கையாவே இருக்கார்! எனக்குக் கல்யாணம் ஆகல்லேன்னு அம்மா புழுவா துடிக்கிறாளே......! இருக்கிற நிலைமையெல்லாம் நெனச்சா எங்கேயாவதுபோய் பிராணனை விட்டுடலாமான்னு தோணறது...!”

பாவம்! எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறாள் காந்தா, குடும்பத்தில்! ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவள்தானே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு, அம்மா, அப்பா இருவரையும் தாங்கி இருக்கிறாள்! அந்த இளம் உள்ளத்தில் என்னென்ன எண்ணங்கள் அப்போது சுழன்று கொண்டிருந்தனவோ! அதையெல்லாம் கேட்டறிய யார் முன்வந்தார்கள்? முன்வர முடியும்?

வாழ்வே அவ்வளவுதானே! ஒவ்வொருவரும் எண்ணச் சுழலில் சிக்கி மீளா வழியில், தாமே கற்பனை உலகை உண்டு பண்ணிக் கொண்டு அதில்தானே உண்மையில் வாழ்கிறார்கள்! புற உலக வாழ்வு வெறும் நடிப்போடு நின்றுவிட வில்லையா! 'கற்பனை யற்ற பூரண உலக வாழ்வே 'நாடகமேடை வாழ்வு' என்று கூறும் மகான்கள், இக் கற்பனையில் வாழ்ந்து உலகில் நடிப்பவர்களின் வாழ்வை எதனுடன் சேர்ப்பார்கள்! நாடகத்தில் நாடகமா!

காந்தாவின் கடிதத்தைப் பார்த்த பிறகு கூட அவன் ஊருக்குச் செல்ல முடியாதபடி இருந்து விட்டதும் நாடகத்தால் தானே!

அப்போது நாடகக் கொட்டகையில் வேலைக்கிருந்தான். சினிமா ஸ்டுடியோ என்று இக் கால பாஷையில் அதை அழைக்கிறார்கள்.



எதுவாக இருந்தால் என்ன! நல்ல உத்தியோகம். கை நிறைய என்னவோ பணம் வந்தது. ஆனால் செலவும் அதற்குத் தகுந்தபடி தானே இருந்துகொண்டே இருந்தது! ஆயினும்முன்போலல்லாமல் மனம் சிறிது நாளாய், பறப்பதைச் சற்று நிறுத்தி விட்டிருந்தது போலத் தோன்றவில்லையா! அதற்குக் காரணம்? உத்தியோகமா...? இல்லை. கை நிறையப் பணமா...? அப்படியொன்றும் தெரியவில்லை! உத்தியோகம் வாயளவுக்கு ரம்மியமாக இருந்தாலும், செயலளவில் உற்சாகமற்றுத்தானே இருந்தது! பணமும் கை நிறைய இருந்தாலும், செலவின் ஒரு பகுதியைத் தானே நிரப்பியது! அப்படியானால் எதைக் கண்டு மனம் பறக்காமல் நின்று விட்டது?

ஹூம்! யோசித்துப் பார்த்தால் அப்படியொன்றும்பிரமாதமாய் அம் மனம் தன் எண்ணத்தை அடைந்துவிட்டதாகத் தோன்றவில்லையே! தற்காலிகமாய்க் கட்டுப்பட்டு நின்றுவிட்டதை மனச் சாந்தி என்றுதானே நம்பிவிட்டான்! ஸ்டுடியோவில் வட்டமிட்டுச் சஞ்சரித்துக் கொண்டிருந்த நடிகை காந்தம் தானே அலைபாயும் அவன் மனதைக் காந்தம் போல் இழுத்து விட்டாள்! எவ்வளவு ஒற்றுமை! அவன் சகோதரி காந்தா எங்கே! இந்த ஸ்டுடியோ காந்தம் எங்கே! கடல் போன்ற இவள் கண்களில் இவ்வளவு பூரிப்பு எப்படி இருக்கிறது, நக்ஷத்திரத்தைப் போல! சகோதரி காந்தாவின் கண்களில் பளபளவென்று எந்தவேளையிலும் நீர்தானே பிரகாசிக்கும்! அவள் எழுதியிருந்த கடிதமும் கண்ணீரைத்தானே பெருக்கியது.........!

"ஏன் ஒரு மாதிரியாய் யோசனையில் இருக்கிறீர், மிஸ்டர் ராஜூ?"

"ஒன்றுமில்லை, மிஸ் காந்தம்? என் சகோதரி கடிதம் வரைந்திருக்கிறாள்.........!"

ஓ! கஷ்டப்படுகிறீர்களாக்கும்! இதெல்லாம் கவனிப்பதில் பயனில்லை, மிஸ்டர்! எனக்கும் சகோதரர், சகோதரிகள் இருக்கத்தான் இருக்கிறார்கள்! இரண்டு காசை வீசியெறிந்து விட்டு என் வேலையைப் பார்த்துக் கொண்டுதான் போகிறேன்!"

ஏனோ என்றுமில்லாமல் மனம் சுறுக்கெனத் தைத்ததே! இதுதான் நாடக உறவா...! அல்லது உற்றாரைத் தூக்கியெறிவதுதான் நாடகக்கலையின் தேர்ச்சிக்கு உகந்ததா......? உடன்பிறந்தோரை உதறித் தள்ளுவது ஏன் அவ்வளவு சுலபமாய் இருக்கிறது......? தம்முள் இருக்கும் குற்றம் குறைகளுள் அனேகம் அவர்களிடமும் இருப்பதைக் காணச் சகிக்காமலா...!

"நாளைக்கு நான் புதிய வேடத்தில் தோன்றப் போகிறேனே! நீங்கள் ஊருக்குப் போகமுடியாது...! போவதற்கு உங்களுக்குத் தைரியம் வராது......!"

ஆம்! தைரியம் அற்றுத்தான் இருந்தான்! கண் கலங்கி நிற்கும் காந்தாவிடம் எப்படிச் சென்று என்ன உதவி அளிக்க முடியும் அவனால்! 'இரண்டு காசை வீசியெறிய' அவனிடம் பணம் எங்கு தங்கி நின்றது!

"ராஜு! வந்தயாடா! என் மூச்சு இருக்கறத்துக்குள்ளே காந்தாவை ஒருத்தன்கிட்டே இழுத்துக் குடுத்தட்டயானா போதுண்டாப்பா.........!"

இப்படி அம்மா கேட்டால் அவளுக்கு என்ன பதில் கூறமுடியும்!

சோபாவில் பக்கத்தில் அமர்ந்துவிட்ட காந்தம் கொஞ்சலாகப் பேசினாள்:

"மிஸ்டர் ராஜு! நான் கூறுவதைக் கேளுங்கள். உங்கள் சகோதரியை, பேசாமல் இங்கு வரவழைத்து ஸ்டுடியோவில் சேர்த்து விடுங்கள்! பிறகு பாருங்கள் அவள் அதிர்ஷ்டத்தை! கௌரவம் என்ன, மிஸ்டர்......! எவ்வளவு பேர் தாங்கி, காப்பாற்ற முன்வருவார்கள் தெரியுமா.........!"

ஆமாம்! உண்மைதானே! இதில் தவறு என்ன........!

"அண்ணா! நீ எங்கேயோ நாடகக் கம்பெனிலே இருக்கேன்னு, பட்டணத்துலேர்ந்து வந்த கோடியாத்து மாமா சொன்னார்...! நாடகக் கொட்டகைலே இருந்தா, கெட்டுப் போயிடுவாளாமே, அண்ணா! நீ ஜாக்கிரதையா இருக்கேன்னு ஒருவரி எழுதக் கூடாதா......!"

இந்தத் தோரணையில் எழுதப்பட்ட கடிதம் அன்று மாலை அவனுக்கு வந்தது!

அந்த ஒரு நிமிஷம் அவன் மனம் பட்டபாடு யாருக்குத் தெரியும்? அப்பப்பா! இரு காந்தாவும் பெண்ணுள்ளம் படைத்தவர்கள் தானே! அவர்கள் எண்ணத்தில் இவ்வளவு மாறுபாடுகளா......!

மிஸ் காந்தத்தின் யோசனைப்படி காந்தாவை இதில் சேர்த்துவிடக்கூட எண்ணினனே ஒரு கணம்! ஆனால் காந்தாவின் மனப்போக்கு......! அவள் வாழ்வுகூட மாசின்றி இருக்கவேண்டுமென்றல்லவா அங்கலாய்க்கிருள்......!

நாடகக் கம்பெனியை விட்டு விட்டுப் பத்திரிகை உலகில் புகுந்துவிட்டான். வறுமையும், ஏக்கமும் மனதைப் பறக்கவிட்டன கழுகுகளைப் போல.

ஈச்வரா! இதற்கு முடிவேயில்லையா! வாழ்நாள் முழுதும் இந்தப் பாழும் மனம் பறந்தே தான் திரியவேண்டுமா! எதைத் தேடிப் பறக்கிறது! எதைத் தவிர்க்கப் பறக்க வேண்டும்! இன்பத்தைத் தேடியா.......? அப்படியானல் அவ்வின்பத்தின் எல்லை......? கானல் நீர் போன்ற மனத்திற்கு எல்லை ஏது......! எல்லையற்ற இன்பத்திற்காகவா அது போராடுகிறது? பின் அந்த இன்பம் இன்னதுதான் என்று அது ஏன் திட்டமாய்க் கூறக்கூடாது? அதற்கே ஒருவேளை தெரியாதோ! தனக்கே தெரியாத ஓர் இன்பத்தை அடையத்தானு இவ்வளவு துன்பம்! தெரிந்த இன்பத்தைக்கூட அல்லவா துன்பமாய் மாற்றிவிடுகிறது, பிடிவாதக்காரக் குழந்தையைப் போல......!

மூன்று மாதங்களுக்குப்பிறகு காந்தாவிடமிருந்து கடிதம் வந்தது:

"ஐயோ, அண்ணு! இப்போதுதான் உன் இருப்பிடம் தெரிந்தது......! நாடகக் கம்பெனிக்கு நாலு கடிதம் எழுதினேன்! அப்பா செத்துப் போயிட்டார், அண்ணு! ஒரு மாச மாச்சு......! அம்மா பரதவிக்கிருள்.........!"

சே! என்ன வாழ்விது! காந்தாவின் சோகத்திற்கு அந்தமேயில்லையா? தன்னுல் அவள் பயனடையப்போவதே கிடையாதா......! அப்பாவும் போய்விட்டார்! தாயும், தங்கையும் இனி அவன் கையைத் தானே எதிர்பார்க்கவேண்டும்! அப்பா வகித்த ஸ்தானத்தை அவனுல் வகிக்க முடியுமா.........! அப்பாவின் மனம் போலவா அவன் மனம் நின்றது! அதுதான் அலைபாய்கிறதே! அவர் மரணத்திற்குக்கூடச் செல்லத் தைரியமற்று மரணபயத்தால் கோழையாய் விட்டதே...........!

ஆறுமாதத்தில் பத்திரிகை உலகம் இருளடைந்துவிட்டதுகூட அவன் கோழைத்தனத்திஞல்தானு! அல்லது கானல் நீரைத் தேடியலையும் உள்ளத்திஞலா?

வேலையும் வருமானமும் அற்று எவ்வளவு காலம் பட்டணத்தில் வாழமுடியும்! ஆனல் வேறெங்குச் செல்வது? மனம் தொடர்ந்து வராத இடமே உலகில் இல்லையா!

வட நாடு சென்று வாழ்க்கையை ஆரம்பித்தபோது அவன் அடியோடு மாறிவிட்டிருந்தான். விவரிக்கமுடியாத மனக் கொந்தளிப்பை மூடி ஓர் அமைதி! சலனமற்ற முகத்தில் ஒரு விரக்தி! ஒளி குன்றிய கண்களில் ஒரு கொடூரம்!

வாழ்க்கையின் ஏமாற்றங்கள் கொடூர சித்தத்தை எவ்வளவு சிரத்தையுடன் வளர்க்கின்றன! அக் கொடுமைக்குப் பிறகு வெற்றியும் மெள்ள மெள்ளக் கிட்டவல்லவோ ஆரம்பிக்கிறது! ஆனல் அவ்வெற்றியைக் கொண்டாட மனம் முன் வருகிறதா.........! ஏன்............?

அவள் வட நாட்டுப் பெண். பொற்கொடி போன்றிருந்த அவள் எப்படியோ அவன் புற வாழ்வில் தன்னைத் திணித்துக்கொண்டுவிட்டாள்.

'ராஜன் பாபு! உங்கள் தேசத்துப் பெண் போல் நானில்லையா...........! என்னையேன் வெறித்துப் பார்க்கிறீர்கள்.........?"

அவனிடமிருந்து நீண்ட பெருமூச்சுத் தானே வெளிப்போந்தது! தலை குனிந்த படியே திரும்பிச் சென்றுவிடுவான்!

அவள் எப்படியெல்லாம் பேசினுள்! உற்சாகத்தை யூட்ட. என்னவெல்லாம் செய்தாள்! மணியோசை போன்ற அவள் முத்துச் சிரிப்பு அவனை என்னவெல்லாமோ செய்ததே.

இத்தனைக்கும் மனம் மாறுதல் அடையாமலேயா இருந்துவிட்டது? அல்லது மாறித் தான் இருந்ததா..............!

"பாபு! உங்கள் குறையை என்னிடம் கூற மாட்டீர்களா...! ஏன் இப்படி இருக்கிறீர்கள்...! என்னைக் கண்டால் பிடிக்க வில்லையா......?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை, சாந்தி......!"

"பின் ஏன் இந்தச் சோகம்? என் உயிரை அளித்தாகிலும் உங்கள் குறையைப் போக்குகிறேன்.........!"

விழுங்கி விடுபவன்போல் அவளை ஏறிட்டு நோக்கினுன்.

'சொல்லுங்களேன்.........!"

"என்ன சொல்ல வேண்டும்.........?"

ரிஜிஸ்டர்டு

கோத்ரெஜ் நெ.1 நெ.2

Godrej கோத்ரேஜ் No.1 No.2

டாய்லெட் (ஸ்நான) சோப்புகள்

பொறுக்கி எடுக்கப்பட்ட புஷ்டியளிக்கும் தாவர எண்ணெய்களையும் இதர மூலங்களையும் சேர்த்து, புகழ் வாய்ந்த சிறந்த முறையில் பிரத்யேகமாய் திறம்படத் தயார்க்கப்படுகின்றன. அவைகளின் பரிமளங் கமழும் சிறந்த நுரையே அழகை யூட்டி, கிருமிகளையும் கொல்லுகிறது.



கவனியுங்கள்

இந்தச் சௌந்தரிய சோப்புக்கள் சாஸ்த்ரீய முறைப்படி பரிசுத்தமானவை என்றும் நன்மை பயப்பவை என்றும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. சில சோப்புகள் தவறுதலாக, பரிசுத்தமானவைகளாகக் கருதப்படுகின்றன. ஏனெனில் உதாரணமாய்ப் பார்ப்பதற்கு, பளிங்குபோல் தென்படுவதினால், இது அவைகளின் பரிசுத்தத்திற்கோ அல்லது தரத்திற்கோ எவ்வித அறிகுறியுமாகாது.

நெ. 1 — இப் பெரிய கட்டி பணத்திற்கேற்ப உத்தமமான மதிப்பு வாய்ந்தது. உங்களுடைய ஸ்நானங்களில் நீங்கள் திருப்தியைக் காண்பீர்கள்.

ஆராய்ந்தறிந்தோர் உபயோகிக்கும் சோப்புகள்

கோத்ரெஜின் இதர உயர்ரக தயாரிப்புகள்

ஷேவிங் ஸ்டிக் — ஷேவிங் 'ரவுண்டு'
கிளிசரின் — கூந்தல் தைலம்

100 சதம் தூய்மைக்கும் மிருகக் கொழுப்பற்ற தென்பதற்கும் உத்தரவாதமானது.

கோத்ரெஜ் சோப்ஸ், லிட். *மதராஸ்:164, பிராட்வே; கொச்சின்:6/36, கல்வத்தி*

"உங்கள் குறை என்னவென்றுதான்!"

"எனக்குக் குறை இருக்கிறதென்று நான் சொன்னேனா............!"

"உங்கள் கண்கள் சொல்கின்றனவே......! ஒருவேளை என் விஷயமாய், குறைப் படுகிறீரா............?"

"உன் விஷயமாகவா..........? எதற்காக..........?"

"என் பிரேமையில் நம்பிக்கைக் குறைவினால்............!"

வேல்போன்ற அவ்விழிகளை மாறி மாறி நோக்கின அவன் மங்கிய கண்கள். மெல்லத் தலை அசைந்தது.

"பின் வேறென்ன, பாபு.........!"

நீண்ட பெருமூச்சோடு சேர்ந்து உருண்டலலவா அவன் வாயினின்றும் அச்சொல் வந்தது!

"காந்தா.........!"

"காந்தாவா.........?"

"என் சகோதரி.........!"

"அவளுக்கென்ன.........?"

"அவள் வாழ்வு! பாலைவனத்துக்கொடி போல் ஆகிவிட்டது.........!"

"அதாவது.........?"

"மணமும், மெருகும் இன்றி நின்று விட்டாள்.........!"

"அப்பாடா! இதுதானா! அதற்கு நீங்கள் கவலைப்படுவானேன்............?"

"பின் யார் படுவார்கள்............?"

"எனக்கு யார் கவலைப்படுகிறார்கள்.......? என் வாழ்க்கைக் கொடி படர ஆதாரம் ஒன்றை நான் அடைந்துவிடவில்லையா.........!"

"ஆதாரமா.........? யார் அது...........?"

"ஏன்......! உங்களுக்குத் தெரியவில்லையா............!"

அடுத்த கணம் அவள் அங்கு நிற்காமல் ஓடிவிட்டாளே......! அவளைக் கூவியழைக்க வாய் திறந்தும் அது தானாகவே மூடிக்கொண்டதே.........!

அவள் என்ன கூறினாள்! அவளைப்போல் காந்தாவும் வாழ்க்கைத் துணை ஒன்றை அடைந்துவிடுவாள் என்று குறிப்பிட்டாள்! காந்தாவால் அது இயலுமா......! பெண்கள் எல்லோராலுமே முடியுமா என்ன......!

ஏன் கூடாது? காந்தாவுக்காகக் கவலைப் படத் தான் யார்? அவள் சோகத்தைப் போக்க அவன் என்ன செய்தான், இப்போது கவலைப்பட!

ஆறு வருஷங்கள் ஓடிவிட்டன ஊரை விட்டு வந்து. இவ்வளவு காலம் அவனா அவர்களைத் தாங்கினான்! யார் யாரைத் தாங்க

1950-ல்

என்ன நேர இருக்கிறது

புத்தாண்டாகிய 1950 க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12-மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி, மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி. கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள் நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபாற் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒருமுறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shri

Swami Satnarayan Jotish Ashram

(C. K.) HOSHIARPUR.

முடிகிறது உலகில்! மனத்தினுல், கற்பனையினுல் தாங்குவதாக எண்ணிக்கொண்டு தானே மயங்குகிறோம்! பின் ஏன் இந்த மனப் பறப்பு!

"பாபு! உங்களுக்கு ஒன்றுமே தெரியவில்லையே! ஏன் இப்படி பிரமை பிடித்து இருக்கிறீர்! இங்கில்லாத ஒருத்தியைப்பற்றி எண்ணி எண்ணி உங்கள் வாழ்வையே பாழடித்துக்கொள்கிறீரே.........!"

"எனக்கு வாழ்வு என்று ஒன்று இருக்கிறதா சாந்தி, அதை நான் பாழடிக்க...............!"

"இப்படியெல்லாம் கூறுகிறீர்கள்! உங்கள் வாழ்வுக்கென்ன......! நான் உங்கள் வாழ்வின் பூரிப்பில்லையா.........!"

"அப்படி இருப்பதாக வைத்துக்கொண்டால்.........?"

"அது தான் வாழ்வு! உங்கள் காந்தாவுக்காக நீங்கள் வாழ்வதாக எண்ணிக்கொண்டிருக்கும் பிராந்தியை விட்டுவிட்டு எனக்காக வாழுங்கள்......! அப்போது அதில் தோன்றும் மாறுதல்களைக் கவனியுங்கள்.........!"

"அப்படி யென்ருல்.........?"

"வாழ்வின் சிகரத்தை இரண்டு உள்ளங்கள் ஒன்றுக்கொன்று உதவியுடன்தான் எட்டிப் பிடிக்க முடியும்.........!"

அவள் கூறியதில் உண்மை இருந்ததா...! தெரியாதபோது அதன் சிகரத்தை யார் கண்டார்கள்! காந்தாவின் வாழ்வும், இவளைப்போல் அவள் தேர்ந்தெடுக்கும் 'உள்ளத்துடன்' சேர்ந்து வாழ்க்கைச் சிகரத்தை எட்டிவிடுமா......! இவ்வளவு காலத்திற்குள் அவள் அத் துணையுள்ளத்தைத் தேர்ந்தெடுத்திருப்பாளா.........!

"என்ன யோசிக்கிறீர்கள், பாபு! நம்மைவிடக் கேவலமானவர்கள் வாழவில்லையா! பாழ்பட்ட வாழ்வையே படைத்த—ஒருவர்—என்னைச் சேர்ந்தவர்தான்—தம் வாழ்வைச் சோபிதப்படுத்திக்கொள்ள உங்கள் தேசம் போயிருக்கிருர் சென்ற வருஷம்.........!"

"யார் அது......? அவருக்கென்ன......?"

"என் அத்தான்தான்! என்னை மணந்து கொள்ள எவ்வளவோ முயன்ருர்! ஆனல் அவர் வாழ்வு உபயோகமற்றது! சற்று வயதான அவர் தீராத கர்ம வியாதியும், க்ஷயரோகமும் அடைந்து இருந்தாலும் வாழ்வில் மட்டும் அபார நம்பிக்கையுடன்தான் இருக்கிருர்.........!"

"ஹூம்! நம்பிக்கையும், உற்சாகமும் இருப்பவர்களுடன் உன்னைப் பிணைத்துக் கொள்வது நல்லதில்லையா, சாந்தி.........!"

அவள் நெற்றி சுருங்கியது.

"என்ன கூறுகிறீர்கள்.......! கர்ம வியாதியும் க்ஷயரோகத்துடனுமா என்னைப் பிணைத்துக் கொள்ளவேண்டுமென்கிறீர்.........!"

"அதில்லை, சாந்தி! நம்பிக்கையும், முன்னோக்குதலும் என் வாழ்வை விட்டுப் போய் விட்டனவே.........!"

பெருமூச்சுத்தான் அவளிடமிருந்து வெளிப்போந்தது.

"மறுபடியும் அதே தானு! உங்கள் வாழ்வை நான் புனிதமடையச் செய்ய மாட்டேனு......! அந்த அளவுக்குக் கூடவா உங்கள் நம்பிக்கை அற்று விட்டது.........!

நம்பிக்கை! கொந்தளித்துப் பறக்கும் சித்தத்தின் கற்பனையுலக வாழ்விற்கு அடிபாவாத ஊன்றுகோல்தானே நம்பிக்கை! நிகழ்கால துன்பத்தை அனுபவிக்கும்போதே எதிர்காலத்தில் இன்பம் கிடைக்கவேண்டுமே—கிடைத்துவிடும்!—கிடைக்குமா...!—என்ற நம்பிக்கைத் துன்பத்தையும்தானே சேர்த்து அனுபவிக்கிறோம்!

ஆனல் சாந்தி! திடநம்பிக்கைக்கே இருப்பிடமானவளா! எவ்வளவு கூறுகிருள்! அலைமோதிச் சுழலும் கலத்திற்குக்கூட நங்கூரமாய் நிற்கிருளே......!

"ராஜன் பாபு! என்மீது நம்பிக்கை இருந்தால் என் அந்தராத்மாவை நீங்கள் தொடுவது உண்மையானல் 'சரி' என்று கூறுங்களேன்......!"

செந்தாமரைபோன்ற அக் கண்களில் பனி நீரைக் கண்டான் ஒரு விநாடி. அது அழகு தானு! சோகத்தின் சௌந்தரியம் இவ்வளவு சோபிக்குமா......!

அவன் வாய் பிதற்றியது.

"காந்தா......! காந்தா......!"

"அவளைப்பற்றி இன்னும் யோஜனை என்ன, பாபு! பெண்ணுள்ளத்தைப் பெண் அறியாதா......! அவள் மனதின் போக்கு உங்களைவிட எனக்குத்தான் நன்ருய்த் தெரியும்......! அவளுடையும் இன்பம் உங்களுக்குக்கூட கிடைக்காது......!"

"உண்மையாகவா, சாந்தி......?"

"என்னை—என் பெண்மையை—நம்புங்கள்!"

மறுபடியும் அவ் வாழிக்கண்கள் அவனை முழுக்கின.

"நம்புகிறேன், சாந்தி......!"

சற்று மௌனம்.

"நான் கேட்டதை இன்னும் அளிக்கவில்லையே, பாபு!"

"என்ன கேட்டாய்......!"

"'சரி' என்று கூறுங்களேன்!"

"...................!"

"சாந்தி......!"

"பாபு......!"

"சரி......!"

"சரி......?"

"சரி......!"

மறு நாட் காலைதான் அக்கடிதம் வந்தது. ஐந்து மாதங்களுக்குமுன் எழுதப்பட்டிருந்த அது எங்கெல்லாமோ சுற்றியலைந்துவிட்டு அவனை நாடிவந்தது, அடியுண்ட புறுவைப் போல!

"அண்ணா! உன்னை அண்ணான்னு கூப்பிடற துக்குக்கூட உரிமையில்லைபோல இருக்கே...! இந்த ஜன்மாவிலே இனி உன்னைப் பார்க்கப் போகிறதில்லையா நான்.........!

"அம்மாவும் போயிட்டா, அண்ணா! கடைசிவரைக்கும் என் வாழ்வை நெனச்சு நெனச்சுப் புலம்பியே உயிரைவிட்டா...! பாவம்! ஆனா அவ வரைக்கும் ஒரே ஒரு ஆறுதல்! அவ மூச்சு இருக்கச்சயே என்னை ஒருத்தர் கல்யாணம் பண்ணிக்க முன் வந்துட்டார்............! தாலிகூட கட்டிவிட்டார், அண்ணா! அதைப் பார்த்துவிட்டுத்தான் அவ போனா!

"ஐயோ, அண்ணா! எனக்கு இப்போதான் தெரிஞ்சுது! அவருக்கு கர்ம வியாதியாம்! அதோடே க்ஷயரோகமும் இருக்கு, அண்ணா! வட நாட்டுலேர்ந்து வந்து என்னை ஏமாத்தி ....!"

அவன் மறுபடியும் கண்திறந்து பார்த்தது ஏதோ ஒரு ஆஸ்பத்திரியில் தான்! அங்கு எப்படி வந்தான்......? தலையில் யார் கட்டுக் கட்டினார்கள்.........!

யாராயிருந்தால் என்ன? அதைப் பற்றி என்ன அக்கரை! இறப்பவனைத் திரும்பத் அழைத்து வருவதுதான், இனி இறக்கப் போகிறவர்களின் ஜோலி என்று உலகம் பூராவும் அறியுமே......! இதில் நன்றிக்கும் கடமைக்கும் இடம் எங்கே இருக்கிறது?

* * *

சிறு மழைத்துளிகள் முகத்தில் படிந்த போதுகூட, ஜன்னலின் வெளியிலேயேதான் அவன் தலை தொங்கிக்கொண்டிருந்தது. தன்னுள்ளேயே இருந்த விளக்கொளியையும், அத்துடனேயே தன் நிழலையும் இரு புறமும் வீசி, துணையாகக்கொண்டு பறந்து சென்ற இந்த ரயிலுக்குக்கூட ஸ்தூலமும், சூக்ஷ்மமும் இருக்கின்றனவா......!

பெஞ்சியின் கோடியில் இருந்த சிலர் ஏதோ பேசிக்கொண்டிருந்தனர், ஹிந்தியில் ....

"கேட்டீர்களா! தான் காதலித்த ஒருவன் எங்கோ காணாமல் சென்றுவிட்டான் அனேக நாட்களாய், என்பதற்காக ஒரு பெண் இறந்து விட்டாளாம்.........! பெயர், சாந்தி என்று போட்டிருக்கிறது.........!"

"ஹூம்! தென்னாட்டில் ஒரு பெண்ணை எவனோ வியாதிக்காரக் கிழவன் ஏமாற்றி மணம் செய்து கொண்டு விட்டதற்காக அவள் இறந்து விட்டாளாமே.........!"

"அதெல்லாம் கிடக்கு! மிஸ் காந்தம் மேனாடு போகிறாளாம்! அரசாங்கத்தாரே அனுப்புகிறார்கள், இந்தியக் கலையை அந்நாட்டில் பரவச் செய்ய.........!"

மும்முறை அவன் உடல் சிலிர்த்து, கண்கள் அகல விரிந்தன. மங்கிய இருளில் யாரோ ஜன்னலினோரம் ரயிலுடனேயே ஓடி வந்து கொண்டிருக்கிறாரே மேல்மூச்சு வாங்க!

"அப்பா......!"

"டேய்! மனசைப் பறக்கவிடாதேன்னு முட்டிண்டேனே! என் குடும்பத்தையே பறக்க விட்டுட்டையே......!"

"அப்பா......!"

"பறந்து பறந்து ஓடின உன் மனசு தனக்கு வேணுங்கறதை அடைஞ்சுடுத்தாடா!"

"அப்பா......!"

"அப்படி அடைஞ்சுட்டாலும் பறக்கறதை நிறுத்திடுத்தா! எதை விட்டுட்டு பறந்துதோ அதையே தேடிப் பறக்குமேடா!

"அப்பா......!"

"அதைத்தாண்டா 'சக்கரம்'னு சொல்றது! இருதயத்திற்கும், தொண்டைக்கும் மத்தியிலே படபடன்னு இறக்கையை அடிச்சுண்டு பறக்கல்லே......பறவைமாதிரி!"

"அப்பா......!"

"கர்ப்ப வாசத்திலேயே அதுவந்து சுத்திண்டுடறதுடா, ராஜா! அந்தக் கர்ப்பத்திலே எத்தனை குழந்தை தங்கறதோ அத்தனை சக்கரம் அங்கே இருக்குன்னு ஒனக்குத் தெரியுமா......!

"அப்பா......! அப்பா......!!

யாரோ தோளைத் தட்டினர். கலங்கிய கண்களுடன் தலை நிமிர்ந்து திரும்பினான். வடநாட்டு டிக்கெட் பரிசோதகர் கையை நீட்டினார்.

ஆனால் முன் நீட்டிய அக்கரம் உடனேயே மடங்கி விட்டது! இப் பரதேசியிடம் டிக்கெட் எங்கே இருக்கப் போகிறது.........!

காட்டின் மத்தியில் நின்ற ரயிலிலிருந்து விசையுடன் கீழே யிறக்கப்பட்டான்! காலச் சக்கரம் போல இலட்சியமின்றி ஓடிச் சென்று மறைந்த ரயிலைப் பார்த்துவிட்டு, பரந்த இருளில் திரும்பி நடந்தான், சுவர்க் கோழிகளின் மத்தியில்.

* * *

துண்டுகள்
வெண்மையாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
துண்டுகள்
பிரகாசமாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
SUNLIGHT SOAP
ஸன்லைட்
சோப்பினால்
தான்
துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும்
சலவை செய்கிறது!

S. 124-50 TM

குற்ற

அவன் பிறந்து வளர்ந்ததே ஒரு குக்கிராமத்தில் தான். படித்துப் புத்திமானாக ஆனதும் முன்னதைவிட வெளித் தொடர்பு இல்லாத ஓர் குருகுலத்தில். ஐந்து வயதில் கொண்டு வந்து விடப்பட்ட அவன், சுகதுக்கங்களின் பேதம் தெரியாமலேயே அங்கு இருபது வருஷ காலத்தைக் கழித்துவிட்டான்.

வந்த போது அவனுக்கு என்ன தெரியும்? 'நீ யார்?' என்று கேட்டால், 'என்பேர் புக் குண்டன்' என்று விளையாட்டுத் தோழர்கள் வைத்த வேடிக்கைப் பெயரைச் சிரிக்காது ஆசையாகச் சொல்லத் தெரியும். இப்பொழுதோ, அவனது அறிவுப் பெருக்கையும், பேச்சுத் திறமையையும் கண்டவர்கள் சொக்கிப் போய் விடுவார்கள். அதற்காக அந்த ஆசைப் பெயரை அவன் புறக்கணித்து விடவில்லை.

கோதாவரி நதிக்கரையில் அந்தக் குருகுலம் அமைந்திருந்தது. உலகத்தின் பல பொருள்களையும், அனுபவங்களையும் அங்கே குருவின் வாயிலாகவே தெரிந்து கொள்ள முடியும். ஓலையும் எழுத்தாணியும் தவிர வேறு படிப்புச் சாதனமும் வேண்டியிருக்கவில்லை.

வாவி ....

சௌரி

கம்பீரமாகப் பிரவகிக்கும் கோதாவரியும், பவித்திரமான கூரை விடுதிகளும், சாந்த மூர்த்தியான குருவும், அங்கே மாணவர்களின் படிப்பிலும், கடத்தையிலும் தூய்மையை வளர்ப்பவர்கள். மனிதப் பண்பின் சிகரத்தை எட்ட அங்கு நல்ல அஸ்திவாரம் உண்டு. புக்குண்டனோடு வந்து சேர்ந்த பல பிள்ளைகள் படிப்பை முடித்துக்கொண்டு திரும்பி விட்டார்கள். அவர்களுக்கெல்லாம் தாய் தந்தை, உற்றார், உறவினர் என்றெல்லாம் இருந்தார்கள். இவனுக்கு எல்லாரும் அந்தக் குருதான். அதற்காகப் புக்குண்டன் மன மிடிந்துபோய்விடவில்லை. "உன்னைப் பெற்ற இரண்டாவது வருஷத்திலேயே தாய் இறந்துவிட்டாள். ஐந்தாவது வயதில் தகப்பனாரும் காலமாகிவிட்டார். அந்தக் கவலை தெரியாமல், இதுவரை உன்னை வளர்த்த நான், எப்போதும் உனக்கு ஆதரவாக இருப்பேன்; கவலைப்படாதே, புக்குண்டா!" என்று எத்தனையோ தடவை குரு ஆறுதல் சொல்லக் கேட்டிருக்கிறான். வயது ஆக ஆகப் பயம், கவலை என்றெல்லாம் அவனுக்குக் கிடையாது. அட்படியிருந்தும் அவனது பெருமூச்சையும், வாட்டத்தையும் கண்ட குரு காரணம் தெரியாமல் தவித்தார். புக்குண்டனுக்குப் பல சமயங்களில் அழுகைகூட வந்துவிடும். "தன்னோடு படித்தவர்கள், தன்னிடம் படித்தவர்கள்கூடப் பெரிய பெரிய அந்தஸ்தில் இருக்கிறார்கள். ஆஸ்தான பண்டிதர்களென்றும். பெரிய பாடசாலைத் தலைவர்களென்றும். பிரசித்த உபந்நியாசகர்களென்றும் பெருமையாய்ச் சொல்லிக்கொண்டு, அவர்கள் இங்கே காணிக்கையும் கையுமாக வருவதைப் பார்த்தால் அவமானமாக இருக்கிறது. நமக்கும் நகரத்தில் யாராவது வேண்டியவர்கள் இருந்தால்................" இப்படியெல்லாம் எண்ணமிடுவான்.

ஒரு நாள் குருவிற்குக் காணிக்கை செலுத்தவந்த குறும்பரன் என்பவன், புக்குண்டனிடம் குளிரப் பேசி, நப்பாசையைக் கிளப்பிவிட்டுப் போனான். உன் ஒப்பற்ற பேச்சுத் திறமைக்கு எந்த அரசனிடம் போனாலும் தலையில் வைத்துக் கொண்டாடு

வான். சிறந்த அறிவும் கவர்ச்சியான தோற்றமுமே உன்னை அறிமுகப்படுத்தக் காத்திருக்கையில், வேறு யாருடைய உதவி உனக்கு வேண்டும்? வெகு சீக்கிரமே விஜய நகரம் போய்ச் சேர்! திறமை சாலிகளைப் போற்றி வளர்த்த ராஜ சபை அது..............." இப்படியெல்லாம் அந்தக் குணும்பரன் எதற்குத்தான் சொன்னுனே தெரியாது. அதனுல் புக்குண்டனுக்கு ஏற்பட்ட ஆர்வம் மட்டும், அமிருத பானத்தில் தேவ கணங்களுக்கு ஏற்பட்ட திவ்ய தாகத்தையும் மிஞ்சிக் கொண்டிருந்தது! அவனுக்கு அங்கே இருப்பே கொள்ளவில்லை.

ஒரு தினம் பிரயாண ஏற்பாட்டோடு குருவிடம் விடைபெற்றுக்கொள்ள வந்து நின்ருன். அணையைப் பெயர்த்துக்கொண்டு பாயும் வெள்ளப் பெருக்கைத் தடுக்க முடியாதென்பதை குரு உணர்ந்துகொண்டார்.

"புக்குண்டா! வெளியுலகம் உனக்கு முற்றிலும் புதியது. நகரமும் நாகரிகமும், மடுவும் சுழலும், காடும் விலங்குகளும் கூடின மாதிரி. உன்னைப் புது மோகம்இழுக்கிறது. உறுதிபெருத உன் தூய உள்ளத்தில் எந்த மாசும் எளிதிலே படிந்துவிடும். மிகவும் நிதானமாக, கவனத்தோடு நடந்துகொள்! எதுவும் அவரவர் விதிப்படி நடந்துதான் திரும். இதை மறந்துவிடாதே. நீ எந்த நிலையில் இங்கே திரும்ப நினைத்தாலும் தயங்காமல் வந்துசேர்! ஆனந்தமாக வரவேற்கக் காத்துக்கொண்டே இருக்கிறேன். போய் வா!......" குருவின் குரல் கம்ம ஆரம்பித்தது. அந்த ஈனசுவரத்தில் இழைந்து கிடந்த பிரிவாற்ருமை, புக்குண்டனின் நெஞ்சைப் பாரமாக அழுத்தியது. குவித்த கையைப் பிரிக்காமல், குனிந்த தலை நிமிராமல் குருவை விட்டுப் பிரிந்தான். இருபது வருஷத்துப் பிணைப்பை எங்கிருந்தோ வந்த புது மோகத்தின் அடங்காத வேகம் பிய்த்து விட்டது!

எட்டு நாள் பிரயாணத்தில் விஜய நகரம் வந்து சேர்ந்தான் புக்குண்டன். வந்த அன்றே விதி அவனைச் சோதித்து விட்டது. அதில் அவன் தோற்றுத்தான் போனுன்!

இப்போது அவன் வந்து எட்டு மாதங்கள் கழிந்து விட்டன. அதற்குள் தான் அவனுக்கு எத்தனை அனுபவங்கள்; எவ்வளவு மாறுதல்!

2

கிருஷ்ண தேவராயர் காலத்திற்குப் பிறகு விஜய நகர சாம்ராஜ்யமே குலைந்து கொண்டு வந்தது. தக்காணத்துச் சிற்றரசர்களே அந்தச் சக்கரவர்த்திப் பீடத்தை மதிக்காத போது, சுல்தானும், பாதுஷாவும் வலை வீசக் கேட்கவா வேண்டும். மேலும் உள் நாட்டிலேயே ஐந்தாம் படைத் துரோகிகள் வேறு. நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருந்த மந்திரியே வஞ்சக வழியில் போய்க் கொண்டிருந்தான். இதையெல்லாம் விட வயிற்றெரிச்சலைக் கிளப்பியது, அரசன் அந்தப்புரத்திலேயே அடைந்து கிடந்தது தான். அறிவும், ஆற்றலும் அரசனுக்கு நிறையத் தான் இருந்தன. இருந்தென்ன? அவைகளைப் பரிமாறின இடம் தான் எதையும் தலை தூக்க விடாதே!

எதிலும் அந்த வஞ்சக மந்திரி வைத்தது தான் சட்டம். நெறி தவருமல் மந்திரி அரசாட்சியைக் கவனிப்பதாக அரசன் நம்பிக் கொண்டிருந்தான். அந்த மந்திரி ராஜ்ய பாலனமா செய்தான்? நாட்டைச் சீர்குலைத்து, குட்டிச்சுவராக்கிக்கொண்டு வந்தான். அதிக வரியும், அநியாயச்சட்டங்களும், வேண்டாத கெடுபிடியும் அதற்கு முன்பு அங்கே தலைகாட்டியதுண்டா? [இதையெல்லாம் கண்ட வலுவுள்ள ஒவ்வொரு வாலிபனும் துடித்துக் கொண்டு கிளம்பினுன். புரட்சிக்கூட்டம் வெகு சீக்கிரமே வளர்ந்து விட்டது. மந்திரியை ஒழித்துக்கட்டி, அரசனைத் திருத்தி, சாம்ராஜ்யத்தின் பெருமையை மங்கவிடாமல் பாதுகாப்பது அவர்களது தீவிர லட்சியம். அதை நிறைவேற்ற எத்தனையோ ஆள்பலம் வேண்டியிருந்தது. திறமைசாலிகளைத்தேடிக் கொண்டே இருந்தார்கள் புரட்சிக்காரர்கள்.]

3

புக்குண்டன் விஜயநகர வீதியில் முதன்முதலாக நுழைந்தபோது, எதைக் கண்டாலும் திகைப்பும், மலைப்பும் அடைந்தான். எல்லாம் அவனுக்கு அதிசயமாகப்பட்டது. களைப்புத்தெரியாமல் சுற்றி அலைந்தான். எத்தனை நாழிகைதான் சுற்ற முடியும். சோர்வும் பசியும் ஏற்படவே ஒரு சத்திரத்திற்குப் போய்ச் சேர்ந்தான். சத்திரம், கோயில்களிலெல்லாம் அன்போடு அன்னதானமளிப்பார்களென்று அவன் எப்போதோ கேள்விப்பட்டிருந்தான்.

சத்திரத்தில் விசாரித்ததில், "பலமாதங்களாகவே இங்கு யாருக்கும் சாப்பாடு கிடையாது" என்ற பதில் வந்தது. புக்குண்டனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. விஜயநகரத்தில் இம்மாதிரி துர்தசை ஏற்படுமென்று அவன் நினைத்ததே இல்லை.

மேலும் "இப்படி மந்திரி உத்தரவிட்டிருக்கிருர்" என்று கேள்விபட்டதும் அவனுக்

கேற்பட்ட ஆச்சரியத்தைச் சொல்லமுடியாது. 'மந்திரி' என்றால் எல்லாக் கலைகளிலும், தேர்ந்தவரென்றும், நீதியின் அவதாரமென்றுமே அவன் தெரிந்து வைத்திருந்தான். இப்படியா ஒரு மந்திரி இருப்பது என்று நினைத்து நினைத்து அங்கலாய்த்துக் கொண்டான். அந்த மந்திரியிடம் அவனுக்குக் கோபம் கூட ஏற்பட்டது.

பசி அதிகரித்தது. இந்த அனுபவம் புக்குண்டனுக்குப் புதியதாகவும், பயங்கரமாகவும் இருந்தது. பசி, தன் வரம்பைத் தாண்டிப் போகும் போது, அதன் கோர சுவரூபத்தையும், பிரளய லீலைகளையும் அவன் கேள்விபட்டதுகூட இல்லை.

வெட்கத்தைவிட்டு ஒரு பெரியமாளிகையில் நுழைந்தான். வெப்பம் கக்கும் இந்த நடுப் பகலில் யார் வரப்போகிறார் என்றஎண்ணத்தில் காவலாளி தூங்கி விழுந்துகொண்டிருந்தான், உள்ளே நுழைந்த புக்குண்டன் குரல் கொடுத்ததும், ஒரு தாதிப்பெண் வந்து விசாரித்தாள். அவள் திரும்பிப் போய்ச், சிறிது நேரத்திற்கெல்லாம் ஒருமனிதர் வந்தார். அவரைக் கண்டதுமே புக்குண்டன் நடுங்கி விட்டான். வந்தவர் காவலாளியை அழைத்து, "இந்தப் பிச்சைக்காரனை அடித்து விரட்டு! இம்மாதிரி சோம்பேறிகளை உள்ளே விடாதே" என்று உத்தரவிட்டார்.

அவர் உத்தரவை அதிகமாகவே நிறைவேற்றி வைத்தான் காவலாளி.

அவமானத்தால் குன்றிப் போய், சோர்ந்து விழுந்த புக்குண்டனை ஒரு வாலிபன் தற்செயலாகக் கண்டான். உடனே கூட்டிப் போய் அன்னமளித்து உபசரித்தான். பிறகு தான் நுழைந்தது மந்திரியின் சிங்கார மாளிகை யென்றும், அவமானப் படுத்தி விரட்டியவர் மந்திரி தானென்றும் புக்குண்டன் தெரிந்து கொண்டான். அவன் உள்ளத்தில் முதன் முதலாகப் பகைமையும், பழி வாங்கத் துடிப்பும் ஏற்பட்டன. அத் தீயை வளர்த்து விட்டான் அந்த வாலிபன். அவன் புரட்சிக் கூட்டத்திலே சேர்ந்தவன்; புக்குண்டனையும் அதில் சேர்த்து விட்டான்.

சில மாதங்களுக்குள்ளேயே அந்தக் கூட்டத்தில் ஒப்பற்ற பிரசாரகனாகவும், ஒரு பகுதிக்குத் தலைவனாகவும் புக்குண்டன் வந்து விட்டான். அன்பிலும், அடக்கத்திலுமே வளர்ந்த அவனை, சூழ் நிலையும், சேர்க்கை இனமும் மாற்றி விட்டன.

அந்தக் கூட்டத் தலைவன் ஒரு நாள் மிக ஆபத்தான வேலையைப் புக்குண்டனிடம் ஒப்படைத்தான். 'மந்திரியின் மாளிகையில் கொள்ளை யடிக்க வேண்டும். மந்திரி அங்கே இருந்தால் அவனைக் கொலை செய்து விட வேண்டும்.' இதை வேறு யாரிடமும் ஒப்படைக்க அந்தத் தலைவனுக்கு நம்பிக்கை யில்லை. திறமையும், வலிமையும் ஒருங்கே நிறைந்தவன் அங்கே புக்குண்டன் தான். மற்ற கண்பர்களும் அதைப் பெருமையோடு ஒப்புக் கொண்டார்கள்.

புக்குண்டன் சிறிது தயங்கினான். அவனது சிந்தனை குருகுலத்தையும், குருவையும் நினைவிற்கு இழுத்தது. இரண்டுங் கெட்டானாகத் தவித்தான்.

"இது மகா பாபம். நீ இதில் இறங்காதே. உனக்குத் தகுந்த செயல் இல்லை இது" என்று அறிவு தடுத்தது. இருபது வருஷ காலம் தூய பண்பாட்டிலேயே வளர்ந்த அந்தச் சாத்விகப் புத்திக்கு அது அக்கிரமமாகப் பட்டது. புதுப் பழக்கத்திலே ஏற்பட்ட மனோவேகம் "அது பாபமாகாது; நாட்டிற்குச் சிறந்த தொண்டு. பழி வாங்க வேண்டிய உன் கடமைக்கும் நல்ல வாய்ப்பு" என்று தூண்டிவிட்டது. புக்குண்டனது அறிவில் பழமையின் தூய பண்பு தேங்கிக் கிடந்தது. மனோ வேகத்திலோ புதுமையின் துடிப்பு நிறைந்திருந்தது. முரண்பட்ட இரண்டுக்கும் மோதல் ஏற்படவே அவன் தவித்தான். ஆக அவனுக்குள்ளேயே, பழமைக்கும் புதுமைக்கும் ஒரு போராட்டம்!

புதுமையிடம் கவர்ச்சியும், வேகமும் அதிகம்; மோகம் வேறு பக்க பலம். பழமைக்கோ தூய்மை, திறமையெல்லாம் இருந்தாலும் அந்தத் துடிப்பும், மயக்கும் வித்தையும் கிடையாதே! மேலும், பழமைக்கு மங்கும் காலம்; புதுமைக்குப் பொங்கும் காலம். இவ்வளவு போதாதா..............!

புக்குண்டன் அந்த வேலையை ஒப்புக் கொண்டான். மந்திரி மாளிகையில் கொள்ளையடித்தான். வெகு சாதுர்யமாகப் பொன்னும், வெள்ளியும் பணமுமாக முடிந்தவரை வெளியேற்றி விட்டான். கடைசியில் மந்திரியைத் தேடிக்கொண்டிருக்கும் போது காவலாளிகள் பார்த்துவிட்டார்கள். புக்குண்டனும், கூட வந்தவர்களும் எவ்வளவோ எதிர்த்துப் பார்த்தார்கள். புக்குண்டன் தவிர மற்றவர்கள். தப்பி விட்டார்கள். மறு நாள் விசாரணைக்கு அன்றே விலங்கும் கையுமாகக் குற்றவாளி யாகிவிட்டான்.

பொருள்கள் போனாலும் புரட்சிக் கூட்டத்தின் ஒரு தலை கிடைத்ததே என்று ஆறுதலடைந்தான் மந்திரி.

4

ராஜ சபையில் தான் குற்றவாளி யென்பதையே மறந்து புக்குண்டன் பேசி விட்டான். மந்திரியின் அநியாயச் செயல்களையும், சூதுகளையும், நாட்டு மக்களின் கஷ்டங்களையும் காரசாரமாகவே எடுத்துச் சொன்னான். அரசனுக்கு அவையெல்லாம் பொய்யாகப் பட்டன. "முகம்மதிய அரசர்களோடு ரகசிய உடன்படிக்கை செய்து கொண்டு, நம் ராஜ்யத்தைக் காட்டிக் கொடுக்கச் சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிறார் இந்த மந்திரி" என்று புக்குண்டன் வெளியிட்டதைக்கூட அரசன் நம்பவில்லை. அவன் அந்த ஆத்திரப் பேச்சில் தன்னையும் குறை கூறி விட்டது தான், அரசனுக்கு ரோஷத்தைக் கிளப்பிவிட்டது. இருந்தாலும் புக்குண்டனது கம்பீரமான பேச்சும், வசிகரத் தோற்றமும் அரசனைக் கொஞ்சம் கவர்ந்து விட்டன. அதனால் தானோ என்னவோ மந்திரியின் யோசனைப்படி கொலைத் தண்டனை யளிக்காமல், ஒரு கையைத் துண்டித்து நாடு கடத்தி விடும்படி உத்தரவிட்டான் அரசன்.

புக்குண்டன் முகத்தில் பயமோ, துக்கமோ தென்படவில்லை. மந்திரியை எரித்துவிடுவது போல் பார்த்துவிட்டு, அரசனையும் இரக்கம் ததும்பப் பார்த்துப் பெரு மூச்சு விட்டான். பிறகு இயற்கையான நிமிர்வோடு காவலாளிகளைப் பின்தொடர்ந்தான். தாமதிக்காமல் தண்டனையை நிறைவேற்றும்படி மந்திரி சொன்னதும், காவலாளிகள் புக்குண்டனைச் சிறைக்கூடத்திற்குக் கொண்டு போனார்கள். சபையும் கலைந்தது.

ஒற்றர் தலைவன் அவசரமாகப் பார்க்கக் காத்திருப்பதாகக் கேள்விப்பட்டதும், அரசன் பரபரப்போடு அந்தப்புரத்தை விட்டு வெளியே வந்தான். ஒற்றர் தலைவன் சொன்னதைக் கேட்டதும் அரசனுக்கு இடி விழுந்தது போலிருந்தது.

"என்ன?......! முகம்மதியப் படைகள் நம்மைத் தாக்க வந்து கொண்டிருக்கின்றனவா?. நம் மந்திரியா...........!" அரசன் குரல் தத்தளித்தது.

"எல்லாம் உங்கள் மந்திரியின் சூது. நம் படைகளில் இரண்டாயிரம் வீரர்களை வஞ்சனையாகத் தெற்கே அனுப்பிவிட்டார். அங்கே எந்தச் சிற்றரசனும் கிளர்ச்சி செய்யவில்லை. இந்தச் சமயம் பார்த்து, முகம்மதியப்படைகளை வரச்சொல்லிவிட்டார். இந்தச் சிம்மாசனத்தைத் தானடைய எத்தனையோ கபடவேலைகள் செய்திருக்கிறார், மகாராஜா!"

"நம்பி மோசம் போனேன்;.........இன்று ராஜ சபையில் ஒரு குற்றவாளிகூடச் சொன்னான். நான் அதை............"

DON'T WORRY !!

Try "KUMARI" (Tablets) to remove your anxieties over difficult days and fear of periodical delays at any stage, under any circumstances and prevent future troubles! Speedy and harmless !! Thousands satisfied !!! Normal potency Rs. 3. Special Rs. 5. Extra Special Rs. 8. (V. P. Extra)

"RASAYAN" (Tabs.) Gives youthful vigour, increases energy, purifies the blood and valuable in nervous debility and premature old-age. On the whole, it is a BOON to married couples. Each tube Rs. 4/-. 3 tubes Rs. 10-8. (V. P. Extra.)

Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)

TOLLYGUNGE, CALCUTTA - 33.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும் :—

1. இண்டோ மெடிகல் ஸப்ளைஸ், 29, வைத்யநாத முதலித் தெரு, சென்னை—1.
2. ராகவன் & கோ., ஸ்ரீ நரஸிம்ஹராஜா ரோட், பங்களூர் ஸிடி.
3. ஸிந்தி, 172—A, பிரின்ஸெஸ் தெரு, (ஹனுமான்மந்திர் மேல்புறம்) பம்பாய்—2.
4. எல். எம். முகர்ஜி & ஸன்ஸ் லிமிடெட், 167, தரம்தாலா தெரு, கல்கத்தா
5. இங்க்லீஷ் கம்பெனி, ஆலப்புழை. (திருவாங்கூர்)
6. பயனீர் பார்மஸி, 183, மெயின் தெரு, பேட்டை, கொழும்பு (ஸிலோன்)

ஒற்றர் தலைவன் கொஞ்சம் படபடப்பாகவே பேசினான்.

"அதை நம்பியிருக்கமாட்டீர்கள். இப்போதாவது தெரிந்துகொள்ளுங்கள் மகாராஜா! எதிரிகள் சுலபமாக நுழைய மேற்குக் கோட்டை வாயிலில் காவலே இல்லாமல் செய்திருக்கிறார் மந்திரி. அங்கே பெயருக்கு நிற்கும் சில வீரர்களும் மந்திரியின் கைக்கூலிகள்................"

இதற்குள் ஒரு சேவகன் வந்து, "இன்று விசாரிக்கப் பட்ட குற்றவாளி, போகிற வழியில் இதில் ஏதோ எழுதி, மகாராஜனிடம் கொடுக்கச் சொன்னான்" என்று கூறி ஒரு ஓலையைக் கொடுத்தான். அரசன் அதை வாங்கிப் படித்ததும் அப்படியே அதிர்ந்து போய் விட்டான். அதைக் கண்ட ஒற்றர் தலைவன் "என்ன மகாராஜா, இது? ஏன் இப்படி......!" என்று பயந்து கொண்டே கேட்டான்.

"மந்திரி வார்த்தையை நம்பி சிறந்த பண்டிதனை தவறாகத் தண்டித்து விட்டேன். அப்படியிருந்தும் அவன் தன் ராஜபக்தியை விடவில்லை. வெகு சாதுர்யமாக என்னை எச்சரித்திருக்கிறான். சற்று முன் சொன்னேனே அந்தக் குற்றவாளி தான்."

"என்ன அப்படி எழுதியிருக்கிறான், மகாராஜா!"

"இந்தா, நீ இதைப்படி! நான் விளக்கிச் சொல்லுகிறேன்." ஒற்றர் தலைவன் படித்தான்:

"பட்டிர் நஷ்டோ பாரவிஸ்ஸோபி நஷ்ட:
பிக்ஷுர்நஷ்டோ பீமஸேநோபி நஷ்ட: |
புக்குண்டோஹம் பூபதிஸ்த்வம் ஹி ராஜந்!
பப்பாவல்யாம் அந்தகஸ்ஸந்நிவிஷ்ட:||

அரசன் அதன் கருத்தை விளக்கினான்:

"தம்மை ஆதரித்த அரசர்களுக்காகத் தொண்டு செய்த மகா கவிகள் பட்டியும், பாரவியும், பிக்ஷுவும் மறைந்து விட்டார்கள். தன் சகோதரர்களுக்காக எத்தனையோ தியாகம் செய்த பீமசேனனும் நிலைத்திருக்கவில்லை. என் முன்னோர்களைப் போற்றிய இந்த ராஜ்யம் அழிந்து விடாதிருக்கவும், இந்நாட்டு ஜனங்களின் கஷ்டத்தைப் போக்கவும் முயன்ற புக்குண்டனான நானும் இதோ உமது தண்டனையால் மறையப் போகிறேன். அடுத்தபடியாக இந்த ராஜ்யமும், பூபதியான (அரசன்) தாங்களும் அழிய வேண்டியது தான். ஆகவே பகார வரிசையில் யமன்புகுந்து விட்டான்!......"

மேலே விவரிக்க அரசனுக்கு அவமானமாக இருந்தது; மௌனமாக இருந்து விட்டான்.

"என்னைத் தண்டிக்காது விட்டால் நீங்கள் தப்ப முடியும் என்று கூடப் பொருள் கிடைக்கிறது. மகாராஜா!" இதை ஒற்றர் தலைவன் சொல்லி முடித்ததும் அரசனுக்குப் பரபரப்பு ஏற்பட்டது.

'நான் இப்போதே போய் அந்த உத்தமனை விடுவிக்கிறேன். நீ சீக்கிரம் சென்று நம் சேனாதிபதியிடம், இருக்கிற படைகளைக் கொண்டு போருக்கு ஆயத்தம் செய்யச் சொல்! நீயே அந்தத் துரோகி மந்திரியைக் கைது செய்து பாதாளச் சிறையில் அடைத்து விடு!" என்று ஒற்றர் தலைவனுக்கு உத்தரவு கொடுத்து விட்டு, சிறைக் கூடத்திற்கு விரைந்து சென்றான்.

அரசன் வந்து சேருவதற்குள்ளேயே தண்டனையை நிறைவேற்றி விட்டார்கள். அந்தக் கோரத்தைக் கண்ட அரசன் அலறிக் கொண்டே புக்குண்டனை அணைத்துக் கொண்டான். அங்கேயே மூர்ச்சையாகி விட்டான் புக்குண்டன்.

காவலாளிகள் நடுங்கிப்புலம்பத் தொடங்கி விட்டார்கள். புரட்சிக்காரர்கள் வேறு அங்கேவந்து கூடிவிட்டார்கள். அரசன் மடியில் கிடந்த புக்குண்டன் கண்விழித்ததும், "நான் மகாபாபி; என்னை மன்னித்துவிடு." என்று விம்மினான் அரசன். புக்குண்டன் முகத்தில் புதுத் தெம்பு படர்ந்தது. "இல்லை, மகாராஜா! நான் குற்றவாளிதான். எனக்கு இது நியாயம்........." என்று புக்குண்டன் அடக்கமாகச் சொன்னான். 'இல்லை, நான் தான் குற்றவாளி" என்று கதறினான் அரசன். "இல்லை; அந்த வஞ்சகமந்திரிதான் குற்றவாளி" என்று புரடசிக்காரர்கள் கர்ஜித்தார்கள்.

காணமுடியாத உருவத்திலே நின்று கொண்டு, கேட்க முடியாத குரலில் 'விதி' சிரித்துக் கொண்டே சொல்லிற்று: "நீங்கள் யாருமில்லை. நான் தான் குற்றவாளி... இல்லை; நானும் இல்லை. எனக்கு இடப்பட்ட ஆணை அப்படி. அந்த ஆணையை நிறைவேற்ற எனக்குத் துணை யார் தெரியுமா? நீங்கள் செய்ததும், செய்கிறதுமான தவறுகள்— பாபங்கள். ஆமாம்; அப்படித்தான்........."

மூடமாகிவிட்ட புக்குண்டனைப் பழைய குருகுலம் வெறுத்து ஒதுக்கிவிடவில்லை. நகரமும் நாகரிகமும், குருகுலத்தையும் குடிசைவாழ்க்கையையும் தெளிவாகப் புரிய வைத்து விட்டன!

சூதுக்காரனாகத் திரிந்த அந்தத் துர்மந்திரி சித்திரவதையில்தான் தன் முடிவைக் கண்டான்.

தன் பிழையில் பச்சாத்தாபமேற்பட்டுத் திருந்திய அரசனும், பிறகு அரசனாக வாழ முடியவில்லை.

அப்போது விழுந்த விஜய நகர சாம்ராஜ்யம் பிறகு தலை தூக்கவே இல்லை.



ருசிமிக்க பூரிகளை இந்த முறையில் டால்டாவிறல் தயாரியுங்கள்!

கோதுமைமாவு, உப்பு இவைகளை கலந்து சலித்தெடுத்துக்கொள்ளவும். 2 தேக்கரண்டி டால்டாவை 1 கப் மாவில் தேய்க்கவும். கொஞ்சம் கொஞ்சமாக தண்ணீர் சேர்த்து பிசைந்த மா தயாரிக்கவும். மாவை நன்ருக பிசைந்த பிறகு தண்ணீர் தெளித்து ½ மணி நேரம் மூடி தனியாக வைக்கவும். பிறகு சிறிய வட்டங்களாக செய்து பரத்தவும். வாணலியில் டால்டாவை சூடாக்கி, பூரிகள் நன்ருக உப்பி இலேசாக சிவக்கும்வரை பொரிக்கவும். டால்டாவை வடிக்க சுத்தமான காகிதத்தில் வைத்திருக்கவும்.

டால்டா ஒரு சுத்தமான தாவரக்கொழுப்பாகையால் அது அதிக நேரம் சூட்டைத்தாங்குகிறது—எனவே, உணவுகள் ஒழுங்காக பக்குவமாவதற்கு போதுமான சாவகாசம் அளிக்கிறது.

ஊட்டம் நாம் உட்கொள்ளும் ஆகார அளவை மட்டும்தான் பொறுத்திருக்கிறதா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானுலும்—எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 120-172 TM

கே. எம். முன்ஷி

ஹிந்தியிலிருந்து மொழி பெயர்ப்பு—"சேதி"

முப்பத்திரண்டு லட்சணம் கொண்டவன் பலியானதன் காரணம்

மாமாவும் மருமகனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். திரிபுவன் முகத்தில் கடுமை தோன்ற ஆரம்பித்தது. பல்லைக் கடித்துக்கொண்டு, "மாமா, நீங்கள் பட்டணைக் காப்பாற்றினீர்கள்; ஆனால் சகோதரி மகனைக் கொன்றுவிட்டீர்கள்."

முஞ்ஜால் திடுக்கிட்டு, "எப்படி" என்றான்.

"மீனல்தேவி இங்கே அடிவைத்தவுடன் உயிரை விட்டுவிடுவேன். என் விரதம் நீங்கள் அறிந்ததுதானே!"

முஞ்ஜால் கொஞ்சம் குரலிழந்து, "என்ன சொல்கிறாய், அப்பா? இப்படியும் ஒரு விரதமா?"

"நீங்கள் எப்படி வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளுங்கள். நான் இங்கிருந்து 'சோம்நாத்'துக்குப் போய்விடுகிறேன். பிறகு புத்தி இழுத்தவிதம் செல்வேன். நான் என் தந்தையின் மகன், என் விரதத்தைக் காப்பாற்றியாகவேண்டும். எனக்கு அதுதான் முக்கியம்."

"குழந்தை,என்ன சொல்கிறாய்? இப்படிக் கூட வெறியனைப்போலப்பேசுகிறாயே? இந்த யுக்தி, உபாயம் எல்லாம் உனக்கும் பட்டணுக்கும் சேர்த்துத்தானே செய்தேன். நீ ஏன் என்னிடம் திறந்து பேசமாட்டேன் என்கிறாய்?" என்றுகேட்டு முஞ்ஜால் அன்புடன் அவன் தோளில் கை வைத்தான். திரிபுவன் நடுங்கினான்.

"உண்மையைச் சொல்லட்டுமா? நீங்கள் முற்றிலும் மந்திரி. சகோதரிக்கும் சகோதரி புருஷனுக்கும் அவர்கள் குழந்தைக்கும் உங்கள் மனதில் இரக்கத்துக்கு இடம் ஏது? அவர்களுக்கு ஏற்பட்ட பயங்கரமான சாவுக்குப் பழிவாங்கவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்படும்? உங்கள் இதயம் எப்படித் துடிக்கும்? ஆனால் நான் அப்படி இருக்க முடியுமா? ராணியின் வஞ்சனையால் என் தாய் தந்தை இருவரும் உயிர் துறந்தனர். இந்தப் பிறவியில் நான் எப்படி அவளை மன்னிக்க முடியும்? தங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அதை எல்லோரிடமும் சொல்லுங்கள். அவர்கள் ஒத்துக் கொண்ட மறுகணமே நான் எங்காவது சென்று விடுகிறேன். பட்டண் பேரில் நான் என் உயிர் என் ஆசை, அபிலாஷைகளைத் தியாகம் செய்துவிடுகிறேன். பிறகு என்ன வேண்டும்? சொல்லுங்கள்?" திரிபுவன் குரல் பதற ஆவேசத்துடன் சொன்னான்.

"திரிபுவன்! நீ இவ்வளவு புத்திசாலியாயிருந்தும்கூடக் கோபத்தைத்தான் முன்னால் வைப்பாயா? நீ இந்தச் சமயம் பட்டண் வாசிகளின் அருமைத் தலைவனல்லவா? அவர்கள் பெருமைக்காக இந்தக் கோபத்தைக் குறைத்துக் கொள்ள மாட்டாயா?"

"இல்லை, முடியாது. நான் பட்டண் வாசியல்ல. முதலில் நான் சொல்லில் வீரனான என்னுடைய தந்தையின் மகன். பட்டண் என்று அவர் பக்கத்தை விடுமோ அன்றே எனக்கும் அதற்கும் உள்ள சம்பந்தம் தொலைந்து விடும்."

(ஹிந்திப்பிரதி பிரசுர கர்த்தாவான ஹிந்தி கிரந்த ரத்னாகர காரியாலயத்தைச் சார்ந்த ஸ்ரீ நாதுராம் பிரேமி அவர்கள் அனுமதி பெற்றது.)

"ஆனல் திரிபுவன்! யோசி. இந்த வயதில் 'தண்ட நாயக்' பதவி ஏற்று நீ என்னென்ன வேலைகள் செய்யலாம் என்று."

திரிபுவன் மிகுந்த கண்ணியத்துடன் சொன்னான்: "அதிகம்பேசி ஆவதென்ன? நீங்கள் சொல்வது சரி, நான் தப்பு-சரி தானே!"

"இல்லை, நீ ஒப்பாவிட்டால் நான் ஒன்றும் செய்ய மாட்டேன்."

"பட்டண் ஒத்துக் கொண்டால் பிறகு நான் யார்? எனக்கு நானே அரசன். எனக்குத் தாயும் தந்தையும் தான் முதல்......!"

"திரிபுவன் யோசிக்காமல் பேசாதே. ஹம்ஸாவிடம் எனக்கு அன்பில்லை என்று நீ எண்ணுகிருய். அவள் இறந்ததும் என் உடல் ஆடி, மனம் சோர்ந்து, இதயம் அழவில்லை என்று நினைக்கிருய். நான் என் சகோதரியை வாழ்நாள் முழுவதும் சிறையில் வாழ விட்டேனே! அந்தச் செயலை நான் ஏன் செய்தேன் தெரியுமா? பட்டணுக்கு அதனல் லாபம் என்பதால் தான்!"

பிரஸன்ன இது வரை காதுகளுக்கு மட்டுமே வேலை கொடுத்து வந்தாள். இப்பொழுது சொன்னாள்: "இல்லை மேதாஜி! என் அத்தைக்காக."

"குழந்தாய், நீ தெரியாமல் சொல்லுகிருய். உண்மை அதுவல்ல. ஹம்ஸா மண்டலேசுவரனுடன் இருந்தால் குஜராத் இன்று இருக்கும் அளவுக்குக் கூட இராது"

"அது எப்படி?"

"உங்களில் யாராவது ஹம்ஸாவை நன்ருய்ப் பார்த்திருக்கிறீர்களோ! நான் தான் அவளைச் சிறு வயதிலிருந்து உணவு ஊட்டி வளர்த்தேன். அவளை ஒரு சமயம் கொஞ்சிக் குலாவி என் இதயம் பருத்தேன். அவள் என்னைக் கொடி போல் சூழ்ந்து வளர்ந்தாள். பேசும் வார்த்தைகள் இதயத்தைக் கொள்ளை கொள்ளுவனவாக இருந்தன. சுதந்திரதேவியின் உருவே போல் வளர்ந்து வந்தாள். அவளிடம் தனிக் குணம் ஒன்று உண்டு. ஆண்கள் மனதில் சௌர்யத்தின் ஆவேசக் கனலை ஒரே கணத்தில் மூட்ட வல்லவளாயிருந்தாள். அவள் அழகிய முகத்தைக் கண்ட ஜனங்கள் தங்களையே அடக்கிக் கொள்ள முடியாது.

"அவள் பெயர் துக்கங்களைச் சிதற அடிக்க வல்லது. சிறுமியாயிருந்தபோது. பட்டண் வாசிகள் அவளுக்குப் பாதபூஜை செய்து வந்தனர். அவள் கோவிலிலிருந்து திரும்பினல் அவள்கையில் பிரஸாதம் வாங்கிக்கொள்ள, அவள் வாய்திறந்து இரண்டு சொற்கள் கேட்க அனைவரும் துடித்தனர்."

முஞ்ஜாலின் பொங்கிவரும் இதயம் கண்களிலே ஒளி காட்டிற்று. கண்ணீர் சொட்ட ஆரம்பித்தது. திரிபுவனும் பிரஸன்னவும் கூடக்கண்ணீர்சொரிய ஆரம்பித்தனர். அவன் தொடர்ந்தான்: "உனக்குத்தெரியுமா? அவள் புகழ்கேட்டுப் பற்பல தேசங்களிலிருந்து வீரர்கள் வரலாயினர். அவளைப்பார்த்து, அவளைத் தொட்டு அதனல் பரிசுத்தமடைந்து ஊக்கம் பெற்றுத் திரும்பிச் சென்றனர். ஹம்ஸா மானிடப் பெண்ணல்ல; ஸரஸ்வதியின் அவதாரம். அவள் மண்டலேசுவரனுடன் இருந்தால் மண்டலேசுவரன் புகழ்பெருகிவிடும்; அதிகாரம் அதிகரித்துவிடும்; பட்டண் படிந்துவிடும். பட்டண்வாசிகள் தங்களுக்குள் வெட்டி மடிந்துஇருப்பர்" என்று சொல்லி முஞ்ஜால் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

திரிபுவனன் வன்மையுடன், "மாமா, அப்படிப்பட்ட தங்கையைக் கொன்றபோதும் கூடத் தங்களுக்கு ஒன்றும் வருத்தம் ஏற்படவில்லையா?" என்று கேட்டான்.

"அப்பா, சிறுவர்கள், கிழவர்கள் கழுதைகள் என்று எண்ணுகிருர்கள். உனக்குத்தான் உள்ளமிருக்கிறதா, எனக்கு இதயம் மனது ஒன்றுமில்லையா? நானும் அவளுக்காக பகல் இரவு நாள் நாளாய் அழுது இருக்கிறேன்; ஆனல் வாழ்க்கையின் கட்டளைக்கு முன், கடமைக்குமுன் இதயத்தின் உணர்ச்சிகளை மறக்க நான் கற்றுக் கொண்டிருக்கிறேன். நானே ஹம்ஸாவிடம் அடிக்கடி சந்தித்துப் பேசியிருக்கிறேன். அவள் என்னை மன்னித்து விட்டிருந்தாள்."

பிரஸன்ன கேட்டாள்: "மாமா, உங்களுக்குத் தெரியாதா, அத்தை அவர்களை எவ்விதம் அனுப்பினர்கள் என்று? பிறகுமா அத்தைக்கு மன்னிப்பு?"

"அதிகார ஆசையில்ராணி மதம் கொண்டிருந்தார். குழந்தாய், கொஞ்சம் நினைத்துப் பார். பட்டண்பெருமை சுற்றும் இடத்தில் முஞ்ஜாலை எங்கேயாவது யாராவது கைது செய்யமுடியுமா? நான் வீண் பெருமை பேசவில்லை. ஆனல் பாழ்செய்வது தான் முடிவு என்ருல், ஒரே கணத்தில் ஒரே சொல்லில் எல்லாரையும் ஒழித்து விடுவேன், ஸோம்நாத்தின் ரேவா நதிக்கரை வரை என் சொல்லைத் தட்ட ஒருவரும் கிடையாது. என்னைச் சிறைபிடித்தவுடனேயே சரி ராணி பட்டணை அழிக்கத் தொடங்கிவிட்டார் என்று எண்ணிவிட்டேன். ஆனல் உன் பராக்ரமத்தைக் கேட்டேன். என் உள்ளத்

தில், உடைந்து அவநம்பிக்கை நிறைந்திருந்த உள்ளத்தில் பிறிதோர் நம்பிக்கை உதித்தது; உதித்து வளர்ந்து பரவிற்று. அதனால் தான் பட்டணுக்காக நான் இந்தத் தூது வந்தேன். திரிபுவனா, அதனால் தான் சொல்லுகிறேன்; எதற்காக நான், என் தங்கை, அவள் ஆசைக் கணவன், ஏன் என்னையே அழித்துக் கொண்டேனே அதே இப்போழுது மிகவும் சுலபமாக, லகுவில் கிடைக்கும் போது நீ பின்னால் சென்று விடுவாயா?

"நீ முப்பத்திரண்டு லக்ஷணங்களும் அமைந்த வீரன். எனக்குப் புத்திரன் போன்றவன். தூர இருந்தாலும் உன்னைக்கண்மணியாகப்பாவித்து வந்திருக்கிறேன். உனக்குத் தெரியுமா, உன்னை மாதம் ஒரு முறை பார்க்க நான் எவ்வளவு தவித்தேன் என்று?''

திரிபுவனும் பிரஸன்னாவும் திடுக்கிட்டனர்.

கொஞ்சம் சிரித்து அவன் மீண்டும் சொன்னான்: "நீ மாதம் ஒருமுறை நாம் சந்திப்பதை யாரறிவர் என்று எண்ணிக் கொண்டிருந்தாய்? ஆனால் மந்திரி முஞ்ஜால் அவ்வளவு குருடனல்ல. ஒவ்வொரு வளர் பிறை பஞ்சமி அல்லது ஷஷ்டிக்கு நீங்கள் சந்தித்து வந்தீர்கள். உங்களைப் பார்த்து மனம் மகிழ நான் சும்மா நின்றுகொண்டிருந்தேன். அதே முஞ்ஜால், நான் இன்று சொல்கிறேன், உன் பிடிவாதத்தை விட்டு விடு என்று. குலதர்மத்துக்கெதிர் தனிப்பிரதிக்ஞையும் தியாகத்துக்கேற்றதுதான்.

திரிபுவன் கெஞ்சினான், "மாமா, இப்படிப் பேசாதீர்கள். என் விரதம் முற்றிலும் முறிந்து விடும்."

பிரஸன்னா: "ஆனால் மாமா, இனி ராணி நேர்மையுடன் நடந்துகொள்வாள் என்று எப்படி நம்புவது? அவள் இயற்கைதான் நாய்வால் போன்றதாயிற்றே!

"இல்லை, பிரஸன்னா. இதுவும் கடவுளின் கருணை. நேரத்தின் பெருமை. நான் நேற்றுச் சந்தித்தேன் அவர்களை. ராணி மறு ஜன்மம் எடுத்து விட்டார். உனக்குத் தெரியுமா, நேற்று மாலை ஆனந்தசூரி வல்லப சேனை விட்டு ஓடி ராணியிடம் வந்தார் என்று?"

திரிபுவன் அதிசயக்குறி காட்டினான்.

"ஆம், அவர் பட்டணைச் சூழப் புத்திமதி சொல்லி ராணியின் எண்ணத்தைக் கேட்டார். ராணி மறுத்து விட்டார். பட்டண் என் வார்த்தையை ஏற்றால் சரி, இல்லாவிடில் நான் கட்டை ஏறுவேன்" என்று சொல்லி விட்டார்.

திரிபுவன், "இந்தப்புத்தி தாமதித்தல்லவா வந்திருக்கிறது?

"ஆம், ஆனாலும் இப்பொழுதாவது வந்ததே. இல்லாவிடில் பட்டண் எல்லையில் பட்டண் மக்களின் ரத்தம் ஓட ஆரம்பித்திருக்குமே! நடந்ததும் நன்மைக்குத்தான்."

"சரி, பட்டண் என் பலிதானத்தையும் ஏற்றுக்கொள்ளட்டும். பட்டண் மக்கள் இதை ஏற்றுக்கொண்டால் நான் ஒன்றும் சொல்லவில்லை."

சற்று நேரத்தில் ஊதா கூப்பிட வந்தான். கொஞ்ச நேரம் குழப்பிக் கடைந்த பிறகு எல்லோரும் பின்வருமாறு முடிவு செய்தனர். முதலில் சந்திராவதி சேனை விடை கொடுக்கப் படவேண்டும். நாளை மாலை நேரம் ராணி, அவள் குமாரன், மற்றுமுள்ள இவ்விடத்துச் சிற்றரசர்கள் மட்டும் திரும்பி வரவேண்டும். இதற்கு முன்னமே முஞ்ஜால் திரும்பிச் சென்று புதுப் பதவிகளுக்கு உத்தரவை வாங்கிவரவேண்டும். மிகவும் வாத விவாதத்துக்குப் பிறகு திரிபுவன பாலன் தண்டநாயக், கோட்டை அதிகாரி இரண்டு பதவிகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானித்தனர். வல்லபசேன் சேனாதிபதியாவான். ஊதாவும் சேட் சாந்தி சந்திரனும் மந்திரி வேலையில் அமர்த்தப்படுவார்கள்.

இந்த முடிவுகளைச் செய்து கொண்டு முஞ்ஜால் மேதா மாலை நேரத்தில் ராணியிடம் திரும்பிச் சென்றான்.

மறுபடி பட்டணில்

முஞ்ஜால் திரும்பிவந்தான், ராணியின் இதயப் படகுக்குப் புயலாய் அமைந்த விஷயங்களைச் சொல்ல. வாழ்நாள் முழுவதும் போற்றி வளர்த்த கர்வத்தை இப்படிக் கரைத்து விழுங்கி நெஞ்சின்கீழ் இறக்குவதென்பது சுலபமில்லை. கவலையற்ற பரிசுத்தமான வாழ்வு வந்ததென்றாலும் இப்படி மூக்கறுபட்டு, பட்டண் திரும்புவது கடினமாகப்பட்டது. முஞ்ஜால் மாலை நேரத்தில் திரும்பிவந்தான்; உடனே ராணியிடம் சென்று தூது விஷயத்தைத் தெரிவித்தான்.

ராணி மக்கிய குரலில் "இன்னம் ஏதாவது?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை. நான் நாளைக் காலை பதிலைப் பெற்று திரும்புவேன். நீங்கள் போக விரும்பினால் நாளை மாலை பட்டண் வாயில் திறந்து வரவேற்கும். ஆனால் அதற்குமுன் இந்தச் சந்திராவதி படை விடை பெற வேண்டும்."

நமஸ்கரித்து முஞ்ஜால் விடை பெற்றான்.

அவள் விஜயபாலனை வருவித்தாள்.

“விஜயபாலரே! சந்திராவதி எமக்குப் பெரிதும் உதவியிருக்கிறது. நாம் இதை ஒருநாளும் மறவோம். நீர் எல்லாம் அறிவீர். செய்த உதவிக்கு எந்தக் கைம்மாறும் ஈடாகாது.”

“மகாராணி” தங்களுக்குப் பகவான் மஹா வீரரின் தயவிருக்கிறது. இந்தச் சச்சரவு நீங்கிற்று; நல்லதாயிற்று. இல்லாவிட்டால் ஏற்பட இருந்த பலன்கள் நல்லனவாகக் காணப்படவில்லை.”

ராணி சற்று உதடு பிரியச் சொன்னாள்: “தங்கள் ஆனந்தசூரி இதை ஒப்புக்கொள்ள மாட்டேன் என்கிறாரே! கொஞ்சம் கூப்பிடும் அவரை!”

கொஞ்ச நேரத்தில் ஆனந்தசூரி வந்தார். அவர் முகம் உலகையே வெறுத்துப் பகைப்பது போல் விறைத்திருந்தது. உலகத்தையே படைப்பவர்போல் அவர் ராணியைப் பார்க்க ஆரம்பித்தார்.

“யதி அவர்களே! நான் பட்டண் செல்கிறேன். விஜயபாலன் உங்கள் சேனையை அழைத்துச் செல்கிறார். நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள்?”

“மீனல் தேவி, மஹா வீரர் கிருபையால் தங்களுக்குத் தம் பெயரை எல்லையற்ற காலப் பரப்புக்கு நிலை நிறுத்த ஒரு நேரம் வந்தது. நீங்கள் இந்த விதம் செய்து விட்டீர்கள். அது மிகவும் வருந்தத் தக்க விஷயமாகும்.”

“நான் உம்மை இதற்கு அழைக்கவில்லை.” ராணி யதியின் பிடிவாதத்தைப் போற்றிச் சிரித்துக் கொண்டே சொன்னாள். இப்படிப் பட்ட திறமையாளருடைய அசட்டுப் பிடிவாதத்தைக் கண்டு கருணை ஏற்பட்டது. “ஆனால், நீர் அமைதியுடன் வாழ்நாளைக் கழிக்க விரும்பினால் மோண்டேராவில் என் மடம் இருக்கிறது. அங்கே ஏற்பாடு செய்து விடுகிறேன். உம்மை மரியாதையாய் வைத்துக் கொள்வார்கள்.”

“எனக்கு மரியாதையா? ராணி! ஆனந்தசூரி அதற்கா தாகம் பிடித்தலைகிறான்?”

“பின் என்ன வேண்டும் உமக்கு?”

“ஜைன மஹான்களின் சொல்லே போதும். கணத்தில் அழியக் கூடிய உங்கள் மரியாதைக்கும் நீங்கள் கொடுக்கும் கௌரவத்துக்குமா ஆசைப்படுகிறேன்!”

“சந்திராவதி சங்கம் உம்மை நீக்கப் போகிறது என்று கேள்விப் படுகிறேனே!” கலகல என நகைத்து ஆனந்தசூரி சொன்னார்......... “ஹா ஹா......அற்ப ஜீவன்களே! ராணி! என் வாழ்நாள் இலக்குக் கெதிரே எனக்கு எதுவும் லக்ஷியமில்லை. அதற்காகத்தான் நான் உங்களை எல்லாம் பாதம் தாங்கப் புறப் பட்டேன்! இப்பொழுது தான் புரிகிறது, எல்லோரும் முதுகெலும்பற்றவர்கள் என்று. பகவான் மஹா வீரரின் மந்திரத்துக்கு உருவளிக்க உங்கள் ஒருவரிடமும் வன்மை கிடையாது. இப்படிப்பட்ட ஜந்துக்களிடையேயா நான் வசிக்க முடியும்?”

“சரி, பிறகு என்னதான் செய்வீர்?”

“என்ன, உன்னுடைய இந்தச் சிறிய சிறிய லீலைகளால் என் பெருமை குன்றி விட்டதா? என் குறி தோற்று விட்டதா? மீண்டும் காலம் வரும் வரை காத்திருப்பேன். என் கொள்கையில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு. ஒரு நாள் தர்மத்திற்கு வெற்றிக் கொடி நாட்டித் திரும்பி வரும் ஒரு சக்கரவர்த்தியின் பக்கத்தில் என்னைக் காண்பாய்!”

“யதியவர்களே, மகாராணி உண்மையான அறிவுரை சொல்கிறார்கள். பட்டண் ராணியாகி அவர்கள் செய்யும் காரியத்தில் உதவி செய்தால் உமக்கு நன்மை ஏற்படும்.”

யதி விட்டெறிந்து சொன்னார்: “விஜயபால், நீ குழந்தை. என்ன கண்டாய்? போ, ராஜ்யத்தின் பெருமையைப் பலப்படுத்து! அதிகப் படுத்து!! தன் பிரமைகளின் இருட்டில் சுற்றிச் சுழன்று வா. கடைசியில் என் கொள்கைகள் தான் வெற்றியடையும். இல்லை என்றால் வேற்று மதத்தான் யவனன் வருகிறான்; பாரத வர்ஷத்தின் புனித பூமி அவர்கள் காலில் மிதிபடும்; மிதிபடுகிறது. பானிப் பட்டு, சிந்து நதியின் பிரதேசங்கள் கையை விட்டு நழுவி விட்டன. இனி உன்னுடைய நாடும் போய் விடும். மதம் நீங்கிய சாம்ராஜ்யமா? ஏற்படுத்தவா? உன் குழந்தை குட்டிகள் கஜினிக் கடைத் தெருவில் விலை கூறப் படுவர். என்னை இன்று முட்டாள் என்று ஏளனம் செய்கிறீர்கள். ஆனால் ஒரு நாள் கீழே விழுந்து புரண்டு எழுந்து தூசி தட்டும் போது தெரியும் ஆனந்தசூரி சொன்னதும் உண்மை தான் என்று. உன் பெருமையும் வேண்டாம், ராஜ்யமும் வேண்டாம். குருடர்கள், அறிவிலிகளுடன் எனக்குச் சம்பந்தமே வேண்டாம். இதோ அது முறிந்து விட்டது” என்று சொல்லி முக்காலம் அறிபவன் வருங்காலத்தை எதிரே காண்பது போல் தோற்றம் காட்டி நின்றார். ராணியும் விஜயபாலனும் நடுங்கினர். அடுத்த

அழகிய டி. வி. குமுதினி தனது சரு
மத்தை வசீகரமாக வைத்துக்கொள்ள
லக்ஸ் டாய்லட் சோப்பைத்
தான் உபயோகிக்கிருர்
—இதோ உங்களுக்கு
ஏனென்று
சொல்கிருர்.



"என் சருமத்தின் அழகை பாதுகாப்பதற்கு நான் லக்ஸ் டாய்லட் சோப்பைத்தான் உபயோகிக்கிறேன். ஏனென்ருல் அதன் மிருதுவான நுரை சருமத்தின் துவாரத்தினுட்புகுந்து சருமத்தை துப்புரவாகச்சுத்தம் செய்கிறது என்று எனக்கு தெரியும்" என்று இந்த பிரபல சினிமா நட்சத்திரம் சொல்கிருர். "மேலும், அதன் மனேகரமான பரிமளத்தை நான் மிகவும் விரும்புகிறேன்."

இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தையும் வசீகரமாக செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 236-172 TM



எமது முதல்தரமான
சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன !

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும் !

கே. சுவாமிநாதன் & கம்பெனி

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.

No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.

தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளைதெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

கணமே ஆனந்தசூரி ராணியை ஒரு வெறுப்புப் பார்வை பார்த்து விட்டு வெளியேறிச் சென்று விட்டார்.

ராணியும் விஜயபாலனும் எவ்வளவு நேரம் அப்படியே அச்சம் கொண்டு நின்றார்கள் என்று சொல்ல முடியாது. அவர் கூறிய வாக்கு இன்றே எதிரேயே நடப்பது போல அவர்களுக்குத் தோன்றிற்று. சற்று நேரத்தில் அவர்கள் தம் நிலை அடைந்தார்கள்.

"விஜயபாலரே! பாவம் இவர் உண்மையிலேயே கருத்துச் சிதறி விட்டார். சரி, நீர் ஏதாவது சொல்ல வேண்டுமா? நான் ஒரு எண்ணம் கொண்டிருக்கிறேன். உமக்கு விரோதம் இல்லை என்றால் சொல்கிறேன்."

"என்ன?"

"பட்டண் அதிகாரம் கைக்கு வந்தால் உம்மை ஒரு சிற்றரசனாக்கி விடுகிறேன். பட்டணில் வந்து இரும்."

" மஹாராணி மன்னித்துவிடுங்கள். பட்டணை என் சிரமேல் தாங்கிப் போற்றுவேன். ஆனால் சந்திராவதிக்குப் பிறகுதான் சிற்றரசனாவேன், ஆனால் பட்டண் வரமாட்டேன்."

'சரி, பிறகு பார்க்கலாம்.' என்று ராணி அதைத் தள்ளிவிட்டாள்.

விஜயபால் வெளியேறி சேனையைக் கிளம்ப உத்தரவிட்டான். படையில் கொஞ்சம் குழப்பம் ஏற்பட்டது. அநேகர் ராணியின் நன்றிகெட்ட தன்மையைத் தூற்றினர். வேறு வழியின்றி ஜைனமதத்துக்கு வெற்றிக் கொடி நாட்டும் எண்ணத்தைவிட்டு, படை காலையிலேயே கிளம்பிவிட்டது. விஜயபால் மட்டும் ராணியுடன் தங்கினான்.

மாலைநேரம் : விஜயபால் உதவிய ஓர் யானைமேல் அமர்ந்து ராணி பட்டண் போக ஆரம்பித்தாள். முரார்பால், விசுவபால், விஜயபால், வினயசந்திரன் முதலிய பதினைந்து பேர் குதிரைமேல் அமர்ந்து அருகே வந்தனர். பட்டணைக்கண்டதும் பலஎண்ணங்கள் குமுறி எழ ராணியின் கண்கள் நீர் நிரம்பின. முஞ்ஜாலை எண்ணிக் கொண்டாள். வாழ்க்கை முழுவதும் அவன் செய்த தியாகத்தையும் சீரிய முயற்சிகளையும் எண்ணிப்பார்த்தாள். அவள் கண்ணெதிரே நம்பிக்கையிழந்த, மனைவியைக்கொன்று, சகோதரியைத் துடிக்க வைத்து, அவள் புருஷனைக் கொல்லவைத்து, ராணி பட்டண் இரண்டின் கௌரவத்துக்காகவே சந்நியாசியான மந்திரி உருவம் காட்டினான். அவனுடைய நிலை இப்பொழுது எப்படி இருக்கும்? அவனெதிரே ராணியின் கஷ்டங்கள் எந்த மூலை? ராணியின் நினைவில் ஹம்ஸாவும் தோன்றினாள்: அவளுடைய அழகு கண்கள் எதிரே உரு எடுத்தது. தனக்காக பட்டண் பெருமை குன்றாமலிருக்க அவளுக்கு ராணி இழைத்த இன்னல்கள் தான் எவ்வளவு? கடைசியில் அவளுக்கு ஏற்பட்ட அகால மரணம்! எல்லாம் ஞாபகம் வந்தன. அம்பாரியில் அமர்ந்திருந்த ராணியின் கண்கள் நீரைச் சொரிய ஆரம்பித்தன. பட்டண் அவளை அடிமைசெய்துகொண்டது. முஞ்ஜால் திரிபுவன் எல்லாம் அதன் தேவதைகள். பட்டண் அவளைத் தன் பூசாரிணி போலவே ஏற்றுக்கொள்ளும்.

மோண்டேரி வாயிலில் கேங்கார், சாந்திசந்திரன், வஸ்துபால் இவர்கள் சில வீரர்களுடன் காத்து நின்றனர்.. அவர்கள் நடவடிக்கைகளில் மானம் தோன்றிற்று. சேர்ந்து கொஞ்சம் தயவும் இடம் பெற்றிருந்தது. ராணி மிக முயன்று கோபத்தை அடக்கிக் கொண்டாள். பதியின் துக்கத்தை மறந்து பட்டணைவிட்டுச் சென்ற ராணிக்கு யார்தான் மதிப்புக்கொடுப்பர்? அங்கே முஞ்ஜால் திரிபுவன் இருவரில் ஒருவரைக்கூடக்காணாத ராணி சற்று மனம் தளர்ந்தாள். உதட்டை மடித்துக் கோபத்தைக் குடித்து அமைதியைக் கைப்பிடித்தாள்!

பட்டணத்தில் மயான அமைதி பரவி நின்றது. ராணிக்குப் பெரிய மாறுதல்தென்பட்டது. ஒரு ஆள்கூட வெளியேறவில்லை. ஒருவரும் ஜன்னலருகேகூடத் தென்படவில்லை. இருட்ட ஆரம்பித்துவிட்டது. ஏதோ திருட்டுத்தனமாக நுழைவதுபோல ராணி உணர ஆரம்பித்தாள்.

"இது அதே அரண்மனை தானா?" அரண்மனையும் மாறிநிற்பதாக அரசி எண்ணினாள். யானை உள்ளே சென்றது. அரசி இறங்கினாள். அங்கே அதே கலியாணநாய்க்தான் நின்றிருந்தான். ஆனால் அரசிக்கு மாறிய உள்ளம்: அவன் அலக்ஷியம் செய்து பார்ப்பதாக எண்ணினாள். சாந்திசந்திரன் பேசிய சிரிப்புப் பேச்சுக்களில் அவளுக்குச் சிரிப்பு வரவில்லை. ராணி விளாவில் மேலேறிச் சென்றாள். லீலாதர வைத்தியன் எதிர்ப்பட்டான். அவனும் பேசாமல் குறை கூறுவதாகவே அவள் எண்ணினாள். அரசி விளாவில் தன்னறைக்குள் சென்றாள். இரவு அவளுக்கு உதவி புரிந்தது. எல்லோரும் வீடு சென்றனர்.

"வெளியே யாராவது இருக்கிறார்களா?" ராணி தாஸிபோல நடுங்கிக் கேட்டாள்.

"அம்மணி, இதோ இருக்கிறேன்" என்று சொல்லி என்றும் மாறாத விசுவாசம் உள்ள ஸமர் வந்து நின்றான்.

"ஸமர்! திரிபுவன் பாலன் எங்கே? முஞ்ஜால் மேதா எங்கே? பிரஸன்னாதான் எங்கே

போய் விட்டாள்? ஒருவரையும் காணுேமே? பார்த்து வா.'' ஸமர் சென்று விட்டான்.

இவ்வளவில் களைப்படைந்த ஜயதேவ குமாரன் வந்தான். ராணி அவனைத் தூங்க வைத்தாள். வேலைக்காரர், வேலைக்காரிகள் எல்லோரும் மௌனமாகப் பேசாமல் வந்து போய், தங்கள் வேலையைச் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் மௌனமே ராணியைச் சுட்டது. கொஞ்சம் கொஞ்சமாக ராணியின் இதயக் கிளர்ச்சி அதிகமாகி வந்தது. இப்படியே ஒரு மணி கழிந்தது.

கடைசியில் ஸமர் வந்தான். "அம்மணி மன்னியுங்கள். முஞ்ஜால் மேதா வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவர்கள் வர மறுத்து விட்டார்கள். அவர்கள்......"

"ஏன், என்ன சொன்னுர்?"

"கடைசிப் பரார்த்தத்தைச் சாதித்து விட்டேன். இனி ஸ்வார்த்தத்துக்காகப் போகப் போகிறேன் என்று சொல்லச் சொன்னுர்.''

ராணி பதறிக் கேட்டாள்: "ஏன்? எங்கே போகிருராம்?

"ஆபூவிற்குப் போக ஏற்பாடு செய்கிருர்."

"சரி, அவர் எங்கே இருக்கிருர்?"

"இங்கே இல்லை. 'நகர் சேட்' முஹல்லாவில் இருக்கிருர், தம் வீட்டில்."

ராணி ,இடியுண்டாள். உண்மையாகவே. எவ்வளவு வருஷங்களுக்குப் பிறகு இன்று முஞ்ஜால் தம் வீட்டுக்கு அரண்மனை வாசத்தை விட்டுச் சென்றிருக்கிருர்.

"உனக்கு எப்படித் தெரியும் அவர் ஆபூ போகப் போகிருர் என்று.''

கிழவன் தலையசைத்துச் சொன்னுன். "நான் அவர் வேலைக்காரர்களைக் கேட்டேன். இனி மேதா மாற மாட்டார்.''

"மாற மாட்டாரா? அவரின்றி நான் என்ன செய்வேன்?'' புழுங்கி எழும் இதயத்தின் குரலை ராணி வெளியேற்றி விட்டாள். எதிரே சேவகன் நிற்கிருன் என்பதைக் கூட மறந்தாள். ஸமரும் இந்தக் குரலைக் கேட்டுச் சற்று அதிசயித்து நின்ருன். "ஸமர்! நீ நம்பிக்கையுள்ளவன். என்னுடன் வருவாயா?"

"ஓ, நான் தயார்."

ராணி உடனே உள்ளே சென்ருள். உடையை மாற்றினுள். பட்டுச் சால்வையை எடுத்து உடலை மூடிக் கொண்டு வெளியே கிளம்பினுள். "வா என்னுடன்"

எஜமான விசுவாசம் உள்ள வேலைக்காரன் வாய் மூடி அவள் பின்னே தொடர ஆரம்பித்தான். ராணியும் அரண்மனையை விட்டு இறங்கி, பின்வாயில் வழியாகப் பேசாமல் போய்க் கொண்டிருந்தாள்.

வெற்றி பெற்ற பிரஸன்ன

அன்று நடுப்பகலில் நடந்ததென்ன என்று கொஞ்சம் பார்க்கலாம். திரிபுவன் சொல்லியனுப்பியபடி வல்லபசேன் பட்டண் வந்து சேர்ந்தான். திரிபுவன் அவனிடம் நடந்ததெல்லாம் சொன்னுன். ஆனுல் அந்த விஷயங்கள் அவன் கழுத்துக்குக் கீழே இறங்க மறுத்து விட்டன. என்ருலும் தேவ ப்ரஸாதின் மைந்தன் வார்த்தையைக் காப்பாற்ற, அவனுக்கு நன்மை செய்யத் தயாராயிருந்தான். அவன் பட்டணில் தங்க ஒப்புக் கொண்டு தேவப்ரஸாத் அரண்மனைக்குச் சென்ருன்.

நகர முக்யஸ்தர்கள் ராணியை வரவேற்கத் தயாராகிப் பேச ஆரம்பித்தது முதல் திரிபுவனன் உள்ளம் ஊசலாடிக் கொண்டிருந்தது. காலையில் அங்கங்கே சென்று அவரவர்களுக்கு உத்தரவிட்டு ஏற்பாடுகள் செய்வதில் முனைந்திருந்தபடியால் பிரஸன்ன அவனைச் சந்திக்க முடியவில்லை. ஆனுல் அவன் ஏதோ மனதுக்குள்ளேயே ஏற்பாடு செய்கிருன் என்று மட்டும் உணர்ந்தாள். நடுப்பகலிலும் வல்லபன் பேசிக்கொண்டிருந்ததனுல் அப்பொழுதும் நெருங்கிப்பேசமுடியவில்லை. நடுப்பகல் சென்றபிறகு கொஞ்சம் நேரம் கிடைத்தது.

"திரிபுவன் இனி என்ன செய்யவேண்டும்?"

"யார், எதற்கு?"

"நாம்தான். நாளைமுதல் நாம் சந்திப்பதே அரிதாய்விடும் அல்லவா?''

பதிலுக்குத் திரிபுவன் பாலன் ஒரு மாதிரி பார்த்து, "வரட்டும்.........மீனல் தேவி வரட்டும்'' என்ருன்.

"வருவதில் இன்னம் என்ன சந்தேகம்? திரிபுவன், இந்த விதம் வார்த்தையை ஏன் விட்டுத்தள்ளுகிருய்?"

"இல்லை இல்லை; நாம் பிறகு பேசுவோம்'' என்று சொல்லி அவன் அவள் தோளில் கை வைத்தான். திடீரென்று உள்ளக்காதல் வெடித்துக்கிளம்பியது போன்ற அவன் செய்கையைக் கண்டு, பிரஸன்ன அவன் கையைத் தன் கையால் பிடித்து அமுக்கி மறுபடியும் விட்டாள். திரிபுவன் கண்களில் காதல் ஜோதி கிளம்பிற்று; உடனே அடங்கிற்று.

" அத்தை இதோ வந்துவிடுவார்களே எதிர்செல்ல வேண்டாமா?"

"நான் ஏன் போகிறேன்? என் வேலை முடிந்துவிட்டது. சரி. பிறகு பேசிக்கொள்ளலாம்" திரிபுவன் வார்த்தையை முடிப்பதில் வேகம் காட்டினான்.

"நீ எங்கே போவதாக முடிவு செய்திருக்கிறாய்?"

"என் வீட்டிற்கு. வல்லபனும் அங்கேதான் சென்றிருக்கிறான். சரி. போகிறேன்" என்றுசொல்லி அவன் வெளியேறினான். அவன் சென்றதும் பிரஸன்னா இடியுண்டவள்போல் ஆனாள். அவன் வார்த்தைகள், தோளில் கைவைத்தபோது வெளியான ஒரு அதிசய உணர்ச்சி, அவளுக்கு ஒரு ரஹஸியக் கதை சொல்லின. பட்டணை விட்டுச்செல்ல முடிவு செய்துவிட்டானா, திரிபுவனபாலன்? அவள் ஓடிச்சென்று வாயிற்கதவை அடைந்தாள். வேலைக்காரனை விளித்தாள். 'பலதேவ், ஓ பலதேவா, போ. மண்டலேசுவர மகாராஜ் எங்கோ போகிறார்? போ அவரிடம் சொல்லு நானும் வருகிறேன் என்று.' என்று சொல்லி ஓடிக் கீழிறங்கி, முற்றம் தாண்டி வாயிற்படியை அடைந்து 'பலதேவா அரசர் எங்கே?' என்றாள்.

"மஹாராஜ் அந்தப் பக்கம் நிற்கிறார்."

பிரஸன்னா ஓடிச்சென்று அவனை அணுகினாள். அவன்கோபம்காட்டி, "ஏன்எதற்காக?" என்று அதட்டினான்.

பிரஸன்னா அவன் ஏறியிருந்த குதிரையுடன் ஒட்டிநின்று, "திரிபுவனா, நானும் உன் வீட்டுக்கு வருவேன்" என்றாள்.

திரிபுவன் குதிரைமேலிருந்தே பிரஸன்னாவைப் பார்த்தான். அவள் அழகு, தனி முறையில் பார்க்கும் அவள் கண்கள், அவனிடம்கொண்ட அசையாத அன்பு அவனைக் கரையவைத்தன. "பிரஸன்னா, நான் என் வார்த்தையைக் காப்பாற்றவேண்டும். மீனல் தேவி பட்டண் புகுமுன் நான் வெளியேற வேண்டும்."

"எங்கே போவாயாம்?"

"இஷ்டப்பட்ட இடம். தேஹஸ்தலம் போனால் தகராறு ஏற்படும். பட்டண் பெருமை உயரட்டும். ஆனால், என் பிரதிக்கினையும் நிறைவேறவேண்டும். நானாகவே வெளியேறிவிடுகிறேன்."

"பிறகு என்னையும் அழைத்துச் செல்லேன்; நான் இங்கே தனியாய் என்ன செய்வேன்?" சொல்லிக்கொண்டே இருந்த பிரஸன்னாவின் கண்கள் கரைய ஆரம்பித்தன.

திரிபுவன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ஒரு கையால் கடிவாளத்தைப் பிடித்து, மற்றொரு கையால் பிரஸன்னா கையை எடுத்து அதை அன்புடன் அமுக்கி, "பிரஸன்னா, மிக்க துன்பங்களைச் சகித்துக்கொள்ள வேண்டி வருமே?" என்றான்.

"அதைப்பற்றிக் கவலையில்லை!"

திரிபுவன் கை கொடுத்தான்; பிரஸன்னா எகிறினாள். குதிரை தன்முதுகில் அழகிய ஒரு பெண்ணுரு அமர்ந்ததை உணர்ந்தது. திரிபுவன் அதைத் தூண்டிவிட்டான்.

இவ்வளவுநாள் அனுபவத்தினால் அரண்மனை ஜனங்கள் திரிபுவனையும் பிரஸன்னாவையுமே தங்கள் அரசன் அரசியாக எண்ணத் தொடங்கியிருந்தனர். ஆகவே அவர்கள் செய்வதையெல்லாம் அந்த மக்கள் மரியாதையுடன் பார்த்து வந்தார்கள். இப்பொழுது வாசஸ்பதி பார்த்தான்: தொலைவில் இருவரும் வேகமாகப் போய்க்கொண்டிருந்தனர். அவனுக்கு இது சாதாரணமான விஷயமாகப்படவில்லை. வாசஸ்பதி ஸ்நானம் செய்து சந்தியாவந்தனத்துக்குத் தயாராகிக் கொண்டிருந்தான். என்ன செய்வது என்று புரியாததனால், ஒரு வேலையாளை விட்டு ஊதாவை வரவழைத்தான். அவனிடம் எல்லாவற்றையும் சொன்னான். ஊதா மேதா ராணியை வரவேற்கச்செல்ல உடையணிந்து நின்றவன் இதைக்கண்டு விழித்த கண்களைக் கொட்டக்கூட மறந்து நின்றான்.

"பண்டிதரே, காரியம் கெட்டுவிட்டது. திரிபுவன பாலன் போய்விடுவார்."

"ஊம், என்ன செய்வது? அவரை எப்படித்தான் போகவிடுவது?"

"திரிபுவனபாலன் கேட்கமாட்டார், பண்டித ராஜரே! அவர் தந்தையின் மகன்."

"ஏதாவது செய்யுமே. போய் முஞ்ஜாவிடம் சென்றாவது சொல்லுமேன்"

"ஆம் ஆம், அதுதான் சரி" ஊதா எழுந்தான். ஓட்டம். இரைக்க இரைக்க 'நகர் சேட்' முஹல்லாவுக்கு ஓடினான்.

அங்கே திரிபுவனும் பிரஸன்னாவும் பேசாமலேயே தங்கள் இல்லம் வந்து சேர்ந்தனர்.

"பிரஸன்னா, சொல். நீ இப்பொழுதே என்னுடன் வருகிறாயா? அல்லது பிறகு வந்து அழைத்துச் செல்லட்டுமா? சீக்கிரம் சொல். மாலை மயங்கிவிடும்.'

"இல்லை. இல்லை. போவதனால் சேர்ந்துதான். ஆனால் எங்கே போவதாக முடிவு?"

இங்கிருந்து முதலில் பிரபாஸ் போவோம். நீ ஆண்வேடம் அணிந்துகொள்"

"சரி" இந்தமாதிரி சந்தர்ப்பங்கள் அவளுக்கு மிகவும் உவகையளித்தன. "நீ குதிரை

தயார் செய். எனக்குத் துணிகள் எங்கே என்று சொல். நான் அணிகிறேன்"

திரிபுவன் உடைகளைக்கொணர்ந்து தந்து மற்றொரு குதிரை தயார் செய்ய அவ்விடம் விட்டு அகன்றான்.

பிரஸன்னாவின் உள்ளம் மலர்ந்து நின்றது. கொஞ்சம் சிணுக்கம் இருந்தபோதும்கூட அவள் அந்த எண்ணங்களை மறந்து உடை அணிய ஆரம்பித்தாள். ஆண்உடைஅணிய அவள் மிக ஆனந்தம்கொண்டாள். அழகும் ஒளியும் பொருந்திய தன் அழகிய அங்கங்களைப் பைஜாமா, மேலங்கி முதலிய பழக்கமில்லாத உடைகளுக்குள் செலுத்தும் போது அவள் எண்ணங்கள் உயரப் பறந்தன. உடைகளை அணிந்து முடித்து அவள் கண்ணாடிக்கெதிர் வந்தாள். அவள் முகமே அவளை வெறிகொள்ள வைத்தது. அவள் திரிபுவனனுடன்கூடப் போகப் போகிறாள்.

அவள் குனிந்து குனிந்து கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக்கொண்டே யிருந்தாள். தலையில் மயிரைத் தூக்கி முடிந்து, தலைப் பாகை கட்ட எண்ணினாள். பிறகு தன்னைத் தானே கூப்பிட்டுக்கொண்டாள். "ஆஹா! என் பிரஸன்ன பாலரே!" உவகை பொங்கி உள்ளம் கிளர்ந்தது. கீழே குனிந்து கையி லிருக்கும் கண்ணாடியில் தெரியும் பிரஸன்ன பாலனின் முகத்தோடு முகம் வைத்து முத்த மிட்டுக்கொண்டாள்!

யாரோ பின்னாலிருந்து கதவைத் திறந்தார்கள். பிரஸன்னா, திரிபுவன்தான் வருகின்றான் என்று எண்ணி, இருந்தபடியே, "என்ன எல்லாம் ஏற்பாடாகிவிட்டனவா?" என்று கேட்டாள். ஆனால் முழுவார்த்தைகளையும் சொல்வதற்கு முந்தியே கண்ணாடியில் வேறு ஒருமுகம் தெரியக்கண்டாள். அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள். வாயிற்படியில் முஞ்ஜால் மேதா தான் யோசனையுடன் நின்றிருந்தான். ஊதா தன் வேலையை முடித்திருந்தான். பிரஸன்னா அவனைக் கண்டு வெட்கமடைந்தாள். ஆண் உடையில் இருக்கும் பெண் அலமரலுற்றாள்.

முஞ்ஜால் அவளுக்குத் தன் நிலையடைய நேரம் கொடுத்து, "பிரஸன்னா, திரிபுவன் எங்கே? இது என்ன பட்டண் விட்டுச் செல்ல ஏற்பாடாகிறதா?"

உலர்ந்த தொண்டை குரைத்த குரலில் 'ஆம்' என்றாள்.

மிகவும் தயவு வேண்டும் குரலில் முஞ்ஜால், "பிரஸன்னா, உன் மூளையுமா நிலையழிகிறது? திரிபுவன் தான் பிரதிக்கினை என்று அசட்டுத்தனம் செய்கிறான்? நீயும் அவனுடன் சேருகிறாயா? அவன் எங்கே?"

"குதிரை கொண்டு வரப் போயிருக்கிறார்."

மெதுவான குரலில் அவசரமாக முஞ்ஜால் சொல்ல ஆரம்பித்தான். "சரி பிரஸன்னா, இன்னும் காரியம் கெடவில்லை. அவன் சென்று என்ன செய்வான்? இந்த விதம் தன் உரிமையை விட்டு, வேற்று நாட்டில் இருப்பானா? பட்டணில் அதிகாரம் இருக்கிறது; கீர்த்தி காத்திருக்கிறது; வெற்றி ஏவல் புரிகிறது. இவ்வளவையும் விட்டு ஒரு பிடிவாதத்துக்காகத் தன் வாழ்க்கையைத் தண்ணீர் விலைக்கு விற்க விட்டுவிடுவாயா?"

மிகவும் முயன்று வெட்கத்தை விட்டுப் பிரஸன்னா சொன்னாள்: "மேதாஜி! நான் என்ன செய்வேன்? அவர் சொல்கிறார், நான் செய்கிறேன்."

"பிரஸன்னா, ஒரு முறை முயன்று பாரேன். இந்த இந்திர லோகத்துக்குத் 'தண்ட நாயக்' ஆவதற்கு, ஸோலங்கிகளின் சிம்மாஸனத்தைக் காப்பாற்றும் பொறுப்பேற்றுத் தங்குவதற்கு, சேவல் கொடியை அவந்தியில் பறக்க விடுவதற்கு, தேவதைகள் கூடத் தங்கள் உலகத்தை விட்டு இங்கே வந்து விடுவார்களே. பிரஸன்னா, நீங்களிருவரும் அழியாப் புகழ் பெற அல்லவா பிறந்திருக்கிறீர்கள்! எல்லாவற்றையும் இழந்து நிற்கப் போகிறீர்களா? உன்னைப் போன்ற பத்மினிப் பெண்கள் என்னதான் செய்ய முடியாது?"

"மேதாஜீ, நீங்கள் இங்கேயே தங்குங்கள். என்னாலானதைச் செய்து பார்க்கிறேன். முடியாவிட்டால்......!"

"பிரஸன்னா, இந்தச் சமயம் பிரம்மாண்டமே இடிந்து விழுந்தாலும் சரி, திரிபுவன் போகக்கூடாது. நான் என் தங்கை கணவனின் வம்சம் நாசமடைய என் கண்ணாலேயே பார்க்க மாட்டேன். நீ சொல்லிக் கேட்காது போனால் நான் வருகிறேன்; பிடிவாதம் செய்கிறேன். உனக்குத் தெரியாதா, என் வார்த்தையைத் தட்டுவது எவ்வளவு பளுவானது என்று? நான் இதோ இந்த அறையில் இருக்கிறேன். இங்கேயே இருந்தால் நீ வெட்கப் படுவாய். சொல். அறிவுறுத்து. உன் நாக்கில் சரஸ்வதியே இறங்கி வந்தமர்வாள். உன்னைப் போன்ற தெய்வ மங்கையைப் பட்டண் எப்படி விட்டு இருக்கும்?" பிரஸன்னா சரி என்றாள். முஞ்ஜால் பக்கத்திலுள்ள அறைக்குள் சென்றான்.

கொஞ்ச நேரத்தில் திரிபுவன் வந்தான்.

“என்ன தயாரா? குதிரை வந்து விட்டது! என்ன செய்ய வேண்டும்?” பிரஸன்னா கலவரத்துடன், “திரிபுவன், நீ என்னுடைய முதல் தெய்வம். நான் சொல்லும் ஓர் வார்த்தையைக் கேட்பாயா?”

„என்ன வார்த்தை? இந்தச்சமயம்அதற்கா நேரம்? ராணி இவ்வளவு நேரம் பட்டணில் நுழைய வந்திருப்பாளே!”

“வரட்டும் திரிபுவன்! நீ நான் சொல்வதைக் கேள்.”

“நானும் இங்கே இருப்பேன். உன்னையும் வைத்துக்கொள்வேன். நமக்குமுன் நீண்ட வாழ்வு இருக்கிறது. நான் தண்டநாய்க் மனைவியாக விரும்புகிறேன், திரிபுவன் எனக்கு இந்தப் பெருமை தரமாட்டாயா?” பிரஸன்னா திரிபுவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

“பிரஸன்னா! இந்த மாற்றம் எப்படி ஏற்பட்டது? நீ வருவாயா, மாட்டாயா?” என்று கேட்டு அவன் பிரஸன்னாவை வாயிற்பக்கம் இழுத்துச் செல்ல ஆரம்பித்தான். அவன் ரத்தம் பொங்கிக் கொதிக்க ஆரம்பித்திருந்தது. அவனுக்கு மீனல்தேவி வந்துவிடுவாளே என்ற எண்ணம்தான் மேலோங்கி நின்றது. பிரஸன்னா இரண்டு கைகளாலும் திரிபுவன் கையைப் பிடித்துக்கொண்டாள்.

“திரிபுவன், எங்கே என்னை இழுத்துச் செல்கிறாய்? என் தெய்வமே இரு. நீ இவ்வளவு கல்லுள்ளத்தனாய் ஏன் ஆயினை? நம் முன்னோர்களின் பெருமைக்காக, நம் பட்டணுக்காக, எனக்காக, கொஞ்சம் யோசி. நீ இல்லாமல் நாங்கள் எல்லோரும் மடிந்துவிடுவோம். துடித்துத் துடித்துக் குறைந்து விடுவோம். எங்களை நீ எங்கே விட்டுப் போவாய்?”

அலறச் சிரித்துத் திரிபுவன் சொன்னான்:

“விடு என் கையை!” என்று சொல்லி ஆவேசத்துடன் திரிபுவன் தன் கையை விடுவித்துக்கொள்ள முயன்றான். பிரஸன்னா அழுத்தமாய் அணைந்து ஒட்டிக்கொண்டாள். திரிபுவன் உதட்டை மடித்துப் பகீரதப் பிரயத்தினம்செய்து ஒரு உலுக்கி உலுக்கி அவளை உதறினான். பிரஸன்னா விடுபட்டாள். காற்றிலே பறந்தாள், கடுகிப் பூமியிலே ‘தடார்’ என்று விழுந்தாள். ‘ஆ. திரிபுவன்’ என்றவள் தன் நினைவிழந்துவிட்டாள்.

திரிபுவன் எங்கும் பார்க்காமல் மேலேறினான். இரண்டு நான்கடிகள் வைத்திருப்பான். பின்னாலிருந்து பழக்கமான ஒரு குரல்



199315

ஆணையிடும் குரலில்' 'திரிபுவன்!' என்றழைத்தது. திரிபுவன் திரும்பி முஞ்ஜாலைப் பார்த்தான்; மின் உணர்ச்சிகொண்டு மயங்கி நின்றான். முஞ்ஜால் கண்களிலிருந்து தாளவொண்ணாத தேசுக் கிரணங்கள் வெளிவந்து கொண்டிருந்தன. "உன்னை ஆயிரம் முறை

காப்பாற்றிய இந்தத் தேவ கன்னிகைக்கு இதுதான் சரியான பரிசோ? நல்லபரிசு தந்தாயப்பா?" என்று சொல்லி, அவன் மதிப்பு வாய்ந்த தன் கைகளால் பிரஸன்னாவைச் சுட்டிக் காட்டினான். விழும்போது பிரஸன்னா ஒருமேடையிலிடிபட்டிருந்தாள். நெற்றிக்கட்டு உடைந்து ரத்தம் பெருகிக்கொண்டிருந்தது.

திரிபுவன் பிரஸன்னாபக்கம் பார்த்தான். மயக்கம் வந்து ரத்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கும் அவளைப் பார்த்த கண்ணால் அவளை அந்த நிலைமைக்குள்ளாக்கின தன் கையைப் பார்த்துக்கொண்டான்; அழுத்தமாகவே மூடியிருந்த உதடுகள் கொஞ்சம் தளர்ந்தன. அவன் முகத்தில் பரவியிருந்த பயங்கரமான கடுமை மறைந்து இரக்கம் குடிகொண்டது. சற்று நேரம் திகைத்து நின்றான்: முன்னால் போவதா? பின்னால் போவதா?

பிரஸன்னா பக்கம் ஓடினான். "ஆஹா! என் பிரஸன்னா?" என்று கதறி அவள் தலையைத்தாங்கி, தூக்கினான்.

"நீ இவளைப் பார்த்துக்கொள். நான்

யாரிடமாவது சொல்லி லீலாதரனை அழைக்கிறேன். அங்கியைக் கழற்றி விடு. மூச்சுத் திண்டாடிவிடும், நெற்றியில் ஓடும் ரத்தத்தை அமுக்கிக்கொள்" என்று உத்தரவிட்டு முஞ்ஜால் வெளியேறிவிட்டான்.

வெகு நேரம் வைத்யர் அநேக உபசாரம் செய்தபிறகு பிரஸன்னாவின் ரத்தம் வெளியேறுவது நின்றது. அவளுக்குச் சுயநினைவு வந்தது.

"திரிபுவன்.........!" திரிபுவன் ஓடி வந்தான்.

"பட்டணில்தானே........."

"ஆம்' பட்டணில் தான். நீ கவலைப்படாதே. இனி நீ இருக்கும் இடம்தான் நானும்"

என்னைவிட்டுச் செல்லாதே!

இரண்டு மூன்று மணி நேரம் கழிந்த பிறகு முஞ்ஜால் அவ்விடம்விட்டு வீட்டிற்கு வந்தான். அவன் உள்ளம் அமைதி பெற்றிருந்தது. பட்டண் அரசியலை ஒருவாறு சீர்திருத்தி, சரியாகச்செல்லும் முறையில் முடிந்தவரை ஏற்பாடுசெய்துவிட்டான். ராணி திரும்பி வந்துவிட்டாள்; பட்டண் வாசிகளுக்குச் சொல்லிவிட்டான்; அவர்களுடைய தண்டநாயக் ஓட இருந்தான், அவனை நிறுத்திவிட்டான்; தன் குடும்பத்திற்கும் பெயர் ஏற்படுத்திவைத்துவிட்டான். இனித் தன் வாழ்வு பயனற்றதாகப்பட்டது. இனி உலகத்தின் சுழல்களை விட்டுச்செல்வதில் ஒரு தடையும் இல்லை. அவன் மெதுவாக நடந்துகொண்டிருந்தான். பட்டண் சந்துகளைக் கடைசி முறையாகப் பார்த்துக்கொள்கிறவன்போல் போய்க்கொண்டிருந்தான்.

தான் கடத்திய வாழ்நாட்களை ஒரு முறை புரட்டிப் பார்த்தான். அவைகளில் அவநம்பிக்கை, துயரம், துக்கம் இவைகளைக் கொண்ட அனேக ஏடுகள் இருந்தன. என்றாலும் மொத்தத்தில் அவன் வாழ்க்கை வெற்றி வாழ்க்கையாகத்தான் இருந்தது. அவன் காரணமாகத்தான் இன்று பட்டண் நிலைத்திருக்கிறது. வருங்கால மக்கள் தம் முன்னோர்களை எண்ணினால் முதன் முதலில் முஞ்ஜாலைத்தான் நினைப்பார்கள். சரளமான, சாதாரணமான வாழ்க்கைத் துடிப்புகளைக் கொண்ட மக்கள் எல்லாம் தங்கள் தங்கள் வீடுகளில் எல்லாம் தூங்கிக்கொண்டிருந்தனர். நகர் முழுவதும் மௌனம் குடிகொண்டிருந்தது. அவன் மனதிலேயே, மக்களைத் தன் சொந்தக் குழந்தைகளை ஆசீர்வதிப்பது போல ஆசீர்வதித்துச்சென்றான். அவன் வீட்டுக்கு வந்தபோது வாசல் மேடையில் அமர்ந்திருந்த சேவகன், "மகராஜ்! யாரோ ஒரு பெண் உள்ளேவந்து உட்கார்ந்திருக்கிறார்" என்று சொன்னான்.

"எங்கே இருக்கிறாள்?"

"மேலே இருக்கிறார்கள். கூட ஒரு வேலைக்காரனும் இருக்கிறான்."

"நல்லது!" என்று சொல்லி மேலே சென்றான். படியருகில் ஒரு மனிதன் குன்றிக் குந்தியிருந்தான்.

"யாரது, ஸமர் சேனா? எங்கே வந்தாய்? யாரைக் கொணர்ந்திருக்கிறாய்?"

கொஞ்சம் குனிந்து ஸமர் மெதுவாகச்சொன்னான். "மஹாராணி வந்திருக்கிறார்கள்."

"ஊம்!" என்ற முஞ்ஜால் சற்றுப் பின்னடைந்தான், ஏதோ அரவம் தீண்டியவன் போல.

பிறகு வேகமாக உள்ளே சென்று, "மீனல்தேவி, இதென்ன? என் வீட்டில்......?"

"ஆம்! ஏன் வரக்கூடாது?"

"இவ்வளவு நாள் கழித்து அரண்மனையை விட்டு ஏன் இங்கே வந்தீர்?"

முஞ்ஜாலின் புருவங்கள் சுளித்தன. "மீனல்தேவி, இனி எனக்கும் ராஜ்யத்தின் தகவல்களுக்கும் சம்பந்தமில்லை. எல்லாம் முடிந்து விட்டன. நான் இப்பொழுது ஆபூ போகப் போகிறேன்: உலகத்தின் சுழல்களில் நிரம்பிய காலம் தங்கிச் சுழன்றாய் விட்டது." முஞ்ஜால் இயன்றவரை கண்ணியம் நீங்காமல் சொன்னான்.

ராணி அவன் வார்த்தைகளின் கடுமையைக் கவனிக்கவில்லை. "முஞ்ஜால், இதை எல்லாம் யாருக்குச் சொல்கிறாய்? நான் என்ன உன்னை அறியேனா? உலகத்தின் சுழல்களிலிருந்து தப்ப விருப்பமா? இன்னும் ஐந்து உலகத்தை வெற்றி கொள்ள உன்னிடம் பலம் இல்லையா? பாரததேச அரசியல் முழுவதையும் சுழற்ற உன்னிடம் சக்தி இல்லையா? இதெல்லாம் எனக்குத் தெரியாதா?"

"ராணி! என்னிடம் ஏற்பட்ட சில மாறுதல்களை அறிய மாட்டீர்கள். நீங்களே என்னைச் சிறை பிடித்த போது ஏற்பட்ட கோபம் எல்லை மீறியது. நீங்கள் என்னைக் கூப்பிட்டனுப்பிய போது நான் நம்பிக்கை இழந்திருந்தேன். ஆனால் பட்டணின் தைரியத்தைக் கேட்டு என் குன்றிய நம்பிக்கை தளிர்த்துத் தழைத்தது. ஆனால் ஊக்கம் ஏற்படவில்லை. தேசத்திற்காக, வாழ்நாள்

முழுவதும் போற்றி வந்த கொள்கைகளுக்காக, கண்டு கொண்டிருந்த கனவுகளுக்காக நான் ஒற்றுமை ஏற்படுத்தி வைத்தேன். ஆனாலும் உள்ளம் என்னவோ தாமரை இலைத் தண்ணீர் போல் தான் இருந்தது. இந்தச் சமயம் என் வயது நாற்பது தான். ஆனாலும் ஓர் பழுத்த கிழவன் போல் ஓட இருந்த உங்கள், 'தண்ட நாயக்'கைத் தடுத்து நிறுத்தினேன். இருந்தும் வாழ்க்கையில் சுவை ஏற்படவில்லை.''

''இது உன் கதை சொல்லி விட்டாய்; என் கதையைக் கேள்; விக்ராட்டில் துக்கம் வந்த போது நான் பாபம் செய்தவள்; அதிகார ஆசையில் நான் மேலே மேலே ஆழத்தில் வீழ்ந்து சென்று கொண்டிருந்தேன். ஒரு இரவு ஒரு கனவு ஏற்பட்டது. நான் தப்பி விட்டேன். என் எழுச்சி மீண்டும் ஏற்பட்டது.

''பட்டணை விட்டுவிடும் எண்ணத்தை விட்டொழி.''

''அது எப்படிமுடியும்? மீனல்தேவி, நான் முன்னிருந்தபடி இல்லை. நான் உங்களுக்காக அவமானத்தை மறக்க முயலுகிறேன். ஆனால் அது பெரிய ஆழமான புண்ணைச் செய்துவிட்டது. என் சகோதரி, என் ஹம்ஸாவின் சாவும் என்னைக் கொஞ்சப்பாடு படுத்தவில்லை. என்னிடம் பழைய வலிவு இல்லை. இங்கிருந்துதான் நான் என்ன செய்யப் போகிறேன்?''

''என்ன செய்வாயா? மீனல் தேவி அரசில் நீ என்ன செய்வாயா? உண்மை அரசு உன்னிடம்தான் இருக்கும்.''

''இல்லை, இனி அவ்விதம் இருக்க முடியாது. உலகம் பார்க்கக் கைதியானேன். நான் இதை எப்படி ஒப்புக்கொள்ளமுடியும்? நான் குற்றம் கூறவில்லை. உங்களைக் குத்திக் காட்டவுமில்லை. ஆனால் அந்தச் சம்பவம் மறக்கமுடியாது.''

''நான் அதை மறக்கவைக்கவே வந்தேன். அதற்குப் பிராயச்சித்தம் செய்யவே வந்தேன்.''

கொஞ்சம் சிரித்து, ''எப்படிச் செய்வீர்கள்?'' என்று கேட்டான் மந்திரி.

''எப்படிச் செய்வேனா? சொல், காலில் விழுகிறேன். முஞ்ஜால்! என்ன காரணத்தாலோ அன்றுமுதல் என் மனம் மணத்தை மறக்க மறுக்கிறது. அன்று இரவு நாம் செய்த நிச்சயம் ஞாபகம் இருக்கிறதா?

''ஆம். அந்த நிச்சயத்தை இன்று ராணி முறிக்க முயலுகிறார். நாம் சகோதரபாவத்துடன் குற்றமற்ற நடவடிக்கை நடத்துவதாக முடிவு செய்தோம். எந்த விதமான ''வீழ்ச்சியும்'' செய்து குஜராத்தின் கௌரவத்தைப் பாழ்படுத்தமாட்டோம், ராஜ்ய காரியம் தவிர மற்றச் சமயங்களில் சேரமாட்டோம், இந்த விஷயத்தின் கரடுமுரடான பேச்சுவார்த்தைகளைத் தவிர வேறு பேச்சுப் பேசமாட்டோம் என்றெல்லாம் முடிவு செய்துகொண்டோம். பதினைந்து வருஷங்களுக்குப் பின் இன்று ராணி அவர்கள் இந்தப் பிரதிக்னையை முறித்துவிட்டார்கள். ராஜ காரியம் தவிர மற்றக் காரியத்துக்காக என்னைச்சந்திக்க வந்துள்ளார்கள். நீங்கள் தேவி. பாவிகளைப் பாவனம்செய்யத்தக்கவர்கள்.. உங்களுக்கு இது அழகு தருகிறதா?''

''முஞ்ஜால், நீ மட்டும் எங்கே உன் வாக்கைக் காப்பாற்றுகிறாய்? என்னை விட்டு ஓட முயற்சி செய்கிறாயே. அதுதான் சிநேகமா? நீ உன் வாக்கை மீறினாய். நானும் மீறினேன். நான் ராணி ஆக விரும்பவில்லை. பட்டணில் நான் இருக்கவேண்டும் என்றால் நீயும் இங்கே இருக்கவேண்டும். இல்லையோ, நீ போகும் இடம் என்னையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்''

முஞ்ஜால் கலங்கும் குரலில் வருந்தினான். ''மீனல் தேவி! வீணில் என்னைச் சிக்கலில் மாட்ட வைத்திருக்கிறீர்கள்.''

''வீணில் அல்ல, உரிமைகொண்டுதான்! மீனல் தேவி சற்று முறுவலித்து மேலே சொன்னாள்: ''நீதான் என்னைப் பட்டணுக்கு இட்டுவந்தாய். ஒரு முறை அல்ல. இதோ இரண்டாம் முறையும். நான் எப்படி உன்னைப் பட்டணை விட்டு வெளியேறவிடமுடியும்?'' என்றுசொல்லி எழுந்த மீனல் முஞ்ஜால் பக்கம் சென்றாள்.

முஞ்ஜால் பின்வாங்கினான்,

''முஞ்ஜால், இந்த உயிரற்ற மூடப் பேச்சுக்கள் எல்லாம் எதற்கு? நான் சண்டை போடுவதென்றாலும் உன்னிடம் தானே. போடமுடியும்! பிறகு உன்னையும் விட்டு என்றால் கணநேரம் இருக்க முடியுமா? நீ என்ன சொன்னாலும் நான் ஒப்புக்கொள்ளமுடியாது. நீதான் என்னை மறந்து இருக்க முடியுமா?'' என்று சொல்லி ராணி முஞ்ஜால் கையைப் பிடித்துக்கொண்டாள். எண்ணப் புயல், சிக்கல்; முஞ்ஜால் தன் நெற்றியில் கைவைத்தான்.

''முஞ்ஜால்! யோசிக்காதே. ஒப்புக்கொள்ளாமல் வழியில்லை. நான் சந்திரபுரியில் இருக்கிறேன், சிறுமி என்று எண்ணிக்கொள். அப்படியே உன்னுடன் பேசத் துடிக்கிறேன், உன்னை வணங்குகிறேன். ஒப்புக்கொள். நாம் தனித்து, பிரிந்து எப்

படி இருக்க முடியும்? உன்னைவிட்டு இங்கே என் எண்ணங்களுக்குத் துணைவன் யார்? பட்டணை உலகத்தின் தலைநகராக்க அவ்வளவு வல்லமைகொண்டவன் இங்கே யாரிருக்கிறான்? முஞ்ஜால், நீ முன்போலவே, உன் பரந்த, ஒளிகொண்ட, களங்கமற்ற புத்தி நிலவில் என்னை ஸ்நானம் செய்து கொண்டிருக்க அனுமதி கொடு. போதும். இவ்வளவு தான் வேண்டும்.''

“ராணி!''

“இல்லை மீன......!''

“சரி. மீனல் தேவி. யோசிக்கிறேன். முடிந்தால் இருந்துவிடுகிறேன்.''

“முடியாது. வாக்குக்கொடு. இதே சமயம் என்னுடன் வா. அரண்மனை சூனியமாயிருக்கிறது. நீ வராத வரை நான் அசைய மாட்டேன்.''

முஞ்ஜால் ராணியைப் பார்த்தான். காதல் சூட்டில் உருகும் அவள் முகத்தில் அற்புதமான சாயல் படிந்திருந்தது. அவளுடைய முஞ்ஜாலைப் பிடித்திருந்த கை நடுங்கிக்கொண்டிருந்தது.

“மீனல் தேவி, சரி. எனக்குச் சம்மதம்''

ராணி:—“வாக்குக் கொடுக்கிறாயா?''என்று கேட்டாள், ஆவல் மீறிட.

“ஆம்''

“ஓ! என் முஞ்ஜால்!'' ராணி ஆர்வத்துடன் முஞ்ஜால் கழுத்தில் சுற்றிக்கொண்டாள். முழுகும் மனிதன் நம்பிக்கை இழந்து பிரவாஹத்துடன் போக முடிவு செய்வது போல முஞ்ஜாலும் ராணியின் உணர்ச்சி வெள்ள ஓட்டத்தில் தான், தன் முயற்சியை விட்டு நின்றான். பிறகு அவளைத் தூரத்தில் நிறுத்தி, “ராணி! இது நடக்காது. நான் இங்கே இருப்பதென்றால் அன்று செய்த பிரதிக்கினைகளைக் காப்பாற்றவேண்டும். எந்தக் களங்கமற்ற வாழ்க்கையால் நாம் ஜனங்களின் வாயை அடைக்கச் செய்தோமோ, சந்தேகம்கொண்ட உள்ளத்தில் நமக்கெனப் பக்தியை ஏற்படுத்தினோமோ, அதே களங்கமற்ற, பரிசுத்தமான, நேர்மை வாய்ந்த வாழ்க்கையை ஏற்றுக்கொள்ளவேண்டும்.''

“சரி, நான் ஒப்புக் கொண்டேன். பெரியவர்கள் என்ற பெயரைக் காப்பதற்கு ஏற்றுக் கொள்ள வேண்டிய தண்டனையை எல்லாம் ஏற்கத் தயார். எப்படியாவது கண்ணெதிரே இரு.''

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

மகராஜ் ஜயதேவனின் பெருமை.

முஞ்ஜாலின் மேற்பார்வையில் ஊதாவின் முயற்சி, பட்டண் உற்சாகம் இரண்டு காரணத்தாலும் கர்ண தேவர் இறந்து சரியாக ஒன்றேகால் மாதத்தில் ஜயதேவ குமாரன் பலம் பொருந்திய கூர்ஜரேசுவரர்களுடைய சிம்மாஸனத்தில் அமர்ந்தான். பட்டண் மகிழ்ச்சி அடைந்தது. குஜராத் முற்றிலும் பறை ஒலித்தது. தொலைவிலுள்ள விரோதி காடுகளின் அரசர்களின் உள்ளத்தில் இந்தப் புது ஒற்றுமை அலை ஈட்டியாய்ப் பாய்ந்தது.

* * *

மண்டலேசுவரர்கள் தலைவன் திரிபுவன் ஒரு மிகப் பெரிய காரியத்தில் ஈடுபட்

டிருந்தான். என்ன தெரியுமா? அது பிரஸன்ன முகியைச் சமாதானப் படுத்துவது தான். கொஞ்ச நாட்கள் சென்ற பிறகு, ஓர் பெரிய உற்சவத்துக்குப் பிறகு, பட்டண் மக்கள் மற்றொரு உற்சவத்தில் உயிர் உடல் ஆவியுடன் ஈடுபட்டனர். அவர்கள் 'தண்ட நாயக்' பிரஸன்ன முகியை மணந்து கொண்ட வைபவத்தின் ஒளி பட்டாபிஷேகத்தைக் கூட மங்க வைத்து விட்டது.

வல்லிதயம் வாய்ந்த முஞ்ஜால் கண்கள் கூட 'டப், டப்' என்று நீருகுத்தன. ராணிக்குச் சிரிப்பதா அழுவதா என்றே புரியவில்லை. இந்த மணவைபவத்தையும் அதற்கு ஜனங்கள் காட்டும் வெறியையும் கண்ட ஜயதேவன்கூடத் தனக்கும் கலியாணம் வேண்டும் என்று 'அடம்' பிடிக்க ஆரம்பித்தான்!

ராணி முஞ்ஜாலிடம் சொன்னாள்: "இனி ஒரு குறையும் இல்லை."

"ஏன்? என் தங்கையும் அவள் கணவனும் இல்லையே!" என்றான் முஞ்ஜால்.

* * *

இரவு ஆயிற்று. தேவப்ரஸாதின் பேரில்லம் சந்தோஷப் பேரிரைச்சல் செய்து அடங்கி விட்டது. அதில் ஒரு மங்கை பெருமிதமும் செம்மாப்பும் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

"இனி நீங்கள் பட்டண் விட்டுப் போகலாம். உத்தரவு கொடுத்து விட்டேன்."

"இனி எங்கே போவது? அப்பொழுது ஏன் போக விடவில்லை?"

தன் தளிர்க் கரங்களை விரல்கள் மூடி உயர்த்தி, பிரஸன்னா சொன்னாள்: "எல்லாம் தலையை உடைத்துக் கொள்ளத்தான்! இப்பொழுது பார்க்கிறேன் யார் தலை உடைபடுகிறது என்று!"

"ஆகா, உன் கைகளின் பலம் தெரியுமே! கொண்டு வா, இப்பொழுதே கசக்கி விடுகிறேன்."

"ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். இந்தக் கைதான் உங்கள் உயிரைக் காப்பாற்றிற்று."

"இந்தக் கைகளா? எப்பொழுது?"

"குமாரன் ஜயதேவன் வாளுருவி நின்றானே, அப்பொழுது அவன் கையைக் காயப் படுத்தியவள் யார்? மறந்து விட்டதோ?"

"நீயா? நீ...! என்று சொல்லிக் கொண்டே திரிபுவன் அருகே நெருங்கி வந்தான்."

"ஜாக்கிரதை!"

"ஏன்?"

கண்களைச் சுழற்றி வலை வீசிக் கொண்டே பிரஸன்னா, "பாவம் அந்த மூரார்பாலனுக்குத் தூக்கம் கூட வராது!" என்று சிரித்தாள்.

"பிரஸன்னா, சும்மா இரு. சிரிப்பை நிறுத்து. உன்னைப் பார்த்து எனக்கு ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது."

"அது என்ன?"

"ஏன் என் தந்தை என் தாய்க்காக உயிரையும் விட்டார் என்று......!"

* * *

சேவல் கொடியோன் சித்தராஜ் ஜயசிம்மனின் சாம்ராஜ்யம் ஆரம்பமாயிற்று. சுய நலத்தில் உழன்று கொண்டிருந்தவர்கள் உள்ளத்தில் ஓரே கொள்கை உதித்து விட்டது. அவர்கள் உள்ளத்தில் ஓரே மந்திரம் எதிரொலித்தது. அந்த மந்திரம்?

"ஜய் ஸோம்நாத்!"

முற்றிற்று



பெண்களுக்குப் பிரத்தியேகமானது

ஷிபாலி சௌத்ரி—சாரி

தபால் பெட்டி

இம் மாதம அனுபவத்தில் இருந்து சில குறிப்புக்களை எழுதுவதென்று தீர்மானித்தேன். ஒரு சுலபமான சமையலும், தையல் பகுதியும் கூடச் சேர்த்திருக்கிறேன். உங்கள் அனைவர்க்கும் ஏதாவது ஒன்று நிச்சயமாய்ப் பிரயோசனப்படும் என்கிற நம்பிக்கையில் எழுத முன் வந்தேன். அது சரிதான் அல்லவா?

தையல் பகுதியில் இன்னும் விளக்கமாகத் தைக்கும் விவரங்களைத் தர வேண்டுமென்பது சிலர் அபிப்ராயம். சாதாரண தையல் வேலையில் பழகிய சகோதரிக்கு நான் தரும் குறிப்புக்களே அதிகம்; படங்களைக் கவனித்தே தைத்து விடலாம். இதற்காக, அணு அணுவாகத் தைக்கும் வழியைக் காண்பிப்பது சாத்யமாகாது. சந்தேகம் இருந்தால் அனுபவம் பெற்ற நண்பரிடம் கேட்டு எளிதில் புரிந்துகொள்ளலாம்.

சமையல் அறைக் குறிப்புக்கள் :-

(1) வெங்காய வாசனையைக் கத்தியில் இருந்து எடுக்க, தோட்டத்து மண்ணில் சிறிது நேரம் கத்தியைச் செருகி வைக்க வேண்டும்.

(2) டொமாடோவைத் தோல் உரித்து எடுக்க வேண்டுமானால், கொதிக்கும் ஜலத்தில் அரை நிமிஷம் போட்டு, உடனே எடுத்து, குளிர்ந்த நீரில் நனைக்கவும். கத்தியால் தோல் நீக்கினால் சுலபமாக எடுபடும்.

(3) எலுமிச்சம் பழத்தை அதிகநாள் வைத்திருக்க வேணுமென்றால் குளிர்ந்த ஜலம் கொண்ட கிண்ணத்தில் போட்டு வைக்கவும்.

(4) பால் கெட்டுப்போகாமல் கொஞ்சநேரம் வைத்திருக்க வேண்டுமானால் ஒரு டீஸ்பூன், பொடி உப்பை அரைப்படி பாலுக்கு என்கிற அளவில் சேர்த்து வைக்கவும். (இது என்ன யோசனை! உப்பு சேர்ந்தால் பால் திரியாதோ என்று கேட்கிறீர்களோ? இது ஒரு நண்பரின் யுக்தி. நான் இன்னும் செய்து பார்க்கவில்லை).

பொதுக் குறிப்புக்கள் :

(1) துணியில் கோகோ சிந்திவிட்டால் வெந்நீரில் ஒரு போதும் நனைக்கக் கூடாது. துணியை உடனே குளிர்ந்த நீரில் போட வேண்டும்.

(2) துணியில் மசி சிந்தினால் என்ன செய்வது? ஆடை நீக்கிய பாலில் கரையை 10 நிமிஷம் நனைத்து வைத்துப் பிறகு சோப்பு போட்டுச் சுத்தம் செய்யலாம்.

(3) அறையை அலங்கரிக்க வைக்கும் பூக்கள் நெடு நேரம் வாடாமல் புதிதாகத் தோற்றம் அளிக்க இவ்வாறு செய்யலாம். தண்ணீருக்குள் அமுங்கும் காம்புகளில் உள்ள இலைகளை முற்றிலும் நீக்கிவிடவும். இதனால் பூவைக்கும் கோப்பைக்குள்ளும் சுத்தமாக இருக்கும். பூக்களும் புதிதாகக் காட்சி தரும்.

(4) நன்றாய்ப் பாலிஷ் ஏறின மேஜைத் தளத்

தின்மீது சூடான தட்டுக்கள், ஈரமான கோப்பைகளை வைப்பதன்மூலம் ஏற்படும் கறைகள் பார்க்க விகாரமாயிருக்கும். இந்த எளிய முறையினால் வெள்ளைக் கறைகளை முற்றிலும் நீக்கிவிடலாம். சிறிது ஆலிவ் ஆயிலைத் தடவி, அதன்மீது மேஜை உப்பு (Table Salt) தெளித்து, விரல் நுனியால் அழுத்தித் தேய்க்கவும், பஞ்சு வேண்டுமானால் தேய்க்க உபயோகிக்கலாம். கறை நாட்பட்டதானால் எண்ணெய் பூசி, சில மணி நேரம் சென்றபிறகு தேய்க்க ஆரம்பிக்கவும்; பளிச்சென்று விட்டுப்போகும்.

(5) பூஜை அலமாரியில் தினமும் ஏற்றிவைக்கும் தீபம் காற்றில் அணையாமல் இருக்கவும், திரி மேல் நோக்கி நேராக எரியவும் நான் கையாளும் முறை இது: ஒரு சிறிய ஹரிகேன் லாந்தர் சிம்னியை வாங்கி, தீபம் ஏற்றிய பிறகு, மேலே வைப்பது வழக்கம். பார்வைக்கு அழகாகவும் இருக்கிறதென்று சொல்லவேண்டியதில்லை. என் விளக்கு சிறிய வெள்ளி விளக்கு; 8 இஞ்சு உயரம் இருக்கும்.



அழகுக் குறிப்புக்கள்!

(1) கண்ணைச் சுற்றிச் சிலருக்குக் கறுத்தவரிகள் தோன்றுவது சகஜம். முகத்தின் அழகையே கெடுக்கும் இதைத் தவிர்க்க என்ன செய்வது? மிகவும் எளிதான உபாயம் என்று சொல்கிறேன். சுத்தமான வெண்ணெயைக் கண்களைச் சுற்றித் தடவி, லேசாக விரலினால் தேய்த்துவிடவும். ஒரு மாதத்தில் நிச்சயமாய், குணம் தெரியும்.

தையல்

பழையனவற்றில் இருந்து புதியன! இரண்டு பழம் புடவைகளில் இருந்து இந்தப் புதிய புடவையை உண்டாக்கலாம்.

பழைய ஜார்ஜெட் புடவைகளைத் தூக்கிப்போட்டுவிடுவது சரியல்ல. வெவ்வேறு வர்ணமான இரண்டு புடவைகளை எடுத்துக்கொண்டு, (வெளுத்த நீலமும்

லேசான மஞ்சளும், அல்லது ஆரஞ்சும், பச்சையும்) அவைகளில் உள்ள கிழிந்த பாகங்களைக் கத்தரித்து எடுக்கவும். சிறிய துண்டங்களைத் தலைப்பிற்கும், பாட்லி என்கிற நடுவிற்கும் உபயோகித்து, ஒரு புடவை தயாரிக்கவும். தைத்த இடத்தில் தையலை மறைக்கவும், புடவையின் அழகை எடுத்துக்காட்டவும் ஒரு வரி லேசி, டெய்சி தையல் தைக்கவும்.



பிறகு பாட்லி-பல்லு இரண்டிலும் படத்தில் உள்ளமாதிரி சிறிய லேசி, டெல்சி பூக்கள் தைத்து, புடவையின் கரைக்கு அதே நிறத்தில் பியாஸ் பைண்டிங் (Bias Binding) வைத்துத் தைத்து விடவும். புடவை ஜோராகிவிடும்!

வெள்ளைப் புடவைக்கு எந்த லேசான வர்ணத்தில் பாட்லி-பல்லூ தைத்தாலும் நன்றாக இருக்கும். மற்ற நிறப் புடவைக்குப் பொருத்தமான நிறங்களைத் தேர்ந்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

(2) குளிர் காற்றினால் முகம் சுரசுரப்பாக மாறுவதுண்டு. அதற்கு இடம் கொடாமல் தவிர்க்க, இந்தச் சிகிச்சை கட்டாயம் பலன் அளிக்கும். செய்து பாருங்கள்.

{ ஒரு டேபிள் ஸ்பூன் பால் ஏடு
" " கடலை மாவு
" " தேங்காய் எண்ணெய் }

இவற்றைக் குழைத்து முகத்திலும் கைகளிலும் பூசிக்கொண்டு, 5 நிமிஷம் விட்டுவைக்கவும். பிறகு விரலினால் தேய்த்தால் திரிதிரியாக அழுக்கு வெளிப்படும். சர்மம் மிருதுவாகும்.

(3) தலைமயிரை வாரி அலங்கரிப்பதில் பலவிதம் உண்டு. நெற்றி அதிக அகலமில்லாத பெண் இம்மாதிரி தலையை வாரிக்கொண்டால், பொருத்தமாக இருக்குமென்று நான் நினைக்கிறேன்!

நேரான வகிடு எடுத்துக்கொண்டு, தலைமயிரைப் பின்புறம் பிரஷ் செய்து கொள்ளவும். காதுப் பக்கமாக மாத்திரம் படத்தில் உள்ள மாதிரி ஒரு நெளி

(Wave) வரும்படி செய்யவும். இதை எளிதாக இரண்டு பாப்பின் (bobpin) மூலம் செய்துகொள்ளலாம். பின்னுல் மயிரைச் சுருட்டி ஒரு ஸ்லேட் போட்டு, கழுத்தில் பொருந்தும்படி செய்தால் போதும். மேலே புஷ்பங்கள் கோத்து அணிந்தால் கொண்டையின் அழகு அதிகரிக்கும்.

சமையல்

குடமிளகாய் மலிவாக விற்கும் காலம் இது. நிறைய வாங்கி வற்றல்போட்டும், ஊறுகாய், குழம்பு செய்தும் இந்த விடமின் சத்துள்ள வஸ்துவை நாம் வேண்டிய அளவு சேர்த்துக்கொள்கிருேம். அவைகளோடு இந்தக் குழம்பையும் செய்து ஒருநாள் சாப்பிட்டுப் பாருங்கள்.

வெங்காயத்தைத் தோல் நீக்கி இரண்டாக நறுக்கிக்கொண்டு, 15 குடமிளகாய்களைக் கீறி வைத்துக்கொள்ளவும். கற்சட்டியில் கடுகும் உளுத்தம்பருப்பும் தாளித்து, முதலில் வெங்காயம், பிறகு மிளகாய் போட்டு வதக்கிக்கொண்டு, வேண்டிய அளவு புளி கரைத்துவிட்டு, உப்புச் சேர்த்துக் கொதிக்கவிடவும். பிறகு, இரண்டு டேபிள்ஸ்பூன் கொத்தமல்லி விதையை வறுத்துப் பொடிசெய்து, குழம்பில் சேர்த்து, கொஞ்சம் கொதித்தவுடன் இறக்கிவிட வேண்டும். துளி வெல்லம் போட்டால் நன்ருக இருக்கும். குழம்பு தயாரிக்க விவரமான அளவு கொடுக்கவில்லை. அவரவர் தேவைக்குத் தகுந்த அளவில் புளியும் மிளகாயும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

Retail Branches 285, China Bazaar 71, Pondy Bazaar T. Nagar,
Agencies: Luz, Mylapore. No. 2, Neeli Veerasami Chetty Street, Triplicane,
MADRAS.

இரு பெரியார்

எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

கம்பனும் காளிதாசனும் கற்றுத் தேர்ந்த கவிஞர் அல்லர்; மற்று, வர கவிகள்; நாமகளின் நல்லருளினால் பார காவியம் பாடியவர்கள். ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸர் என்பாரோ எழுத்து வாசனையே இல்லாதவர்; ஆனாலும், அரிய பெரிய ஞான போதமும், அற்புத உபதேசமும் அள்ளி யள்ளிச் சொரிந்திருக்கிறார்!



விட்டகுறை, தொட்ட குறை என்பர் பாட்டிமார். தவமும் தவமுடையார்க்கு ஆகும், என்றார் திருவள்ளுவர். இல்லையானால் இளமையிலே ஆலய குருக்களின் மைந்தர், ஐந்தும் இரண்டும் அறியாதவர், அருமையான வேதாந்த போதம், உபநிஷத சாரம் பொழிதல் எப்படி? உலகெங்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் மகிமை பெறுவதும், அவர் போதம் பெருகுவதும், எவ்வாறு? எல்லாம் பூர்வ ஜன்ம புண்ணிய பலன்!

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் காலத்திலே, ஈசுவர சந்திரா வித்தியாசாகர் என்பாரின் பரோபகாரப் புகழ் மணம், மேதைக் கீர்த்தியின் நறுமணம், வங்காளமெங்கும் வீசா நின்றது. அது பரமஹம்ஸரின் திருச் செவிக்கும் எட்டியது. எட்டவே அம் மேதாவியை, ஏழை பங்காளனை, நேரில் சென்று பார்க்கவேண்டும், என்னும் ஆசை அப்பெரியாருக்கு மேலிட்டது.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பரம சிஷ்யருள் ஒருவர் மகேந்திரநாத குப்தா எனப்படுவார். அக் குப்தாவே பரமஹம்ஸரின் போதங்களை அவ்வப்போது குறித்து வைத்து, உலகினுக்கு அளித்தவர்; மேலும், வித்தியாசாகரின் கீழ், ஆசிரியராகவும் விளங்கியவர். ஆதலின், அவரது துணை கொண்டு புறப்பட்டார் பரமஹம்ஸர். இருவரும் ஒரு வாடகை வண்டியில் ஏறி யமர்ந்து, வித்தியாசாகரின் மாளிகை சேர்ந்தனர்.

அப்போது, ஈசுவர சந்திரர் தமது வீட்டிலே இரண்டாவது மாடியில் இருந்தார். பகவான் ராமகிருஷ்ணரோ படிக்கட்டுகளில் ஏறிச் சென்று, மேல்மாடி சேர்ந்தார். அம்மகானும் மேதையும் முன்பின் ஒருவரையொருவர் பார்த்தது கிடையாது. ஆனாலும், நேருக்கு நேரே மேதாவியைக் கண்டதும், நீண்டநாள் பழகியவரைப் பார்ப்பது போல், பரமானந்தத்துடன் பார்த்தார் பரம ஹம்ஸர்; புன்னகையும் புரிந்தார்; பின்பே ஆசனத்தில் அமர்ந்தார்.

வித்தியாசாகரைக் காண வேண்டுமென்று நீண்டநாளாக அம் மகானுக்குத் தாகம் இருந்தது. அவரைக் கண்டதும், தாகவிடாய் தணிந்ததுபோல், கொஞ்சம் குடிநீர் வேண்டுமென்ருர் ராமகிருஷ்ணர். தண்ணீர் மட்டுமா? நாவுக்கினிய தின் பண்டமும் ஆர்வமுடன் கொணர்ந்து கொடுத்தார் ஈசுவர சந்திரர்.

உடனே, தண்ணீர் பருகித், தித்திக்கும் பணியாரமும் புசித்தார் பரம ஹம்ஸர்; பின்பேர,

"இன்றளவும் கண்ணி வாய்க்காலும் ஓடையுமே கண்டேன். இப்போதோ, சாகரத்தையே அடைந்தேன். அச் சாகரத்தை நேருக்கு நேராகவும் நோக்குகிறேன்" என்ருர்.

என்றதும், எல்லோரும் அச் சொல் லழகு கண்டு சந்தோஷம் எய்தினர். வடமொழி, வங்காளி, ஆங்கிலம் முதலிய பல பாஷைகளில் மகா பண்டிதர் அந்த ஈசுவர சந்திரர். கலாசாலையிலே பேராசிரியராகவும் தலைமைப் பேராசிரியராகவும், இருந்தவர், அவரது ஆன்ற கல்வியறிவும், ஆழ்ந்த ஞானமும், பரந்த நோக்கும் அனைவரையும் கவர்ந்தன. ஆதலின் வித்தியாசாகர் என்று பட்டம் சூட்டப்பட்டது. அந்நாளிலே ராஜப்பிரதிநிதியும் அவரது மாளிகை வாசலில் காத்துக் கிடப்பதுண்டு.

இனி, அரசன் முதல் ஆண்டி வரையில் அனைவரும் கண்கண்ட தெய்வம் என்றே பகவான் ராமகிருஷ்ணரைப் போற்றி வரலாயினர். அத்தகைய மகான் இன்று சாகரத்தைக் கண்டேன், என்று மனமுவந்து மொழிந்த பொழுது, ஈசுவரசந்திரர் என்ன பதில் கொடுத்தார்?

"சாகரத்தையா பார்த்தீர்கள்! அப்படியானல், வேண்டுமளவு உப்பு ஜலம் எடுத்துச் செல்லலாம்" என்ருர் வித்தியாசாகர். அது கேட்டு, எல்லாரும் சிரித்தனர். அடக்கமுடைமை ஆன்ற அறிவுக்கு அடையாளம் என்பர் பெரியோர். மேலும் புகழுரைகளை விரும்பார் நன்கு கற்றறிந்தோர். வித்தியாசாகரின் அடக்கத்தைக் கண்டதும், யாது சொன்னுர் ஸ்ரீ ராமகிருஷ்ணர்?

"உவர்நீர் என்று ஏன் உரைக்கிறீர்கள்? அன்று! அன்று!! நீங்கள் அறியாமையின் சாகரமல்லீர். மற்று அறிவின் சமுத்திரம்! வித்தையின் வாரிதி! அறிவென்னும் பால் நிரம்பிக் கட்டிப் பாலாகக் கிடக்கும் சாகரமே நீங்கள்!" என்று பரமஹம்ஸர் பேசினுர். "சரி, தாங்கள் அவ்விதம் உரைக்கிறீர்கள். அது தங்கள் இஷ்டம்" என்ருர் ஈசுவரசந்திரர். அப்பால் வித்தியாசாகர் ஒன்றும் பேசவில்லை; மௌனமாகவே இருந்தார். ஞான வாரிதியின் முன்னே என்ன பேசுவது? என்று நினைத்தார் போலும்! அதன்மேல் பகவான் புகன்றது இது:-

"உங்களது காரியங்களெல்லாம் சத்துவ குணத்தினுல் உதித்தவை. கருணைக்குச் சத்துவ குணமே ஊற்றிடமாகும். பிறருக்கு நலஞ் செய்தல் ராஜஸ குணமெனக் கருதப்படலாம். ஆயினும், சத்துவ குணத்தையே அடிப்படையாகக் கொண்டதாகும். மானிடருக்கு மத போதம் புகட்டவும், ஈசுவரனைப்பற்றி உரைக்கவும், சுகப் பிரம்மம் போன்ற ருஷிகள் கருணைவடிவாக விளங்கினுர்கள். நீங்களோ உணவும் அறிவும் ஊட்டி வருகிறீர்கள். இது நல்லதேயாம். சுயநலமின்றி, உணவும் அறிவும் ஊட்டிவரின் ஆண்டவனை அடையமுடியும். ஆனல் பலரோ பெயர் வாங்கவும் புகழ் பெறவுமே காரியஞ் செய்கின்றனர். அன்னவரின் காரியங்கள் சுயநலப் பற்றுள்ளவை. நீங்களோ ஏற்கெனவே சித்தராகிவிட்டீர்கள்!"

அவ்விதம் பகவான் ராமகிருஷ்ணர் கூறிவர, அது எப்படி, என்று கேட்டார் வித்தியாசாகர்.

ராமகிருஷ்ணர்:-(சிரித்துக்கொண்டே) உருளைக்கிழங்கும் ஏனைய பதார்த்தங்களும் நன்ருகப் பக்குவம் ஆனதும், மிருதுவாக இருக்கும்; மென்மையும் அடையும். உங்களிடம் அத்தகைய மென்மைத் தன்மை திகழ்கிறது. உங்களிடம் கருணை என்பதும் நிரம்பியுள்ளது.

வித்தியாசாகர்;- ஆனல் கலாயப் பருப்பின் மாவை வேக வைத்தால், அது கட்டி தட்டுகிறதே.

அதற்கு நமது பரமஹம்ஸர் பதில் சொன்னது இது:-

"நீங்கள் அந்த இனத்தைச் சேர வில்லை. வெறும் பண்டிதர்கள் கடுங்காய் போன்றவர்கள். கடுங்காய்கள் கெட்டியாகவே இருக்கும்; மேலும் அவை பழுக்கவே பழுக்கா. அத்தகைய காயில் பசுமையும் இராது. பழவாசனையும் வீசாது.

"கழுகுகள் ஆகாயத்திலே வெகு உயரப் பறக்கும். ஆயினும், அவற்றின் கண்களோ கீழே தரையில் எங்கே இறைச்சி இருக்கும் என்றே கூர்ந்து நோக்கும்.

"வெறும் ஏட்டுப் படிப்புப் படித்தோர், கற்றோர் என்றும், அறிவாளிகள் என்றும், பெயர் பெற்றிருப்பர். ஆனல், அவர்கள் பெண்ணையும் பொன்னையும் நாடிக் கிடப்பர். கழுகுகளைப்போல் அவர்களும் மாமிசத்தையே நச்சி நிற்பவர்களாம். அன்றியும் அவர்கள் அறியாமை அஞ்ஞானம் என்னும் உலகில் சஞ்சரிப்பவர்களே.

"கருணை, கடவுள் பக்தி, துறவு இவை மெய்யறிவின் பயன்களாம்!"

இவ்விதம் ராமகிருஷ்ணர் கூறிவருகையில் வித்தியாசாகர் வெகு உன்னிப்பாகக் கேட்டுவந்தார்; வாய் திறக்கவில்லை. தத்துவ சாஸ்திரத்தில் வித்தியாசாகர் அதி வல்லவர். ஆனலும். பிறருக்குச் சமயபோதம் புகட்ட அவர் துணிந்தது கிடையாது.

ஊருக்கு உழைப்பதே உத்தமம், என்றுதான் அவர் யாருக்கும் சொல்லி வருதல் வழக்கம்.

மகா ஞானியான பகவான் ராமகிருஷ்ணர் பரிவுகொண்டு வித்தியாசாகரைப் பார்க்கப் போனதேன்? பார்த்ததும், அவரது சேவையைப் போற்றியதேன்? மகா மேதையான வித்தியாசாகரும் அம்மெய்ஞ்ஞானியின் உரை கேட்டு உவந்து நின்றதேன்?

நல்லாரைக் காண்பதுவும் நன்றே,
நலமிக்க நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே?

என்று ஔவைப் பிராட்டியார் கூறியிருக்கிருர் அல்லவா? இனி, ஈசுவர சந்திரரது குண விசேஷங்களில் ஒன்றை இங்கே எடுத்துக் காட்டுவோம்.

ஈசுவர சந்திரர் ஒரு தினம் கங்கைக்குச் சென்ருர். நதியின் படிக்கட்டிலே கிழவரொருவரைக் கண்டார். கிழவரின் மனத்திலே தாங்கமுடியாத துக்கம் குடிகொண்டிருக்க, அது கண்ணீரின் மூலம் வெளிப்படாநின்றது. அது கண்டார் ஈசுவர சந்திரர். உடனே அவர் மனம் உருகிவிட்டது. கிட்டச் சென்ருர். அழுவதேன், என்று மெல்லக் கேட்டார்.

துயரத்தால் மூடுண்ட கிழவரோ முதலில் வாய் திறக்கவில்லை. கண்ணீர் பெருக்கிக்கொண்டே யிருந்தார். ஈசுவரரின் பரிவுரையும் கருணை நோக்கும் இனிய குரலும் அக் கிழவரின் உள்ளத்தைக் கவர்ந்தன. முடிவிலே, தம் பாட்டையுரைத்தார் அக்கிழவர் மெல்ல மெல்ல.

கிழவர் பரம ஏழை. பெரிய சம்சாரி. அவருக்கு ஆஸ்தி ஒரேயொரு வீடு. பெண்ணின் கலியாணத்துக்காக அதனை அடகு வைத்து இரண்டாயிரம் ரூபா கடன் வாங்கினுர். கடன் கொடுத்தவனே வழக்குத் தொகுத்துவிட்டான். மறு தினம் விசாரணை, தீர்ப்பாகிவிடும். அதனல் வீடும் போகும்; அவரும் சிறையில் கிடக்க நேரும்.

அவ் விவரத்தை உரைத்தார் கிழவர். உடனே வெட்கம் மேலிட்டு எழுந்து போய்விட்டார். தமது பெயரையோ, விலாசத்தையோ அவர் உரைக்கவில்லை. ஈசுவரசந்திரரும் உடனே அவ்விடத்தை விட்டகன்ருர். அகன்றது முதல் கண நேரமும் அவர் வாளா இருக்கவில்லை.

மறுதினம் தெய்வமே என்று, கண்ணீரும் கம்பலையுமாக அக்கிழவர் கோர்ட்டு அடைந்தார். மணி பத்து நெருங்க நெருங்க அவர் வயிறு பதைபதைத்தது. மனம் துடித்தது. துக்கமோ முகத்திலே தாண்டவம் ஆடியது.

தலையிலே துணியைப் போட்டுக் கொண்டு, வீட்டுக்குப் போகவும் வகை இல்லையே. தீர்ப்புக் கூறியதும், வீட்டைக் கட்டிக்கொள்வானே கடன்காரன். குழந்தை குட்டிகளெல்லாம் தெருவில் நிற்குமே. மரத்தடியில் கொண்டு வைத்துக் காப்பாற்றலாம் என்றல், நம்மையும்

பிடித்துச் சிறையில் போட்டுவிடுவானே. இரண்டாயிரம் ரூபாய்க்கு வீடு ஈடு போதாதன்றோ? தெய்வமே, அரிச்சந்திரனும் என்னைப்போல் கஷ்டப்பட்டிருக்க மாட்டானே.

இவ்வாறு எண்ணாததெல்லாம் எண்ணி ஏங்கினார் கிழவர். மணி பத்தடித்தது. நீதிபதிவந்து ஆசனத்தில் அமர்ந்தார். முதல் வழக்கு அக் கிழவரதுதான். நடு நடுங்கி நின்ற கிழவரின் பெயரைச் சொல்லிக் கூவினான் கோர்ட்டுச் சேவகன்.

அப்போதே அவருக்குப் பாதி உயிர் போய்விட்டது. எஞ்சிய அரை உயிருடன் நீதிபதியின் முன்னே அவர் நின்றார். கவலை மிகுதியினால் கீழே சாயும் சமயம், "நீர் வீட்டுக்குப் போகலாம், வழக்கினுக்குரிய பணம் வந்துசேர்ந்துவிட்டது," என்றார் நீதிபதி.

என்ன, என்ன, என்று கிழவர் கேட்டார். "பணம் கட்டியாகிவிட்டது. வழக்கைத் தள்ளிவிட்டோம், வீட்டுக்குப் போம்," என்றார் நீதிபதி. 'நான் பணம் கட்டவில்லையே,' என்றார் கிழவர். "வேறு யாராவது கட்டியிருப்பார்கள். உமது தொல்லை தீர்ந்தது, போம் போம்," என்று நீதிபதி கூறி, அடுத்த வழக்கை எடுத்துக்கொண்டார்.

போன பாதி உயிர் மீண்டுவந்தாலும், பணத்தைக் கட்டிய புண்ணியவான் யார், என்றறிய அவர் ஆவல் மிகுந்தார். பணம்கட்டிய பேர்வழியோ என் பெயரை வெளியே விடாதே என்று கோர்ட்டு குமாஸ்தாவிடம் கூறிப் போயிருக்கிறார், எனவே பணங்கட்டிய தர்மவானை அக் கிழவர் அறிவது எங்ஙனம்?

முடிவில் அக்கிழவர் ஊகித்துப் பார்த்தார். முன் தினம் நம்மைக் கண்டு பரிந்து பேசின புண்ணியாத்துமாவே கட்டியிருக்கவேண்டும் என்று கருதினார். அப்பெருமானை அறியக்கூடவில்லை. ஆதலின் அவரை வாழ்த்தி, ஆண்டவனை ஏத்தி, வீடு சேர்ந்தார் அக்கிழவர்.

இவ்வாறு வித்யாசாகர் செய்துள்ள பரோபகாரமோ பலவாம். திக்கற்ற கைம்பெண்கள், பெற்றோரில்லா அனாதைக் குழந்தைகள், படிக்க வகையில்லா ஏழை மாணவர்கள், வாடி வதங்கும் வறியவர்கள், ஆகிய இவர்களுக்கு வித்தியாசாகர் ஆற்றிய தொண்டு அனந்தம்! உதவி பெறுவோரும் அதனை உதவியவர் யார் என்று அறியாவண்ணம் உதவுதலே ஈசுவரசந்திர வித்தியாசாகரின் விழுமிய குணமாம்!

ஸத்ய தரிசனம்

ஜி. எஸ். மணி

ராமாயணத்தைக் கதாகால க்ஷேபமாகக் கேட்டால் பிரம்மஸ்ரீ ஸீதாராம பாகவதரிடம்தான் கேட்கவேண்டும்.

ஜனங்கள் அப்படித்தான் சொல்லிக்கொண்டார்கள்.

ஓரிடத்தில் அவர் மூலம் சப்தாஹமோ—நவாஹமோ-ஏற்பாடு செய்துவிட்டால் அவர் சொல்வதைக் கேட்க ஜனங்கள் திரளாகக் கூடிவிடுவார்கள்; ஒவ்வொரு நாளும் ஜனப்பெருக்கம் அதிகமாகுமே தவிர,குறையவே குறையாது. பக்தி, சிரத்தையுடன் அவ்வளவு உருக்கமாகப் பாகவதர் உபன்யாஸம் செய்வார். ஜனங்களும் ரஸித்து ஊக்கத்துடன் கேட்பார்கள். பொழுது போவதே தெரியாது. அவ்வளவு உற்சாகமாய் இருக்கும் அனைவருக்கும்.

ஸீதாராம பாகவதரிடம் ஜனங்களுக்கு அளவற்றபக்தி; விவரிக்கமுடியாத மதிப்பு. அவரிடம் கதை கேட்கும் ரஸிகர்கள் ஸத்ய தரிசனமே செய்வதாகப் பெருமையுடன் சொல்லிக்கொள்வார்கள். அப்ப

டிச் சொல்லும்போது பாகவதரையே ஸத்யத்தின் உருவமாகக் குறிப்பிடுகிறார்களா! அல்லது லட்சிய புருஷனாகிய ஸ்ரீராமனைத்தான் நேரில் தரிசனம் பண்ணுவதுபோல் தோன்றுவதாகக் குறிப்பிடுகிறார்களா என்பது அவர்களுக்கே தெரியாது. அவ்வளவு தூரத்திற்கு வித்யாஸமற்ற பாவனையில் உணர்ச்சியுடன் பேசிக்கொள்வார்கள்.

ராமாயணத்தின் கதாபாத்திரங்கள் ஒவ்வொருவரையும் நேரில் கொண்டுவந்து நிறுத்திப் பேசவைப்பதாக உற்சாகத்துடன் பேசிக்கொள்வார்கள். 'ஸத்யமே ராமன், ராமனே ஸத்யம்' என்று தர்க்கரீதியில் பாகவதர் எடுத்துக் கூறும்போது அந்தப் பாகவதரையே உண்மையின் பிரத்தியட்ச உருவத்திலே காணுவதாக உணர்ந்தார்கள்.



'ஸ்ரீராமன் பிரும்மஸ்ரீ பாகவதருக்குப் பிரத்தியட்சமாம்' என்றும் வியப்புடன் சொல்லிக்கொண்டார்கள்.

அத்தனை மனப்பூர்வமான பாராட்டுதல்களுக்கும் பூரணத் தகுதி பெற்றவர் தான் பிரம்மஸ்ரீ ஸீதாராம பாகவதரும். அநேக நூல்களைப் படித்தவர்; மஹாமேதை; கேட்பவர்களுக்கு எளிதில் புரியும்படி எடுத்துச் சொல்வதில் நிபுணர்; கடல் மடையைத் திறந்துவிட்டதுபோலே பொழியும் வாக்குவிலாஸம்; ஸரஸ்வதி கடாக்ஷத்தைப் பூரணமாகப் பெற்றவர்; வேதவித்து; தர்மம் தவறாமல் நடப்பவர்.

இவ்வளவிருந்தும் சொல்லிக்கொள்ளமுடியாத குறையொன்றும் அவருக்கு வாய்த்திருந்தது. ஜனங்களும்கூட அந்தக் குறையை நன்கு தெரிந்துகொண்டுதான் இருந்தார்கள்.

அவருக்குப் பிற்காலம் பெயர் சொல்லிக்கொண்டு அந்தப் பகவத் கைங்கர்யத்தில் ஈடுபடுவதற்கு அவருக்குச் சந்ததி இல்லை.

அந்தக் குறை தீராத குறையாகவே நின்றுவிடுமோ என்று சந்தேகப்பட்டுப் பாகவதரே

அடிக்கடி சஞ்சலத்தில் ஆழ்ந்து விடுவார். ஜனங்களும்கூட அதை நினைத்து மிகவும் சங்கடப் பட்டார்கள்.

ஆனால் பாகவதரே சொல்லி வந்ததுபோல்—'ராகவனின் ஆக்ஞை' எப்படியோ? யார் கண்டது? அவன் திருவுள்ளம் அறிந்தவர் யார்?

மூன்று தலைமுறைகளாகவே அந்த வம்சம் ஏகபுத்ர வம்சமாகவே வந்துகொண்டிருந்தது; அந்த மூன்று தலைமுறைகளிலும் அந்த வம்சம் பகவத் கைங்கர்யத்திலேயே ஈடுபட்டு, பகவானைப் பற்றிய பிரசாரத்திலேயே தொண்டாற்றிக்கொண்டும் வழி வழி வந்துகொண்டிருந்தது.

முதன் முதலில் அதற்கு வழி வகுத்தவர் அனந்தராம பாகவதர்; அவருடைய ஒரே பிள்ளை பட்டாபிராம பாகவதர்; அவரது ஒரே வழித் தோன்றல் இப்போது உள்ள ஸீதாராம பாகவதர்.

ஸீதாராம பாகவதருக்குக் குழந்தையே பிறக்கவில்லை.

அவருடனே அந்த வம்சமும் அற்றுப்போய் விடுமோ என்று அவரும் சஞ்சலப் பட்டார்; ஜனங்களும் வேதனை அடைந்தனர்.

பிள்ளை இல்லையே என்று ஏங்கிய எத்தனையோபேர், அவரைக்கொண்டே, ராமாயண காலக்ஷேபம் வைத்துக் கேட்டுப் புத்ரபாக்யத்தைப் பெற்றுமிருக்கிறார்கள்; தாம் நினைத்தது நினைத்தபடி ஈடேறுவதற்காகச் சுந்தர காண்டத்தை மட்டும் பாராயணம் செய்து பலன் அடைந்தோரும் உண்டு. ராமாயணத்தில் நம்பிக்கைவைத்துப் பக்தியுடன் வரம் கேட்டவர்களுக்கெல்லாம் ஸ்ரீராமன் மனமுவந்து விரும்பியதை அருளியிருக்கிறான்.

ஸீதாராம பாகவதரோ அல்லும், பகலும், அனவரதமும் அவன் நினைவிலேயே ஊறியிருப்பவர்; அவன் பக்தியிலேயே பரவசம் கொண்டவர்; அவன் ஸ்மரணையிலேயே ஒவ்வொருகணமும்ஈடுபட்டிருப்பவர். பக்தர்களின் தாஸனாகிக் காத்துக் கிடப்பவன் அவர் மனோரதம் பூர்த்தியாக ஒரு வழி வகுக்க முன்வரவில்லையே? ஏன்?

அந்த ஏக்கத்துடனேயே அன்று அதிகாலையிலும், தினசரி பாராயணத்திற்காக, மூல கிரந்தத்தை, வழக்கப்படி, பிரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தார்.

எதிரில் ஸ்ரீராம பஞ்சாயதனம் மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, தேஜோமயமாக ஒளி வீசிக்கொண்டிருந்தது; அருகில் தெய்வீகக் களையுடன் விளங்கும் குத்துவிளக்கு, மணி மணியாக அதன் ஐந்து முகங்களும் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன; மணம் மிக்க ஊதுபத்திகளிலிருந்து சுருண்டெழுந்த சுழற் புகை வட்டமிட்டுக் கொண்டே மேலெழுந்து வாசனையை மட்டும் பரப்பிவிட்டு மறைந்தது.

"ஆதௌ கீர்த்தனாரம்பத்தில் 'குச-லவாள்' கானம் பண்ணின பிரகாரம்——"

ஆம்; குசலவர்களின் கானத்தின் மூலமே தம் சரித்திரத்தைத் தாமே கேட்டார் ராகவனும்; தநயர் தம் புகழ் கூறக்கேட்டு மகிழாத தந்தையும் உண்டோ?

ராம தர்பாரில் கானம் பண்ணிய குசலவர்கள் ஸீதாராம பாகவதரின் ஹ்ருதய அரங்கிலே நடனம் புரியத் தொடங்கினார்கள்.

அவருக்குப் பின்னர் அதே பிரவிருத்தியில் ஈடுபட அவருடைய குச லவர்கள் எங்கே?

ராகவனுக்கு ஒரு லவன்தான் பிறந்தான்; அந்தப் பாக்யத்திற்கு எத்தனை யுகங்களாகத் தவம் கிடந்ததோ—புல் ஒன்றும் போட்டி போட்டுக்கொண்டு, 'குச'னாகிவந்து ஆவிர்ப்பவித்துவிட்டது.

வம்ச பரம்பரைப்படி அவருக்கு ஒரு லவனோ-அல்லது ஒரு குசனோ-வந்து சேரக் கூடாதா? அவர் மட்டும் ஏன் மொட்டை மரமாக நின்று பட்டுப்போகவேண்டும்? அவருக்கு ஒரு குழந்தையைக் கொடுப்பதில் ராகவனுக்கே இஷ்டமில்லையா? அல்லது சோதனையா?

அவர் வயதும் ஐம்பதைக் கூடிய சீக்கிரத்தில் எட்டிப்பிடித்துக் கொள்ளப்போகிறது; ஐம்பதுக்குமேல் ஒருவருக்குக் குழந்தை பிறக்கலாமென்று எதிர்பார்ப்பது உண்மையில் தவறுதானா? குழந்தையுண்டாவதும் காலப் பிரமாணத்தை அனுஸரித்துத்தானா? அப்படியே பிறப்பதாக வைத்துக்கொண்டாலும் அது வளர்ந்து, தகுந்த அறிவைப் பெறும் வரையில் அவர் ஜீவித்திருப்பார் என்பதும் என்ன நிச்சயம்?

ராகவன் குசனை ஸ்வீகரித்துக்கொண்டது போலே—அவரும் ஒரு குழந்தையை ஸ்வீகரித்துக்கொண்டுவிட்டால்?—

அதுவும் ஸரியான யோசனையாகத் தோன்றவில்லை; வம்ச பரம்பரையான ரத்தத்தில் ஊறி வயிற்றில் ஜனிப்பது போலாகுமா வெளியிடத்துக் குழந்தை? அதன் குணம் எப்படியிருக்குமோ?

EVERYBODY wants GOOD VALUE

in a watch...

ஒவ்வொருவரும் மதிப்புக்குரிய
கெடிகாரத்தையே விரும்புகின்றனர்!

''வெஸ்ட் எண்ட்'' வாட்ச் மிகச்சிறந்த மதிப்பை அளிப்பதோடு, நம்பத்தகுந்த உழைப்பையும் தருகிறது. ஒவ்வொரு 'வெஸ்ட் எண்ட்' வாட்சும் முதல்தரமான கைத்திறனால் ஆக்கப்பெற்றது என்ற புகழோடுமட்டுமல்லாது, நம்பத்தகுந்ததாகவும் வெகு நுட்பமான மணியைக் குறிக்கும் கருவியாகவும் அமைந்துள்ளது. 'வெஸ்ட் எண்ட்' வாட்சுகளை உபயோகித்து, திருப்தியடைந்த இந்தியாவின் பல பாகங்களிலுள்ள லக்ஷக் கணக்கான மக்கள் அதன் அழகிய வெளித் தோற்றத்துடன் சிறந்த மணிகாட்டும் தன்மையும் அதில் ஒருங்கே அமைந்திருப்பதுபற்றி உறுதி கூறுவார்கள்.

நியூ காலிபர் "E"

நிக்கல் ஸில்வர் கேஸ்	... ரூ.	123
எவர்பிரைட் ஸ்டீல் கேஸ்	... ரூ.	140
ரோல்ட் கோல்ட் கேஸ்	... ரூ.	162

ரேடியம் எண்களும் முட்களும் கூடியவை ரூ. 4/- அதிகம்

போதுமான அளவு இறக்குமதி செய்ய வசதியில்லாவிடினும் எங்களாலியன்றவரை தேவைகளைப் பூர்த்தி செய்வோம்.

வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.
பம்பாய் & கல்கத்தா

The WEST END WATCH Co.
BOMBAY · · · CALCUTTA

அவருக்கு நினைவு தெரிந்து, அந்த நிமிஷம் வரையில், மனோவாக்குக் காயங்களால் பாப கிருத்யம் ஒன்றுகூட அவர் செய்ததே இல்லை; ஏன் இந்தச் சோதனை?

குழந்தை பிறக்காதது யாருடைய குற்றம்?

ஒரு ஸ்திரீ ஒன்பது வருஷங்கள்வரையில் கர்ப்பம் தரிக்காமலேயே நின்றுவிட்டால் ஒரு புருஷன் அவளை விலக்கிவிட்டு, மறு விவாகம் செய்துகொள்ளலாம் என்று சாஸ்திரம் சொல்கிறது; அப்படிப் பார்த்தால் அந்த உரிமையும் அவருக்கு எப்பொழுதோ வந்து விட்டது.

அப்படித்தான் செய்து பார்க்கலாமா? அப்படிப் பார்த்தால்......

எதிரே ஏதோ நிழலாடியது போல் உணர்ந்த ஸீதாராம பாகவதர் கனவிலிருந்து விழிப்படைந்தவர்போல் திடுக்கிட்டார்: திரும்பிப் பார்த்தார்.

தூண் ஓரமாகப் பக்கத்துவீட்டுக் குழந்தை நின்றுகொண்டிருந்தது. அவர் வீட்டுக்கு அந்தக் குழந்தை அடிக்கடி வந்து போகும்.

'தாம் குழந்தையைப்பற்றி நினைத்து ஏங்கிக்கொண்டிருக்கும்போது, இந்தக் குழந்தை நேரில் வந்து காட்சி கொடுக்கிறதே? சுபசூசகமாகவே யிருக்கிறதே?' என்று தமக்குள்ளாகவே எண்ணி வியப்படைந்தார் ஸீதாராம பாகவதர்.

குழந்தையைக் கனிவுடன் பார்த்து, "வா, கொழந்தே! ரொம்ப நாழியாக நிக்கறயா அம்மா? என்ன வேணும்?" என்று அன்போடு விசாரித்தார்.

வந்தது பெண் குழந்தையே. "தாத்தா! பாட்டி வந்து-வந்து-உம்மாச்சி படத்திலே பூப்போட்டு பார்க்கச் சொன்னா; வந்து ஒரு பூ மஞ்சளாம் இன்னொரு பூ சிகப்பாம்" என்றது அந்தக் குழந்தை.

பூ வைத்துப் பார்க்கச் சொன்னாளா!

அசரீரியைப்போல் அல்லவா வாக்கும் வருகிறது?

எதைப்பற்றி நினைத்துக்கொண்டு பூ வைக்கச் சொல்லியிருப்பாள்?

ஒருவேளை - அவளுக்கும் குழந்தையைப்பற்றிய கவலையாகவே இருக்கலாம்? அதே ஏக்கத்தில் சிக்குக்காரியாகவும் மாறிவிட்டாள். அவளுக்கு இப்போது இருக்கும் பலஹீனத்தில் குழந்தை எங்கே பிறக்கப் போகிறது? வீண் ஆசை.........

எந்தப் பூவை நினைத்துக்கொண்டிருப்பாள்? மஞ்சளையா அல்லது சிகப்பையா? எந்த விதத்தில் எண்ணிக்கொண்டிருப்பாள்? குழந்தை பிறக்கும்-பிறக்காது என்பதற்கா? அல்லது ஆண் குழந்தையா—பெண் குழந்தையா என்பதற்கா?

"எப்படியோ? இரு உள்ளங்களும் இந்த ஸமயம் ஒத்திருப்பதைப் போலவே பூவும் ஒத்து வருகிறதா—பார்க்கலாமே?" என்றெண்ணியவராய் ஸீதாராம பாகவதர் தம் மனதிற்குள் மங்களகரமான மஞ்சள் பூவை நினைத்துக்கொண்டார்.

"மஞ்சள் வந்தால் ஆண் குழந்தை; சிகப்பு வந்தால் பெண்" என்றபடியே நினைத்துக் கொண்டார்.

பூ வைத்துப் பார்ப்பதிலும் 'குழந்தை இல்லை' என்றே வந்து ஏமாற்றம் அடைய வேண்டாம்; அதிலாவது ஸந்துஷ்டியைப் பெறலாமென்கிற நோக்கத்துடனேயே அவர் அம்மாதிரி எண்ணிக்கொண்டார்.

"சந்ததி பிறக்கவில்லையே" என்கிற ஏக்கம் அவ்வளவு தூரத்திற்கு அவரைச் சஞ்சலத்தில் ஆழ்த்திக்கொண்டிருந்தது.

'ராகவன் ஆக்ஞை' என்று சொல்லிக் கொண்டே இரு மடித்த பொட்டலங்களை ஸந்நிதியில் போட்டார்:

"வாம்மா; கொழந்தை! உன் கையாலேயே ஒரு பொட்டலத்தை எடுத்துக் குடு பார்க்கலாம்!"

குழந்தை வந்து ஒன்றைப் பொறுக்கி எடுத்து அவர் கையில் கொடுத்தாள்.

பரபரப்புடன் பிரித்துப் பார்த்தார்:

சிகப்புப் பூ வந்திருந்தது; ஸீதாதேவியா வரப்போகிறாள்!

"பாட்டி! பாட்டி! சிகப்பு பூ வந்திருக்குப் பாட்டீ!" என்று கூவிக்கொண்டே அந்தக் குழந்தை உள்ளே ஓடியது.

குழந்தையைத் தொடர்ந்துகொண்டே பாகவதரும் போனார்......

"சிகப்பு பூவா! அந்தமட்டிலும் நல்ல காலம்தான்; நான் பிழைத்துப் போனேன்!" என்று முக மலர்ந்தாள் பாகவதரின் தர்ம பத்னி.

"என்ன ஜானகி? நீ என்ன நினைத்துக் கொண்டாய்? ஆண் குழந்தை பிறக்குமென்று உனக்கு வந்திருக்கிறதா?" என்று அளவு மீறிய ஆவலுடன் கேட்டார் பாகவதர்.

"குழந்தையா?" என்று கேட்டுவிட்டு, சலிப்புடன் சிரித்துக்கொண்டாள் அவர் மனைவி; "இப்போது நான் இருக்கும் நிலையில் கர்ப்பந் தரித்துப் பிரஸவித்தாலும்கூடக் கட்டாயம் செத்துத்தான் போவேன்; பிறக்காத குழந்தையைப்பற்றி நான் இப்போது கவலைப் பட்டுச் சாகவில்லை; உங்களுக்கும், பூமிக்கும் பெரிய பாரமாக இருந்துவருகிறேனே—சீக்கிரத்தில் 'போவேனா, மாட்டேனா' என்று நினைத்தே பூவைத்துப் பார்க்கச் சொன்னேன்; 'போய்விடுவேன்' என்றே அனுக்ரஹம் செய்திருக்கிறார்."

"என்ன அவச்சொல் இது ஜானகி?" என்று கேட்டுப் பாகவதர் மலைத்தார்.

"அவச்சொல் என்ன? ஆழ்ந்து யோசித்துத்தான் சொல்லுகிறேன்: என்னைப்பற்றி இனிமேல் கொஞ்சமும் கவலைப்படாதீர்கள்; நான் இருந்தாலும் ஸரி; போனால் ரொம்ப நல்லதாகிவிடும்; நீங்கள் உடனே தகுந்த இடமாகப் பார்த்து மறு விவாகம் செய்துகொண்டு, நம் வம்சம் அற்றுப் போகாமலிருக்க வழி செய்யுங்கள்; இதுதான் இப்போது என் மனப்பூர்வமான விருப்பம்"

திகைப்பூண்டு மிதித்தவரைப்போலே திடுக்கிட்டு விழித்துக்கொண்டார் ஸ்ரீ ஸீதாராம பாகவதர். நெற்றியிலே 'குப்' பென்று வியர்த்திருந்தது. உத்தரீயத்தால் துடைத்துக்கொண்டார்.

தம்மைச் சுற்றிலும் ஒரு முறை பார்த்துக் கொண்டார்.

ஊதுபத்திக் குழாயருகில் விழுந்திருந்த சாம்பல் கோலமிடுவதற்குத் தயாராக முன்னால் பொட்டு வைப்பதுபோலே அழகுடன் தெறித்திருந்தது. ஸ்ரீ ராம பஞ்சாயதனத்தில் சூட்டப்பட்டிருந்த மலர்மாலையொன்றின் ஒருபுறம் மட்டும் எவ்விதமோ சரிந்து கீழே விழுந்திருந்தது; குத்துவிளக்கின் ஐந்துமூக்குகளில் ஒன்றின் திரி அணைந்துபோய், மற்ற நான்கும் சுடர்தட்டியபடி மங்கலாக எரிந்து கொண்டிருந்தன.

எதிரில் பிரித்து வைக்கப்பட்டிருந்த கிரந்தத்தின் ஏடுகளைக் கவனித்தார்.

சுந்தரகாண்டம்; ராவணேசுவரனின் பட்டமகிஷியைக் கண்ணுற்று, 'இவள்தான் ஸீதையோ' என்று ஹனுமான் மனமயக்கம் கொள்ளும் கட்டம்.

அறையில் காலடியோசை கேட்டது; திரும்பிப் பார்த்தார்.

மைதிலிதான் மிகுந்த பணிவுடன் வந்து கொண்டிருந்தாள்.

மங்கலாகிவிட்டிருந்த விளக்கின் திரிகளைத் தூண்டிவிட்டுச் சரிசெய்தாள்; அணைந்திருந்த ஐந்தாவது மூக்கையும் ஏற்றிவைத்தாள். இன்னும் கொஞ்சம் எண்ணெயும் வார்த்தவுடன் விளக்கு புது ஒளியுடன் பிரகாசிக்கலாயிற்று.

முதலில் அவரெதிரே மண்டியிட்டு நமஸ்கரித்தாள்; அப்புறம் பகவானின் ஸன்னிதானத்தில் குனிந்து வணங்கினாள்.

கரையை உடைத்துக்கொண்டு பெருகும் காட்டாற்று வெள்ளம்போல் தோற்றமளித்த மைதிலியின் அழகும், யௌவனமும், ஸீதாராம பாகவதரின் முதிர்ந்த உள்ளத்திலே சாட்டையைக்கொண்டு வீசுவதுபோல் வெட்டியது.

சொன்னால் ஒரே வார்த்தை; சுட்டால் ஒரே பாணம்: பார்த்ததும் ஒரே பெண்ணைத்தான்.

அப்படிப்பட்ட லட்சிய புருஷனான ராகவனின் கல்யாண குணங்களை வர்ணிக்கத்தான் அவருக்கு யோக்யதை உண்டா? அவனை உபாஸிக்கத்தான் அவருக்குத் தகுதி உண்டா?

ஆயினும்..........

அவருடனேயே அந்த வம்சம் அழிந்து விடாமல் நிலைத்து நிற்க, வழித்தோன்றல் வேண்டுமென்கிற மன மயக்கத்திலே அவர் மைதிலியை மறு விவாகம் செய்துகொண்டதுதான் கண்ட பலன்.

அவளை நெருங்கவே அஞ்சி நடுங்கினார்.

அவரால் ஸஹித்துக் கொள்ள முடியாத மைதிலியின் எல்லையற்ற அழகும், யௌவனமுமே அவரை மிரட்டி வெருட்டி விட்டன. மைதிலியின் மூலம் அவர் தம் உண்மை நிலையை உணர்ந்து விட்டார். மன மயக்கத்திலே தாம் மகத்தான தவறு செய்து விட்டதாக உணர்ந்து கலங்கினார். பிராயச்சித்தமே செய்ய முடியாத பெரும் பாவத்தைச் செய்துவிட்டதாகக் கருதினார்.

ஸத்ய தரிசனம் கிடைத்துவிட்டது.

ஆயினும் அதனால் அவருக்கு அணுவளவு கூடப் பலன் இல்லை. மைதிலியின் கதியும் அவரால் திசை மாறிப் போய்விட்டதே? முதலில் அவள் பாதையைத் திருத்தியமைக்க முடியுமா?

சந்ததி உண்டாக வேண்டுமென்கிற விருப்பத்திலே, மறுமணம் செய்துகொள்ளும்படி, அவரை, அவரது முதல் மனைவி ஜானகியும் கூடத்தான் வற்புறுத்தி உபதேசித்தாள்.

மைதிலியுடன் இப்போது அவர் கிருஹஸ்த தர்மத்தைக் கடைப்பிடிக்கும் லட்சணத்தைக் கூடவிருந்து பார்க்கும் பாக்யத்தை ஜானகி அடையவில்லை.

ஆவி ரூபத்தில் இருந்துகொண்டே பார்த்தால் என்ன நினைப்பாள்? அவர் நடந்து கொள்ளும்விதம் கண்டு திருப்திப் பட்டுக் கொள்வாளா அல்லது மைதிலிக்காக, பெண்ணுக்குப் பெண் என்கிற ஹோதாவில் துக்கப் படுவாளா?

"குழந்தை இல்லையே" என்கிற ஏக்கம் இப்போது பாகவதரைவிட்டு அறவே அகன்று போய்விட்டது.

குழந்தை போவிருந்த மைதிலியின் அவல நிலைக்காகவே இப்போது அவர் விவரிக்க முடியாத ஏக்கமடைந்தார்.

இதில் ஸத்ய தரிசனம் உண்மையில் எங்கே இருக்கிறது. அவர் சந்ததியை விரும்பவில்லை யென்பது ஸத்ய தரிசனமா அல்லது மைதிலியின் நிலையை உணர்ந்து கொண்டு கவலைப்படுவதுதான் ஸத்ய தரிசனமா?

லங்காபுரியில் அசோக மரத்தடியில் தேவியைக் கண்டபோது ஹனுமான் ஸத்ய தேவதையைத் தரிசித்தான்.

இங்கேயும் உண்மையில் மைதிலிதான் ஸத்ய தேவதையாகிருளா? அவள் அவரை எவ்விதம் ஏற்றுக் கொண்டிருக்கிருள்? அதுவல்லவா இப்போது முக்யம்?

"கவர்ச்சிகரமான உன் இயற்கை யழகே என்னைத் தலைகுனிய வைக்கிறது; அனுவசியமான செயற்கை அழகுகளும் செய்துகொள்வானேன்?" என்று சொல்லி முதன்முதலில் தம் பலஹீனத்தை அவர் வெளிக் காட்டிக் கொண்டபோதே மறு பேச்சின்றி, அவள், மௌனமாகப் பணிந்துவிட்டாள்.

சாட்டையைப் போலே நீண்டு தொங்கிய பின்னலை, 'மள மள' வென்று அவிழ்த்து விட்டு, கூந்தலை இறுக்கி அழகாக முடிந்து கொண்டு விட்டாள்; தலையில் பூச் சூடிக் கொள்வதையும் விடுத்து நெற்றியில் குங்குமத் திலகத்தை மட்டும் வைத்துக் கொண்டாள்; ஆனுல் பொங்கிப் புரண்டோடும் யௌவனத்தை மட்டும் அவளால் மறைத்துக் கொள்ள முடியவில்லை. அதன் எதிரிலே பாகவதர் தோற்றவர்—தோற்றவர்தான்.

'பச்'சென்று மஞ்சள் பூசிக் குளித்துவிட்டு, நெற்றியிலே பெரிய குங்குமப் பொட்டுடனும், கொசுவம் வைத்துக் கட்டிய புடவைக் கட்டுடனும், வாரி முடித்த கூந்தலுடனும், குத்துவிளக்கேற்றி வைக்க அவள் பூஜை அறையில் நுழையும் போதெல்லாம் அவர் தம் தோல்வியைப் பற்றி நினைத்துத் தலை குனிவார்.

அவள் பணிவும், துளியும் முகம் கோணுத சிரித்த பாவனையும், மரியாதை மிகுந்த இன்சொல்லும்—குழந்தையை வேண்டி அவர் கொண்ட துணிவை — அசட்டுத் தைரியத்தைக் குறித்துப் பரிஹாஸம் பண்ணின.

அவர் பண்ணின பாவத்திற்குப் பரிஹாரம் ஏது? பிராயச்சித்தம் ஏது?

தர்ம தேவதையை அவர் கொன்று விட்டார்; தேடிச் சென்ற ஸத்யத்தை அவர் இழந்து விட்டார்?

மனச் சாட்சி விசுவரூபம் எடுத்து அவரையே விழுங்கிவிட முன்வந்து விட்டது. அறிவு பெரும் புரட்சி செய்து அவரை அலற வைத்துவிட்டது. அந்தராத்மா 'ஸத்ய தரிசனம்—ஸத்ய தரிசனம்' என்று அடித்துக் கொண்டது; அதற்காக ஏங்கித் தவித்தது.

அந்த மயக்க நிலையிலே, பாகவதர், தம்மையுமறியாமல், 'மைதிலீ—மைதிலி' என்று வாய்விட்டுக் கூவி விட்டார் போலும்.

இரண்டாந் தாரமாக அவர் கைப்பிடித்த மைதிலி அவரெதிரே வணக்கத்துடன் நின்ருள்.

"உங்கள் உடம்பிற்கு என்ன?" என்று அன்பு கனிந்த அவள் குரலொலியைச் செவியுற்று அவர் மெல்லக் கண் திறந்து பார்த்தார். சரீரமெல்லாம் 'வெட வெட' வென்று நடுங்கிக் கொண்டிருந்தது; வியர்வை வெள்ளத்தில் மிதந்தார்.

'உங்கள் உடம்புக்கு என்ன?" என்று அவள் மீண்டும் கேட்டாள்.

"என் உடம்புக்கு ஒன்றுமில்லை; மனசு தான் கெட்டுவிட்டது."

'ஏன்?"

"உன்னை இரண்டாம் முறையாகக் கைப்பிடித்து விட்டதன் மூலம் நான் பிரசாரம் செய்துவரும் தர்மத்துக்கே ஒரு களங்கத்தையுண்டாக்கி விட்டதாக என் அந்தராத்மா வாட்டிக்கொண்டே யிருக்கிறது."

"ராகவனின் சித்தப்படிதான் எதுவும் நடக்கிறது; நாம் எதிர் பார்க்கும் பலனை நாடி ஒரு காரியத்தில் இறங்குவதுதான் நாம் வழக்கமாகச் செய்துவரும் தவறு: அதில் ஏமாற்றம் குறுக்கிடும்போது நாம் நமது அந்தராத்

மாவின் குரலை உணர்கிறோம். நடப்பதை, ஆராயப் புகாமல், அப்படி யப்படியே ஏற்றுக் கொண்டு நாம் திருப்தியடைய வேண்டும்—குடைந்து பார்க்கப் புகுந்தால் எதிலுமே குழப்பமாகத்தான் தெரியும்.''

பாகவதர் திகைத்தார். "உன் மூலமே ஸத்ய தரிசனம் எனக்குக் கிடைத்து விட்டது; என் குரு ஸ்தானத்தில் உன்னை வைத்து......" என்று அவர் ஆரம்பித்து முடிக்கு முன்னர் "வேண்டாம்" என்று சொல்லி, மைதிலி அவர் முன் விழுந்து வணங்கினாள்.

"மறுபடியும் மயக்கத்திற்கு இடம் கொடுக்க வேண்டாம்; ஸீதைக்கு ராமன் எப்படியோ—அப்படியேதான் நீங்கள் எனக்கு; கன்னி கழியாமல் வீண்காலம் கடத்திக் கொண்டிருந்த என்னை இல்லற தர்மத்திற்கு இட்டு வந்த என் தெய்வம் நீங்கள்" என்று பணிவுடன் சொல்லி, அவ்விடம்விட்டு மறைந்தாள்.

தம் நிலை மறந்துவிட்ட யோகியைப்போலே அவர் ஊமையாய்ச் சமைந்து விட்டார்: கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருக்கெடுத்து வந்தது.

சந்தேகக் கண்கொண்டு தன்னைக் கவனித்த ராமனின் மன நிலையையும் மன்னித்து, மீண்டும் அவனையே தஞ்சமடைந்த ஸீதாதேவியின் மனோபாவம் அப்போது பிரம்மஸ்ரீ ஸீதாராமபாகவதரின் மனக் கண்ணில் தோன்றிக் கொண்டிருந்தது.

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள் நாடு			மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், "காவேரி,"
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

இக்கரைக்கு அக்கரை...

ராமயோகி

அன்று ஞாயிற்றுக்கிழமை. நாங்கள் நாலைந்துபேர் கடற்கரையிலுள்ள மெரீனா காண்டீனில் சிற்றுண்டியருந்திக் கொண்டிருந்தோம். அப்பொழுது யாரோ முதுகில் 'பளார்' என்று 'சொட்டு' கொடுக்கவே நான் துணுக்குற்றுத் திரும்பிப் பார்த்தேன். என் வெகுநாளைய நண்பன் சேதுராமன் சிரித்தவாறு நின்றுகொண்டிருந்தான்.

"ஏண்டா பழி? இப்படியா முதுகில் குத்துவது? ஆமாம், நீ எப்பொழுதடா இங்கே வந்தாய்?" என்றவாறே முதுகைத் தடவிக் கொடுத்துக்கொண்டேன்.

"இந்த ஊருக்கு வந்து ஆறுமாதமாகப் போகிறது?"

"ஆறு மாதமா? அட எனக்குத் தெரியவே தெரியாது. என்ன, இந்த ஊரில் பிராக்டிஸ் பண்ணுகிறாயா?" என்று கேட்டேன் நான்.

"பிராக்டிஸாவது, மண்ணாவது! அதையெல்லாம் மூட்டை கட்டிவைத்து ஒரு வருஷத்துக்கு மேலாகப்போகிறது. இப்பொழுது சைதாப்பேட்டையில் எல். டி. கோர்ஸுக்குச் சேர்ந்து படித்துக்கொண்டிருக்கிறேன். வாத்தியார் வேலைக்குப் போவதாக உத்தேசம்."

"என்னடா இது? வக்கில் தொழில்போலச் சுதந்திரமான தொழில் வேறு ஒன்றும் கிடையாது என்று சொல்லிக்கொண்டிருந்த நீயா இப்படிப் பேசுவது?"

"அதைப்போல மகாமட்டமான தொழில் வேறொன்றும் கிடையாதப்பா?"

"ஏண்டா, இப்படி அடியோடு மாறிவிட்டாய்!"

"அது ஒரு பெரிய கதை அப்பா!"

"அதை நாங்கள் கேட்கலாமோ, இல்லையோ? சொல்லேன்" என்றேன் நான். என் நண்பர்களும் அந்தக் கதையைக் கேட்க ஆவலுடன் தயாராயினர்.

"உனக்கு என் சீனியர் நாகபட்டினம் ஆராவமுதய்யங்காரைத்தெரியும் அல்லவா?" என்றுகேட்டான் சேதுராமன்.

"ஓ! பேஷாய்த்தெரியும். அவரைத்தெரியாமலா? பணம் பண்ணுவதில் அவர் மாதிரி ஆட்களே கிடையாதே, சொல்லு" என்று நான் உற்சாகப்படுத்தினேன்.

"அவர் ஒருநாள் காலையில் என்னை அவசர அவசரமாக அழைத்து, 'இன்று மாயவரம் முன்சீப் கோர்ட்டிலே ஒரு சின்னக் கேஸ். இப்பொழுதே புறப்பட்டுப் போனாயானால் சாயந்திரத்திற்குள் திரும்பி வந்துவிடலாம். கட்சிக்காரன் என்னை வரச்சொல்லி இருபது ரூபாயும், ரயில் சார்ஜும் கொடுத்துப் போயிருக்கிறான். எனக்கு இங்கே சப்கோர்ட்டிலே ஒரு அப்பீல் இருக்கிறது. இந்த வக்காலத்து நாமாவில் நீயே கையெழுத்துப் போட்டுக் கேஸை நடத்தி விட்டு வா. நீ பத்து ரூபாய் எடுத்துக்கொள். பாக்கியைக் கட்சிக்காரனுக்கே திருப்பிக்கொடுத்து விடு." என்றார்.

அவன் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுப்பானேன்? அதைக் கேட்க எனக்குத் துணிவில்லை. மென்று விழுங்கிக் கொண்டு வீட்டுக்குவந்தேன். சம்சாரத்தினிடம் சகல விஷயங்களையும் சொல்லிவிட்டு மாயவரம் புறப்பட ஆயத்தமானேன். 'ஆமாம், அவர் செய்யப்போகிற வேலையைத் தானே நீங்களும் செய்யப்போகிறீர்கள்? அவர் போயிருந்தால் இந்த இருபது ரூபாயையும் எடுத்துக்கொள்வாரா, மாட்டாரா? தனக்கு ஒரு நியாயம், பிறருக்கு ஒரு நியாயம் என்றால் இது துளிக்கூட நன்றாயில்லை. என்ன நான் சொல்வது?' என்று அவள் என்னிடம் கட்சி ஆட ஆரம்பித்துவிட்டாள்.

நானோ ரயிலுக்குச் சீக்கிரமாகப் புறப்பட வேண்டியிருந்தது. அதுமட்டும் இல்லை; என்ன இருந்தாலும் நாம் கட்சிக்காரனிடம் பணத்தைத் திருப்பிக் கொடுத்துத்தான் ஆகவேண்டும். அப்படிக் கொடுக்காமலிருந்து அது நம் சீனியருக்குத் தெரிந்துவிட்டால் நன்றாயிராதல்லவா? ஆகவே அவளிடம் இதையெல்லாம் சொல்லி எதிர்க்கட்சி ஆடுவதனால் என்ன பிரயோசனம்? அப்படியே எதிர்க்கட்சி ஆடினாலும் அதற்கு நமக்கு யார் 'பீஸ்' தரப்போகிறார்கள்? ஆகவே நான் வாய் திறவாமல் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டேன்.

வழக்கைப்பற்றி சீனியர் எனக்கு நன்றாக எடுத்துச் சொல்லியிருந்தார். வழக்கு ஒன்றுமேயில்லை. 'ஒன்றுமேயில்லையென்றால் அப்புறம் வழக்கு ஏது?' என்று கேட்டு

விடாதே. வழக்கு இதுதான். இரண்டு பேர் அண்ணன் தம்பிகள். ஒருத்தன் கடன் வாங்கி யிருந்தான். கடன் கொடுத்தவன் அவன் சொத்தை ஏலத்துக்குக்கொண்டு வந்தான். கடன் வாங்கினவனிடம் கால் காசு கூட இல்லாமற் போகவே மற்றவனின் வண்டி மாடுகளையே ஏலத்துக்குக்கொண்டு வந்தான். உண்மையில் அந்தக் கேஸுக்கு ஒரு வக்கீல் வேண்டியதே இல்லை. அப்படி யிருக்கும் பொழுது ஒரு பெரிய வக்கீல் எதற்கோ? இரு சகோதரர்களுக்கும் யாதொரு விதமான சம்பந்தமும் கிடையாது. கோவாப்ரேடிவ் பாங்கியில் கடன் வாங்கி அவன் வண்டிமாடுகள் வாங்கியிருந்தான். அதற்கு ஊர்க் கணக்குப் பிள்ளை சாட்சி போட்டிருந்தான். அது மட்டும் இல்லை. கோவாப்ரேடிவ் ரிஜிஸ்தர் வேறு இருந்தது. இவ்வளவு அத்தாட்சிகள் இருக்கும்பொழுது, ஒருவன் வாங்கின கடனுக்கு இன்னொருவன் மாட்டை ஏலம் போடுவதென்றால், அது எப்படி நியாயமாகும்? பாங்கிக் கடனைக்கொண்டு மாடு வாங்கப்பட்டது என்ற ஒரு அத்தாட்சியே போதாதா? ஒரு பெரிய வக்கீல் எதற்கு? அப்படி வக்கீல் வைத்துக்கொள்வதாகவே யிருந்தாலும், என்னைப்போன்ற ஒரு சாதாரண வக்கீல் வைத்தாலே போதுமானது. ஆனால் அந்த ஆசாமி நேரே என் சீனியரிடம் போய்விட்டான்.

என்னத்தைச் சொல்ல? எல்லா ஆசாமிகளும் இதுபோன்ற சின்னஞ்சிறு விஷயங்களுக்கெல்லாம், பெரிய பெரிய வக்கீல்களைத் தேடிக்கொண்டு போவதென்றால், என்னைப்போல வருஷா வருஷம் புதிதாகத் தயாராகும் வக்கீல்கள் எங்கே போவது? எப்படிப் பிழைப்பது? எங்களைப் போன்றவர்களைத் தேடிவந்தால் படிக்குப் பாதியாக 'பீஸை'க் குறைத்துக்கொண்டு காரியத்தை முடித்துத் தரமாட்டோமா? என்னைப் போன்றவர்களை எவராவது லட்சியம் செய்தால்தானே? எல்லாரும் பெரிய வக்கீல்களைத் தேடிக்கொண்டு போவதைப் பார்த்தால், எனக்கு எரிச்சல் எரிச்சலாக வருகிறது! 'நல்ல தொழில் இது?' என்று என்னை நானே நொந்துகொள்கிறேன்.

பத்தரை மணி சுமாருக்கு நான் முன்சிப் கோர்ட்டை அடைந்ததும், முதன்முதலாகக் கட்சிக்காரனைத் தேடலானேன். நான் அதற்குமுன் அவனைப் பார்த்ததில்லை.

என் சீனியருக்கு அந்த ஆள் மிகவும் வேண்டியவன். அவர் கிழித்த கோட்டைத் தாண்டமாட்டான். மகா மோசமான வழக்குகளைக் கூட ஜயிக்கும் வல்லமை அவருக்குத்தான் உண்டு என்பது அவனுடைய திடமான அபிப்பிராயம். அதிகப் பொருட் செலவைப் பொருட்படுத்தாது நாகபட்டினம் வந்து அவரை வக்கீலாக அமர்த்தினதிலிருந்துஇதை ஊகித்தறிந்தேன்.

நான் அவனைத் தேட, அவன் என் சீனியரைத் தேடிக்கொண்டிருந்தான். அவருக்குப் பதிலாக நான் வந்திருக்கிறேன் என்பது அவனுக்குத் தெரிந்திருந்தால் தானே? பேஷ்காரிடம் நான் வக்காலத்து நாமாவைக் கொடுத்துவிட்டு வெளியே வரும்பொழுது ஒரு நாட்டுப்புறத்தான் என்னைக் கும்பிட்டான். அவன் பார்த்த பார்வை என்னை என்னவோ கேட்க விரும்பியதுபோலிருந்தது. அவன் என் சீனியரைப்பற்றி விசாரித்தான். நான் அவன் பெயரைச்சொல்லி 'நீ தானா?' என்று கேட்டேன். கட்சிக்காரன் கிடைத்துவிட்டதில் எனக்குப் பரம சந்தோஷம். 'உன் கேஸை நடத்த நான் வந்திருக்கிறேன். இன்று அவருக்கு ஸப்கோர்ட்டில் ஒரு அப்பீல் இருக்கிறது' என்றேன்.

இதைக் கேட்டதும் அவன் முகம்போன போக்கைச் சொல்லி முடியாது. அந்த முட்டாள் முகத்தில்எள்ளும் கொள்ளும் வெடிக்க, நாலுபேருக்கு எதிரில் "என் வழக்கு உருப்பட்டாபோலேதான்!" என்று அலுத்துக் கொண்டான்.

அதைக் கேட்டதும் அந்தப் பயல்மீது எனக்கு என்ன கோபம் வந்தது, தெரியுமா? கோபம் ஒரு புறம், வெட்கம் மற்றொருபுறம். 'இந்தமாதிரி நாலு கட்சிக்காரர்கள் நமக்குக் கிடைத்துவிட்டால், நாம் தொழில் நடத்தி உருப்பட்டாற்போலத்தான்!' என்று நானும் மனத்துள் நினைத்துக்கொண்டேன்.

நான் மனதைத் திடப்படுத்திக்கொண்டு, 'என்ன அப்பா உளறுகிறாய்? இந்தா, என் பீஸ்போக, பாக்கிப் பத்து ரூபாய்' என்று சொல்லிப் பத்துரூபாய் நோட்டை நீட்டினேன். பணத்தைப் பார்த்ததும் அவன் சந்தோஷப்படுவான் என்பது என் எண்ணம். ஆனால் நான் பணத்தைத் திருப்பிக்கொடுத்தது நிலைமையை இன்னும் கேவலமாக்கிவிட்டது. அவன் அந்த நோட்டை வாங்கி, கசக்கி மடக்கி மடியில் செருகிக் கொண்டே, 'பத்துக்கும் ஐந்துக்கும் வக்கீல் வைப்பதாயிருந்தால் நான் இங்கேயே வைத்துக்கொண்டிருப்பேனே! இதற்கு அவ்வளவு தூரம்- நாகபட்டினம் வரை- போயிருக்கவேண்டியதில்லையே!' என்றான்.

எனக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது. என்ன அவமானம்! அதுவும் எத்தனை பேருக்கு மத்தியில்! நினைக்கக்கூடக் கூசுகிறது. எனக்கு அவன்மேல் பிரமாதகோபம் வந்துவிட்டது! இப்படி அவன் அவமானப் படுத்துவான் என்று தெரிந்திருந்தால், நூறு

ரூபாய் தருவதாயிருந்தாலும் அந்த வழக்காட ஒப்புக்கொண்டிருக்க மாட்டேன். 'இங்கேவந்து அகப்பட்டுக்கொண்டு விட்டோமே!' என்றுகூட வருந்தினேன். அந்த அவமானத்திலிருந்து தப்ப எண்ணி, ஒரு அவசர காரியம் நினைவுவந்ததுபோலக் காட்டிக்கொண்டு, வந்த வழியே திரும்பவும் கோர்ட்டுக்குள் நுழைந்துவிட்டேன். அப்பொழுதுதான் அந்தத் தொழிலின்மீது எனக்கு ஒருவித வெறுப்பும் ஆத்திரமும் வந்தன.

அந்தத் துஷ்டன் அங்கிருந்து போய்விட்டான் என்பதை யறிந்த நான் மறுபடியும் சிறிது நேரத்துக்கெல்லாம் வராந்தாவுக்கு வந்தேன். தூரத்தில் அவனும், அவனுடைய இரண்டு மூன்று சகாக்களும் நின்றுகொண்டிருந்தனர். அந்தப் போக்கிரி என்னைக் கண்டதும் விரல்களால் திரும்பவும் சுட்டிக் காட்டினான். விரோதியொருவன் சுடுவதற்காகத் துப்பாக்கியால் குறி பார்ப்பது போலிருந்தது எனக்கு. தற்காப்புக்காக மறைந்து கொள்ள முயலுபவனைப்போல நான் மறுபடியும் கோர்ட்டுக்குள் புகுந்து கொண்டேன்.

சிறிது நேரம் கழித்து மறுபடியும் வெளியே வந்து பார்த்தால், அவன் என்னை மறுபடியும் சுட்டிக் காட்டினான். என் பொறுமை எல்லை கடந்து விட்டது. நேரே விடுவிடுவென்று நான் அவனிருக்குமிடம் சென்றேன். என் வேகத்தை கண்ட அவன் அப்படியே அயர்ந்து விட்டான். முட்டாள்! பேசாமல் வாயை மூடிக்கொண்டிருக்கிறாயா? இல்லை.........' என்று கடிந்து கொள்ள ஆரம்பித்தேன்.

பக்கத்தில் இருந்த பத்திரம் எழுதுவோர்களில் சிலர் என் கட்சியை ஆதரித்து என் பெருமையை எடுத்துரைக்கவே அவன் வாயை மூடினான். என்றால் காரியம் ஆக வேண்டுமே! அதற்காக மன்னிப்புக் கோரினான். அவன் என் வழிக்கு வந்து விட்டதை அறிந்த நான், அவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன். பிறகு கணக்குப் பிள்ளை, பாங்கி குமாஸ்தா முதலியவர்களுக்குச் சொல்லவேண்டியதைச் சொன்னேன்.

சிறிது நேரத்துக்கெல்லாம் வழக்கு ஆரம்பமாயிற்று. அந்த வழக்கை நான் என் ஜன்மாவில் மறக்கமாட்டேன்" என்றான் சேதுராமன்.

"ஏன்?" என்று கேட்டேன் நான்.

"அதுதான் சொல்லிக்கொண்டு வருகிறேனே கேள். அவசரப்படாதே. அவன் கட்சிக்கு நான் வக்கீலா? எதிர்க்கட்சிக்கு ஆஜானுபாகுவான ஒரு வக்கீல்! கனத்த கம்பீரமான தொண்டை. அவர்போல் என்னாலும் சப்தம் போட்டுப் பேசமுடியும். இருந்தாலும் நவநாகரிகமான நான் எங்கே? நாட்டுப்புறத்து வக்கீலான அவர் எங்கே?

வழக்கு ஆரம்பமானதும், நான் வார்த்தைகளை அளந்து சட்ட முறைப்படியுள்ள என் கட்சிக்காரனின் ஆட்சேபனைகளை எடுத்துச் சொன்னேன்! எதிர்க் கட்சி வக்கீல் அடிக்கொருதடவை எழுந்து, காரணமில்லாமல் சட்டத்துக்குப் புறம்பாக எத்தனையோ விஷயங்களைச் சொல்லிக் குறுக்கிட்டார். நான் அதை ஆட்சேபித்து, கோர்ட்டாரின் கவனத்துக்கு அவ் விஷயங்களைக் கொண்டுவந்தேன்.

கோர்ட்டாரும் நியாயத்தை உணர்ந்து அதைத் தடுத்தார். ஆனால் அவரா அவற்றையெல்லாம் லட்சியம் செய்பவர்? கோர்ட்டாரின் உத்தரவைக் காதில் வாங்கிக் கொள்ளாமல், என் பேச்சுக்களின் நடுவே குறுக்கிட்டார். நம் கட்சி தோற்றுவிடத்தான் போகிறது! நாம் ஒரு விஷயத்தையும் விடாமல் சொல்லி விட்டோம் என்று கட்சிக்காரன் எண்ண வேண்டும் என்பது அவருடைய எண்ணம் போலும். ஆகவே அவர் தம் வாயில் வந்தபடியெல்லாம் சண்டப்பிரசண்டமாகப் பேசித் தீர்த்தார்.

நான் என் வாதத்தைச் சுருக்கமாகச் சொல்லி முடித்ததும், எதிர்க்கட்சி வக்கீல் தம் கட்சியை எடுத்துரைப்பதற்காக எழுந்தார். அவர் தொண்டையைக் கனைத்துக்கொண்டது, 'விட்டேனா, பார் உன்னை' என்று அறை கூவுவது போலிருந்தது.

அவர் போட் மெயில் வேகத்தில் தம் பேச்சைச் 'சளபள' வென்று ஆரம்பித்தார். வாயில் வந்ததையெல்லாம் அது சரியோ, தப்போ சொல்லித் தீர்த்தார். கைகளைத் தூக்கியும் கண்களைச் சிமிட்டியும், முகத்தைப் பலவிதமாகக் கோணிக் கொண்டும் அவர் ஒரு பாவ நாட்டியமே ஆடித் தீர்த்து விட்டார்! அல்லாடி கிருஷ்ணசாமியய்யர், டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரி, ராஜாவய்யர் போன்ற மகா மேதைகள்கூடப் பேச்சில் அவரிடம் பிச்சைதான் வாங்க வேண்டும்! ஆனால் அந்த வழக்கில் மாபெரும் மேதாவிகள் கூட வாய் திறப்பதற்குத் தயங்குவார்கள். ஏனெனில் எதிர்க்கட்சி அவ்வளவு பலஹீனமானது. ஆனால் அவர் அதையெல்லாம் லட்சியம் செய்தால்தானே? ஆனால் அவர் எவ்வளவு உளறினாலும் கோர்ட்டார் காதில் ஏறுது என்பதுமட்டும் திண்ணம். ஆனால் கட்சிக்காரனுக்கு மட்டும் உயிரே போய்விடும் போலாகி விட்டது. எதிர்க் கட்சி வக்கீலின் சிம்ம கர்ஜனையையும் என் மௌன விரதத்தையும் கண்ட அவன் தன் கட்சி தோற்று

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர்களை

உபயோகப்படுத்தி உணவைப் பெருக்குங்கள் !!!



Use Fordson MAJOR TRACTORS

நேரப் போக்கைச் சமாளிக்க உழைத்து வரும் இந்நெருக்கடியான வருடத்தில், வேலையைத் துரிதப்படுத்தவும் போதிய வேலையாட்களில்லாமையைச் சமாளிக்கவும் போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் விவசாயிகளுக்கு மிகவும் உதவியுள்ளது. சுலபமாகக் கையாளக்கூடிய இந்த மேஜர் சிக்கன முறையில் பெரிய அல்லது சிறிய நிலப்பரப்பை உழுவதற்கு உதவுவதோடு போரடிக்கும் கருவியை இழுக்கவும் போதிய சக்தி பெற்றிருக்கிறது. ஹைடிராலிக் முதலிய பிரத்தியேக சாதனங்களோடு கூடிய இந்த மேஜர் உழவுத்தொழிலுக்குத் தேவையாயுள்ள ஒவ்வொரு வேலைக்கும் விசையளிக்க வல்லது.

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்

202 - 203 மவுண்ட் ரோடு சென்னை—2

கிளைகள்: **பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (டெக்கான்)**

டெப்போ:— **கோயம்புத்தூர்.**

ஹமாம் - ஒவ்வொருவருடைய மனதிற்கு மிசைந்த ஸோப்பு! ★

★ மற்றெந்த ஸோப்பையும்விட ஹமாமுக்கே அதிக கிராக்கி என்பதற்கு அசல் விற்பனை புள்ளி விவரங்களே சான்று.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

விடுமோ என்று தயங்கினான். ஆகவே என் காதருகில் வந்து மெதுவாகத் தன் தயக்கத்தைச் சொல்லி எதிர்த்து வாதாடுமாறு தூண்டினான். நான் அவனுடைய அந்த அசட்டுப் பேச்சுக்குச் செவி சாய்க்கவில்லை. அதன் பலன் அம்மாதிரி விரஸமாக ஆகும் என்று தெரிந்திருந்தால், எதிர்க் கட்சி வக்கீலுடன் முஷ்டி யுத்தத்துக்கேகூடத் தயாராயிருந்திருப்பேன்.

அடிக்கடி அவன் எனக்குத் தொந்தரவு கொடுக்க ஆரம்பிக்கவே, 'பேசாமல் வாயை மூடிக் கொண்டிரு. எல்லாம் எனக்குத் தெரியும்' என்று அதட்டினேன். அவ்வளவு தான். எனக்குப்பிடித்தது சனியன். எதிர்க் கட்சி வக்கீலின் சிம்ம கர்ஜனைக்குப் பயந்து, "எசமான்" என்று கையைக் கூப்பிக் கொண்டு முன்சிப்புக் கெதிரே எழுந்து நின்றான்.

முன்சிப் எதிர்க் கட்சி வக்கீலைப் பேசாமலிருக்கும்படி சமிக்ஞை செய்துவிட்டு, என் கட்சிக்காரனைப் பார்த்து, "ஏன்?" என்று கேட்டார். பிறகு, என்னைப் பார்த்து, "சொல்லுங்கள். அவன் என்ன சொல்ல விரும்புகிறான்?" என்று கேட்டார்.

பொதுவாகக் கட்சிக்காரன் தான் சொல்லவேண்டியவற்றைக் கோர்ட்டா

ருக்குத் தன் வக்கீல் மூலம் சொல்வது வழக்கமாகையால் அவர் என்னைப்பார்த்துக் கேட்டார்.

நான் 'தெரியாது' என்ற பாவனையில் தலையை அசைத்துவிட்டு, அவனைப்பார்த்து, "ஏதாவது சொல்லவேண்டுமென்றால் என்னிடம் சொல்லு" என்றேன். கட்சிக்காரன் சுட்டெரித்துவிடுவது போல என்னைப் பார்த்து, "உங்களிடம் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. எசமானிடம்—அதாவது முனிசிப்பு ஐயாவிடம்தான் சொல்ல வேண்டும்" என்றான்.

"சொல்லு: என்ன சொல்ல வேண்டும்?" என்று கேட்டார் முன்சீப்.

"எசமான், இந்த வழக்கு வாய்தாவை ஒத்திப் போடவேண்டும். எசமான்" என்று கைகூப்பிக்கொண்டு கெஞ்சினான்,

முன்சீப் வாய் திறப்பதற்கு முன்பாக அவன் ஏழெட்டுத் தடவை, "வாய்தாவை ஒத்திப் போடுங்கள், எசமான்! வாய்தாவை ஒத்திப் போடுங்கள்" என்று சொல்லிவிட்டான்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. காரணமில்லாமல் கேஸை ஒத்திப் போடக்கூடாது என்பது சட்டம். ஆகவே முன்சீப், 'காரணம் என்ன?' என்று கேட்டார். அதற்கு அவன், "எசமான், நான் என்னத்தைச் சொல்லுவேனுங்க. என் குடிமுழுகிப் போய்விடுங்க. 'ஈரங்கி' போடுங்க. ஈரங்கி போடுங்க" என்று திருப்பித் திருப்பிச் சொன்னான்.

அடிக்கடி காரணம் கேட்டும், அவன் சரியான காரணம் சொல்லாமற் போகவே, "காரணம் சொல்லா விட்டால் கோர்ட்டை விட்டு வெளியேற்றி விடுவேன்," என்றார் முன்சீப்.

உடனே அவன் பயம் தாண்டவமாடுங் குரலில், 'என் விதியை என்னவென்று சொல்லுவேனுங்க. இந்த வழக்குக்காகப் பெரிய வக்கீலை வரச் சொல்லியிருந்தேனுங்க. அவர் இந்த ஆசாமியை அனுப்பி வைத்துவிட்டாருங்க.' என்று சொல்லி என்னைச் சுட்டிக் காட்டினான். எனக்குத் தலை சுற்றியது. மனம் அடித்துக் கொண்டது. இந்தக் குளிரிலும் என் உடல் ஓரேயடியாக வியர்த்துவிட்டது. என்னைச் சுட்டிக் காட்டியவாறே மீண்டும் அவன், 'இவருக்கு ஏதாவது பேசத் தெரிந்தால்தானே, எசமான்?' என்றான்.

இதைக் கேட்டதும் கோர்ட்டிலே 'கொல்' என்ற நகையொலி எழுந்தது. அதற்குள் முன்சீப் அதட்டி, 'என்ன உளறுகிறாய், முட்டாள்!' என்றார். கோர்ட்டிலே சிரிப்பு அடங்கினபாடில்லை. நானும் என் வெட்கத்தைப் போக்க எண்ணி, அசட்டுச் சிரிப்புச் சிரித்தேன் அதற்குள் அந்தப் பாவி, 'எசமான், ஏழைக்கு இரங்குங்க. வாய்தாவை ஒத்தி வையுங்க' என்று கெஞ்சினான்.

முன்சீப் தமக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு, எதிர்க் கட்சி வக்கீலைப் பார்த்து, 'உங்களுக்கு எவ்விதமான ஆட்சேபணையும் இல்லையே!' என்று கேட்டார்.

'எதிர்க் கட்சிக்காரன் எங்கள் நஷ்டத்தை ஈடுசெய்வதாக இருந்தால், எங்களுக்கு எவ்விதமான ஆட்சேபணையும் இல்லை?' என்றார் அவர்.

இதைக் கேட்டதும், என் கட்சிக்காரன், நான் திருப்பிக்கொடுத்த அதே பத்துரூபாய் நோட்டை எடுத்துக் கோர்ட்டாருக்கெதிரே வைத்துவிட்டான். எதிர்க்கட்சி வக்கீல் அதை எடுத்துத் தம் பையில் திணித்துக் கொண்டார். என் கட்சிக்காரன் வெகு தைரியமாக எதிர்க் கட்சி வக்கீலைப்பார்த்து, 'இருக்கட்டும் சொல்லுகிறேன். எங்கள் வக்கீல் வரட்டும். உங்கள் வாயைக்கட்டிப் போடுகிறேன்' என்றான்.

முன்சீப் "இவனைக் கோர்ட்டுக்கு வெளியே கொண்டுபோங்கள்" என்று உத்தரவிட்டார்.

அதற்குள்ளாகவே அவனே கூனிக் குறுகிக்கொண்டு அசடு வழிய வெளியேறிவிட்டான். என்னைப் பார்த்து எல்லாரும் சிரித்தனர். எனக்கோ அவமானம் தலைதூக்க முடியவில்லை. பேசாமல் ஸ்டேஷனை நோக்கி நடையைக் கட்டினேன்.

எதற்காக இந்த வக்கீல் தொழிலுக்குப் படித்தோம் என்றாகிவிட்டது. அன்றைக்கே அந்த வக்கீல் உத்தியோகத்துக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு வாத்தியார் உத்தியோகத்துக்குப் போய்விடுவது என்ற தீர்மானத்துக்குவந்தேன். இந்த ஜூன் மாதத்தில்தான் எல். டி. கோர்ஸில் சேர்ந்தேன். "ஆமாம் நீ இந்த ஊரில்தான் வாத்தியாராக இருக்கிறாயா?" என்று கேட்டான் சேதுராமன்.

"அதையேன் கேட்கிறாய் போ! அந்த வாத்தியார் வேலையை விட்டு நான் லா காலேஜில் சேர்ந்து ஆறுமாதம் ஆகிறது!" என்றேன் நான்.

"என்ன?"

"அது ஒரு பெரிய கதை அப்பா!" என்றேன் நான்.

அதற்குள் ஹோட்டல் ஸர்வர் வந்து, "ஸார், ரொம்ப நாழிகையாக நான்கைந்து பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். சற்று எழுந்து இடம் விட்டால் தேவலை" என்றான்.

நாங்களும் அவசர அவசரமாக இடத்தைக் காலி செய்துவிட்டு, மணற்பரப்பிலே உட்காருவதற்காக நகர்ந்தோம்.

* * *

‘டைகர்’ வரதாசாரியார்

கலாதாஸன்

இசையுலகில் ஒரு தனி ஒளியுடன் பிரகாசித்த ஒரு தீபம் மறைந்துவிட்டது. நமக்கு ஒரு பெரிய நஷ்டம், கர்நாடக சங்கீதத்திற்கு ஒரு மீளாக்குறை. கர்நாடக சங்கீதக்கலை பழையநிலை தளர்ந்து சரியான புதுநிலையொன்றைக் கைப்பற்ற முடியாமல் தத்தளிக்கிற இக்கட்டானக் இந்தக் கட்டத்தில் அவர் மறைந்தது ஒரு துரதிர்ஷ்டம் என்றே கூறலாம். சங்கீத சம்பந்தமான சகல விஷயங்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டியாக விளங்கினார்; சங்கீதச் சர்ச்சைகளில் ஏற்படும் சந்தேகங்களைப் போக்கவல்ல பக்குவத்தையும் அனுபவத்தையும் ஞானத்தையும் பெற்றிருந்தார். இனி இம்மாதிரி சர்ச்சைகளில் சந்தேகங்கள் ஏற்பட்டால் அவைகளைத் தகுந்த அதிகாரத்துடன் நிர்த்தாரணம்செய்ய இந்தமாதிரி வேறு ஒரு அறிஞர் இல்லையே என்று சங்கீத வித்வான்களும் ரசிகர்களும் ஏங்குவது ஞாயம்தான். எங்கும் இந்த நஷ்டத்தைப்பற்றி ஒரே மனதுடன் ஏங்கி வருந்துகிறார்கள்.

எழுபத்துநாலாவது வயதில் இறைவன் பாதம் சேர்ந்தார். ஒருவிதத்தில் அவர் காலம் சென்றது வருந்தத்தக்கதல்ல. இருந்தவரையில் ஒரு ஜோதியாய் விளங்கினார். நாதப்பிரம்மத்திலேயே லயித்திருந்தார், லௌகீக சௌகரியங்களைப் பற்றிக்கூட அவ்வளவு கவனிக்காமல் கலையில் மூழ்கியிருந்தார். போகும் போதும் கஷ்டப்படாமல், இறைவனைத் துதித்துக்கொண்டு இசையமுதை அனுபவித்துக்கொண்டு பரமபதமடைந்தார். அனாயாச மரணம் பெரும்பாக்யமென்பார்கள். தம்மை மறந்து நாதப்பிரம்மத்தை உபாசனை செய்கிறவர்களுக்கு இந்தப் பாக்கியம் கிடைக்குமென்பதை நிதர்சனம் செய்தார்.

கர்நாடக சங்கீதம் சாஸ்திரமாகவும் கலையாகவும் விளங்குகின்றது. சாஸ்திர ரீதியில் முறை, கட்டுப்பாடு, நியமம் இவைகளுக்குப் பிரதானமுண்டு. கலை ரீதியில் மனோதர்மம், கல்பனாசக்தி, உணர்ச்சி இவைகளுக்கு முதல் ஸ்தானம் ஏற்படுகிறது. இந்த இரண்டு பாகங்களும் ஒன்றுபோல் பிரதானத்தை அடைந்திருக்கும்படி பாடுவது சுலபமான காரியமல்ல. ‘டைகர்’ விஷயத்திலோ அவர் சங்கீதம் சாஸ்திரமா, கலையா என்று நிர்ணயிக்க முடியாதபடி ஒரு தனிப் பெருமை பெற்றிருந்தது.

‘தானம்’ பாடுவதில் அவரைவென்றவர்களோ அவருக் கிணையானவர்களோ இல்லை என்று எல்லோரும் நிராக்ஷேபனையாக ஒப்புக்கொள்கிறார்கள். அபூர்வ ராகங்களை அவர் கையாண்டு வந்த முறை சகலரையும் பிரமிக்கச் செய்தது. ராகம் பாடினாலும், கீர்த்தனங்கள் பாடினாலும், தானம் பாடினாலும், பல்லவி பாடினாலும் ‘‘பாவம்’ பொங்கித் ததும்பும். அவர் ஸ்வரம் பாடுவது, ராகம் பாடுவது போலவே இருக்கும், நிரவல் பண்ணினால் அது ராகமா, தானமா, பாட்டா என்று சந்தேகிக்கும்படி அவ்வளவு அழகாக இருக்கும்.

மேலும் அவர் பாட்டு நுனிப்புல் மேயும் காரியமல்ல. ஏதோ தொண்டையிலிருந்து நாக்கின்மூலம் வெளிவருகிறதல்ல. நாபியிலிருந்தே நாதம் கிளம்பும். அவர் தேகத்திலுள்ள ஒவ்வொரு அணுவும் அவருடன்கூடப் பாடுவதுபோல் தோன்றும். . அதனால்தான் அவருடைய

பாணியைப் பின்பற்றுவது சிரமசாத்திய மானது. உயர்தர சங்கீத லக்ஷியங்களை அவரைக்கொண்டு பாடச்சொல்லி இசைத்தட்டு மூலம் பதிவு (record) செய்யாமல் போனது மிகவும் வருந்தத் தக்கதே.

சுபாவத்தில் மிகவும் நல்லவர், நல்ல ஸரஸி, சிநேகத்திற்கு உயர்தர பாத்திரம். ஹாஸ்யச் சுவையிலோ பாரங்கதர். அவருடைய பேச்சைக் கேட்டு ஆனந்தத்தில் ஆழ்ந்தவர்கள் பலருண்டு. அவர் பிறரைக் குறித்துக் குற்றம் சொல்லிக் கேட்டதே கிடையாது. தமக்கு மிகவும் வேண்டியவர்களிடம் அவர்களுடைய குறையைக் கூறும்போதுகூட அவர்களுக்குச் சந்தோஷமே ஏற்படும், மனத்தாங்கல் வரவே வராது. ஒரு சமயம் ஒருகற்றுக் குட்டியான இளம் வித்வானுக்கு ஒரு பெரிய வயது முதிர்ந்த வித்வான் பிடில் வாசிக்க நேர்ந்தது. கச்சேரி முடிந்த பிறகு 'டைகரை'க் கொண்டு நாலு வார்த்தை சொல்லச் சொன்னார்கள். அவர் சொன்ன சாதுர்ய மானமொழிகள். எல்லோரையும் கவர்ந்து விட்டன. அவர் சொன்னவை:

"பாடகர் வயதில் சிறியவரானாலும் நன்றாகப் பாடினார். மேலும் நமது பிடில் வித்வானைப்போன்ற பழைய புலியைப் பக்க மேளமாக அடைந்தும் பயப்படாமல் பாடினது மெச்சத்தக்கது. நிற்க, நமது பிடில் வித்வானைக் குறித்து நான் என்ன சொல்வது! அது ஒருபெரிய சமுத்திரம். எது கிடைத்தாலும் அங்கீகரித்துக் கொள்ளும். நமது கிழக்குச் சமுத்திரத்தில் காவேரிநதியும் சேருகிறது, கோதாவரி, கிருஷ்ணா முதலிய நதிகளும் விழுகின்றன. கூவம் (Coovum) கால்வாயும்போய் விழுகிறது. எல்லாவற்றையும் கடல் ஸ்வீகரிக்கிறதல்லவா? அந்தமாதிரியான விசாலத் தன்மை வாய்ந்தவர்." இப்படிக் கூறினதின் பொருள் அறிந்தவர்கள் அடக்க முடியாமல் சிரித்தார்கள்.

மேலும் "டைகர்" நல்ல பண்டிதர்; 3, 4 பாஷைகளில் தேர்ச்சியுண்டு; நல்ல வாக்கேயக்காரர்; அவர் செய்திருக்கிற அநேக உருப்படிகள் மிகவும் சிலாக்கிய மானவை. அவைகளைத் திரட்டி ஒரு புத்தகமாக வெளியிடவேண்டுமென்று சிலர் தீர்மானித்திருப்பதாய்த் தெரியவருகிறது.

அவர் ஆத்மா சாந்தியடைக! அவர் காட்டின வழியைப் பலர் பின்பற்றுவாராக! அவர் ஏற்றின தீபம் என்றும் மங்காமல் பிரகாசிக்க! அவரது ஞாபகம் இளம் வித்வான்களுக்கு ஊக்கத்தை யளித்து அவர்கள் முன்னேற்றத்துக்கு ஒரு தூண்டுகோலாய் விளங்குக!



லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,
பெரியதெரு, கும்பகோணம்.

LIVER CURE Branch Office,
Parekh Mansion, Sandhurst Road (West),
BOMBAY 4.

லக்ஷியக் கனவு

கே. சுந்தரம்மாள்

அத்தியாயம்—9

"குபு குபுங்குது. புகை கிளம்புது. கொடிகள் செடிகள் கூட வருகுது" என்று சங்கரின் பாட்டி பாடிக் காண்பிப்பது, ஒரு வருஷத்திற்குப் பின் மறுபடியும் நீண்ட பிரயாணமாகக் காதம்பரி வீட்டிற்குச் செல்ல ரயிலில் இரண்டாம் வகுப்பு வண்டியில் உட்கார்ந்திருந்த லீலாவின் மனதில் தோன்றியது. அவ்வண்டியில் மற்றும் ஒரே ஒரு ஆங்கிலோ இந்திய மாது மட்டும் உட்கார்ந்திருந்த படியினால், வாய்க்குள் மெதுவாகப் பாடியும் பார்த்துக் கொண்டாள்.

ஒரு ஸ்டேஷனில் வண்டி நின்றதும், ஆங்கிலோ இந்திய மாது இறங்கிச் சென்று விட்டாள். மறுபடி ஒருவரும் ஏறவில்லை. வண்டி புறப்படும் விசில் கொடுத்தாகிவிட்டது. 'நாம் தனியாக இருக்கிறோமே. வரவர ரயிலில் நடக்கும் ஆபத்துக்கள் அதிகமாகி வருகின்றனவே, வேறு வண்டியில் ஏறுவோமென்றால் விசில் கொடுத்தாகி விட்டது' என்று நினைக்கும் சமயம், பைஜாமாவும் நீண்ட அங்கியும் தரித்து, அடர்ந்த நீண்ட தாடியுடன் ஒருவர் ஏறினார். லீலாவின் ஹ்ருதயம் நின்றுவிடுமோ என்ற நிலைமையில் அடித்துக் கொண்டது. 'இவன் யாரோ என்ன நேரப் போகிறதோ? இதுவரை எவ்வளவோ தடவையில் தனிப் பிரயாணம் செய்திருக்கிறோம். இவ்விதமான நிலைமை ஏற்பட்டதில்லை' என்று குழம்பியவளாக, கைப்பையிலிருந்த ரிவால்வாரைத் தொட்டுப்பார்த்துக்கொண்டு அபாய அறிவிப்புச் சங்கிலி இருக்குமிடத்தையும் பார்த்துக்கொண்டாள். ரயில் புறப்பட்டுவிட்டது.

எதிர் ஸீட்டில் உட்கார்ந்தவரைக் கவனித்தாள். வயது அறுபதுக்குக் கிட்டத்தட்ட இருக்கலாம் எனத் தோன்றினது. கழுத்தளவு தொங்கிய தாடியிலும் நரை தென்பட்டது. ஆனால் தலை ஜடையாகத் தொங்காமல் ஒழுங்காக நேர்வகிடு எடுத்து வாரிவிடப்பட்டிருந்தது. முகத்தில் சாந்தம் ததும்பிற்று. லீலாவின் மனதிலும் சற்றே சாந்தி ஏற்பட்டது. தம் சாமான்களை ஒழுங்குபடுத்திவிட்டு, படுக்கையைப் பிரித்து அதில் சாய்ந்த வண்ணம், "குழந்தாய்! நீ எந்த ஊருக்குச் செல்லுகிறாய்?" என்றார் அன்பாக.

அவரது அன்பானமொழி லீலாவின் அச்சம் முழுவதையும் விலக்கிவிட்டது. "நான் ....ஊர் போகிறேன்; தாங்கள்?" என்றாள்.

"அதே ஊருக்குத்தான் நானும் வருகிறேன். நல்லதாய்ப் போயிற்று. பேச்சுத் துணை. தனியே செல்லும் உனக்கு ஒரு பெரியவர் துணை." என்றார்.

"அதுதான் உங்கள் சொந்த ஊரா?"

"எனக்குச் சொந்த ஊர் இந்த உலகமெல்லாம். உனக்குச் சொந்த ஊர் அதுவா?"

"தாங்கள் வாசித்த ஒலையைத் திருப்ப வேண்டியதுதான். நான்.................ஊரில் கஸ்தூரி நிலயத்தில் உதவித் தலைவியாக வேலைபார்த்து வருகிறேன். நிலயத்தின் கிளைகள் அநேக இடத்தில் உள்ளன. எல்லாம் ஒழுங்காக நடந்து வருகின்றனவா என்று பார்ப்பதற்கு என்னை அனுப்புவார்கள்...............இந்த ஊருக்கு அது விஷயமாகத்தான் போகிறேன். நான் அந்த ஊருக்குச் சென்று ஒரு வருஷமாகிறது. தாங்கள் தமிழ் பேசுவதினால் தமிழ் நாட்டவர் என்று நினைக்கிறேன். ஆனால் உடை..........................."

"நீ நினைத்ததில் தப்பிதமில்லை. தமிழ் நாட்டான்; அதிலும் பிரம்மகுலம். ஊர் சுற்ற இவ்வேஷம் சௌகரியமாயிருக்கிறது. நாலைந்து வருஷ காலமாகப் பதரி நாராயணத்திலே வசித்து வந்தேன். திடீரென்று ஜன்மபூமியைக் காணவேண்டுமென்று அடங்

காத ஆவல் ஏற்பட்டு விட்டது. கிளம்பி வந்தேன்."

"ஜன்ம பூமியில் சொந்த மனிதர் என்பவர் ஒருவர்கூட இல்லையா?"

"இல்லை......................ஆனால்..............ஒரே ஒருவர். குழந்தாய்! உன்னைப் பார்த்தது முதல் என் மனம் என்னையறியாமலேயே நீ என் குழந்தை என்பதுபோன்ற பாசத்தின் வசப்பட்டு விட்டது. அதனால் உன்னிடம் மனம் விட்டுப் பேசவேண்டும்போல் தோன்றுகிறது. எவ்வளவோ பிரயாணங்கள் செய்திருக்கிறேன். எவ்வளவோ பேர்களைச் சந்தித்திருக்கிறேன். ஒருவருடனும் பேசவே இஷ்டமிருக்காது. காரியத்தை வேண்டி, சிலபேர்களிடம் பேசுவேன். அப்படிப்பட்ட என் உள்ளம் உன்னிடம் உள்ளதைத் திறந்து பேசத் தூண்டுகிறது."

"பெரியவரே, முதலில் தாங்கள் ஏறும் பொழுது உங்களைக் கண்டு பயந்தேன். பிறகு சாந்தம் ததும்பும் உங்கள் முகமும் அமிர்த தாரைபோன்ற உங்கள் மொழியும் என்னைத் தைரியம் கொள்ளச்செய்ததுமன்றி, வெகு நாள் பழகியவர் போன்ற உணர்ச்சியும் தோன்றிவிட்டது. அதனால் உங்கள் விருப்பத்தை மனம் விட்டு என்னிடம் சொல்லுங்கள். என்னால் இயன்றதைச் செய்யப் பின் வாங்க மாட்டேன்"

"வீணை வாசிப்பதில் இந்தியா முழுதிலுமே அவளுக்கிணையாகக் கூடியவர் எவருமில்லாத நிலைமையில் அவளுக்கு நிகர் அவளே என்று புகழும் காதம்பரிதேவி அவ்வூரிலேயே இருப்பதாகக் கேள்வி. உனக்கு அவளைத் தெரியுமா?"

"தெரிவதுமட்டுமல்ல. எனது குரு அவரே. நான் இன்று கவலையற்றுச் சுதந்திரப் பறவையாய்த் திரியும் பாக்யம் அவர் அறிந்ததே. உங்களுக்கு அவரைத் தெரியுமா?" என்றாள்.

"காதம்பரியைத் தெரியுமாவா?" என்று வாய்க்குள் சொல்லிக்கொண்டவர் நீண்ட மூச்சு விட்டார். அவ்வளவே அப்படியே படுக்கையில் சாய்ந்தார். கண்கள் மூடின. காலை நீட்டினார். தலை தொங்கலாயிற்று. சுய உணர்வின்றிக் கட்டைபோலாகிவிட்டார்.

லீலா பதறிப் போனாள். "பெரியவரே! பெரியவரே!" என்று காதின்கீழ் கத்தினாள். பயனில்லை. செஞ்சிலுவைச் சங்கத்தில் சேர்ந்திருந்தவளானதினால், முதலுதவி செய்ய முனைந்தாள். தன் கூஜாவிலிருந்த ஜலத்தை எடுத்து முகத்திலடித்தாள். மின்சார விசிறியைச் சுற்றவிட்டாள். விழிக்கவில்லை. ரயிலோ ஓடிக்கொண்டே இருந்தது. அப்பொழுதுதான் ஒரு ஸ்டேஷனிலிருந்து புறப்பட்டது வண்டி. வட இந்திய பிரயாணத்தில் ஸ்டேஷன்களைச் சீக்கிரத்தில் காண முடியாது என்ற நிலையில் பல தடவை பிரயாணம் செய்த லீலா ஸ்டேஷன் உதவியை எதிர்பார்க்க முடியுமா? சற்று நேரம் செய்வதறியாமல் திகைத்தாள். பிறகு ஏதோ நினைவு வந்தவளாகப் பெட்டியைத் திறந்து ஒரு பாட்டிலை எடுத்துச் சிறிதளவு மூடியைத் திறந்து மூக்கில் பிடித்தாள். இரண்டு நிமிஷங்கள் சென்றன. கண்களைத் திறந்தார். அம்மா! என்ற நீண்ட மூச்சுடன் பாட்டிலைப் பெட்டியில் வைத்துவிட்டு, சிறிது தண்ணீரை வாய்க்குள் செலுத்தினாள். நன்றாக விழித்துப் பார்த்தார்.

"பெரியவரே இப்பொழுது எப்படி இருக்கிறது?" என்றாள்.

"ஒன்றுமில்லை. மயக்கம் தெளிந்து விட்டது. இனி சரியாகப் போய் விடும். அந்தச் சிறிய பெட்டியில் ஓர் கறுப்புப் பாட்டில் இருக்கிறது. அதை எடுத்துக் கொடு" என்றார் ஈனஸ்வரத்தில்.

பெட்டியை எடுத்துத் திறக்கும் பொழுது, 'சுதர்மன்' என்று பெயர் பெட்டியின் மீது எழுதியிருப்பதைக் கண்டதும் க்ஷண நேரச் சிந்தனை ஓடிற்று. இவர் காதம்பரியின் சுதர்மனா? அப்படியானால் என்னே விதியின் விசித்ரம் என்று எண்ணியவளாகப் பாட்டிலை அவரிடம் கொடுத்தாள்.

அதிலிருந்து ஒரு மடக்குக் குடித்தார். சற்று நேரம் கண்களை மூடியபடி படுத்திருந்தார். அந்தச் சில நிமிஷங்களிலும் லீலாவின் மனதில் அநேக எண்ண அலைகள் வந்து கலைந்தன.

மெதுவாக எழுந்து சாய்ந்து உட்கார்ந்து கொண்டு' "குழந்தாய், பயப்படாதே. எனக்கு உடம்பிற்கு ஒன்றுமில்லை. காதம்பரியைப் பற்றிய நினைவு மறக்க முயன்றும் முடியாததாயிற்று. ஆனாலும் அதிக துயரத்துடன் சில சமயம் நினைத்து, மனோ வேதனை அதிகமாகும் சமயம் இந்த மயக்கம் ஏற்பட்டுவிடும். யாராவது பக்கத்திலிருந்தால் ஏதோ சிகித்சை செய்து எழுப்புவார்கள். தனிமையில் இருந்தால் ஒரு மணி நேரம் இப்படியே கிடப்பேன். பிறகு தானாக உணர்வு வரும். இந்த மருந்தைச் சாப்பிடுவேன். இது சர்வ சகஜம். இப்படியே இறந்து போனாலும் கவலையில்லை. யாராவது எடுத்துக் கொளுத்திவிடுவார்கள். அப்படி நேர்ந்தால் என் முடிவைக் காதம்பரிக்கு அறிவிக்க வேண்டி, பத்திரிகையில் பிரசுரிக்கும் குறிப்பு ஒன்று எழுதி,

பாக்கெட்டில் வைத்துக்கொண்டிருக்கிறேன். எப்படியும் சட்டைப்பைகளைச் சோதனைசெய் வார்கள். அவர்களை இப்படி செய்ய வேண் டும் என்பதாக எழுதி வைத்திருக்கிறேன். காதம்பரியின் பெயரும் எழுதியிருக்கிறது. அவளின் புகைப் படமும் இருக்கிறது. இப் பொழுது அவளைப் பார்க்க வேண்டும் என்றே புறப்பட்டேன். ஆனால் நான் இன்னாரென்று சொல்லிக் கொள்ளாமல், பிச்சைக்காரனைப் போல் அவள் வீடு தேடிச் சென்று பார்க்கும் உத்தேசத்துடன் புறப்பட்டேன். தெய்வம் எனக்கு உதவி செய்ய உன்னை அனுப்பியது போலும். தற்சமயம் அவள் என்ன செய் கிறாள்? அவள் அண்ணா என்ன செய்கிறார் என்ற விபரம் சொல்லு. பிறகு நான் யார் என்பதைச் சொல்லுகிறேன்'' என்று முடித் தார்.

''பெரியவரே, நான் கேட்பது தவறாக இருந் தால் மன்னியுங்கள். தாங்கள் தான் காதம் பரி தேவிக்கு வீணை கற்பித்த 'சுதர்மன்' என்று எண்ணுகிறேன்.''

''நீ நினைத்தது சரியே. எப்படியறிந்தாய்''

''பெட்டியின்மீது உங்கள் பெயரைப் பார்த் தேன். காதம்பரியும் நானும் வயதில் அதிக வித்தியாசப்பட்டிருந்த போதிலும் சம வய துள்ள தோழிகள்போல் அந்தரங்கங்களைப் பரிமாறிக்கொள்ளுவோம். அதனால் காதம் பரியின் பூர்வாச்ரம விஷயம் முழுவதும் எனக்குத் தெரியும்.''

''ரொம்ப சந்தோஷம். உன் உதவியிருப் பதினால் பிச்சைக்கார வேஷமில்லாமல் அவ ளைப் பார்க்கலாம். அவள் என்ன செய்து கொண்டிருக்கிறாள்? சொல்லேன் கேட் போம்.''

''பெரியவரே, மன்னிக்கவேண்டும். அவ ளின் நினைப்பிற்கே மயக்கம் வந்து விட்டது. மற்றும் சங்கதிகளைக் கேட்டால், உங்கள் நிலைமை என்னாகுமோ? அதனால் கேட்கா மலிருப்பதே நலம்.''

''பயப்படாதே குழந்தாய். இனி ஒரு மாதத்திற்கு இந்த மயக்கம் வராது. என்ன நினைத்து ஏங்கினாலும் எந்தவிதமான சங்கதி யானாலும் சொல்லு; பாதகமில்லை.''

''எப்படிச் சொல்வது? என் நா எழும்ப வில்லையே.''

''தயங்காதே குழந்தாய். என் வாழ்வில் அதிர்ச்சி கொடுக்கும் சம்பவம் புதிதாக ஒன் றும் ஏற்படப் போவதில்லை. நீ தயங்குவதி லிருந்து அவள் ஏதோ குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறாள் என்று நினைக்கிறேன். ஆனாலும் பரவாயில்லை, சொல்லு. அவள் ஹ்ருதயபூர்வமாக என்னை மறந்து வாழ்க்கை நடத்தமாட்டாள்''

''பெரியவரே, காலதேவனின் களி நடனத் தில் ஒவ்வொரு தாளத்தின் அடிக்கும் மாந் தரின் மன நிலை பலியாகி விடுகிறது. மாந் தர் மீது குற்றம் சுமத்துவதில் பயன்?''

''குழந்தாய், நீ வயதில் சிறியவளானாலும் அறிவில் பெரியவளாகத் தோன்றுகிறாய். திடீரென்று விஷயம் தெரியக்கூடாது என்று சாதுர்யமாகத் தெரிவிக்கிறாய். அதைப் பற்றி நான் வருந்தமாட்டேன். அவள் சந் தோஷமாக இருந்தால் அதுவே எனது ஆத்ம திருப்தி.''

''பெரியவரே, வயதுசென்ற கிழவர்கள் இளம் பெண்களை மணம்செய்துகொண்டு பெண்ணின் வாழ்க்கையை நாசமாக்குவது போல், இளங்காளை தனக்குப் பத்துப்பதி னைந்து மூத்தவளான விதவையை மணம் செய்துகொண்டு, ஆண் சமூகத்தைப் பழி வாங்கவேண்டும் என்று கங்கணம் கட்டிய ஓர் லக்ஷிய வாலிபனை, தனக்குப் பத்து வய திற்கிளையவரை மணந்து சுகஸௌக்யமாகக் குடும்பவாழ்க்கை நடத்திக்கொண்டு வருகி றாள் காதம்பரி. பொதுஜன சேவையை அவள் விட்டுவிட்டதாகச் சொல்லுகிறாள். ஆனால் அது அவளைவிடாமல் பிடித்துக் கொள்ளுகிறது.'' என்று காதம்பரி தான் கல் யாணம் செய்துகொள்ளத் துணிந்த கார ணத்தை லீலாவிடம் சொன்னதை அப் படியே அவரிடம் எடுத்துரைத்தாள்.

''ஆஹா! ஆனந்தம். லக்ஷ்மணனின் லக்ஷி யம் கனவாகிவிட்டதா? பாவம்! இயற் கைக்குப் புறம்பான லக்ஷியத்திற்காக மஹத் தான தியாக வாழ்க்கை நடத்தினான். இப் பொழுது எவ்விடமிருக்கிறான்,?''

''பிள்ளையினிடம் சில காலமும் காதம்பரி யினிடம் சில காலமுமாக இருந்துவருகிறார். தற்சமயம் பிள்ளையினிடம் இருக்கிறார். இன் னும் நாலு நாளில் இவ்விடம் வருவதாகக் கேள்வி.''

''சரி, காதம்பரியின் அந்தரங்கத் தோழி யாகிய நீ ஏன் மறுமணம் செய்துகொள்ள வில்லை?''

''முதல் மணமே ஆகவில்லையே ஸ்வாமி பிறகு மறுமணம் எப்படி?''

''ஏனம்மா மணம் செய்துகொள்ளவில்லை? பெண்கள் தனிவாழ்க்கை சிறப்புறும் என்ற எண்ணமா?''

''தனி வாழ்க்கையை நானாகவிரும்பவில்லை. அதுவாக ஏற்பட்டுவிட்டது. அந்த நிலைமை

யில் அதுவே சிறப்பு என்று நடத்திவருகிறேன்.''

''குழந்தாய்! காரணத்தை நான் அறியலாகுமோ?''

''இதுவரை எனது அந்தரங்க விஷயத்தை ஒருவரிடமும் சொன்னதில்லை. தங்களைக் கண்டதுமே தகப்பனைப்போன்ற பாசம் ஏற்பட்டுவிட்டது. மேலும் நீங்களும், நானும் தற்சமயம் ஒரேவிதமான சுழலில்சிக்கியிருக்கிறோம். அதனால் தாராளமாகச் சொல்லுகிறேன். உமது காதலி எனது காதலனை மணந்தாள். அதுதான் காரணம்.''

''அஹாஹா! என்ன அற்புதமான விதியின் விளையாட்டு! அதிருக்கட்டும், அவன் யார் அந்த மடையன்? அப்ஸரஸ்போன்ற உன்னைவிட்டு, காதம்பரியை விரும்பியது?''

''அது காதல் மணமல்ல. லக்ஷிய மணம் ஸ்வாமி!''

''அழகான லக்ஷியம். இயற்கைக்குப் புறம்பான, ஒருவருக்கும் நன்மை ஏற்படாத லக்ஷியம். கனவுகாண்பதை வாழ்க்கையில் நடத்திப் பார்க்கிறீர்களோ, சரி. அவன் எந்த ஊர்க்காரன்?''

''பெரியவரே, அவர்கள் குடும்பகௌரவம் காப்பாற்றப்பட இன்றுவரை வெளியிடாத விஷயங்களை இதோ உங்களிடம் கூறப்போகிறேன். ஏனென்றால் தாங்கள் இதைப்பற்றி சிரத்தைகொள்ளமாட்டீர்கள் என்பதே.'' என்று தான் பிறந்ததிலிருந்து அன்றுவரை நடந்த விஷயங்கள் முழுவதையும் சொல்லி முடித்தாள்.

''குழந்தாய்! வெகு சமீபத்திலேயே வந்துவிட்டாயே! உனது சித்தப்பா ஒருவரைப் பற்றி உன் தாய் சொல்லியிருக்கிறாளா உன்னிடத்தில்?''

''சொல்லியிருக்கிறாள்; சிறுபிள்ளை முதல் சங்கீதத்திலேயே பற்றுக்கொண்டிருந்தாராம். தகப்பனார் மகன் படித்துப் பட்டம் பெறவேண்டுமென்று விரும்பினாராம். படிப்பில் அவர் கவனம் செல்லவில்லை. பக்கத்துக் கிராமத்தில் ஓர்வீணைவித்வான் இருந்தாராம். தகப்பனாருக்குத் தெரியாமல் அவரிடம் வீணை பயின்று மிகவும் நன்றாக வீணை வாசிப்பாராம். S. S. L. C. மூன்று முறை கோட்டடித்துவிட்டாராம். தகப்பனார் மிகவும் கோபிக்க, படித்தது போதும் என்று உத்தியோகம் தேடினாராம். உயர்ந்த உத்யோகஸ்தர் ஒருவர் பெண்ணைக்கொடுத்து உத்யோகமும் செய்துவைப்பதாகச் சொன்னாராம். தகப்பனார் சம்மதித்தாராம். ஆனால் அவர் வீணைவித்வானின் தாயற்ற ஓரேபெண்ணைக் கல்யாணம் செய்துகொள்வதாகச் சொன்னாராம். அவள் நல்லஅழகியாம். நன்றாக வீணை வாசிப்பாளாம். கணீரென்ற இனிமையான சாரீரமாம். இந்த விஷயத்தில் தகப்பனாருக்கும் மகனுக்கும் விவாதமேற்பட்டு வீணை வித்வான் பெண்ணை மணப்பதானால் அந்த க்ஷணமே வீட்டைவிட்டுப் போகவேண்டுமென்று சொல்லிவிட்டாராம். அன்று சென்றவர் மறுபடி திரும்பவில்லையாம். வீணைவித்வான் பெண்ணை மணந்துகொண்டு மலேயாவிற்குச் சென்றுவிட்டதாகக் கேள்விதானாம். பிறகு இருக்கிறார் இல்லையென்ற செய்தியே தெரியவில்லையாம். அவரை உங்களுக்குத் தெரியுமா? உயிருடனிருக்கிறாரா?''

''உன் முன்னால் உட்கார்ந்திருக்கும் துர்ப்பாக்யன்தான் உனது சித்தப்பா என்றால் நீ நம்புவாயா?''

''என்ன? தாங்களா? சித்தப்பா! பகவானின் கருணை. அனாதை என்று ஏங்கிய எனக்கு ஒரு தந்தையை அளித்தார். சித்தப்பா, உங்கள் வாழ்க்கை முழுவதும் நீங்கள் கண்டது ஏமாற்றம் தானா? எதனால் மதிக் குறைவினாலா? விதியின் சதியினாலா?''

''மதிக்குறைவோ? விதியின் விசித்ரமோ? சில பேர்களுக்கு வாழ்க்கையில் நல்லது என்பது குதிரைக் கொம்பாகி விடுகிறது. அதற்கு யாரை நோவது? நொந்து பயன்? அது போகட்டும். என் வாழ்க்கைப் பிரயாணம் முடிவை நெருங்கி விட்டது. இனி எப்படியிருந்தாலும் அக்கறையில்லை. நீ ஏன் இவ்விதம் காலம் கழிக்க வேண்டும்? அன்றே நீ காதம்பரியினிடம் உண்மையைச் சொல்லியிருந்தாயானால், நிச்சயம் உன் வாழ்வில் குறுக்கிட்டிருக்கவேமாட்டாள். அவள் குணம் அத்தகையது. இப்பொழுது தானென்ன? ஒரு வார்த்தை உண்மை தெரிந்தால் போதும் உன்னிடம் ஒப்புவித்து விடுவாள். அவளின் அழகைப் பார்த்து நான் விரும்பவில்லை. அவள் குணத்திற்கே அடிமையானேன். லீலா! எங்கள் குலம் விளங்க நீ ஒருத்தி தானிருக்கிறாய்? உன்வாழ்வு இப்படியானால்?''

''உங்கள் குலம் இத்துடன் முடியவேண்டியது விதியின் கட்டளைபோலும்! அதுதான் நம்மிருவர் வாழ்வும் இவ்விதம் அமைந்தது. சித்தப்பா, தாங்கள் எவ்விதம் அவள் குணத்திற்கு அடிமையானீர்களோ நானும் அவளின் குணத்திற்கே என் வாழ்வை ஈடுசெய்தேன். பாவம்! அவள் வாழ்க்கைப் பாதையில் வலது காலை ஊன்றும்பொழுதே வழுக்கிவிட்டது. சமாளித்துக் கொண்டு ஏற முயற்சிக்கும் பொழுது தடுப்பதாபெரியகாரியம்? மேலும் லக்ஷிய புருஷரானவர்தான் என்னை விட்டு

விட்டார். விதியின் செயலால் எனது நன்மையையே நாடிய அருங்குணமணியாகிய காதம்பரியே லக்ஷிய வாழ்க்கைக்குப் பாத்திரவதி என்பது எனக்கு எவ்வளவு ஆனந்தத்தையும் திருப்தியையும் கொடுக்கிறது. தியாகத்தின் ஜோதியில் வாழ்க்கைப்பாதையை வகுத்தால்? எந்த விதமான முடிவிற்கு வரலாம் என்பதைச் சிந்தனை செய்யுங்கள்.''

''ஆனால், காதம்பரியும் அவனும் ஹ்ருதய பூர்வமான காதலுடன் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்று நம்புகிறாயா?''

''காதல் மண்ணாங்கட்டி, அதன் நம்பிக்கையே போய்விட்டது. காதலின் சொரூபமாகிய, ரோமியோ ஜூலியட், லைலா மஜ்னூன், அம்பிகாபதி அமராவதி என்ன சுகத்தைக்கண்டார்கள். நான் தான் என்ன கண்டேன், நீங்கள் தான் என்ன கண்டீர்கள்? அவ்விதமேஅவர்கள் வாழ்க்கையைப் பார்க்க ரஸமாகவே தோன்றுகிறது. அவ்வளவு போதும்''

''நான் சொல்லுவதைக் கேள். நம்முள் இருதார வாழ்க்கை எவ்வளவுபேர் நடத்தவில்லை? அவ்விடம் சென்றபின்பு காதம்பரியினிடம் நான் இன்னாரெனத் தெரிவிக்காமல் உனது சித்தப்பாவாகவே நடித்து, உன் விஷயத்தைச் சொல்லுகிறேன். மறு நிமிஷமே கைகூடிவிடும். அதுதான் யாருக்கும் நன்மை.''

''சித்தப்பா! நீங்களும் நானும் அவர்மீது வைத்திருக்கும் அன்பிற்கு இதைவிட வேறு துரோகம் கிடையாது.''

''ஏன் அவ்விதம் எண்ணுகிறாய்?''

''ஆண்பிள்ளைகள் என்று சொல்லுவதினால் நீங்கள் வருத்தப்படக்கூடாது. அப்படி நடந்தால், சுயநலங் கருதும் தன்மை என்னை அதிக அன்பிற்கு ஆளாக்கிவிடும். லக்ஷியபுருஷரானவர் வாய்ச்சொல்லில் வீரம் பேசினார். செயலில் இறங்கியபின் தவிக்கிறார். ஒருவருஷகாலமாக அவர்கள் இருக்குமிடமே செல்லாமலிருந்ததற்குக் காரணம் இருக்கிறது. ஆண்பிள்ளையின் சுயநலத்தை என்னிடமே காண்பித்துவிட்டார். அதனால் அந்த நினைப்பைத் தாங்கள் விட்டுவிட வேண்டும். என் மனம் தியாகத்தில் வெற்றி கண்டுவிட்டது. வருத்தமோ சஞ்சலமோ ஒன்றிற்கும் இடமளிக்காது. என்வாழ்க்கைப்

குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்கரேயின் பாலாம்ருதம்

K. T. டோங்கரே அண் கோ., பம்பாய்-4.

படகு இத்துறையிலேயே சென்று கரையைக் கண்டுபிடித்துவிடும்.''

"நீ இவ்விதம் திருப்திப்படுகிறாய். என் காதம்பரி இவ்விதச் செயலிற்கு இலக்காகி விட்டாளே என்று என்மனம் தாபமடைகிறது.''

''சித்தப்பா, உங்கள் அன்பு போற்றத்தக்கது. காதம்பரி பாக்யவதியே. இப்பேச்சு இத்துடன் முடிவடையட்டும். இனி நடக்கவேண்டிய விஷயத்தைப்பேசுவோம். தாங்கள் இனி எங்குமே செல்லக்கூடாது. நிலயத்தில் உங்கள் போலுள்ளவர் (என் தந்தை) என்னுடன் தங்குவதில் தடை ஒன்றும் கிடையாது. இப்பொழுது போகும் விவகாரம் முடிய ஒரு மாதமாகும். அது வரை அவர்கள் பங்களாவின் தோட்டத்திலுள்ள அவுட் ஹவுஸில் தான் தங்கியிருப்பேன். பங்களாவிற்கும் அதற்கும் ஒருபர்லாங் தூரமிருக்கும். அதனால் ஒருவருக்கொருவர் அடிக்கடி பார்த்துக்கொள்ளமுடியாது. முக்கிய விஷயமென்றால் காதம்பரி நானிருக்குமிடம் வருவாள். அல்லது நான் போவேன். எப்படியோ நான் போவது அதிகமிருக்காது. அவள் தான் தினம் மத்யானம் மூன்றுமணி சுமாருக்கு வந்து பத்துநிமிஷம் பேசிவிட்டுப் போவாள். அதனால் நீங்கள் அவளைப் பார்க்கலாம். ஏன்? பேசக்கூடச்செய்யலாம். அநேகமாக உங்களை அடையாளம் கண்டு கொள்ள முடியாது. ஒரு கூலிங் கிளாஸைக் கண்ணில் மாட்டிக்கொண்டுவிட்டால் கவலையே இல்லை. சரிதானா நான் சொல்லுவது?''

"ரொம்ப சரி. நல்லவேளை, என் வீணையைக் கொண்டு வரவில்லை, வந்திருந்தால் என் வீணை என்னைக் காட்டிக் கொடுத்துவிடும். அதை அவள் மறந்திருக்கவே மாட்டாள்.''

"வீணையை எங்கே வைத்திருக்கிறீர்கள்?''

''அப்பொழுது ஏறினேனே அந்த ஊரில் ஒரு ரூம் வாடகைக்கு எடுத்து, சில சாமான்களைப் போட்டு வைத்தேன். இரண்டு நாளில் திரும்ப வீணை வேண்டாம் என்று பூட்டி வைத்துவிட்டு வந்தேன்.''

"உங்களுக்குப் பொழுதுபோக வாசிக்க வேண்டுமானால் என் வீணை இருக்கிறது. நான் தங்கும் விடுதியில் நாலு அறைகள் இருக்கின்றன. ஒரு அறையில் நீங்கள் இருக்கலாம். நேற்றே என் சாமான்களுடன் ஒரு அம்மாள் போயிருக்கிறாள். அதனால் நாம் போகும்பொழுது சாப்பாடு தயாராக இருக்கும். ஸ்டேஷனுக்கு வண்டிகொண்டு காதம்பரியே வரலாம். தாங்கள் என் சித்தப்பா, வெகு நாளைக்கப்புறம் வந்திருக்கிறார் என்று 'சொல்லிவிடுகிறேன், சரிதானே''.

"ஆமாம்! என்னே அற்புதம்! நான் வண்டியேறும்பொழுது நினைத்த எண்ணம் என்ன? நடந்ததென்ன?''

"எதிர் பார்ப்பது நடவாது என்பது மாந்தர் வாழ்வில் அதிசயமல்லவே சித்தப்பா? எனக்கு அளவற்ற குதூகலமாக இருக்கிறது. உங்களைக்கண்டதில் நானும் வண்டியேறும் பொழுது பலவித சிந்தனைகளால் அலைக்கப்பட்டேன், அவ்வூருக்குச்சென்று லக்ஷிய புருஷரின் கண்ணில் படாமல் காலம் கடத்தவேண்டுமேயென்று. தக்கதுணையாகத் தாங்களும் வந்து சேர்ந்தீர்கள்.''

" ஏன்? அவ்விதக் கவலை உன்னைத் தெரிந்து கொண்டுவிட்டானா?''

"எப்படித் தெரியாமலிருக்க முடியும் சித்தப்பா? இன்னும் இளமை மாறவில்லையே. லக்ஷியவாழ்க்கை ஒருவருஷத்திலேயே சப்பிட்டுவிட்டது. அதற்கு நானா ஜவாப்தாரி?''

''லீலா! உன் கொள்கையும் உறுதியும் மெச்சத்தகுந்தவை''

பிரயாணம் முழுவதும் பேச்சில் கழிந்தது. வண்டி ஸ்டேஷனுக்குள் வரும்பொழுது தலையை வெளியில் நீட்டிப் பார்த்த லீலா ''சித்தப்பா, காதம்பரி வந்திருக்கிறாள்'' என்றாள்.

சட்டெனக் கண்ணாடியைக் கண்ணில் மாட்டிக் கொண்டு இறங்கத் தயாரானார்; வண்டி நின்றதும்.

''ஹலோ! குட்மார்னிங் லீலா'' என்று கையைப் பிடித்துக் கீழே இறக்கினாள் காதம்பரி லீலாவை.''

''சித்தப்பா, நீங்கள் இறங்குங்கள். போர்ட்டர் சாமான்களை எடுத்து வைப்பான்" என்றாள் லீலா.

"இது யார் லீலா?'' என்றாள் காதம்பரி.

''சிறு வயதில் குடும்பத்தை விட்டு வெளியே சென்றிருந்த என் சித்தப்பாவை நேற்று ரயிலில் கண்டு பிடித்தேன். பிறகு விட்டு விடுவேனா? கூடவே அழைத்து வந்தேன்.''

''அப்படியா! சந்தோஷம். நமஸ்தேபாபுஜி'' என்று கைகுவித்தாள் காதம்பரி.

''நமஸ்தே" என்று பதிலுக்குச் சொல்லி விட்டு மறுபக்கம் திரும்பிக் கொண்டார்.

வண்டியில் போகும் பொழுது டிரைவரின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் சுதர்மனை நோக்கி, "லீலாவின் சித்தப்பா எனக்கும் சித்தப்பா தான். நீங்கள் என் அதிதியா

கவும் சில நாள் தங்கவேண்டும் சித்தப்பா'' என்றாள் காதம்பரி.

''அதற்கென்ன? அப்படியே செய்தால் போச்சு'' என்றார் பதில்.

லீலாவின் சாமான்களைச் சரிபார்த்து விட்டு, ஸ்னானம் சாப்பாட்டை முடித்துக் கொண்டு ''சற்று நேரம் சிரமம் நீங்கத் தூங்குங்கள். நான் சாயங்காலம் வருகிறேன்'' என்று சொல்லிச்சென்றாள் காதம்பரி.

அன்று பௌர்ணமியானதினால் லீலா விளக்கைப் போடாமல் கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தாலும் பக்கத்திலுள்ள ஜன்னலின் வழியாக வந்த நிலா வெளிச்சத்தில் அவள்கையிலிருக்கும் லாக்கெட்டிலுள்ள படம் தெளிவாகத் தெரிந்தது. அதையே நோக்கியவண்ணமிருந்தாள்.

விரல்களினால் கதவைத்தட்டும் சப்தம் கேட்டது. சற்று நிதானித்துக் கேட்டாள். மறுபடியும் அதேசப்தம். "யார்! சித்தப்பாவா? இல்லை; அவர் இவ்விதம்தட்டமாட்டார். பின் யார்?" சிந்தனையிலாழ்ந்தாள். மறுபடியும் அதே சப்தம்.

"யார் கதவைத் தட்டுவது?" என்றாள் அதட்டலாக.

பதிலில்லை. மறுபடியும் கதவுதட்டும் சப்தம்.

சட்டென எழுந்து விளக்கைப்போட்டு, தலையணைக்கடியிலிருந்த சிறிய கைத்துப்பாக்கியை எடுத்து இடுப்பில் சொருகிக்கொண்டு தாழ்ப்பாளை நீக்கிவிட்டு, ஒரு கதவைமட்டும் திறந்தாள். சங்கர் நிற்பதைக் கண்டதும்,

"ஓ. நீங்களா? ஏது இந்நேரத்தில் இவ்விடம் விஜயம்! காதம்பரிதேவி வரவே இன்னும் இரண்டுநாள்செல்லுமே. மறதியாக இவ்விடம் தேடிவந்தீர்களா? இல்லை இவ்விடம்."

"அது விஷயம் மறக்கவில்லை. உன்னைத் தேடித்தான் வந்தேன்."

"என்னைத் தேடிவரும் நேரம் நன்றாக இருக்கிறதே!"

"நன்றாக இருப்பதற்கென்ன? மத்யான வேளைகளில் இருவருக்குமே வெளியில் வேலையிருக்கிறது. அதனால் இது சமயம்தான் ஓழிவு நேரம்."

"அப்படி என்ன அவசரமான விஷயம்? முக்யமென்றால் ரத்னச்சுருக்கமாகச் சொல்லிவிட்டு இப்படியே சென்றுவிடுங்கள். இல்லையானால் நாளைக்காலை ஏழுமணிக்கு நானே உங்கள் இருப்பிடம் வருகிறேன். அல்லது நீங்கள் இவ்விடம் வரலாம்."

"காலைவரை காத்திருக்க முடியாது. இவ்விடம் நின்றும் பேச முடியாது. சற்று வழிவிடு உள்ளே வருகிறேன்."

"சங்கர்! மன்னிக்கவேண்டும். தாங்கள் இப்படியே திரும்பவேண்டும். நான் வழிவிடமாட்டேன்."

"லீலா, என்னால் இனி பொறுக்க முடியாது. வழிவிடாதுபோனால் உன்னை விலக்கிக் கொண்டு செல்ல எனக்கு உரிமையுண்டு. அப்படிச் செய்யாதுபோனால் இவ்விடமே சத்யாக்ரஹம் செய்வேன். ஒன்று என் குறையைக்கேட்டு என்னை ஏற்றுக்கொள்ளவேண்டும்; அல்லது நான் இங்கே மடியவேண்டும்"

"இரண்டும் நடக்கப்போவதில்லை"

"லீலா!" என்றான் குரல் கம்மிற்று.

நிமிர்ந்து நோக்கினாள். அவன் கண்களில் நீர் பளபளத்தது. சட்டென மறுபுறம் முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

சற்றுநேரம் மௌனம் நிலவியது. சட்டென அவளின் இரு தோள்களிலும் இரு கையை வைத்து அவளைத் திருப்பிவிட்டு உள்ளேசென்று மேஜையருகிலிருக்கும் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான்.

அவன் கண்களில் கண்ணீரைக்கண்டதும் அவள் மனம் மிக்க வேதனையடைந்துவிட்டது. அந்த உணர்ச்சியின் வசப்பட்டிருக்கும் சமயம் அவள் தோளைப்பிடித்துத் திருப்பியதில் அவளுக்கு யாதொன்றும் செய்யத் தோன்றவில்லை. அவன் நாற்காலியில் உட்கார்ந்ததும் அவளும் மௌனமாகவே சென்று கட்டிலின்மீது விரித்திருக்கும் படுக்கையில் அவனுக்கெதிராக உட்கார்ந்துகொண்டாள். சற்றுப்பொறுத்து, "என்னை நாடிவந்த விஷயம் என்னவோ?" என்றாள்.

"விஷயம் உன்னை நாடிவந்ததுதான்."

"சங்கர்! என்னையேன் இப்படி வதை செய்கிறீர்கள். அருமையான உங்கள் லக்ஷியத்திற்கு என் வாழ்க்கை பலியாகியது. ஏதோ எல்லாவற்றையும் மறந்து கண்யமான முறையில் வாழ்க்கை நடத்திவருகிறேனே அதுகூடப் பொறுக்கவில்லையா? இந்த வேளையில் இவ்விடம் நாம் தனிமையில் பேசிக்கொண்டிருப்பதை யாராவது பார்த்தால் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்? காதம்பரிதேவி காதிற் கெட்டுமானால் என்னை எவ்விதம் மதிப்பாள்? உதிர்ந்த புஷ்பத்தை ஒட்டவைக்க விரும்புவது சாத்யமாகுமா?"

"உதிர்ந்த புஷ்பத்தை ஒட்டவைக்க விரும்பவில்லை, உதிராத புஷ்பமானது காலக்காற்றில் சுழன்று கிளையினால் உயரக்கொண்டுபோகப்படுவதைப் பிரயத்தனம் செய்து எட்டி மோக்கவே விரும்புகிறேன்."

"உங்கள் விருப்பம் அசாத்யமானது, அசத்யமானது."

"அசாத்யமானதோ, அசத்யமானதோ, இனி நீ இல்லையேல் என் வாழ்வுமில்லை. நீ வந்ததுமுதல் என் மனம் அடையும் தாபம் சொல்லில் அடங்காது. எவ்வளவோ முயன்

றும் சாத்யமாகவில்லை. எவ்வளவோ சிந்தனை செய்துதான் முடிவான தீர்மானத்திற்கு வந்தேன்.''

''ஓ. காதம்பரி பக்கத்திலில்லாததினால் பித்தம் தலைக்கேறிவிட்டதுபோலும். போக்கில்லாமல் ஒருத்தி இருக்கிறாளே, அவளிடத்தில் புலம்பி, பித்தந்தெளியலாமென்று வந்தீர்கள் போலும். பகூத் அச்சா''!

''லீலா! நீ எய்யும் எத்தகைய சொல்லம்புகளையும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவே வந்திருக்கிறேன்.''

''அப்படி ஒருவரும் இவ்விடம் வருந்தி அழைக்கவில்லையே.''

''நீ அழைக்கவில்லை. உன் உள்ளம் என்னை அழைத்தது?''

''இப்படிப் பேச என்ன தைரியம்?''

''இது தைரியமல்ல. உரிமை''

''உரிமை! அதுபோய் எத்தனை ஆண்டுகள் மாறிவிட்டன. சங்கர், வீண்பேச்சுப் பேசிக்கொண்டிருக்க எனக்கு அவகாசமில்லை. தயவுசெய்து போய்விடுங்கள்''

''வீண்பேச்சுப்பேச நான் வரவில்லை. முக்யமான என் உயிரினுமினிய விஷயத்தைப் பேசவிடாமல் நீதான் மடக்குகிறாய்''

''சரி, நீங்கள் சொல்லவேண்டியவைகளைச் சொல்லுங்கள். பொறுமையாகக்கேட்கிறேன். சீக்ரமாக முடித்துவிட்டுப் போய்விடுங்கள்.''

''மஹாராணி உத்தரவுப்படி நடக்கக் காத்திருக்கிறேன். இந்தமட்டுமாவது மனமிரங்கியதற்கு வந்தனம்.'' என்று கைகுவித்தான். ''இரண்டு வருஷத்திற்குமுன், தனிமையில் உன்னை நினைந்து வாழ்ந்துவந்த நாட்களில் இருந்த இன்பமும், சாந்தியுங்கூட இந்த இரண்டு வருஷத்தில் இல்லை. சொல்லப் போனால் ஏக்கமும் சாந்தியின்மையுமே அதிகம். காதம்பரி குணவதி. என்னிடம் வைத்துள்ள அன்பும் பக்தியும் அளவற்றவைதான். ஆனாலும் சூழ் நிலை இன்பமளிக்கவில்லை.''

''என்ன பொய்! என்ன சாகஸம்! வெளியிலிருந்துவந்ததும் 'நீ கொடுக்கும் மருந்து இல்லாததினால் சுணக்கம். கொடுத்துவிட்டாயல்லவா? இனி மேல் குஷிதான்' என்று சொன்னது இந்தவாய் தான். ஜோடியாக உலாவப்போவதும், ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுவதும் கற்பனையோ? போதும் இவையெல்லாம் எனக்குக் கேட்க வேண்டாம். பத்து நாட்களாக அம்பாள் பக்கத்திலில்லை. சுவாமிக்குக் காமப்பசி மிஞ்சிவிட்டது. தணிப்பதற்கு ஓர் அனாதை வந்திருக்கிறது. இன்று இரவை இவ்விடம் கழித்துவிட்டால் உடம்பு தன்னிலைமைக்கு வந்துவிடும். கேட்பவர் யார்? 'நம்மீது வைத்த பிரேமையினால் கன்னியாக இருக்கிறாள். ஏங்கித் தவிப்பாள். நாம் சொன்னால் மறுப்பே இருக்காது. சற்று ஏற்பட்டாலும் சாகஸ வார்த்தைகளினால் மயக்கிவிடலாம்' என்ற மனப்பான்மையில் இவ்விடம் வந்திருக்கிறீர்கள். அதற்கு வேறு ஆளைப் பாருங்கள். என்ன தைரியம்?'' என்று பல்லைக் கடித்தாள்.

''சிவ! சிவ! என்று இருகைகளினாலும் இரு காதுகளையும் பொத்திய வண்ணம் ''லீலா! என்ன வார்த்தை சொன்னாய்! சற்றே சிந்தனைசெய். யௌவனத் துடிப்புடன், சௌந்தர்ய தேவதையாக மனதை மயக்கும் சந்திரவொளியில் பக்கம் பக்கமாக உட்கார்ந்து காதற்கதை பேசும்பொழுது எந்த நிமிஷமும் என் இஷ்டத்தை நிறைவேற்றும் மனப் பான்மையில், நீ இருக்கும் சமயம் ஏற்படாத- கட்டுப்பட்ட- விஷயமா இப்பொழுது என்னை மீறிவிடும்? லீலா! என் விஷயத்தில் உன்மனம் இவ்வளவு கடுமையானது ஆச்சர்யத்திலும் ஆச்சர்யம். காமாந்தகாரன் என்று வாய்கூசாமல் சொல்லிவிட்டாய், ரோமியோ ஜூலியட் படம் பார்த்துவந்த அன்று நம்மிருவர் மனமும் இருந்த நிலைமையில், பயமற்ற ஏகாந்தத்தில் நான் உன்னிடம் எவ்விதம் நடந்துகொண்டேனென்பதை உன் அந்தராத்மா அறியாமலிருக்குமா? வாய் பழித்துச் சொல்கிறதே தவிர, உன் ஹ்ருதயம் பழி சொல்லாது.

''நான் அனுபவிக்கும் சுகத்தைப்பற்றி எடுத்துச் சொன்னாயல்லவா? குறையும் நானே சொல்லிவிடுகிறேன். பதினெட்டும் இருபதுமான தம்பதிகள்கூட எங்களைப் போல் ஆடம்பரமான உடை அணிந்துகொள்ள மாட்டார்கள். வெளியில் தனித்துச் செல்லுவதே கிடையாது. எந்த விஷயத்திற்கும் என் உத்தரவை அவள் எதிர்பார்ப்பதும், நான் அவள் மனம் கோணாமல் நடப்பதும் பார்ப்பவர்களுக்கு மிகவும் அற்புதமாகத் தோன்றும். ஊடலாடல் வர்ணனையைப்பற்றிச் சொல்லவே வேண்டாம். எங்கள் பள்ளியறையின் ஜோடனையைக் கண்டால் பார்ப்பவர்கள் பிரமித்தே போவார்கள். ஏன் நீகூடப் பார்த்திருக்கலாமே?'' என்று முடிக்குமுன்,

''எனக்கென்ன அதைப் பார்வை. ஊசி விற்பவனுக்குக் கொல்லன் பட்டறையில் என்ன ஜோலி?'' என்றாள்.

''உண்மைதான். ஆனாலும் என் குதூகல வாழ்க்கையின் விவரம் சொல்லும்பொழுது

சொல்லவேண்டிவந்தது. பல பல சொல்லுவானேன்? உலகில் சகல அம்சங்களும் பொருந்திய ஒற்றுமையுள்ள இளந்தம்பதிகள்கூட எங்கள் நடையுடை பாவனைகளைக் கண்டு பொறாமைகொள்ளுவார்கள். ஆனால் இவையெல்லாம் மனதில் எவ்வித உணர்ச்சியுடன் நடைபெறுகின்றன தெரியுமா? சிறு குழந்தைகள் செப்பு வைத்து விளையாடும் பொழுது, சுவரில் குழாயிருப்பதாகப் பாவனை செய்து குடத்தில் ஜலம் பிடித்தும், எரியாத அடுப்பில் வெறும் பானையில் சாதம் கொதிப்பதாகப் பாவிப்பதும், வெறும் இடத்தில் சாதம் போட்டு, சாப்பிட்டுச் சாப்பிட்டு, குளித்துக் குளித்து, இல்லாத ஒன்றை இருப்பதாகப் பாவனை செய்து மகிழ்கின்றனவே? அதில் எவ்வித உணர்ச்சி தோன்றுமோ அதே ரீதியில்தான் எங்கள் வாழ்க்கை நடந்து வருகிறது. ஷட்ரச பேதங்களுடன், இலையில் பார்ப்பதற்கு வெகு ரமணீயகரமாக போஜன பதார்த்தங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஆவலுடன் சாப்பிட உட்கார்ந்துகொண்டவனுக்கு அதில் ஒன்றிலாவது உப்பில்லாமலிருந்தால் அவன் எவ்வித விருப்பத்துடன் சாப்பிடமுடியும்?”

“அதனால் உங்கள் வாழ்க்கையில் உப்பைப் போன்ற என்னைச் சேர்க்கப் பார்க்கிறீர்கள் போலும்”

“லீலா ‘என் சுகம் ஒன்றைமட்டும் கருதி நான் சொல்லவில்லை. உன் வாழ்வு என்னால் வீணாகப் போகிறதென்ற வேதனையும் காரணம். உன் சித்தப்பா உன்னோடு தங்கள் வம்சம் முடிவுறுவது பற்றி நான்கு நாள் முன் மிகவும் வருத்தப்பட்டார்”

“என் வாழ்க்கையில் அக்கறை காட்டுபவராக இருந்தால், சமயத்தை விட்டிருக்க மாட்டீர்கள். உப்பில்லாத வாழ்க்கையானாலுமே அதை நீங்கள் அனுபவிப்பதுதான் கடமை. கிழவனைக் கைப்பிடித்த குமரி, உப்பில்லா வாழ்க்கைக்காக, உப்பாக ஒரு வாலிபனையும் வாழ்க்கையில் பங்கு பெறமுடியுமா? அதை நினைத்து வாழ்க்கையை நடத்துங்கள். பெண்ணினம் பொறுமைக்கென்றே உண்டானது. கிழவனை மணந்த குமரி உங்களைப்போல் தவிக்கிறாள் என்பதைப் பிறர் அறியும்படி நடந்துகொள்ளுகிறாளா? அனுபவத்தின் பேரிலேயே பெரியோர்கள் சில விஷயங்களைக் கட்டுத் திட்டத்திற்குள் அடக்கியிருக்கிறார்கள். காலத்தின் மாறுதலுக்கேற்பச் சில விஷயங்களை மாறுதல் செய்யலாமே தவிர, கொள்கையைத் தலைகீழாக மாற்றுவது நன்மையைத் தராது என்ற உண்மையை இப்பொழுதாவது உணர்ந்தீர்களா? எங்கள் வம்சம் என்னுடன் முடிவது என்பது விதியானால் அதை மாற்ற உங்களால் முடியுமா? உங்களை மணந்துகொண்டாலுமே வம்சம் விளங்கிவிடும் என்று உறுதி கூறமுடியுமா? என் வாழ்க்கையில் தாங்கள் சிரத்தை கொள்ள வேண்டாம். உங்கள் லக்ஷியத்தை, கடமையை ஒழுங்காக நிறைவேற்றுங்கள்”

“நீ கூறியபடி பெரியோர்கள் வகுத்த முறை சில விஷயங்களில் நல்ல அனுபவத்தின் மீதே என்பதை ஒத்துக்கொள்கிறேன். உன்னால் என் லக்ஷியமும் நிறைவேறியது. ஆனால் கடமைக்கே உன்னிடம் மன்றாடுகிறேன். எதிர்பாராத லக்ஷியச் சுழலில் அகப்பட்டுவிட்டேன். அதை நிறைவேற்ற உன் உதவி வேண்டும் என்ற நிலைமையிலும், அன்று உன்னுடன் வாதாடியபொழுது, கடைசியில் உன் களங்கமற்ற அன்பில் புறப்பட்ட சொற்களைக்கேட்டு என் மனம் தடுமாறிய சமயத்தில் ‘நீ மனப்பூர்வமாக விடையளிக்காவிட்டால் நான் போகவில்லை. லக்ஷியத்திலிருந்து தப்ப, கண்காணாமல் சென்று வாழ்க்கை நடத்தலாம் வா’ என்று சொன்னேனே. நீதானே ஒப்புக்கொள்ளமாட்டேனென்றாய்?”

“உங்கள் லக்ஷியம் கனவாகிவிடும் என்று தெரியாத நிலைமையில் அவ்விதம் சொன்னேன். அதில் தவறென்ன?

“அதில் தவறொன்றுமில்லையானால் இப்பொழுது நான் கேட்பதிலும் தவறில்லையல்லவா?”

“அதெப்படி? என்னுடைய காதல் கைம்மாறற்றது, பரிசுத்தமானது, தெய்வீகமானது, நான் உங்களின் முன்னேற்றத்தைத் தடைசெய்ய மனம் இடமளிக்குமா? சுயநலங்கருதுமா? என் காதல் தியாகத்தீயில் குதித்தெழுந்தது. நீங்கள் கேட்பது சுயநலம்.”

“சுயநலம்மட்டும் கருதவில்லை. இந்த விதமாகவே ஆயுள் முழுவதும் கழித்துவிடலாம். ஆனால் விதியேற்படுத்திய இச் சூழ்நிலையில் உன் சுகத்தையும் நான் அனுசரித்தேயாகவேண்டும். நான் நீ இருவரும் காதம்பரியினிடமே வந்து சேருவானேன்? சந்திக்காமலிருந்தால் மன ஏக்கததுடன் நின்றிருக்கும். காதம்பரி உன்னிடத்தில் வைத்திருக்கும் அன்பிற்கு ஈடு சொல்லப் பதமேயில்லை. உனக்கு அவள்மீதிருக்கும் பக்திக்கு நான் அத்தாக்ஷி. காதம்பரியின் குணம் போற்றத் தகுந்தது என்பதை நான் உனக்கு எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. அன்று நான்தான் உனது அன்பன் என்பதைச் சற்றே கோடிகாட்டியிருந்தாலும் போதும், என்னை ஏற்கச் சம்மதித்திருக்க

மாட்டாள் 'லீலாவைக் கைவிட்டவன் கண்ணெதிரில் வந்துவிட்டால் என்கால் செருப்பினாலடித்துவிடுவேன்' என்றாள் ஒரு நாள். நான்தான் உனது அன்பன் என்பது தெரிந்துவிட்டால் உன்னை ஏற்றுக்கொள்ளுவதில் அதிக ஆனந்தம் அடைபவள் அவளே. உன் விருப்பப்படி வாழ்க்கை நடத்தத் தயங்கவே மாட்டாள். என் லக்ஷியமும் நிறைவேறிற்று, உன் காதலும் நிறைவேறிற்றென்றிருக்கட்டும். வேண்டுமென்று இவ்விதமெல்லாம் பேசுகிறாயே தவிர உன் ஹ்ருதயபூர்வமாக என்னை வெறுக்கமுடியாது என்பதை நான் நிச்சயமாக அறிவேன். 'சரி' என்று ஒரு வார்த்தை சொல்லிவிடு. அந்த ஒரு வாக்கியத்தில் ஆஹா! எத்தகைய ஸ்வர்க்கபோக அனுபவம் கிட்டிவிடுகிறது. உன் வாழ்வும் என் வாழ்வும் எவ்வளவு இன்பகரமாக மாறிவிடும். லீலா! யாராகிலும் சரி, தன் குற்றத்தை உணர்ந்து மன்னிப்புக் கேட்டால் அவர்களுக்கு நிச்சயம் மன்னிப்பு உண்டு என்பது சாஸ்திரசம்மத நீதியாயிற்றே? ஈசுவரனே மன்னித்துவிடுகிறாரே! எனக்கு மன்னிப்புக்கிடையாதா? உன்னைக் கெஞ்சி மன்றாடுகிறேன். என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று சொல்லு."

"சங்கர்! உங்களின் உள்ளன்பிற்கும், இரக்கத்திற்கும் வந்தனம்! உங்களை ஏற்றுக்கொண்டால் நீங்கள் நினைப்பதுபோல் வாழ்க்கை ஸ்வர்க்கபோகமாக மாறுவது கனவில். நனவில், நடப்பில் நரகவேதனைதான் மிஞ்சும், சற்று முன் உங்கள் திருவாயிலிருந்தே பொய்யாக நடிக்கிறேன் என்று வந்துவிட்டது. நான் உங்கள் வாழ்க்கையில் பங்கெடுத்துக்கொண்டேனானால், உங்களிடத்தில் சுயநலம் அடைக்கலம் புகுவது நிச்சயம். நீங்கள் என்னுடனேயே சுற்றுவதில் நாட்டமாக இருப்பீர்கள். உங்களின் பூர்ண அன்பிற்கும் நானே பாத்திரவதியாகிவிடுவேன். இன்பலோகத்தில் நாம் மிதந்து செல்லும் பொழுது கீழே நின்று பார்க்கும் காதம்பரியின் மனம் எப்படியிருக்கும்? மனமொப்பி நடந்தாலும் ஹ்ருதய தாபம் குறையாது. அவள் மனம் நொந்துகொள்ளும் காலமும் வரும். எனது குல தெய்வமாக வணங்கும் காதம்பரி தேவியின் மனதிற்குக் கடுகளவு வருத்தம் ஏற்படுவதற்கும் என் மனம் இடமளிக்காது. அவளின் சுகவாழ்விற்காக எனது சித்தப்பாவும் நானும் எந்தவிதமான தியாகமும் செய்யப் பின்வாங்கமாட்டோம். என்னிடத்தில் தாங்கள் பூர்ண அன்பு வைத்தது சத்யமானால் என்னை எனது மனம் சென்றபடி நடந்துகொள்ளத் தாங்கள் அனுமதியளிக்கவேண்டும்''

"நீ என் மனைவி என்ற ஸ்தானத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அது ஒன்றுதான் என் விருப்பம். பிறகு நீ எவ்வித வாழ்க்கை நடத்தினாலும் நான் தடுக்கமாட்டேன். உன்னிஷ்டப்படியே நடக்கலாம். காதம்பரியும் உன்னிஷ்டப்படியே நடப்பாள் என்பதுபற்றி நான் உனக்கு எடுத்துச் சொல்ல வேண்டாம். உன் உத்தியோகத்தை, பொதுநல சேவையை விடும்படி நான் வற்புறுத்த மாட்டேன். சிறிது காலமாவது உன்னுடன் வசிக்க அனுமதித்தால் உன்னிஷ்டப்படியே நடந்துகொள்ளுகிறேன். காதம்பரியின் மனம் நோகும்படியும் நிச்சயம் நான் நடக்கமாட்டேன். இருவரையும் அவரவர் கொள்கைக்கு விரோதமில்லாமல் நடத்த என்னால் முடியும். நம்மிருவர் சொற்படி காதம்பரி நடப்பாள் என்பது திண்ணம். ஏனென்றால் நிச்சயம் நாம் அவள் மன விரோதமாக நடக்கமாட்டோம்; சொல்லமாட்டோம். அவளின் குணவிசேஷம் அத்தன்மையது. ஏதோ உலகில் தவறுவது சகஜம். அதைத் திருத்திநடப்பதே புத்திசாலித்தனம். இருப்பதைத் திருப்திகரமாக ஏற்று நடப்பதே நன்மை. வீணாக என் வாழ்க்கையையும், உன் வாழ்க்கையையும், பாழ்படுத்திக் கொள்ளுவதில் யார் நன்மையடையப்போகிறார்கள்?"

"காதம்பரிதேவி அதுதான் என் லக்ஷியம்."

"நீ நினைப்பது தவறு. என்னை நீ திரஸ்காரம் செய்தால் என் மனம் எப்படியாகுமோ? ஒருசமயம் பைத்தியமே பிடித்துவிடலாம். தற்கொலைக்குக்கூட மனம் இடமளிக்கும். அப்படியானால் காதம்பரிக்கு நீ நன்மை செய்தவளாக முடியுமா? காதம்பரியைச் சந்தோஷமாக வைக்கவே உன்னிடம் வாழ்க்கைப் பிச்சை கேட்கிறேன். நன்றாகச் சிந்தனை செய்து பார். நான் இவ்வளவு தூரம் மன்றாடும் காரணம் தெளிவாகமல் போகாது. விதி அதன் மாயா ஜாலங்களில் மனிதவாழ்க்கையைச் செப்பிடுவித்தை காண்பித்து வேடிக்கைபார்க்கிறது. லீலா! இல்லையேல் நாம் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது. நான் குற்றவாளி தான். ஆனால் மனமாரக் குற்றம் செய்யவில்லை. என்னையறியாமலேயே இச்சூழலில் தெரிந்தே இறங்கும்படியாகி விட்டது. என்னை மன்னித்து ஏற்றுக்கொள். உன் காதம்பரியின் நன்மையும் உன் கைக்குள் தான் அடங்கியிருக்கின்றது. உனது சித்தப்பா அவளுக்காக தியாகம்செய்வார் என்றாயே எதற்காக? பாவம் சுகம் என்பதையே வாழ்நாளில் காணாத அவர், உனது சுகத்தையாவது கண்டு மனம் தேறி வாழ்க்கைப் பிரயாணத்தின் எல்லையை அடைய நீ உதவி செய்வது கடமையல்லவா? அதைவிட்டு அவருக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத காதம்பரிக்காகத் தியாகம் செய்ய வேண்டுமென்று நீ சொல்வது நியாயமாகுமா? அவரை வேண்டியாவது

என்னை ஏற்றுக்கொள்ள மாட்டாயா? காதம்பரியின் மனம் நோக நான் நடக்கமாட்டேனென்பதற்கு நீ எவ்விதக் கடுமையான கட்டளையிட்டாலும் ஒத்துக் கொள்கிறேன். லீலா! இரக்கம் காட்டு.''

''சங்கர்! என்னைக் கொல்லாமல் கொல்லுகிறீர்கள். நான் இரக்கம் காட்டிப் பிரயோஜனம்? பகவான் இரங்கி உங்களுக்குச் சாந்தியைக் கொடுக்கட்டும். என் சித்தப்பாவிற்கும் காதம்பரிக்கும் உள்ள சம்பந்தத்தைப் பற்றி நீங்கள் அறிந்திருக்க முடியாது. இன்று நாம் சந்தித்ததானது நன்மைக்கல்ல. இனி ஜன்ம முழுவதும் பார்க்க முடியாத பிரிவிற்கே இது ஏற்பட்டிருக்கிறது. அதனால் மறைவின்றி உள்ளது உள்ளபடி சொல்லி விடுகிறேன். காதம்பரியின் பூர்வாச்ரம விபரம்முழுவதும் உங்களுக்குத்தெரியுமல்லவா?''

''ஆஹா தெரியும். முன்னால் வீணை சொல்லிக் கொடுத்த சுதர்மன் என்பவர் இவளை ஏற்றுக்கொள்ள விரும்பினதாகவும் இவள் அண்ணா சம்மதிக்காததினால் அவர் மனம் வெறுத்து எங்கோ சென்று விட்டதாகவும், தற்சமயம் உயிருடனிருக்கிறார் இல்லையென்ற விபரமே தெரியவில்லை யென்றும் சொன்னாள். அதற்கும், நீ சொல்லும் விஷயத்திற்கும் சம்பந்தம்?''

''சம்பந்தமா? உங்களுக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தம் என்று இவ்விதமெல்லாம் உரிமை கொண்டாடிப் பேசுகிறீர்கள்? அதே சம்பந்தம்தான் காதம்பரிக்கும் எனது சித்தப்பாவிற்கும்?''

''யார்? சுதர்மனா உனது சித்தப்பா? உண்மையாகவா?''

''சத்யமாக''

''எப்படிக் கண்டுபிடித்தாய்?''

''காதம்பரியைத் தாங்கள் எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?''

''விதி ஒன்று கூட்டினது.''

''அதே விதி ஒரு ரயில் வண்டியில் எங்களை ஏறச்செய்தது'' என்று விபரம் சொல்லிமுடித்தாள்.

''அப்படியானால் காதம்பரி அவரைத் தெரிந்து கொண்டதாகத் தெரியவில்லையே?''

''எப்படித் தெரிந்துகொள்ள முடியும். அழகே உருவான வாலிப சுதர்மனுக்கும், சோகத்தில் கருகி, தாடியுடன் காட்சியளிக்கும் ஐம்பது வயதைக் கடந்த சுதர்மனுக்கும் வித்யாசமில்லையா? கண்ணில் கறுப்புக்கண்ணாடி வேறு''

''பேசும்பொழுதுகூடக் காதம்பரி தெரிந்து கொள்ளாதது ஆச்சரியமே.''

''அவளது சந்தோஷ வாழ்க்கையே தனது லக்ஷியம் என்ற உண்மைக் காதலின் சக்தி ஜாக்கிரதைப்படச் செய்துவிடுகிறது. இதில் ஆச்சர்யமென்ன''?

''அப்படியானால் என் லக்ஷியம் இன்னும் சுலபமாகிவிட்டது''

''எப்படி?''

''காதம்பரியை எனது மனைவி என்ற பதத்திலிருந்து விடுதலை செய்துவிடுகிறேன். ஆதி காதலர்கள் ஒன்றுகூட அது சரியான மார்க்கமல்லவா?''

''ஆஹா! அற்புதமான மூளை! அதிசுலபமான வழியைக் கண்டுபிடித்து உங்களுக்கு உதவி செய்கிறது..''

''ஏன்? நான் சொல்வதில் என்ன தப்பு?''

''நீங்கள் செய்யும் தப்பைச் சுதர்மன் செய்யமாட்டாரே என்ன செய்வது?''

''உண்மையான அன்பு என்றால் எந்த நிலைமையிலும் ஏற்றுக்கொள்ளவேண்டும். சுதர்மன் நிலைமையில் நான் இருந்தால் நிச்சயம் வேண்டி ஏற்றுக்கொள்ளுவேன்''

''சொல்வது எளிது, அதுவும் பிறருக்கு. செயலில் இறங்கும்பொழுது பின்வாங்கியே தீரவேண்டியிருக்கிறது. இது பழமையான உண்மை.''

''அப்படியல்ல, சுதர்மன் மறுக்கமாட்டாரென்று நிச்சயமாகச் சொல்லுவேன். மேலும் ஒரு மனைவியை விட்டுவிட்டு மற்றொரு மனைவியை ஏற்றுக்கொள்ள ஆண்களுக்கு உரிமையிருக்கிறது. அப்படி ஒரு மனைவியுடன் வாழ்க்கை நடத்திய புருஷனை கன்னிப்பெண் ஏற்றுக்கொள்ளச் சாஸ்திரமும் சமூகமும் அனுமதியளிக்கின்றன. பெண்ணும் அன்புடன் ஏற்றுக்கொள்ளுகிறாள் அல்லவா? அதுபோல் விதியினால் ஏற்படும் சமயசந்தர்ப்பத்தினால் ஒரு புருஷனை விட நேர்ந்தால் அவளை மற்றொரு புருஷன் அன்புடன் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். என் கொள்கையைச் சுதர்மன் ஆதரிப்பார்.''

''ஆஹா! உங்களுடைய கொள்கையிலெல்லாம் சுயநலம் பிரதிபலிக்கிறதே. ஆண் சமூகத்திற்கு விவஸ்தை என்பதே கிடையாது. பெண் சமூகம் முழுவதுமே விவஸ்தையின்றி இருக்கமுடியாதது இயற்கையின் வெற்றியாகும். நூற்றிலொருவர் விவஸ்யை விட்டவர்களாக இருப்பர், அவ்வளவு

தான். காதம்பரி தேவியானவள் மெஜாரிட்டி வகுப்பைச் சேர்ந்தவள். நினைத்தபடியெல்லாம் வாழ்க்கைப் பிணைப்பை ஏற்படுத்திக்கொள்ளமாட்டாள். நீங்கள் மனைவியென்ற பந்தத்தை விலக்கிவிட்டால். தனி வாழ்க்கை நடத்தவே விரும்புவாள்; எனது சித்தப்பாவும் அவளும் ஒரே இடத்தில் வசித்தாலும் தாம்பத்ய முறையை அனுஷ்டிக்க மாட்டாள். அவளது நன்மையையே நாடும் எனது சித்தப்பா அவள் வாழ்க்கை வீணாவதை விரும்பமாட்டார். உங்கள் கொள்கையை ஆதரிக்கமாட்டார், வீண் மனப்பிராந்தியை விட்டுவிட்டு, தகப்பனும் மகளும் வசிக்கவும் நீங்கள் தம்பதிகள் ஒன்றாக வசிக்கவுமான வசதியைத் தேடுங்கள்.?

“தம்பதிகளாக வசிக்கவே இப்பொழுது உன்னிடம் மன்றாடுகிறேன். நீதான் மடக்கி மடக்கி வாதாடுகிறாய்.”

“இதைப்பாருங்கள், சும்மா சும்மா சொல்லிக்கொண்டிருக்க எனக்குப் பொழுதில்லை. என் உயிரினுமினிய காதம்பரி தேவியின் சுக வாழ்வில் குறுக்கிட என் மனம் ஒருநாளும் இடமளிக்காது. உங்களுடைய லக்ஷியம் ஒன்றும் எனக்குத் தேவையில்லை. நான் மட்டும் தனிவாழ்க்கை நடத்துவதில் எனக்கு யாதொரு கஷ்டமோ வருத்தமோ கிடையாது. எடுத்த லக்ஷியத்தை நடுவில் விடாது பூர்த்தி செய்யுங்கள். எனது சித்தப்பாவுடன் காதம்பரிதேவி குரு என்ற மனப்பான்மையில் தான் நடப்பாள். இது என் மன மறிந்த உண்மை.”

“காதம்பரியின் சுகவாழ்விற்கு யாதொரு குறைவுமில்லாமல் நான் நடந்துகொள்வேன். நீயும் நடந்து கொள்ளுவாய் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. காதம்பரி உன்னை நான் ஏற்றுக்கொள்ளுவதை மனப்பூர்வமாக வரவேற்பாள். உனது சித்தப்பாவும் நம்முடனிருக்கட்டும். அவரை அறிந்துகொண்டாலும் காதம்பரியே அவரை முக்யமாகக் கவனிப்பாள். நானும் அதை விரும்புவேன். நீ என் மனைவியாக வந்தேயாகவேண்டும். இது விதியின் கட்டளை.”

“விதியின் கட்டளை! வீண் பேச்சு. நீங்களும் நன்றாக நடந்துகொள்ளுவீர்கள்; காதம்பரியும் சந்தோஷமாக வரவேற்கலாம். ஆனால் காதலைப் பங்கிடுசெய்து வாழ என் மனம் இடமளிக்கவில்லை. ஓர் உறையில் இரு கத்திகள் தங்கமுடியாது என்பது எனது தீர்மானம். அதனால் இந்தப் பேச்சை இத்துடன் முடித்துவிட்டுத் தயவுசெய்து சென்று வாருங்கள்.”

“லீலா! பெண்கள் மனம் மெழுகையொத்தது என்பார்களே. உன் மனம் என் விஷயத்தில் இரும்பாகிவிட்டதா? இவ்வளவு மன்றாடுகிறேனே, காதலைப் பங்கிடு செய்ய வேண்டாம் என்பதற்கும் வழியிருக்கிறது. விரும்பினால் ஒரு மரத்தில் இருகொடிகள் படரமுடியும். இதன் உண்மை நீ யறிய மாட்டாயா? லீலா! இனி உன்னை ஒன்றுமே கேட்கப் போவதில்லை. ஆனால் என் உறுதியும் மாறப் போவதில்லை. இன்றுதான் என் வாழ்வின் கடைசிநாள். இவ்விடமிருந்து நான் போவது என்பது, ஒன்று உன் கைகோத்து வெளியேறுவேன்; அல்லது எனது உயிரற்ற உடலே வெளியேறும். பிறகாவது என் நிலைமையை நீ உணர்வாயல்லவா? இது சத்தியம்.”

“ஐயோ! சங்கர், இதென்ன கொடுமை! இப்படிக் கல்லுளிமங்கத்தனம் செய்வது நியாயமா? தயவுசெய்து சத்யத்தை மாற்றிவிட்டு எழுந்து செல்லுங்கள். என்மீது வைத்த உண்மையான அன்பின் செய்கையா இது?”

“முடியாது லீலா! முடியாது. என் பொறுமை எல்லை கடந்து விட்டது. அன்பின் ஜ்வாலை பற்றியெரிகிறது. என்னால் தாங்கமுடியாது. இனி உன்னைப்பற்றியோ, காதம்பரியைப்பற்றியோ, லக்ஷியத்திற்காகத் துறந்துவந்த தாயைப்பற்றியோ எனக்குச் சிந்திக்கும் சக்தியில்லை. உன் அன்பு ஒன்றுதான் எனக்குத் தேவை. அது இல்லையென்றால் நான் இருந்துபயன்? விடைபெற்றுக் கொள்ளுகிறேன். கடைசியாக ஒரு வேண்டுகோள். மறுக்காமல் நிறைவேற்று.”

“என்னவோ?”

“அன்று நாம் பிரியும்பொழுது என்ன சொன்னாயென்பது நினைவிருக்கிறதா? முதலில் அன்பின் நெகிழ்ச்சியில் இத்தவறு செய்தோம். பிறகு பிரியும்சமயம் இரண்டாவது தவறு. இனி மூன்றாம் தடவையாகச்செய்யும் தவறானது ஒன்று நாம் வாழ்க்கைப் பூங்காவனத்தில் உலவக் கால்வைக்கும் சமயம், அல்லது இருவரில் ஒருவரின் மரணாந்த காலத்தில் என்று சொன்னாயல்லவா? எனது மரணாந்த காலம் நெருங்கிவிட்டது. இதோ பார்த்தாயா” என்று கால்சட்டைப் பையிலிருந்த ரிவால்வரைக் கையிலெடுத்துக் காண்பித்துவிட்டு, நீ எனது கடைசி விருப்பத்தை நிறைவேற்றினதும் இது எனக்கு விடுதலையளித்துவிடும். தயவுசெய்து அந்தத் தவறை மூன்றாம் முறையாகச் செய்துவிடு அல்லது நான் செய்ய அனுமதி கொடு.”

“சங்கர்! இதென்ன! ஒரு ஆண்பிள்ளையின் தீரச் செய்கையா இது? இவ்விடம் சுட்டுக்கொண்டால் பழி என்மீது விழட்டும் என்றா? சுட்டுக்கொள்ளுவதைப் பற்றி எனக்கு ஆக்ஷேபணையில்லை. தங்கள் அறைக்



குள்போய் உட்கார்ந்துகொண்டே சாவகாசமாய்ச் செய்யுங்கள். என்மீதுள்ள அளவற்ற காதலினால்தான் கொலைப்பழியை ஏற்க வழி தேடுகிறீர்கள் போலும்."

"எதைப்பற்றியும் சிந்தனைசெய்யும் சக்தியைத் தற்சமயம் நான் அடியுடன் இழந்துவிட்டேன். சாந்தி! அது ஒன்றுதான் எனக்கு வேண்டுவது அதற்காக எதுவும்

செய்யப் பின்வாங்காது என் மனம். என் ஜீவன் போனபிறகு யார் எப்படியானு லென்ன? கடைசிமுறையாக யாசிக்கிறேன் என் விருப்பத்தை நிறைவேற்றுவாயா?"

"ஓஹோ! அவ்வளவு தூரத்திற்குத் துணிந்து விட்டீர்களா? என் உடலில் உயிர் உள்ளமட்டும் என்ன வந்தாலும், காதம்பரிக்குத் துரோகமான செயலில் இறங்கமாட்டேன். இதோ என்னிடமுமிருக்கிறது" என்று தலையணைக்கடியிலிருந்த ரிவால்வரைக் கையிலெடுத்துக்கொண்டு, இது என் உயிருக்கு விடுதலையளித்த பின்பு மிருத தேகத்தை என்னவேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். என் ஆத்மா பரிசுத்தமாக இருக்கவேண்டியது ஒன்றே என் லக்ஷியம்"

"சரி. விதி அப்படியாயின் அதைத் தடுக்கும் சக்தி நமக்கேது? நீ உன் லக்ஷியத்தை நிறைவேற்று. நான் என் லக்ஷியத்தை நிறைவேற்றுகிறேன். இதோ ஓர் வினாடியில் மஹத்தான, பயங்கரமான நிகழ்ச்சி ஏற்படப் போகிறது. உன் குண்டு உன் மார்பில் பாயு முன் நீ எனது அணைப்பில். பிறகு இருவருக்கும் நிரந்தர விடுதலை." என்று எழுந்து நின்றான்.

அடிபட்ட பெண்புலி போன்று, "என்ன?" என்று சீறிக்கொண்டு எழுந்தாள். "நில்லுங்கள் அப்படியே. ஓர் அடி எடுத்துவைத்தாலும் தாக்ஷிண்யமின்றிச் சுட்டுவிடுவேன்"

"ஆஹா! மெத்த சந்தோஷம். அப்படியே செய்துவிடு. அப்படியும் உன்னை யணைத்தவாறுதான் என் ஜீவன் பிரியும். அதைத் தடுக்க உன்னால் முடியாது. உனது காதல் மாசுமறுவற்றதாதலால் ஏற்றே திருவாய். இதைச் சத்யமாகச் சொல்லுகிறேன்."

சலனமற்ற அவனது சொற்கள் அவள் ஹ்ருதயத்தைச் சுடுவதுபோன்ற உணர்ச்சியை உண்டாக்கின. அவன் முகத்தையே உற்றுப்பார்த்துக்கொண்டு அசைவற்று நின்றுவிட்டாள்.

சில வினாடிகள் நிசப்தத்தில் கழிந்தன. "லீலா! நான் தயார் வேலையை முடித்துவிடு" என்றான்.

"சங்கர்!" என்றாள். குறிபார்த்துப் பிடித்திருந்த ரிவால்வர் பிடித்த கை தானாகப் பூமியை நோக்கிற்று. நாம் ஒருவர்மீது ஒருவர் வைத்திருக்கும் பிரேமைக்கு இப்புவனமே ஈடாகாது. ஒருவருக்காக மற்றவர் விட்டுக் கொடுக்கமுடியும். ஆனால் 'லக்ஷியம்' என்ற ஆயுதமானது இருவரிடமும் கூர்மை தீட்டப் பெற்றிருக்கிறது. கூர்மழுங்கச்செய்வது யார் என்பதே இப்பொழுதைய பிரச்னை.

தங்களையும் தெய்வமாக வணங்கிப் போற்றி வந்திருக்கிறேன் ஏன்? வருகிறேன். காதம்பரியையோ குலதெய்வமாகவே எண்ணி வருகிறேன். மனக் கொதிப்பில் சுட்டுவிடுவேன் என்று சொன்னேனே தவிர, காதம்பரியை உத்தேசித்தாலும் சுடக் கையெழும்புமா? தாங்கள் நீண்ட ஆயுளுடன் துன்பங் கலவாத இன்ப வாரிதியால் மிதக்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வேண்டுகிறேன். என்லக்ஷியமும் உங்கள் விருப்பமும் நிறைவேற ஒரே வழியாருக்கிறது" என்றாள் கண்களின் நீர் கன்னத்தில் வழிந்தோட..

"அது என்ன சீக்கிரம்சொல் லீலா!" என்று தன் மார்புக்குள்ளே நேராகப் பிடித்திருந்த துப்பாக்கியுடன் ஓர் அடி முன் வைத்தான். 'இதோ, குண்டு என்மார்பைத் தரிசித்ததும் என் உணர்வு இருக்கும் பொழுதே உங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளுங்கள். அதுதான் சிறந்த மார்க்கம்'' என்று தன் மார்பிற்கு நேராக ரிவால்வரைத் தூக்கிப் பிடித்தாள்.

"நான் பேடி என்பது உனது தீர்மானமா? அதற்கு நான் சம்மதிப்பேனா? நல்ல சிறந்த மார்க்கம்" என்று அவள் எதிர்பாராத நிலைமையில் சட்டென ரிவால்வர் பிடித்திருந்த கையை எட்டிப் பிடித்துவிட்டான். இவள் திமிர, அவன் பிடுங்க இந்த நிலைமையில் சில நிமிஷங்கள் சென்றன. வலது கையில் ரிவால்வர் இருந்ததினால் இடது கையினாலேயே பிடுங்குவதற்குச் செய்த முயற்சி

லால்குடியில்

காவேரி கிடைக்குமிடம்:

T. K. வெங்கடேச குப்தா

ஷாப்,

மெயின் ரோடு, லால்குடி

வீழ்ந்துவிட்டது. தன் முழுப்பலத்தையும் கொண்டு சங்கரைத் தள்ளிவிட்டாள். அப்படியே தரையில் உட்கார்ந்ததுபோல் விழுந்துவிட்டான். அவன் எழுந்திருப்பதற்குள் கட்டிலில் உட்கார்ந்துகொண்டு மார்பிற்கு நேராகக் குறிபார்த்துவிட்டு, "சங்கர்" என்றாள் கம்பீரமாக.

அப்பொழுதுதான் தட்டுத்தடுமாறி எழுந்திருக்கும் சங்கர், "வேண்டாம் லீலா! வேண்டாம். நான் இதோ வெளியே சென்றுவிடுகிறேன், நீ எங்காவது உயிருடனிருந்தால் அதுவே என் பாக்யம். லீலா! லீலா!" என்று கத்திக்கொண்டே எழுந்து நின்றான்.

"இனிமேல் அவ்விதம் செய்து என்ன உபயோகம். சங்கர், நான் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்" என்று நிமிர்ந்தாள். அவ்வளவே கையிலிருந்த ரிவால்வர் நழுவிவிட்டது. "அக்கா! நான் நிரபராதி. தாங்கள் நல்ல சமயத்தில் வந்து சேர்ந்தீர்கள். உங்கள் கணவரை அழைத்துச் செல்லுங்கள். அவர் துராகிருதம் செய்யவந்ததினால் நான் ரிவால்வர் எடுக்கும் நிலைமை ஏற்பட்டது. நான் என் மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி எவ்விஷயத்திலும் நடந்துகொள்வது உண்மை என்பதைக் கடவுளே நிரூபணம் செய்துவிட்டார், இந்தச்சமயத்தில் தாங்கள் எதிர்பாராத விதமாக வந்து சேரும்படி. அக்கா! நான் விடைபெற்றுக்கொள்ளுகிறேன், மன்னியுங்கள்" என்றாள், வாசற்படியில் நின்றுகொண்டிருந்த காதம்பரியைப் பார்த்து.

"லீலா! என்ன விபரீதத்திற்குத் துணிந்துவிட்டாய்" என்று குனிந்து, ரிவால்வரை எடுக்கும் லீலாவின் கையைச் சட்டென ஓடிச் சென்று பிடித்துக்கொண்டாள்.

"கையை விடுங்கள்" என்று கத்தினாள்.

ரிவால்வர் கீழே விழும்படி லீலாவின் கையை உதறினாள் காதம்பரி.

"டுமில்" என்ற சப்தத்துடன் ரிவால்வர்" கட்டில் பக்கமாக விழுந்தது. "அம்மா! என்ற ஈன சப்தத்துடன் கீழே சாய்ந்தாள் லீலா.

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டு விட்டது. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்து விட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

Shrimati. BIBI CHARAN PIARI

Sant Nagar (C. K.) Jullundur City.

போர்க்களம்

தி. சேஷாத்ரி

விசாலமான பங்களா; அதன் மிக அழகிய அறை; அதிலே ஒரு இளைஞனும் யுவதியும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். சரஸ்வதி தேவி கான ஒலி செய்து கொண்டிருந்தாள்;

வெளியே ஒரு கார் வந்து 'கிரீச்' என்று சத்தமிட்டு நின்றது. அந்தச் சத்தம் ஜானகியை எழுப்பி விட்டது. அவள் விழிக்கும் வேளையின் கனவுபோல் அருகேயுள்ள அறையிலே மறைந்தாள். அறைக் கதவில் போடப் பட்டிருந்த திரை மறதியைப் போல அவளை மறைத்து ஆடி நின்றது. ஆனால் அவள் சொல்லிச் சென்ற விஷயத்தை மட்டும் அவன் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான், நழுவ விடாமல்; இன்று நிச்சயமாகக் கேட்டுவிட வேண்டும்.

வீட்டு எஜமானி சுசிலா தேவி உள்ளே வந்தாள்: அந்த மாதத்திய ஒரு தமிழ் சஞ்சிகையைக் கையாலும், தன் எண்ணங்களை மனதாலும் புரட்டிக்கொண்டிருக்கும் ரகுபதியைப் பார்த்த அவள் கண்கள் இயற்கையாகவே மலர்ந்தன. உதடுகள் பிரிந்து புன்னகை பெருகிற்று. கேள்வி வெள்ளம் எடுத்தது.

ஓகோ, ரகுபதியா! வா, ஏன் தனியாக உட்கார்ந்திருக்கிறாய்? ஜானகிக்குத் தெரியாதா? டீ வந்ததா?

ரகுபதி எழுந்து நமஸ்கரித்து அமர்ந்தான். அவளும் ஜானகிக்கு 'டீ' கொண்டுவர உத்தரவளித்துவிட்டுச் சோபாவில் அமர்ந்தாள். இருவரும் பேச ஆரம்பித்தனர். ரகுபதி தொண்டையில் ஏதோ கேள்வி வந்து வந்து அடைப்பதைச் சுசிலா கவனித்தாள். அவள் அதைத் தானே வருவித்தாள். அந்தக் கேள்வியில் அவளுக்குச் சந்தோஷமே. அதற்குச் சுமுகமான பதில் அளிக்கவும் அவள் துடித்தாள். ஆனாலும்— 'ஜானகிக்குச் சம்மதம்தானே?' என்று கேட்டாள். 'அவள்தாள் கேட்கச் சொன்னாள்!' என்றான் ரகுபதி. 'சரிதான்! என்னைவிட......' அவள் மேலே சொல்லவில்லை.

டீ வந்தது. கோப்பையை நிரப்பி ரகுபதி கையில் கொடுத்துக் கொண்டே சுசிலா கேட்டாள்: 'என்ன ரகு, அப்பா சமாசாரம் ஏதாவது தெரிந்ததா?'

அவன் திடுக்கிட்டான். ஆனாலும் எதிர்பார்த்ததுதான். ஒருமாதிரி கண்டு பிடித்துவிட்டேன். தெற்கே ஒரு கிராமத்தில் இருக்கும் கிழவர் ஒருவரைத் பற்றித் தெரிந்து கொண்டேன். அவராகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

ஏன், போய்ப் பார்ப்பதுதானே?

ஆம். நாளை சாயந்திரம் போகப் போகிறேன். லீவு இன்றுதான் கிடைத்தது.

பிறகு பேச்சுத் தொடர்ந்தது.

பார்த்துவிட்டு வந்தவர் சொல்லுகிறபடி. அந்தக் கிழவர் என் பெயர், வயது முதலியவைகளை ஒப்புக்கொள்கிறாராம். என் படத்தையும் பார்த்து, 'ஆமாம்' என்கிறாராம். ஆனாலும் நான் உயிருடன் இருப்பதைமட்டும் நம்பமாட்டேன் என்கிறாராம். அதுதான் நானே நேரில் போகிறேன்,

சரி, அவர் பெயர், ஊர்......?"

தஞ்சாவூர் ஜில்லாவில் காமேசுவரம் என்ற ஒரு கிராமம். அவர் அங்கேதான் பிறந்தாராம்,

இதைக் கேட்டதும் சுசீலாவின் தோற்றத்தில் ஒரு ஆச்சரியகரமான மாறுதல் தோன்றிற்று; புருவத்தைச் சுளித்து விழித்தவள் உடம்பு படபடத்தது. வியர்க்க ஆரம்பித்தது. அதற்குள்ளேயே ரகுபதி, ராஜாராமய்யர் என்ற அவர் பெயரையும் சொல்லி வைத்தான். சுசீலா சடக்கென்று எழுந்திருந்தாள். ரகு! எனக்கு உடம்பை என்னவோ செய்கிறது. ஜானகியுடன் பேசிக் கொண்டிரு. நாளை போகும்போது கண்டிப்பாய் வந்து விட்டுப் போ! என்று சொல்லி விட்டு உள்ளே சென்றுவிட்டாள்.

2

அன்று இரவு சுசீலா புரண்டு புரண்டு படுத்தாள். படுக்கை தன் அலுப்பை அடிக்கடி தெரிவித்துக் கொண்டது. அவள் ஆறு மாதம் முந்தி நடந்த ஒரு விஷயத்தை மறுபடியும் எண்ணிக் கொண்டிருந்தாள்.

அவளும் ஜானகியும் சினிமாவுக்குப் போய் விட்டு வந்து கொண்டிருந்தனர். கார் திடீர் என்று நின்றுவிட்டது. டிரைவர் நாடி

பார்த்துவிட்டு, பெட்ரோல்தான் இல்லெ போலிருக்கிறதுங்க என்று நாகரிக டாக்டர் முறையில் சொன்னான். சுசிலாவுக்கு ஆத்திரம் வந்தது. ஜானகி பொழிந்தே தள்ளி விட்டாள். என்ன லாபம்? உலகமே தூங்கிக்கொண்டிருந்த சமயம். கையைப் பிசைந்து நிற்கும்போது ஒரு மோட்டார் வந்து அருகே நின்றது. இறங்கி வந்தான் ஒரு யுவன். வந்தவனிடம் டிரைவர் சமாசாரத்தைச் சொன்னான். அவன் உடனே, 'வீட்டில் பெட்ரோல் இருக்கிறது. நீங்கள் வாருங்கள் என் காரில் போகலாம். நான் திரும்பி, பெட்ரோல் கொண்டுவந்து கொடுக்கிறேன். பிறகு டிரைவர் காரைக் கொண்டு வருவான்' என்றான். பசித்தவன், சாதம் யார் தயாரித்தது? என்றா கவனிக்க முடியும்? அவர்கள் சம்மதித்தனர்.

வீட்டிலே வெளிச்சத்திலே சுசீலா அந்த யுவனைப் பார்த்தாள். எதிர்பாராமல் நெருப்பில் காலடி வைத்தவள்போல் சுழன்றாள்.



வந்தனம் செலுத்தக்கூட மறந்து நிற்கும் தாயின் நிலையை அறிந்து, ஜானகி வாசல் வரை வந்து வந்தனம் செலுத்தி அனுப்பினாள்.

சுசீலா தன்னைத் தானே கேட்டுக் கொண்டிருந்தாள்; இது யார் ராஜாராமனா? சை, காலத்தாலும் தேசத்தாலும் அவன் யாரோ, இவன் யாரோ? இது என்ன பிராந்தி.

மனம் நிலைக்கு வருவதற்குள் பெரிய ஒரு காரியம் நடந்திருப்பதை உணர்ந்தாள். யுவனும் யுவதியும் ஒருவர் கையில் மற்றொருவர் விலையாகி யிருந்தனர். சுசீலாவுக்கு ஏனோ அதில் விரோதம் ஏற்படவில்லை. நல்ல அழகன்; குணம் பெற்றவன்; நன்றாகச் சம்பாதிக்கிறான். அவள் மனது சம்மதித்து விட்டது.

பழக்கம் அதிகமாயிற்று என்று சொல்ல வேண்டியது சுத்த அநாவசியம் அல்லவா?

சுசீலா எண்ணினாள்: அவன் தான் இந்த ரகுபதி. மாற்றாந் தாயின் தொந்தரவால் வெளியே ஆறு வயதில் கிளம்பிய ரகுபதி, அதிர்ஷ்டம் ஒரு சேட்டின் பிரியம் மூலமாக வர, படித்து முன்னேறி இன்று ஒரு இஞ்ஜினீயராகி இருக்கிறான்.

அன்று அவள் தன் எண்ணத்தை நசுக்கிப் புதைத்தாள். இன்று மறுபடியும் நிச்சயம் ஏற்பட்டது. இவன் அந்த ராஜாராமனின் புதல்வனே தான். அவள் தான் அவனைத் தந்தையைத் தேடத் தூண்டினாள். இன்று அதற்குப் பலன் இப்படி ஏற்பட்டிருக்கிறது.

இனி என்ன செய்வது?

அவளுக்குத் தூக்கமே வரவில்லை.

* * *

மறுபக்கம் புரண்டு படுத்தாள். ராஜாராமனுடைய எண்ணம் மீண்டும் சில சித்திரங்களை அவள் உள்ளத்துக்கு அர்ப்பணம் செய்தன. அவளே காமேசுவரத்தில் பிறந்த பெண்தான். அவளும் அந்த ராஜாராமனும் ஒன்றாக வளர்ந்தவர்களே. அப்பொழுது அவள் பெயர் மீனாக்ஷி.

ராஜாராமன் படிக்க வெளியூருக்குப் போனான். படித்துவிட்டு லீவுக்கு வரும் போதெல்லாம் மீனாக்ஷி அளவற்ற சந்தோஷம் அடைந்தாள். ஆகா! அவன் தான் எவ்வளவு அழகாக வளர்ந்தான்! எவ்வளவு புத்திசாலியாகி விட்டான்! என்னென்னவோ விஷயங்கள் பேசுகிறானே! அவனும் அவளுடைய வளரும் அழகைக் கவனிக்கத் தவறவில்லை.

ராஜாராமனுக்கு வயது இருபது ஆகும் போது மீனாக்ஷிக்கு வயது பதினைந்து. யுவனும் யுவதியும் பற்றிய கதையில் புதுமை ஒன்றும் நமக்குத் தெரிவதில்லை. ஆனால் அவர் கதையல்லவா கேட்கவேண்டும்! மீனா ராஜாராமனை மணம் புரிய விரும்பினாள். ராஜாராமனும் சம்மதித்தான். ஆனால் ராஜாராமனின் தந்தை குறுக்கே நின்றார். மீனா, பாவம் நம்பியிருந்தாள். மணம் ஆகும்வரை ராஜாராமன் வேறு ஒருத்தியைக் கைப்பிடிப்பான் என்று நம்பவில்லை. ஆனால் மணம் ஆனபிறகு அவள் நான்கு பொட்டுக் கண்ணீர் உகுத்தாள். பிறகு கண்கள் நெருப்பைக் கக்கின. 'சரி தொலையட்டும்' என்று திடம் செய்து கொண்டாள்.

ஆனால் சமுதாயம் அவளை விடவில்லை. அவளுக்குத் தக்க ஏழை வரன்கள் வந்தன. ஆனால் யாரோ அவர்களிடம், அவளுக்கு ராஜாராமனிடம் இருந்த பிரியத்தைச் சொல்லிவிட்டனர். அவள் அப்பொழுதும் கலங்கவில்லை. கடைசியில் தில்லியில் இருந்து வந்த ஒரு ஆபீசருக்கு இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்பட்டு, தில்லிக்கே வந்தாள்.

அவள் வாழ்க்கைதான் எவ்வளவு மேடு பள்ளத்தில் தாண்டி வந்திருக்கிறது. அன்று இருந்த நிலைமை எங்கே! இன்று அவள் பணக்கார விதவை! அவளுக்கு இன்று எல்லாம் அடிமை. இந்தச் சுகத்திலே மறந்திருந்த அவளைப் பழைய ஞாபகங்கள் மறைவிலிருந்து பாயும் புலிபோல் பாய்ந்து கௌவிவிட்டன.

* * *

ஏட்டுநாட்கள் கழித்து, சுசீலா ரகுபதியின் கடிதத்தை வாசித்துக் கொண்டிருந்தாள். கடிதம் ஒரே ஆனந்தமயமாயிருந்தது.

'தந்தை கிடைத்து விட்டார்......' கடிதம் ஜானகி பேருக்கு எழுதியிருந்தது. ஜானகியிடமே கொடுத்தாள்; அவள் வாசிக்க ஆரம்பித்தாள். சந்தோஷம் தெரிவித்த பிறகு கடிதம் ஒரு அதிசயத்தைத் தெரிவித்தது:

'ஜானி! என்ன சொல்வேன்! ஒரு விஷயம் ரொம்ப ஆச்சரியமாயிருக்கிறது. அப்பாவைக் கேட்கவும் முடியவில்லை. அப்பாவிடம் ஒரு படம் இருக்கிறது. அதில் இருக்கும் பெண்ணின் உருவம் உன் அம்மாவின் இளைய உருவமாகவே இருக்கிறது. பெயர் மட்டும் மீனா என்று எழுதியிருக்கிறது......!'

ஜானகி வாசித்துவிட்டுத் திரும்பிப் பார்த்தாள். ஆனால் சுசீலா பின்பக்கம் இல்லை.

அதற்கு நான்கு நாட்கள் கழித்த பிறகு மதராஸில் தம் அறையில் அமர்ந்திருந்த ஒரு கணவர் தம் மனைவிக்கு ஒரு கடிதத்தை வாசித்துக் காட்டிக்கொண்டிருந்தார்,

"என் பிரியமுள்ள ராதாவுக்கு,

ஒரு முறை நான் உன் முன் கை நீட்டினேன்; நீயும் அதை நிரப்பினாய்! மீண்டும் ஒரு முறை பிச்சை கேட்கப் போகிறேன்.

நீ உடனே உன் கணவருடன் இங்கே வா. உன் பெண்ணை மீண்டும் சுவீகரித்துக் கொள். மறுக்காதே. காரணமும் கேட்காதே.

நான் உன் பெண்ணுக்கு ஒரு குறையும் வைக்கவில்லை. நன்றாயும் வாசித்திருக்கிறாள். தனக்குப் பிடித்த, எனக்கும் சம்மதமான ஒரு பையனையும் மணாளனாக அடையப் போகிறாள்.

வா, உடனே வா. நீதான் வந்திருந்து கலியாணத்துக்கு எல்லா ஏற்பாடும் செய்ய வேண்டும்."

இப்படிக்கு உன்னுடைய தோழி,
மீனா (சுசீலா)

ராதா, 'இதுதான் சுசீலாவின் குணமே! இப்படியே பழகிவிட்டாள்' என்றாள்.

மறுநாள் இருவரும் கிளம்பி, தில்லிக்குச் சென்றனர்.

* * *

அன்று காலை எல்லாரும் வந்து சேர்ந்தனர். ஜானகிதான் காரை எடுத்துக்கொண்டு ஸ்டேஷனுக்குப் போனாள். சுசீலா வர மறுத்துவிட்டாள். ஜானகி காரணம் கேட்பது பழக்கமில்லை.

ராஜாராமய்யருடன் ரகுபதியும் வந்தான். அவர்களை ஏற்றிக்கொண்ட ஜானகி அவர்களுடனே வரும் இந்தத் தம்பதியைக் கண்டு திகைத்தாள். அவர்கள் இவளைப் பார்க்கும் விதம் அவளை இன்னம் திகைக்க வைத்தது. ரகுபதியும் சுசீலா கடிதத்தில் கேட்டுக்கொண்டிருந்தபடி உண்மையை ஜானகிக்குச் சொல்லவில்லை.

வீட்டிற்குவந்த அவளுக்கு ஒரு பேரிடி காத்துக்கொண்டிருந்தது; பேராச்சரியமும் காத்துக்கொண்டிருந்தது.

வீட்டிலே சுசீலா இல்லை. அவளுக்குப் பதில் ஒரு கடிதம் இருந்தது. வேலைக்காரன் 'அம்மா இங்கேதானே, இப்பொழுதுதானே இருந்தாங்க!' என்றான் ஆச்சரியத்துடன். அழுதுகொண்டே ஜானகி கடிதத்தைப் பிரித்து வாசித்தாள்: அதை வாசிக்க வாசிக்க அவளுக்கு ஆச்சரியமும் அழுகையும் அதிகமாகிக்கொண்டேவந்தன.

அவள் சசிலாவின் குழந்தையே இல்லை. வந்திருக்கும் ராதாவும் அவள் கணவனுமே தான் அவளுடைய தாய்தந்தை. கிழக் கணவனிடம் குழந்தையை அடையமுடியாத சுசீலா, வழக்கப்படி மீண்டும் சமூகத்திடம் அறைகூவியிருந்தாள். தன் தோழியான ராதாவிடம் அந்தக் குழந்தையைத் தனக்கென்றே பெற்றாள். அதனால் ராதாவின் நிலைமையும் நலம் பெற்றது. ரகுபதியின் தகப்பன்தான் அவளை இளமையில் ஏமாற்றிய ராஜாராமன். தான்தான் அந்த மீனா.

"இனி என்னைத் தேடாதே. எனக்காக உன் வாழ்வு பாழ்படக் கூடாது. என் பெண்ணாயிருந்திருந்தால் நான் எவ்விதம் நடந்திருப்பேனோ! நானே கண்ணால் பார்த்துவிட்டேன், அவர்தான் அந்த ராஜாராமன். என் மனது சதி செய்கிறது, போரிடுகிறது. என்னால் அவருடன் ஒரேவீட்டில் இருக்கமுடியாது. போகிறேன், நீங்கள் மணந்துகொண்டு சுகமே வாழுங்கள். ஆசீர்வாதம். என்னைத் தேடவேண்டாம்."

எல்லாரையும்விட அந்தக் கிழவர் அலறல்தான் இரைந்து கேட்டது. "மீனாவின் வாழ்வை இளமையில் கெடுத்தது போதாது என்று இப்பொழுதும் வந்துவிட்டேனா"

* * *

நாட்கள் ஓடின. மணம்புரிந்த இளம் தம்பதி மகளை மீண்டும் அடைந்த தம்பதி. இரு தம்பதிகளுக்கும் காலம் நல்லதாயிற்று. ஆனால் கிழவர்மட்டும் 'ஐயோ! ஒரு வார்த்தை பேசாமல் போய்விட்டாளே!' என்று அடிக்கடி பிதற்றிக்கொண்டிருந்தார்.

ஒருநாள் கிழவர் வீட்டைவிட்டுத்தடியூன்றி எங்கோ சென்றார். மூலை திரும்பியதும் அங்கே நின்ற ஒரு வயதான ஸ்திரீ அவசரம் அவசரமாக ஒரு கட்டிடத்துக்குள் நுழைவதைக் கண்டார். வெகு தைரியமாகத் தொடர்ந்து சென்று, 'மீனா மீனா' என்று அழைத்தார். அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

வாருங்கள் மேலே என்று அழைத்துச் சென்றாள்.

அங்கே சென்றதும் 'மீனா, என் நிலைமை தெரியாமல் என்னை விட்டுச் சென்றாய்?' என்றார். பிறகு கதையைச் சொன்னார்:

"அவளை மணந்துசென்று அவளுடனேயே மாமனார் வீட்டில் வசித்தேன். ஒரு பிள்ளை

பிறந்தவுடன் அவள் இறந்தாள். பிறகு மைத்துனர்கள் அவள் தங்கையை மணக்கச் சொல்லிப் பிடிவாதம் செய்தனர். மறுத்தேன். கோபம்கொண்டு என்னை விரட்டிவிட்டனர். குழந்தையுடன் வேறு இடம் சென்று வேலை தேடிக்கொண்டேன். மற்றொரு மணமும் செய்துகொண்டேன். அவள் ஒரு ராக்ஷஸியாக வந்து வாய்த்தாள். அவள் படுத்தினபாட்டால் என் குழந்தை ஆறுவயதிலே கிளம்பிப்போனான். அவனைக் காணவே முடியவில்லை. இரண்டாவது மனைவியையும் விட்டுக்கிளம்பினேன். பிறகு எங்கெங்கேயோ திரிந்தேன். கடைசியாக உன் ஞாபகம் வரவே நம் ஊருக்குப் போனேன். அங்கே நம் வீடுகள் எல்லாம் இடிந்துவிட்டன, உன் வீடு இருந்த இடத்திலேயே ஒரு குடிசை கட்டி வாழ்ந்தேன். அந்த நிலைமையில்தான் இவன் வந்து அழைத்துவந்தான்.

நீயே சொல், மீனா! என் வாழ்க்கை, மாலை மங்கலில் ஆரம்பித்தது. இரவு வனத்தில் கழிந்தது. காலையில் கண்விழித்துப் பார்த்தேன். எதிரே பாலைவனம். அதையும் கடந்து இந்த நீர்ப்பிரதேசத்துக்கு வந்தேன். அதையும் மயக்கம் ஆக்கி நீ விட்டுப்போனால் என்ன ஆவது? இனி என் குற்றங்களைச் சொல்லிப் பயனில்லை. களைத்த எனக்குத் தங்குமிடம் வேண்டும். மீனா, நீதானே சொல்வாய், 'அன்பு என்பது உடலைப் பொறுத்தது இல்லை!' என்று.

கிழவர் உருக்கமாகச் சொன்னார். சுசிலாவும் ஒரு முறை மீனாவானாள். அவள் வாயைத் திறப்பதற்குள், இதோ அம்மாதான் இருக்கிறாள் என்றகுரல் கேட்டது. ஆம்! கிழவரைத் தேடிக்கொண்டு வந்த ஜானகி எதிரே நின்றாள்.

"என், அம்மா, இங்கேதான் இருந்தாயா?"

"இல்லை அம்மா, இன்று காலையில்தான் வந்தேன். வளர்த்தபாசம் விடவில்லை. பார்த்துவிட்டுப்போகலாம் என்று கிளம்பி வந்தேன், உன் மாமனார் பார்த்துவிட்டார்."

"சரி, இனிமேல் போகமாட்டாயே?" ஜானகி கண்கள் நீர் சொரியச் சென்று அவள் காலடியில் விழுந்தாள்.

சுசிலா அவள் தலையைத் தடவிக்கொண்டே, கிழவரைப் பார்த்தாள்.

"வாசலில் காரைக் கொண்டுவருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே ரகுபதி ஓடும் சப்தம் கேட்டது!

மீனா மீண்டும் ஒருமுறை தன் மனதுடன் போராடக் கச்சை கட்டிக்கொண்டாள். போர்க்களத்திலே மீண்டும், பிரவேசித்தாள்.

உங்கள் மனைவிக்கு



டேராடூன் மலைகளில் வசிக்கும் ஓர் சன்யாசியின் அபூர்வ மருந்து

எமது மிகவும் சக்தி வாய்ந்த தயாரிப்பான "ஸன்யாஸி ஔஷதி" லியுகோரியா மற்றும் மாதவிடாய்க் கோளாறுகளை விரைவில் நிவர்த்தி செய்யும். கண்களுக்கு ஒளி, முக வசீகரம் முதலியவை உண்டாக்கும். சோம்பல், தளர்ச்சி முதலியவை பறந்து போகும். அனுபவமும் திறமையும் நிறைந்த வைத்தியர்களால் இம்மருந்து தயார்செய்யப்படுகிறது. 15 நாட்களுக்குச் சாப்பிட வேண்டிய மருந்து ரூ. 2–14–0 தான். தபாற் செலவு தனி. இதை விற்பதன் மூலம் லாபமடைய வேண்டுவது என் விருப்பமல்ல. கடவுள் என் ஜீவனத்திற்குத் தேவையான பொருள் அளித்திருக்கிறார். நோயால் வருந்தும் எனது சகோதரிகளின் பொருட்டு அடக்க விலைக்கே மருந்தைக் கொடுக்கிறேன். வேறு வியாதிகள் சம்பந்தமாக என்னிடம் மருந்துகள் எதுவும் கிடையாது. ஆகையால் வேறு வியாதிகள்பற்றி எனக்கு எழுதவேண்டாம்.

இம் மருந்து உபயோகமற்றது என்று நிரூபிப்பவர்களுக்கு முழுவிலை திருப்பி அளிக்கப்படும். இந்த ஔஷதத்தை ஓர் முறை உபயோகித்தால் இதன் இயல்புகள் நன்கு புலப்படும்!

Prof. Dev Dutt (C. K.)

Vir Bhan Street, Jullundur, E. P.